உ

கடவுள் துணை.

# ஆராய்ச்சி அணிகலம்.

இஃது

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா மேல்மங்கலம்

கிராமத்திலிருக்கும்

தாயுமான் கருப்பபிள்ளையவர்கள் குமாரர்,

**தா. க. தாயுமான பிள்ளையவர்களால்,**

வசனரூபமாக இயற்றப்பட்டு,

ஷியார்கள் சொந்தப்பணச்செலவின் பேரில்

மதுரை, விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பிரைட் இயற்றியவருக்கேயுள்ளது.

இங்கிலீஷ் 1930. தமிழ் பிரமோதூத ஞு

Copy Right]

[இதன் விலை 1-0-0

## FOREWORD.

What our country needs most at present is the spread and diffusion of *rational* Education-an education which trains the tender mind to ask and to know the why and the wherefore of all beliefs and actions. Every school of to-day is more or less a nursery of *Puranic* education which teaches the existence and exploits of three and thirty gods, the assurance of bliss on the graded scale of munificince to the earth gods or 'Tharaithevar,' the indispensableness of birth gradation, the importance of ritualism and sacerdotalism and the deterioration of knowledge, piety and wisdom age by age and, *ergo*, the necessity to have and to keep the ancient literary heritage invialably intact. So long as Puranic education bears sway, so long as schools and Colleges and Universities to boot are manned by its upholders and eulogisers, so long as text-book Committees, Boards of studies and heads of institutions continue to be recruited from among the men of that kidney, Unity in India will be out of the question and India as a nation, a Chimera. When the worship of one God prevails under whatever name, when liberty, equality, and fraternity come to be realised as the fruit of diffused *rational* education, when the demos shall be so cultured and civilised as to know their rights as well as their enties, then only will man's inhumanity to man cease to make countless thousands mourn, and then only can all diffe-

rences between man and man, woman and woman, man and woman cease to exist and the goal of self-government, the great ambition of our *Motherland* be within our ken and grasp. Unless and until *rational* education enables men and women to understand the enormity of child marriage and of the strict observance of child widowhood, and unless and until it secures the helpless mothers and sisters equal shares in and their legitimate rights to the family property, and unless and until it breaks down and razes to the ground the citadels of immemorial tyrannic custom, and plants, in their stead, equality and free self-choice in all matters, the freedom and independence of the country will be doomed once and for all, and anarchy will ensue. The sanctity of goat, cow, horse, man-killing and the drinking of soma juice in the holy name of yagas and yaga performance at immense cost has, in the procession of ages, led to open and shamless indulgence in animal diet and intoxicants in restaurants, and the propagandism of temperance or moderation in their use falls flat on the ears of the fagged and care-worn humanity, while slaughter houses and toddy and arrack shops in the urban and the suburban areas hold as usual and contribute their ample quota to the public revenue. The growth and development of industrialism unhampered by national prejudices will bid fair to the increase of wealth and prosperity and contentment among the people. The highest ideal of the Paramount Power must be the bring-

ing about of harmony among the congeries of nations, races and orders of people that chequer the vast and hoary land by apportioning the benefits of benign and beneficent self-rule according to their work aud worth without prejudice to the landed and labour interests. It is a pleasure to find all these current topics and views and more are fairly stated and ably discussed in easy and elegant Tamil by the spirited author of this Jewel of Researches or ஆராய்ச்சி அணிகலம் which every Tamil reader cannot but read, mark and digest who cares for national advancement and amelioration-Social, Moral and Political.

**Prof. Purnalingam Pillai, B. A. L. T.**
Munnirpallam, Tinnevelly Dt.,

## FOREWORD.

I know **Mr. Thayumana Pillai,** now for some years. He keenly desires that I should express my opinion about the brochure he is now publishing in Tamil under the title of "**Araichi Anikalam**"- Results of inquiry.

The book naively presents the author's views of the social conditions in Tamilaham and the need for amelioration of the Tamil samuthayam. It is a frank statement of the earnest thoughts of the author on the problems of the day and on the urgent need of the hour in the Tamil country. It may be possible for one to honestly differ from some of his opinions; but it is possible for none to question the zeal and sincerity of the author, who is a typical Tamiliam house-holder having no axe to grind. The book only reflects the current Tamilian middle class views on the conditions of life in Tamil India rather too plainly. The language of the author just suits his aim to popularize his considered views on almost all the serious problems affecting the modern Tamil Community, and abundantly proves his unquenchable zeal and dead earnestness in what he considers to be his mission to help to enlighten his Tamil brethren as to the urgent need for the uplift of the society. He is a fairly well-to-do Vellala gentleman of position and standing in life. He is not one of those middle class landlords who would hide his light under his bushel. He feels an inward urge to preach his message with a view to rouse the average Tamilians from his supine and sluggish apathy to a sense of reality and to active effort towards progress.

I wish his well-meant attempt all success, and I believe that even if the author succeeds to any extent in rousing the average Tamilian to think for himself, his book will have achieved a decided success. There can be no two opinions as to the crying need for earnest thought, and synthetic and constructive activity in the the present Tamil country; and I do feel that it is up to all the Tamils to commend such well-meaning efforts as those of the author to serious consideration, whatever small differences there may be as to the manner and mode of their expression. It is crystal-clear that the end and aim of the book is to help to advance the interests of the Tamil community; and with this aim there can be no quarrel whatever from any quarter.

I have therefore real pleasure to testify to the author's earnest appeal in the cause of reviving and reinvigorating the culture and social polity of the Tamil community.

Dated.
18th Novr. 1930

(Sd.) **S. S. Bharati, M.A., B.L.,**
ADVOCATE,
Pasumalai and Madura.

உ

சிவமயம்.

# மதிப்புரை.

---

மேல்மங்கலம் திருவாளர் தா. க. தாயுமான பிள்ளையவர்கள் இயற்றிய "ஆராய்ச்சி யணிகலம்" மென்னும் உரை நடை நூலினைப் பார்த்தேன்.

அது யாவர்க்கும் விளங்கும் எளியநடையில் எழுதப்பட்டுள்ளது.

ஆசிரியரின் பொது நோக்கு அந்நூலின் ஒவ்வொரு பகுதியிலுந் தெள்ளிதின் மிளிர்கின்றது.

தகுதிபற்றியே சாதி, பிறப்புப்பற்றிச் சாதியில்லை யென்ற நற்கொள்கையானது பலநூற் பிரமாணங்களோடு அழகாக வற்புறுத்தப் பட்டுள்ளது. வைதீக, சைவ, வைணவ. சமயங்களின் ஆதி உண்மை நோக்கும் போக்கும், பிற்காலத்தில் அவற்றின்கண் ஏற்பட்ட மாறுதல்களும் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

ஆரியர் முதலிய அந்நியர் கலப்பால் வந்த கேடுகளும், தற்கால வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் போற்றும் இயக்கத்தின் காரணமும், கடமையும் இனிது விரித்தோதப்பட்டிருப்பதால், தற்காலப் பிராமணரல்லார் இயக்கத்திற்குத்தக்கதொருசரித்திர நூலென இதனைக் கணித்தல் தவறாகாது.

காங்கிரஸின் உண்மை நோக்கமும், தற்கால மாறுபாடுகளும் சுய அரசு பெறுமுன் நாட்டில் நடக்கவேண்டிய சீர்திருத்தங்களும், நுண்ணிய ஆராய்ச்சியுடன் இயம்பப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றிய கருத்துக்கள் நடுவுநிலை யுடையார்க்கு இன்பமளிப்பன.

இந்தியாவின் தற்காலத்தேவைகளாக எடுத்து மொழிந்தவை யாவராலும் பாராட்டப்படுதற்குரியன. சமுதாயச் சீர்திருத்தச்சார் பாக, கன்னிகை மணமறுப்பு, வரம்புட்பட்ட விதவா விவாகம், தீண்டாமையினளவு, மணச்செலவின் சுருக்க, முதலிய கருத்துக்கள் அறிஞராற் கைக்கொள்ளத்தக்கனவே.

"ஒன்றே குலமு மொருவனே தேவனும்" என்ற திருமூலமா முனிவர் திருவாக்கினைக் கைப்பிடித்து ஒரு பரம்பொருள் வழிபாட் டையும், அதன் பயனுன சித்தசுத்தியையும், அதற்குச் சாதனமாய நல்லொழுக்க முறையையும் இந்நூலாசிரியர் செவ்விதின் விளக்கி அறி வுரை பகர்தலின் இந்நூல் சமயவளர்ச்சிக்குப் பெரிதுந் துணைபுரிவ தாகும்.

நடுநிலையான ஆராய்ச்சி, சமுதாயச் சீர்திருத்தம், அரசியல் நோக்கம், கல்விவளர்ச்சி, தொழில்வளர்ச்சி; சமயவளர்ச்சி யென்ப வற்றை யாவர்க்கும் போதிப்பதில் இந்நூல் மிகச்சிறந்து விளங்கு வதால், தமிழ்ப்பொது நன்மக்கள் இந்நூலாசிரியர்க்குப் பெரிதும் நன்றியுணரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்நூலெங்கும் பரவுக.

கா. சுப்பிரமணியன்,

K. SUBRAMANIA PILLAI M A., M. L.,
ADVOKATE,
Tagore Porofessor of Law,
TINNENELLY.

# இந்நூற் கருத்து

நம்மால் காணப்படும் இவ்வுலகம் எண்ணிக்கை கடந்த பல ஜீவ கோடிகளின் தான் தன்னுடையது என்ற எண்ணத்துடனுள்ள மனத்தின் கூட்டுறவால் நடந்துவருகிறது.

ஸ்த்திரமாய் ஒருபடித்தாயுள்ள நிலையில்லாமல் சென்றுகொண்டேயிருக்கும் போக்கில் மாறி மாறி வரும் இயல்புடையதாயிருக்கிறது.

யாவரையும் தன்வசமாக்கியும் ஓரோர் காலத்து மக்களுக்கு இவ்வுண்மை தெரிந்து வெறுப்படையாதிருக்கும்விதம் புதிதுபுதிதாய்த் தோற்றும் தன்மையில் அவ்வப்போதிருக்கும் நடபடிக்கைகள் எவ்விதத்திலும் மிகச் சரியானவையென ஆரம்பத்தில் காட்டியும் நாளடைவில் மாறுபாடடையுங் காரணத்தால் இவை சரியில்லையென மற்றொன்றைப் புதிப்பித்துக்கொண்டும் வருகிறது. நம்மில் வழிதெரிந்து நடக்கும் கண்ணில்லாத குருடனொருவன் கண்தெரிந்து வழிகாட்டிச் செல்லுபவன் பின்னால், அவன் வசமாய் எப்படிச் சென்றுகொண்டிருப்பானோ அந்த நிலைமையில் காலமென்னும் போக்கில் மாயையென்றோ அல்லது அச்செய்கைக்குரித்தான வேறெவ்விதமான பெயருடையதாகவோ உள்ள ஒரு சக்தி உலகத்தின் வழிகாட்டியாயிருந்து யாவரையும் தன்வசமாயிழுத்துக்கொண்டு நடத்திவருகின்றன.

இவ்விதமாயுள்ளதெனத் தெரிந்துகொள்ளும் அறிவாளிகளையும் பழக்கமென்னும் தன்மையிலும் இந்நிலையைவிட்டு விலகி மேலேறவொட்டாத நிலைமையில் தன் போக்கிலே நிற்கச் செய்கின்றன.

ஆயினும் மனிதன் தன்னிடமிருக்கும் சக்தியால் நல்லது கெட்டதெனத் தெரிந்துகொண்டு நடக்கும் பகுப்புணர்வுடன் சஞ்சரிக்கிறான்.

முற்சொன்ன மாறுதல் தன்மையில் ஏற்படும் பல இயக்கங்களி லும் தன் நிலைமையைச் சரியாய் வைத்துக்கொண்டு அவ்வப்போ துள்ள உலகப்போக்கில் மிக் ஜாக்கிரதையாய் நடந்து வருவதற்கு ஒவ் வொன்றையும் விசாரித்தல் என்னும் ஆராய்ச்சி மிக்க அவசியமும் இன்றியமையாததுமாகும்.

உலகத்திலேற்பட்டிருக்கும் பல கொள்கைப்பிரிவுகளிலும் அத னதன் உண்மையையும் அவற்றால் அடையும் பிரயோஜனத்தையும் தெரிந்து அவ்வக் கொள்கைகளில் மூடப்பட்டிருக்கும் மனமயக் கத்தினின்றும் நீங்க விசாரித்து ஆராய்ந்தறிவது மனிதரின் முக்கிய கடமையும் இகபர வாழ்க்கைக்குரிய பிரயோஜனமுமாகும்.

ஆகையால், முக்கியமாய் மனிதனுக்கு ஆராய்ச்சிவேண்டியது அவ சியமென இந்நூல் "ஆராய்ச்சி" யென்றமுறையில் எழுதப்பட்டது.

இந்நூலிற் பெரும்பாலும் இந்தியாவென்னும் தேசப்பெயரால் விளங்கும் இந்துக்களின் மதக்கொள்கைகள் பிரயோஜனங்கருதி ஏற் படுத்தப்பட்ட வகைக்கில்லாமல் "சூரியனை மறைத்த ராகுவைப்போல வும்" "மாணிக்கத்தை மறைத்த மண்குப்பை போலவும்" கால மாறு தலில் மதத்தை விளக்குபவரில்லாததால் சுயநலங்கருதிய மதக்கொள் கையுடையவர்களாலும், ஆராய்ச்சியில்லாத மத நம்பிக்கைகொண்டவர் களாலும், மதப் பிரயோஜனமில்லாது அநுஷ்டிக்கும் கொள்கைகளை எடுத்துக்காட்டியும் பிரயோஜனம் தரும் அநுஷ்டானத்தைத் தெரிந் தவரை எடுத்துக்காட்டியுமிருக்கிறது.

நாட்பட்டுத் தடித்தும் தெரிந்துகொண்டு விலகவுமுடியாத சமூ கக் கொள்கையின் பிடிவாதத்தை உள்ளே வைத்து ராஜீயதுறையில் செய்துவரும் சுயநலமென்னும் கபடத்தினால் இந்தியா சமமான சுதந் தரமடைய முடியாமலிருப்பதைச் சொல்லியும் அப்பால் சில சமூகத் திருத்தத்தையும் முடிவில் எல்லா மதத்தரும் சொல்லப்படும் கடவுள் என்ற பொதுப்பிரயோக வார்த்தையால் உலகத்திலுள்ள யாவருக்கும் ஒரே கடவுள்தானிருக்கிறாரென்றும், அக்கடவுளாலடையும்பிரயோஜன

மும் ஆத்ம உணர்ச்சியும், உண்டாவதற்குரித்தான அநுஷ்டானங்கள் எல்லாமதத்திற்கும்ஒன்ருயிருப்பதைக்காட்டியும்,மதக்கொள்கைகளில் சிறிது பெரிதென்று ஒருவருக்கொருவர் மதத்வேஷம்கொண்டு அரு வருப்பாயிராமலும், புறமதத்தூஷணையில்லாமல் தன்மதத்தில் பற் றுள்ளவர்களாய்ச் சாந்த நிலையையடையவேண்டுமென்னு முறையில் இந்நூல் இனிதாய் முடிகிறது.

மனிதன் தேகத்தில் தான் பிறந்த மாதிரியிலிருக்கமுடியாமல் தனக்குத்தோன்றும் வகையில் சிறப்பித்துக்கொள்ளும் ஏதாயினும் ஒன்றை யணிந்து கொள்வானென்பதுபற்றி, அணிதல் என்பது ஆடை ஆபரணத்திற்குள்ள உபயோகச்சொல்லென நினைத்து, இந் நூலைப்பார்க்கும் உபயோகத்தைச் சிறப்பித்து ஆராய்ச்சி யென்ற துடன் ஆபரணமெனக்குறிப்பிட்டுச் சேர்க்கப்பட்ட வார்த்தையால் "ஆராய்ச்சி அணிகல" மெனப் பெயரிடப்பட்டது.

தெரிந்தும் தெரியாமலும் உள்ள என் சிற்றறிவிற்கு எட்டிய மட்டில் என்னால் வாசகமாக எழுதப்பட்ட இந்நூலில் தமிழுக்குரிய லக்ஷணங்கள் யாவும் பூரண பொருத்தமில்லாமலிருந்தாலும், குழந்தை யின் மழலைச்சொல்லிற் பிரியப்படுபவர்கள் குழந்தை பேச ஆரம்பிக்கும் ஆரம்பகாலத்தில் குளறிப் பேசினலும் அறிவாளிகள் இக்குழந்தை இன்னும் நன்ருய்ப்பேசும் திறன் ஏற்பட வேண்டுமெனச் சந்தோ ஷத்துடன் சம்பாஷித்துக்கொண்டே திருத்திப் பழக்குவார்கள். அதுபோல எனக்குத் தோன்றும் அபிப்பிராயத்தை உள்ளபடி பிற ருக்குத் தெரிவிக்க முடியாத சிற்றறிவுள்ள நிலைமையில்எழுதப்பட்ட இந்நூலிலிருக்கும் குற்றங்களை எனக்குத் தெரிவித்தால், அடியேன் திருந்துவதுடன் அவைகளை அடுத்தபதிப்பிற் சரியாய் எழுதப்பட்டுப் பலருக்கும் பிரயோஜனப்படுமென்பதைத் தாழ்மையுடன்தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம் தங்கள் விதேயன்

**தா. க. தாயுமான பிள்ளை**

ஆசிரியர்

மேல்மங்கலம்.

# அட்டவணை.


| எண் | அதிகாரத்தின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுளும் உலக அமைப்பும் | 1 |
| 2. | இந்து சாஸ்திரமும் இந்துமதமும் | 5 |
| 3. | இந்தியாவின் உண்மை மாறுதல் | 16 |
| 4. | கொள்கை மாறுதலின் கேடு | 24 |
| 5. | காங்கிரஸ் | 35 |
| 6. | கோவிலும் சத்திரமும் | 36 |
| 7. | கல்வி | 39 |
| 8. | அரசியல் முறை | 41 |
| 9. | இந்தியாவின் தற்கால தேவை | 59 |
| 10. | கன்னிகா விவாக மறுப்பு | 66 |
| 11. | விதவா விவாகம் | 78 |
| 12. | தீண்டாமை | 80 |
| 13. | கல்யாணம் | 89 |
| 14. | சாக்காடு | 94 |
| 15. | கடவுள் வழிபாடு | 101 |
| 16. | பாஷை | 108 |
| 17. | எல்லா மதமும் ஒன்றே | 112 |



தா. க. தாயுமான பிள்ளை,

உ

கடவுள் துணை

# ஆராய்ச்சி அணிகலம்

## 1. கடவுளும் உலக அமைப்பும்

கடவுளாலே யமைக்கப்பட்ட இவ்வுலகம் ஒன்றுபோலிராமல் பேதமாக மாறுதலாய்ப் பலவாறுக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அப்படைப்பில் பகுத்துணர்வான ஜீவன் என்று சொல்லப்படுகிற மனிதவர்க்கங்கள் சஞ்சரிப்பதற்குப் பல தேசங்களை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஒரே தன்மையான தேசங்களாயும் ஒரே குணமான மனித வர்க்கங்களாயும் இருந்தால் ஒன்றுயும் வேறெவ்வித இயக்கமும் உண்டாவதற்கில்லாமல் சலிப்பற்று ஒரேதன்மையாய் விளங்கும்.

அப்பொழுது யாதொருபேதமான விவகாரமுமில்லாமல் சாந்த மாயிருக்கும்; அதனுல் உலகமென்னும் சங்கதி யில்லாமற்போய்விடும்; அந்தநியாயம் பற்றி உலகம் இருப்பிடத்திற்குப் பலவகைப்பட்ட தேசங்களும் அந்தந்த தேசங்களின் விளைபொருளைப் பொருத்து ஆகாரமும் உஅவ்வாகாரத்தைப் பொருத்து குணங்களும் குணத்தைப் பொருத்து மனிதனையும் ஆங்காங்கு அந்தந்த தேசத்திற்குத்தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையில் இவ்விந்தியாவில் முக்கியமாய் மனிதவர்க்கங்கள் உபயோகப்படுத்துகிற மிருதுவான அன்னம் முதலிய ஆகாரத்தினுலும் தேச இயற்கைக்குத்தக்கவாறு இவ்விந்தியாவில் சற்றேறக் குறைய எல்லா ஜனங்களும் சத்துவகுண வசப்பட்டவர்களாய்ப் பெரும்பாலும் தான்என்ற அகங்காரம் ஒழிந்தவர்களாய் உணவு (போகம்) அநுபவம் முதலியவைகளில் மற்றதேசத்தாரைப்போல் அதிக ஆவலும் அதைத்தேட அதிகமுயற்சியும் தோன்ருதவர்களாய் இருந்தார்கள் இருக்கிருர்கள்.

---

உ பகவத்கீதை சிரத்தாத்ரய விபாக யோகம் அத்தியாயம் 17-ல் 8. 9. 10-வது சுலோகங்களிற் பார்க்க. தவிரவும் மது (கள்) முதலியவற்ருல் பிரத்யக்ஷமாய்க் காணப்படும்.

அதுபற்றியேதான், மேலென்பது தன்னை மேலாகப் பிறரிடம் புகழ்ந்து பேசிக்கொண்டு தன் தேகபோஷணை முதலியவற்றை நடத்திக்கொள்வது என்ற சுயநலம் உண்மையான இந்தியர்களிடத்திற் பெரும்பாலும் ஏற்படவில்லை. □ தான்என்னும் செருக்கில்லாமல் சத்துவகுண வசப்பட்டவர்களாய் × "அகரமுதல வெழுத்தெல்லாமாதி பகவன்முதற்றேயுலகு" என்று அப்படித்தலைமையாயுள்ள கடவுளநுக்ரஹத்தால் ஒவ்வொரு மனிதனும் செய்யும் செய்கைக்குத்தக்க பலன் கொடுப்பவர் கடவுளாய்த்தானிருத்தல்வேண்டும் ÷ என்பதைப்பூரண நம்பிக்கையுடன் கைக்கொண்டார்கள்.

மேற்படி மனிதவர்க்கங்கள் பலதரப்பட்ட குணங்கள் அமையப்பெற்றதால் சிலருக்கு உலகத்தின் நிலையில்லாமையின் ூ உணர்ச்சியேற்பட்டு உலகப்பற்றில்லாமல் தேகத்திற்கும் மனதிற்கும் ருசிக்கும்படியான தேகபோகங்களில் விருப்பின்மையாய் மனதற்ற சாந்தநிலையென்னும் (ஒழிபு) மோக்ஷம் என்றமுடிவுநிலையை யடைந்தவர்களாய்ச் சிலர் உலகத்தின் விஷயங்களில் ஈடுபடாதவர்களாய் விலகியிருந்தார்கள். □

---

□ யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம்புகும்.

× அகரமுதல: இவைகள் குறள்.

÷ இரப்பவர்க்கீயவைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார், கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்: என்றார் திருநாவுக்கரசர்.

ூ நில்லாதவற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மைகடை என்ற குறள். முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடி சாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு: என்ற பட்டணத்தார். மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத் தலைமிசைக்கொண்ட குடையர், நிலமிசைத் துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டாரல்லா லெஞ்சினாரிவ்வுலகத்தில்: என்ற நாலடியார்.

□ இப்படிச் சொல்லும் யோக்யதையும் குணமும் இயற்கையிலமையப்பெற்று அதையநுசரித்த கர்மாக்களைப் பின்பற்றி நடந்துவரும் குணத்திற்கும் தொழிலுக்கும் தக்கவாறு ஜாதி பிரிக்கப்பட்டிருப்பதை பகவத்கீதை 18-வது அத்தியாயம் 41, 42, 43, 44-சுலோகங்களில் பார்க்க. இதில் மேற்கண்டபடி இயற்கையி லமையப்படாத வர்சு அந்த ஜாதியாகாது. ஷை 41, 42, 43, 44-வது சுலோகம் பின்வருமாறு: 41 பரந்தப, பிராமண, க்ஷத்திரிய, வைசியர்

மற்றும் மனிதர்களிற் சிலர் தைரியம், வீரம், மனிதர்களை யடக்கியாளுந்திறம், சுயநலமில்லாத மிக்கப் பெருங்குணம், நடு நிலைமை தவறாமை முதலிய நற்குணங்களை யடைந்தவர்களாய் மனித வர்க்கங்களை நல்வழிப்படுத்தும் முறையிலும் மனிதர்களின் ஜீவனத் திற்கேற்ற வழியிலும் ஒழுங்காக உலகத்தை அரசாக்ஷி செய்து வந்தார்கள்.

மற்றும் பல மனிதர்கள் தங்களுக்குத்தோன்றிய உணர்ச்சியால் உலகிற்கு உணவுப்பொருள்களை விளைவாக்கும் முயற்சியும் அதை வைத்திருந்து விற்கிரைய மூலமாய் உதவு முயற்சியும் அந்த முயற்சி களுக்குக் கருவியான மாடு, பசு முதலியவைகளைக் காப்பாற்றும் முயற்சியுமான விவசாயம், வியாபாரம், பசுக்காத்தல் என்பவைகளைச் செய்துவந்தார்கள்.

மற்றும் பலமனிதர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மந்தகுணத் தால் எந்த முயற்சியும் பிறருதவியில்லாமல் தானே செய்யமுடியாத (மனப்பான்மை) மனோதிடமில்லாதவர்களாய், முயற்சியுள்ளவர்க ளிட்ட வேலையைச் செய்துவந்தார்கள்.

இதையநுசரித்தே இவ்விந்தியாவின் மனிதவர்க்கங்கள் அவரவர்கள் குணத்திற்குத் தகுந்த பதவியடைந்திருந்தார்களென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளலாம். இவ்வாற்றால் தொழிலாலும், குணத்தினாலும் மனிதவர்க்கம் வகுப்பாயிருந்தது தவிர, உவார்சுக் கிரமத்தால் ஜாதிவகுப்பில்லை யென்பது விளங்கும்.

---

கட்கும் சூத்திரர்கட்கும் சுபாவத்தாலுண்டாகும் குணங்கட்கு ஏற்ப கர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 42. அமைதியும் அடக்கமும், தவமும், சுத்தமும், பொறுமையும், நேர்மையும், அறிவும், அநுபவமும், ஆஸ்திகத்தன்மையும், சுபா வத்தாலாகின்றவையான பிராமணஜாதியின் கர்மங்கள். 43. சூரத்தன்மையும், துணிபும், திட்பமும், கூர்மையும், போரில்ஓடாமையும், கொடையும், ஆட்சியும் சுபாவத்தாலாகின்றவையான க்ஷத்ரியஜாதியின் கர்மங்கள். 44. வேளாண் மையும், பசுக்களைப் பரிபாலித்தலும், வியாபாரமும் சுபாவத்தினாலாகின்றவை யான வைசிய ஜாதியின் கர்மங்கள். மற்றும் சூத்திரஜாதியின் கர்மமானது சுபாவத்தாலாகின்றதாய் ஊழியத்தன்மையதாயுள்ளது.

உ (எதாபீஜம் ததாங்குரம்) எப்படி விதையோ அப்படி முளை என் பதை யநுசரித்து அவன் மகன் அவனாக வருவதுதான் யோக்யதையைக்

கடவுள் அமைப்பில் உயர்ந்தஜாதி தாழ்ந்தஜாதி என்று மனித வர்க்கத்தைப் படைத்திருக்கலாமோவென ஆராய்ச்சி பண்ணிப்பார்த் தாலும் இல்லையென்றே விளங்கும். அஃதெங்ஙனமெனில் உலக சிருஷ்டியில் மிருகம், பக்ஷி, ஊர்வன முதலிய மற்றஜீவன்களைப் பார்த்தால் தனித்தனி ஒவ்வொருஜாதியென்ற பிரிவினை அவயவம் முதலியவைகளின் வித்தியாசத்தால் மிருகத்தில் யானை யென்ற ஒரு ஜாதியும், நாய் என்ற ஒருஜாதியும், ஜாதிவேற்றுமையைக் காட்டு கிறது. பக்ஷி ஜாதியில் காக்கை யென்பதும் கிளியென்பதும் முகம் முதலியவற்றில் ஜாதிவித்தியாசத்தைக் காட்டுகிறது. ஊர்வனவற்றில் பாம்பும், எறும்பும் முகம் முதலியவற்றில் ஜாதிவித்தியாசத்தைக் காட்டுகிறது. மனிதஜாதியிலோ முகம் முதலிய அவயவங்களில் வித்தியாசம் காணமுடியாத ஒரேஜாதியாக அமைப்பிலேற்பட்டிருக் கிறது. ஆகையால் மனிதவர்க்கமென்பது அவயவவகுப்பில் வித்தியாச மாய்க் காணப்படுகிற ஆண் பெண் என்பதுதவிர மனிதவர்க்கத்தில்

---

காட்டும் என்று ஆக்ஷேபிக்கலாம்: சமாதானம்: திருஷ்டாந்தமாக பராசரஸ் என்னும் ரிஷி ஒருகாலத்தில் செம்படவக் கன்னிகைப்பெண்ணை (யுவதி) யௌவன ஸ்திரீயாக்கி அவளுடன் சேர்ந்து பிறந்தவர் வியாசரிஷி அந்த வியாசருக்கு அனுலோம என்ற ஜாதிகெட்டதன்மை சொல்லாமல் யோக்யதை யால்மஹரிஷி யென்றுசொல்லப்பட்டுக்கோத்திரமும் சொல்லப்பட்டுவருகிறது. அவ்விடத்தில் பிறப்பின் அளவால் ஜாதிவுயர்வு தாழ்வு கற்பிக்கப்படவில்லை. அவ்வியாசரிஷி சந்தனுமஹாராஜாவின் குமாரர்களான சித்திரசேனன் முதலியவர்களில்லாமல் அவர்களின் பட்டமஹிஷிகள் அம்பா அம்பாலிகா என் னும் பெண்கள் வைதவ்யமாயிருந்த பொழுது அந்த ஸ்திரீகளிடத்தில் தன் தாயார் சொல் நிமித்தம் ஒரு காரணத்தால் சேர்ந்து பெறப்பட்ட திருதராட் டிரன் பாண்டு முதலிய வார்சுகளைப் பார்த்தால் தகப்பனைப்போல் பிள்ளைகள் என்பதை ஒப்புக்கொள்ள முடியாமல் முரண்படுகிறது. இதுமாத்திரமல்ல இதைப்போல் எத்தனையோ ரிஷிகளையும் கீழ்ப்பட்டவர்களையும் யோக்யதை யால் உயர்வு தாழ்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறசரித்திரங்கள்மிகுதியாய் உள்ளன. ஆகையால் வார்சுப்படி ஜாதிபிரிப்பது நியாயத்திற்கும் சாஸ்திரத்திற்கும் பொருந்தாததும் யோக்யதையை வைத்துப் பிரித்து மனிதவகுப்பை வைத் திருந்ததாகவும் இதிகாச புராணங்களிருப்பதுடன் அறிவுள்ள புத்தி ஆராய்ச் சிக்குப் பொருத்தமானதுமாகும் என்று நிச்சயிக்கப்படுகிறது. வால்மீகர் வேடராயிருந்து யோக்யதையால் பிராமணத்துவம் ஏற்பட்டிருக்கிறது.

கடவுளமைப்பில் வெவ்வேறு தனித்தனிஜாதியில்லையென்று ஆராய்ச்சி மூலம் நிச்சயிக்கப்படுகிறது. ÷

## 2. இந்துசாஸ்திரமும் இந்துமதமும்

இவ்விந்தியாவில் முற்சொன்னபடி சிலமனிதர்களுக்குண்டான உலகம் நிலையில்லை யென்ற ஆத்மஉணர்ச்சியால் உலகப்பற்றில்லாதவர்களாயிருந்தபடியால் அந்த ஆத்மதத்துவத்தைத் தெரிந்து சாந்தி (ஒழிபு) மோக்ஷமடையும் வழிகளை அந்த அனுபவசாலிகளாயுள்ளவர்களும் உலகைத் துறந்தவர்களுமான முற்கண்ட சாதுக்களால் எழுதி வைக்கப் பட்டவைகள்தான் வேதம், ஆகமம், புராணம் என்னும் நூல்கள் (சாஸ்திரங்கள்) அந்த வேதம், ஆகமம், புராணம் என்பவைகளும் மனிதர்களின் மனத்தின் பக்குவத்திற்குத் தகுந்த விதமாய்

---

÷ தொன்றுதொட்டுவந்த பழக்கத்தினாலும் சேர்க்கைப் பழக்கத்தினாலும் கீழ் மேல் என்பதில்லாமல் எல்லா மனிதர்களையும் ஒரு சமமாக நினைப்பது நியாயமாவென்று பலமனிதர்களால் கேட்கப்படும் வினவிற்கு விடை; அப்படிக் கேட்கப்படும் கேள்வியானது அவயவம் முதலிய உருப்புக்கள் எல்லாமனிதருக்கும் ஒன்றாயிருக்கிறதென்பதைத் தங்களுள் ஒப்புக்கொண்டும் அவயவமெல்லாமொன்றாயிருந்தாலும் யோக்யதையுடையவன் இல்லாதவன் என்பது வேண்டாமா என்று சொல்வது குணத்தைப்பொருத்து நிற்கிறது; அப்படியாகும் பொழுது யோக்யதையைப்பொருத்து ஜாதி பிரிக்கப்படுவது தவிர யோக்யதையிருந்தாலும் இல்லாவிடினும் வார்சுப்படி ஜாதி கீழ் மேல் என்று வந்தால் மனிதர்களெல்லாம் ஒன்றுதானு என்று கேட்டகேள்விக்கு விரோதமாகிறது; இன்னுன்று தெரியாமற்சொல்வாருமுளர்; குதிரையும் கழுதையுமொன்றுகுமாவென்பார்கள்; அவர்கள் சொல்லுகிறது உண்மையாய்த்தானிருக்கிறது குதிரையின் உருவம்வேறு முகம்வேறு வால் வேறு அதன் உபயோகம் வேறு கழுதையின் முகம்வேறு வால்வேறு உபயோகம் வேறு இவ்வாற்றால் ஒன்றுக்கொன்று அவயவ வித்தியாசத்தால் வேறுஜாதிதான். அதுபோல் மனிதர்கள் அவயவம் வேறுவேறாக இல்லை; அப்படியிருக்கும் அவயவ வேறுபாட்டில் ஸ்திரீகளை பெண்களென்று இனங்கருதப்படுகிறது; ஆகையால் குதிரை கழுதையாகாது கழுதை குதிரையாகாதென்பதுண்மைதான்.

அநுஷ்டானம் யோக்யதை, ஒழுக்கம் தெய்வவழிபாடு முதலியன இருந்தாலும் கீழ்ஜாதி யென்று நினைக்கும் தற்கால ஸ்மார்த்த, சைவ, வைணவ மதஸ்தர்கள் அபிப்பிராயப்படி ஜாதிதான் உயர்ந்ததென்பதை யோசித்தால் பெரியபுராணம்

அனுஷ்டித்து மனது பரிசுத்தமடைந்து ஞானமுண்டாகி உலகப் பற்றற்று உலகத்தினின்றும் விடுதலையடைந்து சாந்தி யென்னும் முத்தியை (முடிவை) அடையலாமென்பதைச் சொல்லியிருக்கிறது. அதில் வேதமார்க்கம், கர்மகாண்டம், ஞானகாண்டம் என்று பிரிக்கப் பட்டிருக்கிறது.

1. கர்மகாண்டம் பெரும்பாலும் தேவதைகளை வழிபடும் தன்மை யைக்காட்டி அதற்குக் காலநிர்ணயங்களை ஏற்படுத்தி அதன்வழி தவறாமல் அதே நோக்கத்துடன் நடத்திவரும் கர்மாவான சந்தியா வந்தன,, ஔபாசன,, அக்கினிஹோத்ர,, வைஸ்வதேவ முதலிய நித்திய கர்மங்களாயும் பிதுர்க்களை யுத்தேசித்தும் தேவர்களை யுத்தே சித்தும் சமயம்போல் செய்யப்படுகிற நிமித்த கர்மங்களாயும் நடத்தி வரப்படும் கர்மங்களில் தேக அந்தக்கரணம் இடைவிடாது செய்யும் கர்மா ÷ தனக்கென்றில்லாமல் கடவுளர்ப்பணமாக்கிப் பயின்று வரு வதின் பழக்கத்தால் உலகவாசனை குறைந்து உள் நோக்காய் ஒரு வழிப்பட்ட மனதையடைந்து மனச்சலனமற்ற சித்தசுத்தியை யுண் டாக்கும்.

2. ஞானகாண்டம் சித்தசுத்தியின் பேரில் உண்மை ஞானமுண்டாகி உலகம் நித்தியமில்லை யென்று நிச்சயப்பட்டு

---

முதலிய உபபுராணங்களிலும் 18 புராணங்களிலும் சொல்லும் அடியார்களும் நாயன்மார் ஆழ்வாராதிகளும் ஜாதி பிரித்து உயர்ந்த ஜாதியை ஒருபுராணத் தில் உயர்வாகவும் அடையும் பலன் உயர்த்தியாகவும் மற்றொரு புராணத்தில் தாழ்ந்த ஜாதியையும் அவர்களைத்தாழ்த்தியும் அதற்குத்தகுந்த தாழ்ந்த பதவியு மாய் எழுதப்பட்டு ஜாதியால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கிறதாவென் பதையோசிக்க;ஆகையால் யோக்யதையைக்கீழேதள்ளி தற்காலஜாதிவுயர்வைக் கற்பிப்பது கண்டிக்கத்தக்கது.

÷ மனத்துயரு மாபத்தும் வளர்தொழிலு மகங்காரத்தால் வருமித்தைப் போற்—கனத்த பகையிலது நெடுங்காலம் வினையதுசேர்ந்து கலங்காநின்றேன் அனத்தொடு தண்ணீருந்தேன் அரும்போகம் விரும்புவதென் னகங்காரஞ்சேர் தினத்தொழில்களோமமுண வினைத்தும்பொய் யகங்காரம் தீர்தல் மெய்யே ஞானவாசிட்டம் வைராக்யப்பிரகாணம்.

யோகம், ஞானம் என்பவைகளின் அப்பியாசத்தால் முடிவை யடைவது. (பிறவாமையடைவது)

மற்றும் கடமை (தர்மம்) என்பதைப்பற்றுக் கோடாகக் கொண்டு ∠வருணம் ஆசிரமம் என்ற கொள்கையை உறுதியாய்ப் பிடித்து அதன்படி நடந்து உலகவாசனையை யொழித்தாலும் நிர்மல வாசனை யேற்படுமேதவிர உண்மைஞான மேற்பட்டு நிச்சயமான உலகவிடுதல் ஏற்படாது. அஃதெங்ஙனமாயினு மாகுக.

மேற்சொன்னபடி வேதத்திற் சொல்லும் அனுஷ்டானத்திலும் அந்தப்படி முயற்சிசெய்ய இயற்கையில் வராத மந்தமதிகளைத் தவிர இயற்கையால் முயற்சியுள்ளவர்களும், பக்குவமுள்ளவர்களும் இயற்கையான விருப்பமுள்ளவர்களுமான மனிதர்கள் யாவரும் அனுஷ்டித்து முடிவையடையலாம்.

இதற்குத் திருஷ்டாந்தமாக மேற்சொன்ன மந்தமதிகள் தவிர அதற்கு முன்னால் சொல்லப்படுகிறதும் படிப்படியான பக்குவத்தைக் குறிப்பிடுவதுமான பிர்ம, க்ஷத்திரிய, வைசிய என்னும் பெயருடன் கூடிய பக்குவிகள் வேதத்திற்சொல்லும் எல்லாக்கர்மாக்களின் அனுஷ்டானப்படி அனுஷ்டித்து உண்மையையடைய யோக்யதை யுள்ளவர்களென்றும் அவ்வேதத்திலே சொல்லப்படுகின்றன.உ

---

∠வருணமாவது; பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற ஜாதிப் பிரிவு.

உஆனால் தற்காலத்தில் ஜாதிக்கட்டுப்பாடே தங்களுக்கு மோக்ஷமென்று நினைத்துக்கொண்டிருக்கிற சில பிராமணர்கள் பிராமணரென்ற வகுப்புமாத்திரம் இப்போது இந்தியாவில் இருக்கிறதென்றும், தன் அனுஷ்டான முள்ளவர்களான மற்ற க்ஷத்திரிய, வைசிய என்ற இரண்டு பிரிவும் இக்காலத்தில் இல்லையென்று சொல்லிக்கொண்டு தங்களைத்தவிர மற்றியாரும் வேதக்கொள்கையை யனுஷ்டிக்கக் கூடாதென்று தங்கள் வெறும் பட்டப்பெயரால் உயர்த்திக்கொண்டு நிற்கிறார்கள். ஷை பிராமணர்களால் ஒப்புக்கொள்ளக் கூடாதவர்களாய், க்ஷத்திரிய, வைசிய என்னும் பட்டத்தையடைந்து நிற்கக் கருதுபவர்கள் தங்களுக்குமேல் ஷை பிராமணரென்ற வகுப்பு இருப்பதாகவும் தாங்கள்

வேதத்தின் முடிவான உபநிஷத்துக்களில் முக்கியமானதும் சாந்தி பாடத்திற்கெடுத்ததுமான (10) பத்து உபநிஷத்துக்களில், தைத்ரேயமென்னும் உபநிஷத்து, தித்திரியென்னும் பக்ஷியால் சொல்லப்பட்டிருக்கிறது. அதை யோசித்தால் பக்குவமான மனதுடைய எந்த ஜீவனும் வேதத்தை உபயோகித்துச் சாந்தியடையலாமென்று சந்தேகமற, சுருதி, யுக்திகளால் நிச்சயமாய்த் தெரிகிறது.

மேற்சொல்லிவந்த விவரப்படி உண்மையான வேதஸ்மார்த்தக் கொள்கைக்கு ஜாதிக்கட்டுப்பாடு தேவையில்லை; அப்படிச்சொல்லும் ஜாதிக்கட்டுப்பாடு உலகத்தின் பெருமைக்கும், அகங்காரத் திருப்திக்கும் உபயோகப்பட்டு வருவதைத் தவிர உண்மையை யடையும் ஓ அனுஷ்டானம் ஒன்றேனும் இல்லை.

---

அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவிருந்து தாழ்ந்து நடந்துவருவதில் தங்களுக்கு மோக்ஷமென்றும் இத்தியாதி ஜாதியபிமானத்தின் அகங்காரத்தினால் செருக்கடைந்து மற்றெந்தவிதமான சித்தசுத்தியடையும் கொள்கைகளைக் கைவிட்டவர்களாய்த் தெளிவில்லாமல் நரகிற்காளாகிறார்கள். தனக்குமேலொரு ஜாதியில்லை யென்பதும் தனக்குச்சமானமாகவோ அல்லது தனக்கு அடுத்தபடியாகவோ மற்றொரு ஜாதியிருக்கப் பொறாத குணத்தைக்கொண்டு க்ஷத்திரிய வைசிய ஜாதியென்பது இக்காலத்தில் இல்லையென்றும் ஆனால் வேதத்தில் சொல்லியபடி உயர்ந்ததாக எல்லாரும் மதிக்கும்படியானதும் தற்காலத்தில் அநுஷ்டிக்கமுடியாததுமான கொள்கையையுடைய பிராமண ஜாதியென்பது இக்காலத்திலில்லாமலிருக்க தாங்கள்மாத்திரம் அந்த ஜாதியாயிருக்கிறதாகவும் சொல்லிக்கொள்ளுதல் காலத்திற்குப் பொருத்தமில்லாததும், பகுத்தறிவும் தெளிவும் ஞானமில்லாத ஆஸ்திகப் புத்தியைக்கொண்டவர்களிடம் சொல்லவும் அவர்கள் தங்களுக்குக் கீழ்படிந்து நடந்துகொள்ளவுமாயிருப்பது விந்தையிலும் விந்தையாகவும் விளையாட்டுப்பிள்ளைகள் பேச்சாகவும் இருக்கிறது.

ஓ வேதத்தின் ஒழுக்கத்தை யனுசரித்து சித்தசுத்தியடைந்து ஞானமுண்டாகி உண்மையை யடைதல் அல்லது பிறப்பின்மையாதல் என்னும் மோக்ஷத்திற்குச் சாதகமாய் மனது கட்டுப்பட்டுத் தேகத்திற்கும் மனதிற்குமுள்ள தொடர்ச்சியை விலக்குவதற்கு முக்கிய சாதனங்களாய் (வருணம்) ஜாதி ஆசிரமம் என்பனவைகளை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வருணம் (ஜாதி)

ஆகமம்:—உலகத்தைச் △ சிருஷ்டி, திதி, சங்காரம் என்பவைகளால் நடத்துபவரும் உலகாதீதரும் உலகத்தை நடத்துவதால் ஏற்படும் பாசம் இல்லாதவரும் எல்லாம் அறியும் தன்மையுடையவரும் ஒப்பிட முடியாத ஆற்றலுடையவருமான முழுமுதற்கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவரை ஆண்டான் அடிமைத்திறத்தால் வழிபட்டு அவருடைய ௨ அநுக்ரஹத்தால் மனது பரிசுத்தம் அடைந்து ஞானமுண்டாகி வீடு பேறான உலகவிடுதலை யடைகிறவழியைக் காட்டும். இதில் கடவுள் வழிபாட்டிற்கு உரித்தான கோவில், நிர்மாணம்

---

ஆசிரமம் என்பவைகள் ஒன்றையொன்று பிரிந்து தனித்தனி அனுஷ்டானமாய் நிலைத்து நிற்காதவைகள். அந்தவேதத்தின் கொள்கையான எல்லாம்தானென்றும் தானே பிர்மமென்றும் சொல்லப்படுகிற வேதாந்தமான பேதமற்ற அத்வைத நிலையையடைவதின் சாதனமான ஷை வருணாசிரமத்தை யனுஷ்டித்து நடப்பவர்கள் பிராமண, க்ஷத்திரிய வைசிய என்னும் முதல் மூன்று வருணத்தவர்கள். அவ்வனுஷ்டான மில்லாதவர்கள் அந்த ஜாதியல்ல அப்படி பிர்மசரியத்திற்குச் சொல்லப்படுகிற கட்டுப்பாட்டுடனும் கிரஹஸ்தாஸ்ரமத்திற்குச் சொல்லுகிற கட்டுப்பாட்டுடனும் வானப்ரஸ்தாஸ்ரமத்தை யனுஷ்டிக்க வயதானபொழுது வனத்திற்குச்சென்று அவ்வனுஷ்டானப்படி நடந்தும் அப்பால் சந்யாச ஆஸ்ரமத்தை வகித்தும் காலத்தைக்கழிக்கும் ஒரு மனிதனுவதுண்டா? இருக்கிறார்களென்பதை யாராயினும் சொல்லமுடியுமா? ஆகையால், பிராமணரென்ற ஒருஜாதி இப்போது இருக்கிறதாய்ப் பாவனை பண்ணித் தெரியாதஜனங்களை ஏமாற்றுவதற்காக எடுத்திருக்கும் கொள்கையென்பதை வாசகர்கள் நிச்சயமாய் சந்தேகமறத்தெரிந்துகொள்ளவேண்டியது.

பிர்மத்தையடைந்தவன் பிராமணன் என்னும் மனிதரின் பொதுப்பிரயோக வார்த்தையை தங்கள் சொந்த அநுபவமாய் நினைத்துத் தெரியாத ஜனங்களிடம் சொல்லியும், பிர்மம் இப்படியுள்ள அநுபவமென்று தெரியாத அறிவின்மையுடன் பிதற்றி வெளியில் தன்னையுயர்த்திக்கொண்டு ஏமாற்றும் கொள்கையும் கண்டிக்கத்தக்கது.

△ சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்ரஹம் என ஐந்து தொழிலும் கடவுளுக்குண்டெனச் சொல்வாருமுளர்.

௨ எவர்கள் நிர்க்குணமான பரப்ரமத்தை நேரேகாணமுடியாத மந்தர்களோ அவர்கள் ஸகுணவடிவங்களால் அருள்புரியப்படுகிறார்கள். பரமேஸ்வரன் அந்த அன்பாளர்களுக்கு தமது சகுணவடிவத்தைக் கருணையினால் அருளுகிறார்.

பக்திபண்ணும் முறைகளான தீக்ஷைக்கிரமங்களைச் சொல்லுவதில் சைவத்திற்குத் தக்கவாறு சிவாகமமும் வைணவத்திற்குத் தக்கவாறு வைகானச பாஞ்சராத்திரமுமா யிருந்தாலும் அபிப்பிராயமெல்லாம் தலைவன் ஒருவன் உண்டென்றும் அவனை வழிபடுமுறையாய் வழி பட்டால் முத்தியென்னும் சாந்தியடையலா மென்பதே.

ஆனால், இவற்றின் பத முத்தியை முடிவாகச் சொல்வாருமுளர். அது (முத்தி) முடிவென்னும் பதத்திற்கு இலக்காகாது அஃதெவ்வா ருயினுமாகுக.

முற்சொன்ன ஆகமத்தின் கொள்கையை யனுசரித்து முற்றுப் பெறுவதிலும் அவ்விச்சையை யுடையவர்களாயுள்ள எந்த ஜீவனும் ஆகமப்படி நடந்து முடிவையடையலாம். அதற்குத் திருஷ்டாந்த மாக ஆகமத்தின் துணைக்கருவியான புராணங்களில் சைவத்தில் நாரை, கரிக்குருவி முதலிய பக்ஷிஜாதிகளும் மற்றும் எத்தனையோ வித ஜீவன்களும் முத்தியடைந்தமை காண்க.

இன்னும் நன்ருய் விசாரித்தறிந்தால் சைவமதக் கொள்கையில் அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் நடக்கமுடியாத தலைமைபெற்ற வீரசைவரான வசவதேவர் குருபூஜைகாலத்தில் சிவ சின்னம் பூண்டுவந்திருந்த பக்குவ அபக்குவமாயுள்ள மனிதவர்க்கத் தினர் யாரையும் சிவ சின்னத்தால் சைவமதக் கொள்கையை யனு

---

இவரது மனம் சகுணப்ரமத்தினுடைய தியானப்பயிற்சியினுலே வசப்பட்டு அலையாது நிற்கும்போது அதுவே உபாதியின் கற்பனை நீங்கியதாய் நேரே காக்ஷிப்படும் என "வேதாந்த கற்பதரு" என்னும் நூலில் அந்தரதிகரணத்தில் பெரியார் அமலானந்தபாதர் உரைத்ததைப்பார்க்க. அன்பு தவமிரண்டென்பர் அறிவிலார்—அன்பேசிவமாவ தாருமறிகிலார், அன்பேசிவ்மாவதாருமறிந்த பின்—அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே. (திருமூலர் திருமந்திரம்)

யோகியர்க்கே ஞான மொழுங்காம் போன்பான-தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பரர்பரமே. (தாயுமானவர்)

சரித்து ஒரே நோக்கால்உ இனங்கருதாது சிவமாகப்பாவித்த தன்மையும் வைஷ்ணவத்தில் மதகுருவாய் விளங்கிய ஸ்ரீமத் ராமானுஜாசார்யார் ஜாதி குறிப்பிடாமல் யாவரென்றும் இனம்பாராமல் 7 தன் எதிரில் பார்த்தவர்களையெல்லாம் வைஷ்ணவராய்ச் செய்தமையாலும் மற்றும் சைவத்திலும், வைஷ்ணவத்திலும், மற்றெந்த மதத்திலும், பக்தியும் அதற்குத்தகுந்த கொள்கையும் பக்குவமும் உடையவனுக்குத் தீக்ஷை முதலிய ÷செய்யப்படல் வேண்டுமென்று சொல்வது தவிர ஜாதிமுறையை யநுசரித்து அவன்மகன் அவனுக்குச் செய்து பக்குவப்படுத்த நினைப்பது பழுக்காத பழத்தை ருசிபார்த்ததுக் கொப்பாகும். இவற்றால் பக்குவமுடையவன்தான் கடவுளை வழிபடவும், முத்தியடையவும் அருகனல்லாது மற்று ஜாதிக்கட்டுப்பாடுமாத்திரம் உள்ளவர்கள் அருகரல்ல. மனப்பக்குவமல்லாத ஜாதிக்கட்டு விபரீதத்தை விளைவிக்கும். ஜாதி இழிவாய் நினைக்கப்படுகிற இனத்தினுடைய மனப்பக்குவம் மேலான நன்மையைக் கொடுக்கும்.

---

உவெள்ளவேணிப் பெருந்தகைக்கியான் செய்யடிமை மெய்யாகக்—கள்ளவேடம்புனைந்திருந்த கள்வரெல்லாம் களங்கமறு—முள்ளமோடு மெய்யடியாராகவுள்ளத்துள்ளுமருள்—வள்ளலாகும் வசவேசன் மலர்த்தாடலைமேல் வணங்குவாம். (பிரபுலிங்கலீலை)

7 பாதியாயழுகிய கால்கையரேனும் பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும், ஆதியாயரவணையா ரென்பராகில் அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார், சாதியாலொழுக்கத்தாற் றக்கோரேனும், சதுர்மறையின் வேள்வியாற் றக்கோரேனும், போதிநான்முகனின்று பணியானின்ற பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே. (திருவாய்மொழி)

சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடுவானளத் தருவரேனும்
மங்குவாரவர்செல்வ மதிப்போமல்லோ மாதேவர்க்கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகுந் தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர்யாம்வணங்கும் கடவுளாரே.

என்றும், எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் என்பன தேவாரம்.

÷ அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்—குடியார்க்கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசை—பெத்தான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்ஷைசெய்து—முத்தி கொடுக்கமுறை. என்றார் ஸ்ரீ சபாநாதர்.

ஆகையால் உண்மையான எந்த மதத்திற்கும் ஜாதியென்ற கட்டுப்பாடு விரோதமென்பதும், ஜாதிப்பிரிவு இருக்கவேண்டிய தில்லை யென்பதும் தெற்றென விளங்கும்.

புராணம்:—ஆகமத்தின் துணைக்கருவியாய் ஆகமத்துடன் மாறு படாத கொள்கையுடன் கடவுள் என்னும் தன்மையைவைத்து ஆண்டான் அடிமைத்திறத்தால் பரமார்த்திகத்தை யடைந்துள்ள ஜீவ வர்க்கத்தையும் அதன் அனுஷ்டானத்தையும் எடுத்துக்காட்டித் திருஷ்டாந்தமாய் வெளிப்படுத்துவது.

இதிற் கடவுளையும், கடவுளை வழிபட்டமுறையையும் மட்டும் சொல்லி அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு நடக்கப்பிரியப் படும் பக்குவர்க்கு உபயோகமானது.

இவற்றுள் இந்த ஜாதிதான் கடவுளை வழிபட்டது. இந்த ஜாதி வழிபடக்கூடாதது என்ற சரித்திரமுமில்லை.

இதிகாசம்:— புராணம் எப்படி ஆகமத்தின் துணைக்கருவியோ அதுபோல வேதத்திற்கு இதிகாசம் துணைக்கருவியாகும்.

எல்லாரறிவுகளின் றாற்பரியம் என்னறிவு—செல்லுமிடத்தளவும் சென்றறிந்தேன்—வல்லபடி—வாதனையைமாற்றும் வகையதுவே மற்ற

---

பெரியபுராண முதலியவற்றிலும் நாயன்மார்களின் இனம் தெரியும் பொருட்டு ஊர் பெயர் சொல்வதுபோல ஜாதியென்பதும் விலாசவிவரத்திற்குச் சொல்லிக்கொண்டுவந்து ஒரே கொள்கையான சிவப்பற்றுடையவர்களென ஒன்றாய்மதிக்கப்பட்டு ஜாதியால் உயர்வு தாழ்வு ஏற்படாமல் எல்லா நாயன் மாரையும் ஒன்றாய் மதிக்கப்பட்டுவருவது அறிவாளர்கள் யாருமறிவார்கள். ஜாதிவுயர்வை மதிக்காமல் பக்திக்கும் கொள்கைக்கும் மேம்பாட்டைச்சொல்லி முடிவைக் காட்டியிருப்பது கவனிக்கற்பாலது.

ஒழுக்கம் விழுப்பந்தரலா லொழுக்கம்—உயிரினு மோம்பப்படும். (குறள்)
இழுக்குடையபாட்டிற் கிசைநன்றுசாலும்—ஒழுக்கம் உயர்குலத்தினன்று.

வற்று-ளேதழுறக்கண்டவிதம். என்ற திருக்களிற்றுப்படியார் என்னும் சைவாகம மெய்கண்ட சாஸ்திரத்தின் நூலின் அபிப்பிராயத்திற் கிணங்க உலகவாசனையை மாற்றி ஜீவபோதமில்லாமற்செய்து பிற வாமையென்னும் முடிவையடைவதற்காக எழுதப்பட்டவைகள். மேற்சொன்ன நிலைமையடைவதற்கு அதாவது மனோலயமாகி முத்தி யடைவதற்கு இதுபரியந்தம் சொல்லிவந்த வேதம், ஆகமம், புராணம் என்னும் நூல்களின் அந்தரங்க உட்கருத்திலும் பக்குவமில்லாத ஜாதிக்கட்டுப்பாட்டைச் சாதனமாகச் சொல்லப்படவுமில்லை; வார்சுப்படி ஜாதி குறிப்பிடவுமில்லை.

ஒவ்வொருஜீவனும் தத்தமக்கு ஏற்பட்ட நல்லொழுக்கத்தி னின்றும் கீழேவராமலிருப்பதற்குத் தம்மளவில் ஓர் வரம்பாக ஜாதி நினைக்கப்படுவது தவிர ஜாதிக்கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு பிறரைக்கீழ்ப்படுத்தவும் இழிவாகநினைக்கவும் ஏற்பட்டதல்ல. முடிவில் யோசித்தால் ஜாதியென்பது கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதுமில்லை மதசம்பிரதாயப்படி படிப்படியாய் ஒருமதம் உயர்ந்தது, இன்னொரு மதம் அதற்கடுத்தது, மற்றொருமதம் அதனினுந் தாழ்ந்தது என்று கீழ்மேலாக ஏற்பட்டதுமில்லை. "அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்–செந்தண்மை பூண்டொழுகலால்" என்ற தமிழ்வேத வாக்கை ஆராய்ந்துபார்த்தால் ஜாதியென்பது வார்சு பரம்பரத்தைப் பொருத்ததல்லவென்பதை மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண் டொழுகலான் அறவோர் அந்தணரென்று சொல்லப்படுவரெனக் குணத்தைப்பொருத்து வர்க்கமாய் இனம்பிரிப்பது தவிர வார்சுபரம் பரையாய்ப் பிரிப்பதல்லவென்பதும் தெளிவாய் விளங்கும். தகப்பன் யோக்யனும், மகன் திருடனுமிருந்தால் தகப்பன் யோக்யதைக் காக மகன் என்னதிருடினாலும் அத்திருட்டையொழித்து அவனும் (மகனும்) யோக்யன்தானென்று எந்தப்பைத்தியக்காரனாவது சொல் வானா அப்படிச்சொல்பவன் புத்தியில்லாதவனும் திருடனுக் கிடங் கொடுத்தவனுமாகிறான். தவிர, குருடனுக்கு நல்லகண்ணுள்ளபிள்ளை யும், செவிடனுக்கும் ஊமைக்கும் கேட்கும்காதும் பேசுந்திறனு முள்ள பிள்ளைகள் உண்டாவதும், நொண்டிக்கு நல்லகாலுள்ளபிள்ளை கள்உண்டாவதும் வார்சுக்கிரமமாகஇல்லை.

ஆகையால் யோக்யதையையும் குணத்தையும் வைத்துப்பார்க்கும் பொழுது தகப்பன் குணம்வேறு மகன் குணம்வேறு அதற்குத் தக்க

படி யோக்யதை ஒழுக்கம் வெவ்வேறாக ஏற்படுவதால் யோக்யதைக்கும் குணத்திற்கும் தக்கவாறு வகுப்புப்பிரிக்கவேண்டுவதும் பிரித்திருந்ததுவுந் தவிர உருவத்தின் வம்சத்தைவைத்து ஜாதி பிரிக்கப்படுவதல்லவென்பது விளங்கும். □

இப்படி ஆராயுமளவில் சில பிரபல மனிதர்களால் கொண்டுவரப்பட்ட வழக்கத்தைப் பொருத்து மனிதன் பிடிவாதத்தால் ஜாதிக்கட்டு அமையப்பெற்று நிலைத்து நின்றுவிட்டது. ஒழுக்கத்தில் உயர்வு தாழ்வு கற்பிக்கலாமோவெனில் ஒவ்வொரு மனிதனும் தன் தன் நாகரீகத்தையும் ஒழுக்கத்தையும் மதக்கொள்கையையும் பெரிதென்று வைத்துக்கொண்டிருக்கும் கொள்கை இயற்கையமைப்பாலாக்கப்பட்டது. "காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு" அவ்விஷயத்தை யோசித்தாலும் சிறிது பெரிதென்று சொல்லமுடியாது. அஃதெவ்வாறெனில், இஸ்லாமான, குர்ஆன் வேதத்திற் சொல்லப்படுகிற ஒழுக்கப்படி அனுஷ்டானமில்லாத எந்த மனிதனையும் அதாவது ஹிந்து, கிறிஸ்துவ, பௌத்த முதலிய எம்மதத்திலுள்ளவர்கள் யாவரையும் "முஷ்ரீக்" என்று சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துமதவேத பைபிளின்படி ஒழுக்கமும் அனுஷ்டானமுமில்லாத எந்த மனிதர்களையும் அஞ்ஞானிகளென்று சொல்லுகிறார்கள்.

அதேபோல பௌத்தம் முதலிய எல்லாமதங்களிலும் தத்தம் கொள்கையை யுயர்த்தியும் மற்ற கொள்கைகளைத் தங்களுக்குத் தோன்

---

□ கள்ளிவயிற்றி னகில்பிறக்கும் ஆன்வயிற்றி—லொள்ளரிதாரம்பிறக்கும் பெருங்கடலுள்—பல்விலைய முத்தம்பிறக்குமே யாரறிவார் நல்லார்பிறக்கும் குடி என்ற நீதிநூல்.

வியாசர், பராசர், வான்மீகி, திருதராட்டிரன், பாண்டு, கர்னன் என்பவர்களின் பிறப்புமுதலியவற்றைப் பாரத சரித்திரப்படி பார்த்தால் நல்லவருக்குக்கெட்டபிள்ளையும் கெட்டவருக்கு நல்லபிள்ளையும் ஒருஜாதி மற்றொரு ஜாதியுடன் கூடிப்பிறந்திருந்தாலும் யோக்யதைக்குத் தகுந்தபடி மேற்சொன்னபிரகாரம் ஜாதிப்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது.

றும் யுக்திப்பிரமாணத்தினல் ஒருமைப்பாடுள்ள மனதையடைவதற்காக உயர்த்திச்சொல்லிக்கொண்டு அனுஷ்டிப்பது இயற்கையாயிருக்கிறது.

இன்னும் ஆழ்ந்த கருத்துடன் யோசித்துப்பார்க்குமிடத்து ஒவ்வொரு மதத்திலும் உட்பிரிவாய்க் கொள்கைமாறுதல் பலவாறிருப்பினும், இந்துக்களுள் உண்மையான மதப்பற்றுள்ள ஸ்மார்த்த சைவ வைஷ்ணவ முதலிய ஒவ்வொரு மதமும் தனித்தனி தன் உயர்வைக் காட்டியும் மற்றதைத் தாழ்த்தியும் உறுதிபண்ணப்படுகின்றன. ÷ மனமானது சலனமற்று ஓர்மையான உறுதிப்பாடடைந்து உண்மையான சாந்தியடைதற்பொருட்டு ஒன்றையொன்று உயர்த்திக் கற்பிக்கப்பட்டிருப்பதல்லாமல் ஒருவர் கொள்கையை மற்றொரு கொள்கையோர் தப்பென்று சொல்லிக்கொண்டிருந்தால் எந்தக் கொள்கையும் சிறந்ததாகாது.

இதுகாறும் சொல்லிவந்த இந்து சாஸ்திரமும் இந்து மதமும் பிறப்பினளவில் ஜாதி குறிப்பிடவில்லை யென்றும் யோக்யதைக்குத் தக்கவாறு (வகுப்பு) ஜாதி பிரிக்கப்பட்டிருக்கிறதென்பது உண்மையெனத்தெரிகிறது.

---

÷ ஸ்மார்த்தக்கொள்கைப்படி ஏற்பட்டுள்ள ஜாதிப்பிரிவில் அதையனுஷ்டிக்கிறவர்கள் பிராமணனுக்குக் கொடுப்பதுதான் சிறந்த புண்ணியமென்றும் யாவரும் பிராமணனுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்றும்,

வைஷ்ணவமதப்படி அக் கொள்கையை யுடையவர்களுக்கே யாவரும் கொடுத்தல் சிறந்த புண்ணியமும் கடமையுமாகுமென்றும் சொல்லியிருப்பது போல

சைவமதத்திலும் அம்மதக்கொள்கைப்படி "பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சிக்கில் போர்கொண்டவேந்தற்குப் பொல்லா வியாதியாம். பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமாமென்றே சீர்கொண்ட நந்திதெரிந்துரைத்தானே" எனத் திருமூலர் திருமந்திரத்தும் சிவ மஹாபுராணத்தில் சைவதீக்ஷைபெற்ற ஒருவருக்குக்கொடுக்கும் அன்னதானமும் ஸ்மார்த்தக் கொள்கையையுடைய ஆயிரம் ஸ்மார்த்தப் பிராமணர்களுக்குக் கொடுக்கும் அன்னதானமும் சமமலனெக் கொடுக்குமென்றும் சொல்லுகிறது.

இவ்வாற்ருல் ஜாதியென்று பாராட்டும் முறையிலும் மதத்தின் முறையிலும் பிராமணன் என்றும் மற்றும் உயர்ந்த ஜாதி யென்றும் நினைத்துக்கொண்டிருப்பவர்கள் மற்றவர்களைச் சூத்திரனென்றும் பஞ்சமனென்றும் சொன்னதினுலே மற்றவனுடைய நிலைமைகெட்டு குணம் மாற்றமடைந்து கீழாகப்போகிறதுமில்லை. பிறரழைப்பதன் பொருட்டுத்தான் தன்னையழைப்பவன் அபிப்பிராயம்போல் கீழ்ஜாதி யாகவும் மேல்ஜாதியாகவும் ஒப்புக்கொண்டு நடக்கவும் வேண்டுவ தில்லை. மதமும் அப்படியே மற்ற மதத்தால் ஏற்றத்தாழ்வு கற்பித்த படியாகாது.

அற்ப அறிவுள்ளவர்கள் தன்னை யுயர்த்தியும் பிறரைத் தாழ்த்தி யும் வைத்துக்கொண்டு மேற்போக்கான உண்மையைஅடையமாட் டார்கள்.

பேரறிவுள்ளவர்கள் தன்நல்லொழுக்கத்தை உறுதிபண்ணுவதன் பொருட்டுத் தன்கொள்கையை மாத்திரம் மேலாக நினைத்து மற்ருென் றிற் செல்லாமல் உண்மையை யடைவதிற் பிரயத்தனப்படுவார்கள்.

பிறமதத்தையோ பிறரையோ இழிகுணங்கொண்டு தாழ்த்தார் கள்.

## 3. இந்தியாவின் உண்மை மாறுதல்

மேற்சொன்ன விவரப்படி மனிதவர்க்கத்தில் பிறந்த யாவரும் அவரவர்கள் புத்திக்கும் யோக்யதைக்கும் தக்கவாறு எந்தஸ்தானத் திற் செல்லுகிருர்களோ அந்தந்தத் தொழிற்பெயரேயிட்டழைக்கப் பட்டுவந்தார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன்செய்யும் செய்கைக்குத்தக்கவாறு அனுபவம் கிடைப்பது என்ற நியாயப் படிக்கு ஒரு பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளைகள் தங்கள் கல்வித் திறமைக்குத் தக்க வகுப்பையடைவதுபோல ஒவ்வொரு ஜீவர்க ளபிப்பிராயம் முற்சொன்னவைகளில் எந்தப்பிரிவிற் பிரவேசிக் கிறதோ அந்தப்படி அந்தந்தத் தொழிலுமாகத் தொழிலுக்குரிய பெயருடையவர்களாய் இருந்தாலும் ஒருவருக்கொருவ ருதவியாய் மேல் கீழ் என்பதைக்காட்டாமல் பெருங் குணமுடையவர்களாய்

உலகைத்துறந்த பெரியோரிடத்திலும் தங்களை நியாயவழியிற் பாது காத்துவரும் ராஜாக்களிடத்திலும் அன்பும் விஸ்வாசமும் நம்பிக்கை யும் பிரியமும் வைத்து நடந்துவந்தார்கள்.

"நெருநலுள னொருவனின்றில்லை யென்னும் பெருமையுடைத் திவ்வுலகு" என்ற தமிழ் வேதப்படி,

÷இயற்கையிலோ செயற்கையிலோ மற்றும் மனிதசிருஷ்டி யிலோ ஏற்பட்டிருக்கும் எவ்வித அமைப்பும் செயற்கைப் பொருளும் ஏற்பட்டபடியிராமல் மாறுதலடைகிறதென்பதை ஆராய்ந்துபார்த் தால் யாவரும் தெரிந்துகொள்ளலாம்.

தவிர ஒவ்வொருவரும் தம்முடைய சரீரத்தைப் பார்த்தாலே ஏறுவதும் இறங்குவதுமாயுள்ளதில் மாறுதல்தெரிந்துகொள்ளலாம்.

அப்படிமாறும் காலத்தையநுசரித்து இந்தியாவில் ஏற்பட்டிருந்த அமைப்பும் அதன் கொள்கையும் மாறவேண்டிய காலம் ஏற்பட்டதால் பல அன்னிய தேசத்திலிருந்து அன்னியர்கள் இத்தேசத்திற்குடியேற ஏற்பட்டது.

அக்காலத்தில் ஒரு சமையத்தில் △ வந்தவர்களிற்சிலர் தங்களுண விற்கும் தேசத்திற்கும் தகுந்தபடி எந்த விதத்திலும் ஜீவிக்கவேண்டு

---

÷ நினை மின் மனனே நினைமின் மனனே- சிவபெருமானைச் செம்பொ னம்பலவனை- நினைமின் மனனே நினைமின் மனனே. அலகைத்தேரி னலமரு காலின்- உலகப் பொய் வாழ்க்கை யுடலையோம்பற்க- பிறந்தன விறக்குமிறந் தன பிறக்கும்- தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்- பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும்- உணர்ந்தன மறக்கும் மறந்தனவுணரும் புணர்ந்தன பிரியும் பிரிந்தனபுணரும். அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம் உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம் (எனப்பட்டணத்தார்)

△ பூமி வர்க்கத்திலும் அவர்களுக்கு பிருஹத்குகர்கள் அதாவது பெரிய குகைகளில் வசிப்பவர்களென்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் இந்தியாவில் ஆர்யர்கள் குடியேறுவதற்கு முன்னிருந்த ஜாதியாரென்றும் சோடா நாகப்பூருக்கருகிலுள்ள மலைப்பிரதேசங்களுக்குப் போனார்களென்றும்

மென்ற கொள்கையை உறுதிபண்ணிக்கொண்டு கபடம், வஞ்சகம், ஏமாற்றல் முதலிய தந்திரக்கொள்கையினுல் இந்த இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஏமாற்றமடையும் சுபாவமுள்ளவர்களென்று தெரிந்தார்கள்.

எந்த எந்த மனிதனுக்கு எதெதிற்பிரியமும் நம்பிக்கையுமிருக்குமோ அந்தந்த வழியில் நடித்துக்கொண்டும் உலகப்பற்றைவிட்டு விலகியிருக்கும் முற்பிரிவிற் சொன்ன சாதுக்களிடத்திலும் அவர்கள் வாய்மொழியான இந்து சாஸ்திரங்களிடத்திலும் அதிக நம்பிக்கையும் விஸ்வாசமு மிருக்கிறதைக்கண்டும் நாளடைவில் அப்பெரியார் கூட்டம் காலத்திற்குத் தகுந்தவிதமாய் வெளிப்படாமலும் தபசு முதலிய கடுமையான இந்திரிய நிக்கிரகங்களைச் செய்துவரும் பக்குவ மனமுடைய ஜனங்கள் இல்லாமல் ஏற்படவுமாயிருந்த அச்சமயத்தில் □ அகஸ்தியர் முதலிய பெரியோர்களைத் தங்களினமென்றும் தாங்கள் கொள்கையினுலுயர்ந்தவர்களென்றும் அவர்களுடைய தேச குணத்திற்குத்தகுந்தபடி வஞ்சகக்குணத்தினுல் தான் என்ற அகம்பாவமும் தான் மற்றவர்களுக்கு மேல் என்ற கொள்கையும் தாங்கள்மாத்திரம் பிர்மாவென்ற தெய்வமுகத்திலிருந்து உண்டானதாகவும் அதனுல் பிராமணரென்று சொல்லிக்கொண்டும் உலகத்திற்காக ஏற்படுத்தப்பட்டு பொதுவாய் யாவருக்கும் உபயோகப்படக் கூடிய மற்றெல்லாப் பாஷைகளைப்போலுள்ள சமஸ்கிருதபாஷை தங்களுக்குச் சொந்தபாஷையென்றும் அதை மற்றையோர் உபயோகிக்கக் கூடாதென்றும் இந்த தேசத்து ஜனங்களை அகம்பாவத்துடன் வற்புறுத்தி ஜீவனேபாயத்தில் வைதீக லௌகீகங்களைக் கையாண்டு தாங்கள் ஒத்துமைக்குணத்தால் ஜாதிமதக் கட்டுப்பாட்டை வலுப்படுத்திக் கொண்டு எவ்விஷயத்திலும் முதன்மை ஸ்தானத்திலிருப்பதாய்க் காண்பித்துவந்தார்கள் (வருகிறுர்கள்.)

---

அங்கே இப்பொழுது வசிக்கும் சில ஜாதியார்களின் பூர்வீகர்களாயிருக்கலாமென்றும் தோன்றுகிறது. என பூர்வீக ஆர்ய பூகோளம் திரிகாண்ட சேஷத்தில் பூமி வர்க்கத்தில் சொல்லப்படுகிறது.

□ தமிழில் தலைமை பெற்றவராய் சைவ ஆகம அனுஷ்டானமுள்ள சிவமதத்தாராய் அகத்தியம் முதலிய ஆகமக் கருத்துள்ள நூல்களை வெளியிட்டிருப்பதைப் பார்க்கத் தெரிகிறது.

இவற்றில் முக்கிய கவனிப்பு என்னவெனில் பரமார்த்திகமான முடிவை யடையவேண்டுமென்ற உண்மையான எண்ணத்துடன் அநுஷ்டானம் வைத்துக்கொண்டவர்கள் பிறமனிதர்கள் எப்படியிருந்தாலும் தாங்கள் அதை த்வேஷ முதலிய குணங்களைச் செலுத்திப் பாராமல் தங்களுடைய சாந்த நிலைமைக்குவேண்டிய சமதிருஷ்டியில் பழகவேண்டிய முயற்சியிலே ஈடுபடுவார்கள்.

அப்படியநுஷ்டானமுள்ளவர்கள் பிராமணரென்றும் தனக்கு மரியாதையும் உயர்வும் சௌர்யமும் இருக்கவேண்டுமென்று பிறரை யெதிர்பார்க்கமாட்டார்கள்; அந்த மஹான்களைப் பற்றியவாசகம் இங்கு எழுதப்படவில்லை.

இவ்வாசகத்தில் எழுதப்படுகிற எந்த விஷயங்களும் அவர்களைப் பாதிக்கமாட்டாது. அவர்களும் பாராட்டமாட்டார்கள்.

முற்சொன்ன போலி வைதீகப்பிராமணரென்று சொல்லப்படுவோர் வயிற்றுப்பிழைப்பிற்கும் கௌரவத்திற்கும் தங்கள் சொற்ப சௌர்யத்தைக் கருதி எத்துணைப் பெருங்காரியத்தையும் துணிகரமாய்க் கெடுத்துவிடுவார்கள்.

திருஷ்டாந்தமாகத் தற்காலத்தில் பரிசுத்தமான மனதுடன் உலகிலுள்ள ஜனங்களுக்கு நன்மைபுரிய வேண்டுமென்ற திடத்துடன் தேசியப்பிழைப்பு நன்மைக்காக ராஜாங்க விஷயத்தில் மனப்பூர்வமாய்ச் சுயராஜ்யத்தையடைய ஓர்இயக்கத்தை யுண்டுபண்ணிய மஹாத்மா காந்தியைத் தங்கள் காரியார்த்தமாகப் பத்திரிகையிலும் பிரஸங்கத்திலும் மிக உன்னதமாக உயர்த்தியும் அவர்கொண்ட கொள்கையைத்தாங்களனுசரித்து வருவதாயும் யாவரும் அப்படியே யனுசரித்தால் சீக்கிரத்தில் சுயராஜ்யத்தை யடையலாமென்றும் அவ்விஷயத்தைப்பிரபலமாக்கி அவர்மூலமாகப் பின்னுல்அடையும் சுயராஜ்யத்தைக்காட்டிலும் "சும்மா ஆடுமா சோழியன் குடுமி" என்றதற்கிணங்க என் வீண்வேலை செய்யவேண்டுமென்ற சுயநலமுள்ளவர்களாய் மஹாத்மா காந்திமூலமாகக் கதர் உத்தியோகம் முதலிய எவ்விஷயத்திலும் பணம் சம்பாதிக்கத் தலைப்பட்டும் அவ்வனுஷ்டானமில்லாமல்

கிளர்ச்சிப்பேச்சளவில் நின்றுகொண்டு அவர் போக்கைத்தடுத்துத் தங்கள் சுயநன்மைக்காக ஜாதியுயர்வை ஸ்தாபிக்கிறார்கள்.

ஆனால் சில புத்திசாலிகள் உண்மையாய் அவ்விஷயத்திலீடுபட்டாலும் முடிவில் ஜாதியபிமானத்திலும் ஒத்துமை விருப்பத்திலும் வசப்பட்டுக் கிளர்ச்சியபிப்பிராயத்தைப் பின்பற்றுகிறார்கள்.

மற்றும் அவர்கள் இயற்கைக்குணமான சுயநலமும் அதற்காக எந்தப் பெருங்காரியத்தையும் கெடுத்துவிடுவார்களென்பது அன்ன சத்திரம், கோவில், கலாசாலை முதலியவைகளில் காண்க.

மேற்சொன்ன போலிவைதீகப்பிராமணரென்றவர்கள், இவ்விந்தியர்கள் தெய்வம், மதம் என்ற பேச்சில் மிக நம்பிக்கையும் பிராணனை விடுவதற்கும் தயாராயிருக்கும் விஸ்வாசமும் நம்பிக்கையும்கொண்டு அந்த விஷயத்தில் கல், மண், மணல், தண்ணீர், மரம், மலை முதலியவைகளைத்தெய்வமாகப் பாவிக்கும் தன்மையுடையவர்களாய்த் தங்களையுயர்வாகப் பாவிக்கும் தன்மையினால் பெருங்குணமில்லாத அகம்பாவம் அதிகம் ஏறிவிட்டதால் தாங்கள் தங்கள் ஆத்மலாபமடைய வேண்டியதென்ற (ஞாபகத்தை) நல்லுணர்வை முற்றிலும் மறந்து தேகபோஷணைக்கும் கௌரவத்திற்குமாக எல்லா அநுஷ்டானங்களையும் உபயோகப்படுத்திக்கொண்டு பொருள் சம்பாதிப்பதற்காக ஜாதியென்ற கட்டுப்பாட்டை ஒத்துமையினால் வலுப்படுத்திவிட்டார்கள்.

முன்னமே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கபடம், வஞ்சகம், சுயநலம், தெரியாத இந்ததேசத்து ஜனங்களோ தெய்வசம்பந்தமாயும் குடும்ப சம்பந்தமாயும், மறுமை சம்பந்தமாயும் ஷை வஞ்சக வைதீகர்கள் சொல்லப்படுகிற எந்தக்காரியமானாலும் பிறர் தம்மை இகழ்வதையும் எதிர்பாராமல் மூட நம்பிக்கையாய்ப் பழைய வழக்கமானது உண்மையென்று நினைத்துக்கொண்டு ஆராய்ச்சியில்லாமல் நடந்து வருகிறார்கள்.

இந்தக்கிரியை எதற்காக? இதனால் உண்டாகும் பலன் என்ன? அப்பலன் வாஸ்தவமாகக் கிடைக்குமா வென்று தெரிந்து யோசிக்காமல் வைதீகன் சொன்னபடி தவறாமல் நடந்தும் வைதீகனை யநுசரித்த மநுஸ்மிருதியில் சொல்லுகிறபடி தன் பிராணனுக்குச் சமமான எப்

பொருளையும் பிராமணனுக்குக் கொடுத்துத் திருப்தி யடைவதே மோக்ஷமென நிச்சயிக்கிறார்கள். பிராமணனால் எவ்வளவு கெடுதியும் நஷ்டமும் ஏற்பட்டாலும் கஷ்டமில்லாமல் அதுவும் நன்மைதானென்று அறியாமையாற் கருதுகிறார்கள்.

இந்த முறையினால் அந்தப் பிராமணரென்று சொல்லப்படுகிற ஒருவகுப்பு ஒத்துமையினால் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு ௨ தங்கள் வயிற்றுப்பிழைப்பிற்கும் ௭ கௌரவத்திற்கும் எதுசௌர்யமோ அவைகளை யெல்லாம் மேற்சொன்ன மனுஷ்மிருதி முதலிய எல்லா நூலி

---

௨ வயிற்றுப்பிழைப்பு சௌர்யம். பிராமணனுக்கு மற்றெல்லாரும் கொடுத்தல் புண்ணியம் பிராமணன் மற்றவர்களுக்குக் கொடுத்தால் பாபம். பிராமணன் தனக்கு இச்சையுண்டான வஸ்துக்கள் பிறரிடமிருந்தாலும் தான் அடைந்து கொள்ளவும் சொத்துக்குடையவன் பிரியத்துடன் கொடாவிட்டாலும் கட்டாயப்படுத்தி யடையவும் சுதந்தரமுண்டு. பிறர் பிராமணனுடைய சொத்திற் பிரியப்பட்டால் இகலோக தண்டனை பரலோக தண்டனை (மனுஸ்மிருதி)

நதி குளங்களில் நாய் பன்றி இறந்தமீன் முதலியவைகளால் அசுத்தம் ஏற்பட்டிருக்கும் தண்ணீரை பிராமணன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்து வைத்திருந்தால் அத்தண்ணீரைப் பிறர்தாகசாந்திக்குக் கேட்டால்(அசுத்தமாய்) சேஷமாய் விடு மென்ற கொள்கையினால் தண்ணீர் கொடாத தன்மையும் ஷி வைதீக ஆசார பயத்தினால் பிறர் பிராமணனிடம் தண்ணீரே சேஷமாய்விட்டதே மற்றெதைக் கேட்டு என்ன கொடுக்கப் போகிறார்கள் என்ற பயத்தினால் பிறர்எதையும் கேட்காதிருக்கும் கொள்கையை யமைத்துத் தங்கள் சாமான் பிறரிடம் சேராமலும் பிறர் சாமான் இலகுவாய்த் தங்கள் கைக்குக் கிடைக்கவுமாக நூல்களில் எழுதிவைத்தமை காண்க. இந்தக்கொள்கையினால் தங்கள் வாக்குரிமை. தேகசகாயம்; பணம் முதலிய எல்லாம் பிறருக்குதவாமல் தங்களினத்திற்கே யுதவுவதுதான். அக்கொள்கையால் அந்த ஒரு வகுப்பு மென்மேலும் எவ்விஷயத்திலும் மேற்போக்கடையவும் அக் கட்டுப்பாடிதற்கென்று தெரியாத பிறர் எவ்விஷயத்திலும் கீழ் நோக்கி யறியாமையுடன் தாழ்ந்து மிதிபடும் நிலைமையிலிருப்பதை அறிவாளிகள் அநுதாபத்துடன் உற்று நோக்குக.

௭ கௌரவத்தினால் சௌர்யம். தீண்டாமையை வைத்துத் தன்னைப் பிறர் தொடக்கூடாது அதினின்றும் தான் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த

னும் முன்னுள்ளவைகளைத் திருத்தி உண்மைக்கு மாறுதலாய் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

இவ்விதத்தில் ஆத்மலாப மடையவேண்டிய வழியில் இந்துக்கள் உண்மையாய் வழிபட்டுக் கடவுளையடையும் முறையும் அதற்குத் தகுந்த சாதனத்தைச் சொல்லும் நூல்களும் மாறுதலடைந்து உண்மைச் சொரூபம் கெட்டது.

இவ்விதமாக இந்தியாவிலுள்ள சுதேசப் பெருமக்களை சாஸ்திரம் தெய்வம், மறுமை என்ற விஷயத்தில் நம்பிக்கையை அதிகப்படுத்தி வார்சுக் கிரமத்தை வைத்துத் தங்களையுயர்த்திக்கொண்டு மதக்கொள்கையைக் குழப்பிக் கெடுத்து (ஆரியர்) என்னும் பிராமணவகுப்பார் முன்னேற்ற மடைந்து பிழைக்கவும் மேற்சொன்ன 2-வது பிரிவிற் சொல்லப்படுகிற விதமாயுள்ள ராஜவகுப்பார்களோ வீரம் முதலிய குணங்கள் இயற்கையில் தனக்கென்று ஏற்பட்டிருக்கும் ராஜ்யத்தை நடத்தும் தகுதியுள்ள இனத்தைப் பொருத்து ராஜரீகமில்லாமல் மாறுதலடைந்து வார்சுப்படி ராஜாமகன் ராஜாஎன்ற கொள்கையை யநுசரித்தபோது அவ்வப்போதிருந்த வார்சுகள் தேகவலு, வீரம், புத்திக்கூர்மை, தைரியம் முதலிய குணங்களில்லாமையால் அவ்வார்சுகளிடமிருந்து இவ்விந்தியா தேசத்தையும் அன்னிய தேசத்தார் கைக் கொள்ளநேர்ந்தது. விவசாயமும், வியாபாரமுறையும் அப்படியே கால

---

வன் தன்னை வணங்கினவர்களைத் தானும் சமமான வணக்கம் செய்யாமல் பிறரைத்தாழ்த்தல் முதலியவார்த்தை சம்பாஷணையிலும் பிறவினத்தைடாப்படவும் நீ வா, போ, வென்ற சொல்லிலும்(இரக்கி)த்தாழ்த்திச் சம்பாஷித்துஅடக்கியும் தன் இனத்தில் சொற்பபடிப்புள்ளவனு யிருந்தாலும் அவனையுயர்ந்த பண்டிதனுய்ப் பிறருக்குத் தெரிவித்தும் பிற இனத்தார் மிகப்படித்தவர்களாயும் நல்லொழுக்க முடையவர்களாயும் மஹா ஞானிகளாயு மிருப்பவர்களையும் வெளிக்குத் தெரிவிப்பதில் கேவலமான ஆண், பெண், சிசுக்கள் உள்பட ஜாதியென்ற கர்வத்தால் தான் முட்டாள் என்பதையும் மறந்து எவ்வளவு படித்து யோக்கியனுயிருந்தாலும் தனக்குக் கீழ்பட்ட ஜாதிதானே யென்னும் மமதையை வைத்துத் தாழ்த்திப் பேசுதலும் மற்றும்.

வேறுபாட்டால் மாறுதலடைந்து அந்நிய நாட்டார் கைக்கொள்ளப் பட்டது (அதாவது அந்நிய தேச சாமான்கள் வலுப்பட்டமையும் காண்க.)

அந்நிய தேசத்தார்களைப் போல வஞ்சகம், கபடம், விநயம், பொய், இரக்கமின்மை முதலிய தீய குணங்களில்லாமல் கருத்ததெல் லாம் தண்ணீர் வெளுத்ததெல்லாம் பால் என்ற கபடமின்மை தன் னைப்போல பிறரை மதித்து நம்பிக்கை கொள்ளல் தன்னினம் பிற வினமென்று பாராட்டாத பக்ஷபாதமின்மை, யாரிடமும் இரக்கம் வைத் தல் முதலிய குணங்கள் இவ்விந்தியரிடமிருப்பதைத் தெரிந்து கொண்டு ஏமாற்றித் தன் தேசமென்றாவது தன்னினமென்றாவது தன் மதமென்றாவது உண்மையாய் எவ்விதத்திலும் (உடன்பாடு). ஒட்டில்லாத பார்ப்பனரால் தன்னலத்தின் பொருட்டு சமைய சமு கக்கொள்கைகளிலும், அரசாங்கமுறையிலும் ஒத்துமையில்லாத நிலைக் குக் கொண்டுவரப்பட்டது. (வரப்படுகிறது)

மனிதர்களை யடக்கியாளும் சைன்ய பலம் கொண்ட ராஜரீக முறையாவது (கவர்ன்மெண்ட்) மனச்சாக்ஷிக்குக் கட்டுப்பட்டு மனுஷத்தாத்திற்குத் தக்கபடி படித்தவன், பணக்காரன், புத்திமான் என்ற யோக்யதையை யநுசரித்து ஜனங்களிடத்தில் மரியாதை யுடன் தங்கள் காரியத்தையும் நடத்திவருகிறார்கள்.

மபக்சமும் தெய்வ நம்பிக்கையும் கொண்ட இந்தியர்களுக்குத் தக்க சாஸ்திரத்தைப் பிறருக்கு உபதேசிக்கும் பிராமணனே.

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் றோல் போர்த்து மேய்ந்தற்று"

என்ற திருவள்ளுவர் மூதுரைக்கிணங்கப் பசுவானது புலியாக வேடம் போட்டுக்கொண்டு தன்னுடைய களவைப் பிறர் கண்டாலும் பயந்து ஓடிப்போகும்படி பயமுறுத்திப் பிறர் விவசாயத்தை யழித்து எப்படித் தின்னுமோ அதுபோல பிராமணரல்லாதாரை எவ்வகை யிலும் சாஸ்திரம் ஜாதியென்ற முறையில் நயமும்பயமுமாய் ஏமாற் றிக் கௌரவத்துடன் ஜீவிக்கிறார்கள். இதுவரை புராதன இந்து சாஸ்திரக்கொள்கை காலமாறுதலால் நாட்பட்டகொள்கையாய் வயு

தான பழங்கந்தையாய்ப் போனாலும் அவற்றின் அபிமானத்தினால் உண்மை தெரியாமல் பிறரால் மயங்கியிருக்கும் மோசமான சாஸ்திரத்தின் நம்பிக்கையின் விவரத்தைச் சொல்லப்பட்டது.

---

## கொள்கை மாறுதலின் கேடு.

சைவ, வைணவ முதலிய மதஸ்தர்கள் அந்தந்த மதத்தின் சித்தாந்தக் கொள்கையை யநுசரியாமல் சேர்க்கை வசத்தால் மற்றொரு கொள்கையிலும் சேர்ந்து கலப்பு ஏற்படுதலினால் உண்மையாயுள்ள தாங்கள் எடுத்துக்கொண்ட ஒரு மதத்தின் முடிவை யடையாதவர்களாய் இப்பந்தியாய்ப் போய்விடுகிறார்கள்.

உதாரணம், முதல் முதல் தான்குறிப்பிட்டுச் செல்லும் ஊர் நோக்கி வழி நடப்பவன் அதற்கென்று ஏற்பட்டுள்ள நேர்பாதையை விட்டு மற்றுள்ள கிளைப்பாதைகளில் சென்றுகொண்டிருந்தால் எப்படிக் குறிப்பிட்ட ஊர்போய்ச் சேர முடியாதது போல ∠ மதக் கொள்கை தவறி நடப்பவர்களும் உண்மையான முடிவை யடைய மாட்டார்கள்.

அது போல தற்காலத்திலுள்ள சைவ வைணவர்களோ தங்கள் மதத்தை மென்மேலும் விருத்தி யாக்கவேண்டிய விதத்தில் அந்தந்த மதக்கொள்கையுடைய மனிதர்களை யெல்லாம் இனம் பாராமல்ஒருங்கு திரட்டி தாங்கள் உண்மையா யபிமானிக்கும் மதத்திற்கு வலுவாய் அதிகக் கூட்டமான ஜனத்தொகை தேடாமலும் தங்கள் பக்தியைத்

---

∠ பல முறை ஓர் ஊருக்குச் சென்று வழி தெரிந்தவன் எவ்வழியினும் சென்றும் அவ்வூரையே யடைவான் அது போல உண்மை யின்னதென்று தெரிந்துகொண்டவர்கள் தான் எவ்வழியினும் பிரவேசிக்கலாம். மற்றவர்கள் ஒருவழியாயுள்ள மதக்கட்டுப் பாட்டின் வழியில் கொஞ்சமேனும் மற்ற கொள்கை கலக்கக் கூடாது கலந்தால் குழப்பம் ஏற்பட்டு குறிப்பிடும் லக்ஷியம் கெட்டுவிடும்.

தங்கள் மதக்கொள்கையின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளாமலும் × தம் மதத்திற்கு விரோதமான வருணாசிரம கொள்கை யுடையவர்கள் வசப்பட்டு அந்தவேத ஒழுக்கமான ஸ்மார்த்த மதத்தை விருத்திசெய்து அதை அபிமானிக்கும் தன்மையுடையவர்களா யிருப்பதால் வரவர நாளடைவில் உண்மைமதம் கெட்டு ஸ்மார்த்தமத (வேத) வருணாசிரமமே வலுப்பட்டு உண்மையான மதத்திலும் ஜாதிப் பேய்பிடித்து ஒரே மதத்திலுள்ள ஒருவருக்கொருவர் துவேஷம் ஏற்பட்டு தத்தம் மதக் கடவுளிடத்துள்ள பக்தி குறைகிறது. ஸ்மார்த்தமதமோ எத்தனை வகுப்பு பிரிவிருந்தாலும் எத்தனை தவறுதலிருந்தாலும் எத்தனை பாஷைப் பிரிவிருந்தாலும் பெண்கொடுத்து வாங்கும் சம்பந்தம் தனித்தனி எத்தனை பிரிவாயிருந்தாலும் ÷ ஸ்மார்த்தமதம் என்ற கட்டுப்பாட்டின் வழி தவராமல் பிராமணன் என்ற ஜாதியை விலக்காமல் கூட்டத்தையும் ஜாதிக்கொள்கையையும் விருத்தி செய்துகொண்டு, எவ்விஷயத்திலும் ஒத்துமையால் உன்னத நிலைமையில் இருக்கின்றன.

மேலே சொல்லப்படுகிற வேதம், ஆகமம், புராணம் என்று இந்திய முன்னோர்களால் தாங்கள் சாந்தியடைந்து அனுபவித்ததை மற்றையோர்களும் தெரிந்துகொண்டு ஆத்மலாபமான சாந்தியடை

---

× சிவன்கோவிலிலும் விஷ்ணுகோவிலிலும் வித்யாசம் பாராட்டாமல் சந்நிதியில்பிரசாதம் கொடுத்தல் முறையாயிருக்க அவ்விடத்தில் தீட்டு,சேஷம், மேல், கீழ் என்று பேதப்படுத்துவது மனச்சாந்தியின்மையும்; பொறாமைக் குணமும் கொண்டவர்களாய்க் கடவுளுக்குப்பிள்ளையான யாவரையும் சமமாய் நினைக்காமல் வித்தியாசம் பாராட்டுவதிலிருந்து கடவுள் அதிருப்திக்கு ஆளாகிறார்கள். மற்றும் இரண்டொரு சிவன்கோவிலிலும் விஷ்ணுகோவில்களிலும் சைவசமய நாயன்மார்களுக்கும் ஆழ்வாராதிகளுக்கும் பூஜைநடத்துவதில் சூத்திரசாமியென்றும் சிலபாபிகள் சொல்லிக்கொண்டுபூஜையில்லாமலுமிருக்கிறது.

÷ திருஞானசம்பந்தர் சிறந்த சைவத்தலைவராய் சமயாச்சாரியரில்தலைமை பெற்றவராய் சீகாழியில் அம்பிகையின் ஞானப்பாலுண்டு சுவாமி பிரசன்னராய் அனுக்ரகமடைந்தவராயிருந்தும் இயற்கையான ஸ்மார்த்தமதப் பற்றுடையவராய் வாழ்க வந்தணர் வாழ்குகவானினம். வீழ்க தண்புனல் வேந்தனுமோங்

யும்வழிகளை எழுதிவைத்திருந்ததை அந்நியதேசத்தி லிருந்துவந்து வார்சுப்படி ஜாதியாக்கிக்கொண்ட ஆரியர்கள் தங்கள் பிழைப்புக் கான முயற்சியாய் எடுத்துக்கொண்டு இந்தியத்திராவிடர்களைப் பைத் தியக்காரர்களாக்கித் தாங்கள் ஷை நூல்களிற் சொல்லுகிற பிரகாரம் நடந்துவருவதுபோல் பாவனைபண்ணி அதன்படி யாதொரு நற்செய் கைகளும் இல்லாதவர்களாய் ஏமாற்றி கௌரவத்துடன் ஜீவித்து வருகிறார்கள்.

அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களைப் பிராமணனென்று நினைத்துக்கொண்டு * உபகாரம் செய்தாலென்னவென்று ஆராய்ச்சி யில்லாமலும், அவ்வுபகாரத்தினல் வரும் பலன் இன்னதெனத் தெரிந்து செய்யாமலும் கடனுக்குச் செய்துதீரவேண்டுமே யென வழக்கத்தை விடமுடியாமல் சில கர்மாக்கள் செய்வாருமுளர்.

---

குக. என்று சொல்லும் அவருடைய அந்தரங்க உட்கிடை சமயத்திற்கேற்ற அடியார் பக்தியைக்காட்டிலும் தன் ஸ்மார்த்த சுயஜாதி யபிமானம் தன்னையறி யாது ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்விதமாக எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன.

* ஒவ்வொருவரும் பிறருக்கு தாங்கள் உதவியும் தானதருமமும் செய்ய வேண்டுமென்றிருந்தால் பசி பட்டினிகிடப்பவன், கொடுத்ததைச் சந்தோஷத் துடன் சாப்பிடுகிறவன், ஏமாற்றாதவன், கொடுத்தவனிடத்தில் விஸ்வாசிப் பவன், பேதகமாக நினையாதவன், இப்படிப்பட்டவர்களுக்குக் கொடுத்தால் கொடுத்தவனுக்கும் பலன்; வாங்கியவன் தன்னிடம் இல்லாதவஸ்துவைத் தான் அடைந்ததால், தன்னையறியாமல் ஏற்பட்டுவரும் மனச்சாக்ஷியிலேற்படும் சந் தோஷமும் அச்சந்தோஷத்தின் மிகுதியால் கடவுள் வாழ்த்தலில் கொடுத்தவ னுக்கு நற்பலனும் கிடைக்கும்.

(திதி) சிரார்த்தம் வேதக்கொள்கையில், ஸ்மார்த்தமதத்தின் கர்மகாண் டத்தில் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சௌரியத்தை யுத்தேசித்துப் பல லோகங்களையும் பலதேவதைகளையும் உபாசித்துவரும்படி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவற்றுள் நிமித்தகர்மமாக ஏற்படுத்தப்பட்டது சிரார்த்தமும் யாகயெக்ஞமும் இக் கர்மாக்கள் மூலம் சித்தசுத்தி, சித்தசுத்திமூலம், ஞானம், ஞானத்தின் மூலம், பிறவாமை.

சைவ, வைணவ,மதக்கொள்கையின்படி நடந்து முற்றுப்பெறும் ஆத்தும தத்துவத்தை யுணர்த்தும் பரமார்த்திக அனுஷ்டானத் திற்கும், தேகபோஷணை முதலிய உலக விஷயத்தின் சௌரியத்திற் காக சிறுவன் சிறுமிமுதல் தன்னையுயர்த்திக்கொண்டும் மற்றைய ஜாதி களில் மிக உயர்ந்த பரமார்த்திகமுடிவை படைந்திருந்தாலும் ஜாதி யென்ற கொள்கையால் யாவராயினும் பிறரைத்தாழ்த்தியும் வைத்துக் கொண்டிருக்கும் தற்கால வைதீக ஸ்மார்த்தமதத்திற்கும் பேதமில் லையென நினைத்துக்கொண்டு சைவ, வைணவ, ஆகமக் கொள்கை யையும் ஸ்மார்த்த வைதீக (வேத) அத்வைதக்கொள்கையையும் ஒன்ருய்க்குழப்பித் தாங்களும் ஒரு மதத்தின் கொள்கைப்படி முடி வையடையாமல் உலகசம்பந்தமாய் நடந்துகொண்டிருக்கும் சமுக அரசியல் ஒத்துமைச் சீர்திருத்தத்தில் குறுக்கிட்டுத் தடுமாறி ஜாதி மதம்கொண்டு கர்வித்துநிற்கும் ஆஸ்திகர்களென்று சொல்பவர்க ளால் எவ்வித நன்மையுமில்லாமற் போனாலும் சமுக சமய அரசியல் திருத்தலுக்கு இடையூறு செய்கிறவர்களா யிருக்கிருர்கள்.

உண்மையான சைவ, வைணவ முதலிய மதக்கொள்கை கொண்டவர்களும் அடக்கம், அகங்காரமின்மையென்ற அப்பியாசத் தில் மிகவும் அந்தரங்கமாய்ப் பிறஜீவர்களிடம் தயையுடனும் துவே ஷமில்லாமலும் தங்கள் கொள்கையைத் தாங்களே தம்மிடத்தில் வைத்து ஆத்மார்த்தமாய் நடந்துகொள்ள வேண்டுவது தவிர வெளி யில் உபயோகப்படுத்தி மதவிஷயம் கெட்டுப்போய் விடுமே யென்று கவலைப்பட வேண்டியதில்லை.

---

ஆகமக் கொள்கையில் சிவபெருமானையோ, மகாவிஷ்ணுவையோ வழி பட்டு அவர்கள் அனுக்ரகத்தால் மனோவாசனையற்று ஞானமடைந்து ஞானத் தின்மூலம் பிறவாமை.

மேற்கண்டபடி கர்மத்தையே பிரதானமாகக்கொண்டு மோக்ஷம் (பிற வாமை) யடைவது வேதக்கொள்கை.

கடவுள் வழிபாட்டையே உறுதியாகக்கொண்டு (மோக்ஷம்) பிறவாமை யடைவது ஆகமக்கொள்கை.

பரமார்த்த தத்துவத்தை யடைவதின்நெறிதவறும்லிருப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றவரம்பின் வழிதவறுமல் நடந்துகொண்டு மேல் நோக்கான உண்மையடைவதற்கு வரம்பாகமட்டும் முற்சொல்லுகிறபடி ஜாதிக்கொள்கையும் மதக்கொள்கையும் தம்முள் உபயோகப்படுத்த ஏற்பட்டது தவிர உலகவிஷயத்தில் கௌரவத்திற்கும் ஜீவனோபாயத்திற்கும் கட்டாயப்படுத்திப் பிறரைத்தாழ்த்தியும் தங்களை யுயர்த்தியும் வைத்துக்கொள்வதன் பொருட்டு ஜாதிமதப் பேய் பிடித்தலைய ஏற்பட்டதல்ல. உலக விஷயங்களிற் கட்டுப்பட்ட அரசியல் வைதீக சம்பந்த முதலிய மற்றெவ்விஷயங்களிலும் பார்ப்பனர்கள் சமயசந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடந்துகொள்ளும் சாமர்த்தியத்தை உற்று நோக்கில் அவர்கள் கொண்டிருக்கும் ஜாதி மதக்கட்டுப் பிறரிடத்திற் கௌரவத்திற்கு உபயோகப்படுத்தி வருவதற் கல்லது தங்கள் உண்மைக்கருத்தல்ல வென்பது தெரிந்து ஆஸ்திகத் தன்மை கொண்ட சைவ, வைணவ முதலிய மதஸ்தர்கள் பிடிவாதமான ஜாதிக்கட்டுப்பாட்டிலிருந்து விடுபடுவார்களாக (பகுத்தறிவால் நன்றாய்த் தெரிந்து நடக்கும் அநுட்டானமே நற்பலனைக்

---

இவ்விரண்டு கொள்கையையும் ஆராய்ச்சி பண்ணினால் சைவ வைணவ மதத்திற்கு சிரார்த்தம் யாக யெக்ஞம் முதலிய நிமித்த கர்மங்கள் முக்கியமானவையல்ல. எப்படியென்றால் சைவத்திலும் வைணவத்திலும் இன்றியமையாத முக்கிய அங்கமான தீக்ஷை முத்திரைபெற்ற ஒரு ஜீவன் (மனிதன்) தேகம்விட்ட (மரண) காலத்தில் தாம்அபிமானித்த கடவுள் அல்லது தன்னை யாட்கொண்ட கடவுள் இருப்பிடமாகச் சொல்லப்படும். கைலாசமாவது வைகுண்டமாவது அடைவதைத் தவிர வேறெந்த இடத்திற்கும் போவதில்லை யென்பது சுருதி யுக்திகளாற் புலப்படும்.

அப்படியிருக்க மேற்சொன்னபடி தீக்ஷை முத்திரைகளடைந்தவர்களிறந்த மேல் பிதுர்லோகமோ நரகலோகமோ இருப்பதாய்க் கீழான பாவனை பண்ணிக்கொண்டு அவர்கள் கரை யேறுவதற்குத் தன் கொள்கையும் தன்ரத்த சம்பந்தமுமான நெருங்கிய தாயாதியல்லாத பிறமனிதனுக்குப் பக்குவமாகாத சாமான்களைக் கொடுத்துத் திருப்தியடையச் செய்வது எதற்குபயோகமாகும் இந்தக் கர்மாவின் உண்மையான சங்கற்பத்தால் கைலாசம் வைகுண்டம் அடைந்தவர்களையும் கூட அடையாதவர்களாய்ச் செய்யும் இந்த சிரார்த்தம் முதலிய கர்மாக்கள் அவர்களுக்கு எப்படிச்சேரும்

கொடுக்கும்) ஞானமில்லாத வைராக்யம் நன்றல்ல கானவர்க்கும் கள்வருக்கும் நோயினர்க்கும் ஆனதுவென் என்றார் வள்ளலார்.

மற்றும் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ச்சி பண்ணி அவசரப்படாமல் சற்று நிதானித்து யோசிக்குமளவில் சரீரத்துடன் ஜீவிக்கும் காலத்திலும் சரீரம் நீங்கியபின், லோகாந்தமோ பிறவியோ சாந்தியென்னும் முடிவோ அடைய வேண்டியதற்குச் செய்துகொள்ள வேண்டியதென்னவெனில் ஒவ்வொருவரும் தத்தம் மனதின் பழக்கத்தினால் உண்டாகும் வாசனையினால் உலகிலுள்ள சகோதரர்களான ஜீவவர்க்கத்தில் மேல், கீழ் என்று மிகக்குரோதமாய் நடத்துகிற பழக்க வழக்கங்களை மிக ஜாக்ரதையான ஞாபகமாயிருந்து விலக்கி வந்தால் ஒத்துமையும் ஒத்துமையினால் உலகவாழ்க்கைப் பயனையும் ஒருவரை யொருவர் பார்த்துப் பொருமைப்படுதலின்மையும் எல்லா

---

ஆனால் சகவாசத்தின் பழக்க வழக்கங்களான இந்தக் கர்மாவினால் எந்தப் பலன் கிடைக்குமென்பதை யோசித்து வழக்கமென்னும் பிடிவாதத்தை விலக்கித் தம்முள் நிதானித்து இப்படிச்செய்யும் காரியம் தனக்காவது இறந்தவர்களுக்காவது உபயோகப்படாத வீணான காரியமென வேறு விதத்தில் அவ்விஷயத்தை நடத்தித் திருப்தியடைக.

இறந்த ஜீவர்கள் தத்தம் கர்மாவினாலும் நடத்தையினாலும் நல்ல உலகமோ கெட்ட உலகமோ அடைவதுண்மையாயினும் அவர்களை யபிமானத்துள்ளவர்கள் விசுவாசம், பிரியம் என்னும் ஆசையினால் இறந்தவர்கள் நற்கதியடைய வேண்டுமென்று முயற்சித்தால் அதற்கு வழியுமுண்டு. அதாவது சிரார்த்ததினத்தன்று பரிசுத்தமாய்ச் சமையல் செய்து இறந்தவர்களின் சகோதரர்களோ அல்லது அடுத்துள்ள சமீப வார்சுகளோ அது சம்பந்தப்பட்டவர்களை பரிசுத்தராயிருக்கும்படி செய்து மூன்று பேர்களை யாசனத்திருத்தி இறந்தவர்கள் அவர்கள் தகப்பனார் தகப்பனாரின் தகப்பனார் என்பவர்களாய் நினைத்து சைவப்பற்றுள்ளவர்கள் திருவாசகத்தின் முதலிற்சொல்லும் சிவபுராணம் என்பனவற்றில் நமச்சிவாய வாழ்க என்பதிலிருந்து ஆரம்பித்துப் பல்லோருமேத்தப் பணிந்து என்பது வரை சொல்லிமுடித்து திருச்சிற்றம்பலம் சொல்லியான பிறகு அவர்களுக்கும் பந்துக்களுக்கும் மற்றும் சக்திக்குத் தக்கவாறு யாவரென்றும் இனங்கருதாமல் பசி பட்டினியுள்ளவர்களுக்கும் அன்னம் போடவும்.

ஜீவராசியும் ஒன்று என்ற சமரசமும் அந்தச் சமரசத்தால் பேதமற்ற ஆத்ம சாந்தியுமடையலா மென்பது நிச்சயம்.

எந்தக்கொள்கையும் எந்த மதாச்சாரமும் எந்தக் கௌரவமும் தனக்கிருந்தால், தானே சொந்தமாய் அநுஷ்டித்துக்கொள்ள வேண்டியது. அப்படியில்லாமல் பிறரைத் தாழ்த்தியும் கீழ்ப்படுத்தியும் நடத்திக்கொள்ள முயல்வது அற்பக்குணமும் சொந்தலாபம் அடையுங்குணமும் குரோதமுமாகுமே தவிர உலகில் பொதுவாய் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல! அவற்றால் ஆத்ம உண்மையுணர்ச்சிக்கு விரோதமானபேத உணர்ச்சி யதிகப் படுத்துவது தவிர ஆத்ம உணர்ச்சிக்குச் சாதகமல்ல.

ஜன சமூக சீர்திருத்தங்கள் ஒவ்வொரு காலத்திற்குத் தகுந்தபடி ஏற்படுத்தப் பட்டபடி நிலைத்து நிற்காமல் நாளாக நாளாக அந்த சீர்திருத்தக் கொள்கையில் நெருங்கி யநுஷ்டிக்கும் பழக்கத்தால் (பழகப் பழக வெட்டிப்பழமும் ருசிக்கும்) என்றபடி அதில் அலட்சியம் ஏற்பட்டு எந்த விஷயத்திற்கு ஏற்படுத்தப்பட்டதோ அதைப்பற்றி விருப்பத்துடன் நிற்கும் காலமும் மனதும் ஜீவர்களுக்கு (மனிதர்களுக்கு) மாறுதலடைவதால் வீண் டம்பமும் வேடிக்கையும் போலியுமாய் ஏமாற்றும் ரகசியம் கண்டவர்களுக்கு வயிற்றுப் பிழைப்பு ஆதாரமுமாக பழங்கந்தையாய்க் கனவாய்மெல்லப் போனதுவே என்ற பழமொழிக்கிணங்க சமயம் ஜாதி யென்ற கட்டுகள் உலைவாகப் போகும் காலம் ஏற்பட்டதின் காரணமாய் அந்நிய தேசத்து ஆரியரும் அந்நிய தேசத்து ராஜாங்கமும் அந்நிய தேசத்துச் சாமானும் வந்த பிறகுமா, முற் சொன்னபடி வேத ஒழுக்கத்தை யநுசரித்த ஜாதி ஆசிரமப்படி நடந்து வருவதாய் நினைக்கப் படும்பைத்தியக்காரப்பாட்டிகதை நிலைபெறும்? கிழிந்துகந்தலானபட்டுப் பீதாம்பரத்தின் ஆசை குளிருக்கு உபயோகப்படுமா! யோசிக்கு

---

வைணவர்களும் அப்படியே செய்து அம்மதத்தில் ஆழ்வாராதிகள் வைகுண்ட மடைந்த சமையத்தில் சொல்லும் திருவாய்மொழிப் பிரபந்தத்தைச் சொல்லி மேற்கண்டவிதமாய் அன்னமிடவும். இவ்விஷயத்தில் பாராயணம் செய்யமுடியாதவர்கள் படித்த சொந்தக்காரர்களைக்கொண்டு படித்துப் பாராயணம் செய்யச்சொல்லவும்.

மிடத்துக் குளிர்காலம் வேனிற்காலம் என்று மாறுதலடைந்துவரும் காலத்திற்குத் தகுந்தபடி உலக வாழ்க்கையில் சந்தர்ப்பத்திற்கு எற்றவாறு எவ்விஷயத்திலும் யார் சௌரியம் தேடிக்கொள்கிறார் களோ அவர்கள் தான் புத்திமான்கள் அவர்களே உலக வாழ்க் கைக்குரியவர்கள்.

புராணம் படிக்கிற வைதீகப் பிராமணன் பிறருக்குச் சொல்லித் தான் தன் குடும்ப சௌரியத்திற்கும் தன் சௌரியத்திற்கும் பொருள் சம்பாதிப்பது தவிர சொல்லுகிறபடி நடத்தையுண்டா வென் பதைப் பார்ப்பனரல்லாதார் நன்று யோசித்துப் பார்க்க.

சில அறிவாளிகள் தெரிந்தோ தெரியாமலோ எவ்வித அபிமா னத்தை வைத்தாவது உலகத்தின் விடுதலைக்கென்று ஏற்படுத்தப் பட்டிருக்கிற மதம் என்ற கொள்கை யநுஷ்டானத்தை உலக பந் தத்தில் வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் ஏற்படும் ராஜீயக் கொள்கை யோ அதிலிருந்து ஒருவரை யொருவர் நயவஞ்சகமாய் ⸤ ஏமாற் றித் தெரியாத ஜனங்களைத் தந்திரத்தினால் கீழேயமிழ்த்தி தானும் தன்னினமும் பிழைக்கும் கொள்கை முதலிய உலக வாழ்க்கைச் சங் கதிகளுடன் கலக்கக்கூடாது.

உலக விடுதலுக்கும் உலக பந்தத்திற்கும் நேர்விரோத மென் பதை யுணர்க.

தற்கால உலகமானது அநாகரீகமும் தன்சுய உணர்ச்சியால் பாகுபாடில்லாததும் அறியாத்தனமும் காலத்தை யநுசரித்த முயற்சியின்மையும் ஒத்துமையின்மையும் தனக்குக் கீழாகப் பின் னடைந்தும் பலமற்றதாயுமிருப்பதைத் தெரிந்து அவர்களைத் தன்

---

⸤ வஞ்சகமில்லாதவனும் சங்கதி தெரியாதவனும் வலுவில்லாதவனுமா யுள்ளவர்களை அஃதுள்ளவர்கள் ஏமாற்றுவதில் தன்னிடம் ஏமாறாமல் ஜாக்கிர தையாயிருந்து கொள்ளட்டுமே யென்று சிலர் சொல்லலாம். அப்படிச் சொல் வது எதற்கு ஒப்பிடலாமென்றால் திறந்திருந்தவீட்டில் விவரந்தெரியாத குழந் தையாயிருந்த சமயத்தில் தேடிப்போன மனுஷ்யனில்லையென்ற பாவனையை வைத்து அவ்வீட்டிலுள்ள சாமானை யெடுத்துக்கொண்டுவரும் அந்தஸ்துக்

னடிமைகளாக்கித் தன்னிஷ்டம் போல் நடத்தத் தயாராய் நிற்கின்றன.

ஆகையால் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்படும் லாப நஷ்டங்களில் விட்டுக்கொடாமலும் வீண் —சபலத்தால் பிறரால் ஏமாற்றபடையாமலும் உலக வாழ்க்கையில் பிறர் நடப்பதைப் பின் பற்றி நடந்தும் எவ்விஷயத்திலும் சமத்துவமாய் நிற்கக் கருத வேண்டும் அப்படி யில்லாவிடில் அஃதுள்ளவர்களால் அமிழ்த்தப்படுவார்கள்.

மானங்குலம் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசி வந்தசொல்லியர் மேற்காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்.

என்ற மூதுரைப்படி தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாதாரியக்கம் இவ்விந்தியாவின் இயற்கையில் ஏற்படுகிற உண்மைக் குணமில்லாமல் வேஷம்போட்ட இந்தியாராய் இத சத்துருவாய் உண்மை இந்துக்களுடன் கூடவே யிருந்து வைதீக லௌகிக அரசாங்க உத்தியோகம், படிப்பு, அறிவு, நல்ல பயிற்சி முதலிய எவ்விஷயங்களிலும் பார்ப்பனரல்லாதாரை முன்னேற வொட்டாமல் தங்கள் □ வஞ்சகத்தாலும் × சமர்த்தாலும் ÷ வாயாடம்பாத்தாலும் ஏமாற்றிக் காலத்திற்குத் தகுந்தபடி பிழைக்கும் சுய நலப் பார்ப்பன சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டு பிறர் மோசத்

---

களவை யொத்ததாகும் (நியாயமென்பதில் கொஞ்சமேனும் பயமும் மனச்சாக்ஷியுமில்லை யென்பதுருசுவாகிறது)

— சபலம்: என்பது சாஸ்திரம்: மதம் என்பவற்றின் முறையில் செய்யப்படும் கர்மாவால் அடையப்படும் பலன் இன்னதென்று தெரியாமல் வழக்கத்தை வைத்து நடப்பதில் பலனை எதிர்பார்க்கும் அசட்டு விருப்பம்.

□ மனதிலுள்ளதை நேராய்ப் பேசாமல் தன் காரியத்தைக் கொள்ளும் நோக்கத்தில் மிகவும் மறைவாய் தன்னபிப்பிராயம் பிறர் இலகுவாய்த் தெரியாமலிருக்கும் அடக்கம்.

× முற்றுமல் சமயம் போல் இணங்கிக்கொடுத்துத் தன் லட்சியத்தை முடித்துக்கொள்ளுதல்.

÷ ஆளுக்குத் தக்கவாறு இனிவாகவும் பயமாகவும் பேசும் செறியாறும்

திற் கட்டுப்படாமலும் ஏமாறுமலும் நியாயவழியில் மற்றவர்களைப் போல் ஜீவனத்தை நடத்திக்கொள்வதற்காகவும் தன் சொந்தமான மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவுமாகப் பார்ப்பனரல்லாதாரி யக்கம் ஏற்பட்டது. தவிர இவ்வியக்கம் வஞ்சகமல்ல மதசம்பந்த மல்ல ஒரு வகுப்பை மற்றொரு வகுப்பு ஏமாற்றும் கக்ஷியல்ல தற் கால உலகத்தை யநுசரித்து நடப்பதற்கு ஏற்பட்டது.

கூடுமான வரை பார்ப்பனரல்லாதாரும் வார்சுகளும் பசி பட்டினியில்லாமல் கேவலப்பட்டு மானமிழவாமல் ஜீவிக்க வேண்டுமானுல் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் தம் இயற்கைக் குணமான தயை × தாக்ஷண்யம் வேதம் புராணங்களில் ஏற்படும் பந்தகம் இவைகளை உள்ளே மனதில் வைத்துக்கொண்டு பார்ப்பனர்கள் மற்றவர்களை நினைப்பது போல பார்ப்பனரிடத்தில் எந்தக் காலத்திலும் அவர்களை மேலாக நினைத்தல் முதலிய பெருங் குணங்களை வைத்து ஏமாறுமல் கூடுமானவரை ஆலோசித்து அவர்களுடைய சகவாசத்தில் பார்ப்பனரல்லாதார் பணம் ஓட்டுரிமை வாக்குச் சகாயம் முதலிய உதவிகள் அவர்களுக்குச் சேராத கொள்கையை யுறுதிப்பாடாயும் அவர்களைப்போல் ஜாதி மதக்கட்டுப் பாடுகளைத் தெய்வீகமாகவும் வைத்துக்கொண்டு கூடுமானவரை பார்ப்பனரல்லாதாருக்கே ஷெ எல்லா உதவியும் உபயோகித்து வந்தால் நாளடைவில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமும் கௌரவமு மடைவார்களென்பது நிச்சயம்.

---

அரட்டல் மிரட்டலிலும் அதட்டுதலிலும் தன்நோக்கப்படி காரியங்கொள்ளல் பிறர்தானே வசப்படும்படி பேசுதலும் இதிலடங்கும்.

× பகவத்கீதையின் அந்தரங்கம் (சுதர்மம்) தன் சொந்த கர்மாவை விட்டால் நரகப்பிராப்தி யென்றும் அதை வைத்து உலகில் ஏற்படும் பந்து மித்திர குருவர்க்கங்களெல்லாம் பொய்யென்றும் உண்மைப் பொருளைத் தவிர மற்றவையெல்லாம் கால அளவையிற் கட்டுப்பட்டுத்தானே நாசமடைவதென்றும் அந்த உலகசம்பந்த சபலத்தை வைத்து இந்தயுத்தத்தில் கொல்லாமலிருத்தல் கூடாதென்றும் அர்ச்சுனனுக்கு கிருஷ்ணபகவான் உபதேசம் செய்ததில் அவரவர்கள் காரியத்தில் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாயிருந்து அதற்கு வேண்டிய முயற்சியைச் சோர்வுபடாமல் ஒருமைப் பாட்டுடன் நடத்திக் கொள்ள வேண்டியதென்றும் தெரிகிறது.

நியாயத்தை யுத்தேசிக்கும் பாரபக்ஷமில்லாத ஒழுங்குக்குத் தாழ்ந்திருப்பவர்களை யுயர்த்தல் பெரும் புண்ணியமும் லோக உபகாரமுமாகும் அத்துடன் பார்ப்பனக்கக்ஷியும் உணர்ந்து ஒன்றுக் கொன்று ஒத்துமை யேற்பட்டு சுயராஜ்யமும் கைகூடும். (ஏமாறு பவனில்லாவிடத்து ஏமாற்று பவனில்லை)

சில ஜனங்களுக்கு சில விஷயத்தில் கவனிப்பு அதிகம் ஏற்படாமல் ஒவ்வொரு காரியத்திலும் அலட்சியமாய்ப் பழக்கத்தைப்பொருத்து "என்னவோ நடந்தபடி நடந்து வரட்டும்" என்ற அசிரத்தையான முயற்சிக் குறைவும் ஆராய்ச்சிக் குறைவுமான தெரியாமையால் ஒவ்வொரு விஷயத்தின் அந்தரங்கம் தெரிந்துகொள்ள முடியாமற் போகிறது.

அதாவது ஒவ்வொரு பார்ப்பனரும் ஒரு பைசா தனக்குச் செலவு ஏற்படுவதாயிருந்தால் அச்செலவு பைசாவை எவ்விதத்திலும் தன் இனத்திற்கே = கொடுக்க முயற்சி யெடுப்பார்களே தவிரப் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுத்தலில் விஷம்போல் நினைப்பார்கள்.

அதற்குப் பயங்கரமான சாஸ்திர அமைப்பும் வரம்பாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் தீராதபக்ஷம் ஏற்பட்டா லொழிய மனப்பூர்வமாய்ப் பிராமணரல்லாதாருக்குக் கொடுக்க மாட்டார்களென்பதைப் பார்ப்பனர் குறுக்கிடும் ஒவ்வொரு விஷயத்திலும் கவனித்துத் தெரிந்துகொண்டு அந்தப்படி தாங்களும் பார்ப்பனரல்லாதவர்க்கத்தில் பார்ப்பனரல்லாதார் உபயோகப்படுத்தி வருவார்களாக.

---

சுதர்மத்தில் குருவென்றும் பிராமணனென்றும் நினையாமல் கடமைப் பாட்டுடன் நடந்தமை காண்க.

= வைதீக காரிய மாத்திரமல்ல வியாபாரம் விவசாயம் உத்தியோகம் மற்றும் சமயங்களில் கொடுக்கப்போகும் சந்தர்ப்பங்களை யுற்று நோக்கினால் தெரியும்.

ஆனால் இவ்வசனம் குரோதத்தால் சொல்லப்படுகிறதாய் நினைக்கக்கூடாது தாழ்ந்தவர்களை யுயர்ந்தவர்களென்னும் ஜாதிச் செருக்கால் அமிழ்த்தும் பழக்கத்தை ஆராய்ச்சியால் விளக்கி நன்மைபுரிவதற்கே தெரிவிக்கப்படுகிறது.

## 4. காங்கிரஸ்

காங்கிரஸ் கொள்கையை யநுசரிக்கும் பிராமணரல்லாதார் தங்கள் சுயநலத்திற் பிரியங்கொண்டவர்களாயிருப்பது எத்தனையிலோ ஒருவர். காங்கிரஸ் கொள்கை கொண்ட பிராமண வகுப்போ எல்லா இந்தியர்களும் மற்றவர்களும் நன்மையடையும்படியான பரோபகாரப் பேச்சுகளைப் பிறருக்கு மிக இனிவாயும் இங்கிதமாயும் நளினமாயும் நம்பும்படியானதுமான வசனங்களா லெடுத்துச் சொல்லிப் பிரசாரம் பண்ணிக்கொண்டு தம் இயற்கைக் குணத்திற்கொத்தவாறு தன்னினத்திற்கும் தமக்கும் பிராமணரல்லாதாரைக் கொண்டு சௌகரியத்தை யுண்டுபண்ணிக்கொள்வதற்குக் காங்கிரஸை ஆரம்பக் கதர்திட்டத்திலிருந்தும் மற்றக்கொள்கையிலிருந்தும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அவற்றுள்ளும் ஜாதிக்கட்டுப்பாடு விடாது அந்தாங்கத்தில் வைத்துக்கொண்டு வெளியில் தீண்டாமை சகோதரபாவம் என்பனவற்றை வாய்ப்பறையால் நம்பும்படி செய்கிறார்கள்.

தற்காலம் படித்தவர்கள் எண்ணிக்கையில் வகுப்புவீதத்தின் அளவிற்கு எத்தனையோ பல மடங்கு அதிகப்பட்டிருக்கும் பார்ப்பன இனங்கள் இக்கொள்கையிற்றலையிட்டு + இயற்கைப் பேராசையிற் கட்டுண்டும் தங்களுக்குத் தற்காலத்திலிருக்கும் உன்னத நிலைமைக்குத் தகுந்த அந்தஸ்தான பூரண சுயேச்சை கிடைத்தால் இன்னும் அதிகமான உன்னத நிலையை எல்லாவழிகளிலும் அடைய நினைத்தும் மற்றும் குடியேற்ற நாட்டந்தஸ்து கிடைத்தால் இப்

---

+ ராமன் வனம்புறப்படும்பொழுது யாத்திராதானமாய்ப் பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் பசுக்கள் ஆடையாபரணங்கள் முதலியன கொடுக்கும் சமயத்தில் கர்க்கரிஷியின் வமிசத்திற் பிறந்த திரிஜடரென்னும்

போது தங்களுக்கிருக்கும் செல்வாக்கும் ஆதிக்கமும் உத்தியோக மும் குறையுமென்றும் நினைத்தும் (இளம்பசிக்காரனும் புளித்தயேப் பக்காரனும் போல) கிடைத்தால் நிறையக் கிடைக்கட்டும் இல்லா விடில் ஒன்றும் வேண்டியதில்லை. இப்போது இருக்கிறபடி இருக் கட்டும் என்ற கொள்கையாய் நிற்கிறது.

இது விஷயமாய் 7-வது அதிகாரம் அரசியல் முறையில் விரித் துச் சொல்லப்பட்டிருக்கிறது.

## 5. கோவிலும் சத்திரமும்

கோவில்கட்டச் செலவு பண்ணுவதும் வேலை செய்வதும் மிகு தியும் பார்ப்பனரல்லாதார்.

அவர்களால் நடக்கவேண்டிய பணச்செலவோ ஆள்மாணமோ சரீர சிரமமோ எல்லாம் ஏற்பட்டுக் கட்டிட வேலை முடிந்தவுடன்

---

ஒரு பிராமணர் தன் பாரியை புத்திரர்களுடன் வனத்தில் வானப்ரஸ்தாஸ்ர மத்தராய் நெல் முதலிய தானியங்களைப் பொறுக்கி ஜீவனம் செய்துவரும் தன் ஏழ்மைத்தனத்தால் பத்தினியுடனும் பிள்ளைகளுடனும் ராமனிடம்வந்து தன் தரித்திரத்தைச் சொல்ல அதைக்கேட்ட ராமன் இந்தப் பிராமணனு டைய ஆசை ஐஸ்வரியத்தில் எவ்வளவிருக்குமெனச் சோதிப்பான் கருதி அந்தப் பிராமணனைப்பார்த்து உங்களுடைய கையிலிருக்கும் (கழியை) கம் பைச் சுழற்றி யெறியுங்கள் அதுபோய் விழுமிடம் வரையிலுள்ள பசுக்கூட் டங்களை நீங்களே யடைந்துகொள்ளுங்களென்றார். அந்தப் பிராமணன் மிகுந்த பரபரப்புடன் தமது மேல் வஸ்திரத்தை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு கழியைச் சுழற்றித் தன் முழுப்பலத்தோடு எறிந்தார் அது சரயூ நதிக்கு அக்கரையில் அநேகமாயிரம் பசுக்களுக்கு நடுவில் விழுந்தது. அது வரையுமுள்ள பசுக்கூட்டங்களை இடையர்களால் அந்தப் பிராமணன் இருப் பிடத்திற்கு அனுப்பிவைத்தார் அப்பால் ராமன் அந்தப்பிராமணர் தன்னு டைய ஆசையை ஏளனம் செய்ததாக நினைக்காதிருக்கும் பொருட்டு ராமன் அந்தப் பிராமணரை நல்லவார்த்தையால் சந்தோஷப்படுத்தினார் என்று வால் மீகி ராமாயணம் அயோத்தியாகாண்டம் 32-வது சருக்கம் யாத்திராதானம் என்ற இடத்தில் சொல்லுகிறது.

பணத்தைச் செலவிடும் பிரபுக்களை கூடி வேலை முடிகிற பரியந்தம் மரியாதையுடன் கூடவைத்துக் கொண்டும் எல்லா வேலையும் நடந்தேறிய பின் கர்ப்பகிரகத்தில் தாம் யாதொரு வேலையும் செய்யாமலிருக்கும் விதமாய் வேலையை வாங்கிக்கொண்டு கும்பாபிஷேகமென்ற பேச்சை யாரம்பித்தவுடன் நிர்த்தாக்ஷண்யமாய் 2-வது கட்டான மகா மண்டபத்திலிருக்கும்படி செய்தும் தங்களுக்கும் தங்களினத்திற்கும் வரும்படியும் கௌரவமும் உண்டுபண்ணி வைத்துக் கொள்ளுகிறார்கள். ("கரையான் புத்துக் கட்டப் பாம்பு குடி புகுந்தது போல) சர்வேசுவரன் இருப்பதின் ஞாபகார்த்தமாய் நினைக்கச் செல்லுமிடத்தில் குரோத மற்ற சாந்த நிலையை யடையும் பழக்கத்திற்கு விரோதமாய் ஒருவரை யொருவர் பார்த்துக் குறுகுறுக்கும் குணத்துடனிருந்தால் எந்தவிதத்தில் ஒரே நோக்கத்துடன் வழிபட முடியும்.

சூரியப்ரபையிருக்குமிடத்து அசுத்தம் முதலியன பாராட்டப் படாதென்று சொல்லப்படும் இந்து சாஸ்திரம் சர்வேஸ்வரன் இருப்பதாய் மந்திரத்தின்நம்பிக்கையில் உறுதிபண்ணப்படுகிற அவ்விடத்தில் என்ன அசுத்தம் நேர்ந்து கடவுட்டன்மைக்குக் கெடுதலேற்படப்போகிறதெனக் கருதுகிறது.

அவ்விதத்தினால் கெடுதலேற்பட்டு விடுமேயென நினைத்துக் கொண்டிருக்கும் பெருமிதமில்லாத கடவுட்டன்மையால் எப்படி அந்தக்கரணம் சுத்தியடையும்.

அவ்விடத்தில் யார் பெரியார் யார் சிறியார். ஆனால் யோக்கியதை யுள்ளவர்களைப் பொறுத்து அந்த ஏற்பாடோவெனில் அப்படியும் நடை பெறவில்லை.

தங்களினத்தின் ஒத்துமையைக் கருதி யெப்படியிருந்தாலும் பிராமணனென்று ஆராய்ச்சியில்லாத ஜனங்களை யேமாற்றிச் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி தங்கள் சுயநலத்தையும் சுஜாதி யபிமானத்தையும் கட்டுப்பாடாய் நிலைபெறச் செய்கிறார்கள்.

இவ்விஷயத்தில் ஜாதி யுயர்வு கற்பித்து மேம்பாடடையும் கொள்கையும் கொஞ்சமேனும் விஸ்வாசமில்லாத குரூரத்தன்மை முதலிய தீயகுணங்களும் பிராமணரல்லாத எந்த நபருக்காவது இவ்வளவு வன்கண்மை மனச்சாக்ஷியிற்றோற்றுமா இவ்வாற்றால் ஜாதிக்கட்டும் பக்தியின்மையும் சமத்துவத்தில் பொறுமைக் குணமும் காட்டுவதால் கோவிலுக்கு வருபவர்களுக்கு இடைஞ்சல் செய்தவர்களாகிறார்கள் (ஒரே நோக்கத்துடன் ஒரு வழிப்பட்ட மனதை யடையும் நிலையைக் கெடுக்கிறார்கள்)

சத்திரமோ:— அநேக இடங்களில் அன்னமிடுவதற்கும் பிரயாணிகள் தங்கும் வசதிக்குமாக கோவிலையடுத்தும் ஊர்க்குள்ளும் ஜனங்கள் பிரயாணம் செய்யும் பெரும்பாட்டையை யடுத்தும் அநேகமாய்ப் பார்ப்பனரல்லாதார்களாற் கட்டப்பட்டிருக்கின்றன.

அவற்றில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாருக்குமே அன்னம் இடவசதி அமைக்கப்பட்டிருக்கின்றன.

அம்முறையில் அன்னசத்திரத்தில் ஒரே பந்தியில் எல்லாரும் சமமாயுட்கார்ந்து சாப்பிட இஷ்டப்படாவிட்டாலும் சத்திரத்தில் சமையலாகி முடிந்தவுடன் சாப்பாடு போட ஆரம்பிக்கும் சமயத்தில் தனித்தனி யிடத்திலாவது உட்காரவைத்துப் பசித்து வந்தவர்களுக்குப் போடவேண்டியது ஜீவகாருண்யமும் சமத்துவமான தர்மமும் சத்திரத்தின் சொந்தக்காரருக்குப் புண்ணியந் தேடுவதின் பலனுமாகும்.

அப்படியிருக்க எவன் எப்படிப்போனால் தானென்னவென்று நினைத்துக்கொண்டு உபயோகமற்ற எச்சில் தீண்டல் என்னும் ஒழுக்கத்தைக் கருதுவதாய்ப் பாவனைபண்ணி ஜாதியுயர்வை யுபயோகப்படுத்திக் காலையில் தற்காலஆகாரம் சாப்பிட்டிருக்கும் பிராமணனெல்லாம் சாப்பிட்ட பிறகும் இன்னும் பிராமணன் வருவானென்று எதிர் பார்த்தும் அப்படிவரும் பிராமணனுக்கெல்லாம் போட்டு மிக நாழிகையானபிறகு இனிப்பிராமணன்வரமாட்டானென்று தெரிந்து அச்சமயத்திலிருக்கும் ஆறியுலர்ந்து கெட்டுப்போன சாப்பாட்டுச் சாமானைப் பிராமணரல்லாதார்களிற் சத்திர சம்பந்தமோ அல்லது

தனக்கு எவ்விதத்திலாவது வேண்டுபவர்களில் தரத்திற்குத் தக்க வாறு இலைபோட்டுப் படைத்தும் பாத்திரத்துடன்கொடுத்தும் பாத் திரத்தைச்சுத்திசெய்து கொடுக்கும் வேலையைத் தீர்த்துக்கொண்டும் பட்டினிகிடக்கும் பிராமணரல்லாத வழிப்போக்கர்களுக்கு உபயோ கப்படாத விதமாய்ச் செய்து பிராமணரல்லாதார்களில் யாரும் சாப்பாட்டு நிமித்தம் வாராத ஏதுவையும் செய்துவிடுகிறார்கள்.

இவ்வாறு செய்வதில் போக்குவரவு பிரயாணிகளில் பிராமண ரல்லாதார் சாப்பிட முடியாமற் போவதுடன் சத்திரத்தின் பக்கத் தூரிலிருக்கிற பிராமணர்கள் மாறிமாறிக் கூட்டம் கூட்டமாய்வந்து தின்றுவிட்டுத் தன் சொந்தக் காரியத்திற்குச் செல்லுதலும் சாப் பாட்டு லாபமுமாகிய சுய நன்மையில் உபயோகப்படுத்துவதால் சத்திரம் போட்டவர்களின் தர்மத்தைக் கெடுத்துத் தங்கள் ஜாதிக் கே உபயோகப்படுத்திப் பிறருக்குத் தீங்கிழைத்து வருகிறார்கள்.

பிரயாணிகள் தங்குவதற்காக ஏற்பட்டிருக்கும் சத்திரமோ தங் களுக்கெனத் தனி விடுதிகள் ஏற்படுத்திக்கொள்ளவும் காபிக்கிளப் பிராமணனும் உத்தியோகப் பிராமணனும் சாஸ்வதமாய்ச் சொந்த வீடுபோல உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் வழிப்போக்குப் பிரயாணிகளுக்கு உபயோகமில்லாமல் இடஞ்சல் ஏற்படுகிறது.

## 6. கல்வி

எந்தப் பள்ளிக்கூடங்களிலும் ஒன்றிரண்டு பிராமணரல்லாத உபாத்தியாயர்கள் தவிரப் பெருங்கூட்டமாயிருக்கும் பிராமண உபாத்தியாயர்கள் தங்களினத்தின் மாணுக்கர்கள் முன்னேற்ற மடையவும் மற்ற பிராமணரல்லாத மாணுக்கர்கள் பின்னடைந்து கெடும்படி தங்கள் சுய நன்மைக்காக ஏற்படுத்திக்கொண்டிருக்கிற ஜாதி மத மூடப்பழக்க வழக்கங்களையும் × ராஜரீக விஷயங்களில் ஏற்படும் காங்கிரஸ் முதலிய ராஜத்துவேஷ காரியங்களை மனத்தி லேற்றுவித்தும் அவ்விஷயங்களிலேற்படும் கிளர்ச்சி முதலியவற்

---

× எல்லா மாணுக்கர்களுக்கும் ஒழுக்கமும் மனத்தூய்மையும் ஆராய்ச்சி யும் உண்டாக்கும் பொதுவான நீதி நூல்களை உபயோகப்படுத்தாமல் வகுப் பிற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற பாட புஸ்தகங்களில் பிராமணர் உயர்வென்

ளுல் ஏற்படும் சொற்ப நன்மைகளையும் தாங்களும் தங்களினமு படைவது மல்லாமல் மற்ற இனத்தவர் தமக்குத் தாழ்ந்துகெடவும் வழி பார்ப்பதால் எந்தப் பாஷையிலும் முதிர்ந்த படிப்பும் பயிற்சியும் அப்படிப்பால் ஏற்படும் முடிவான எந்தப் பிரயோசனமும் இல்லாமற் செய்துவிடுகிறார்கள்.

எப்படியெனில், சமஸ்கிருத பாஷை தங்களுக்குச் சொந்தமென்றும் மற்ற பிராமணரல்லாத கொள்கையார் அதில் வந்துசேரக் கூடாதென்று கட்டுப்பாடு வைத்துத் தாங்களும் அதிற் சொல்லுகிறபடி நடவாமல் அதற்குத் தகுந்த உண்மையான பக்குவனுக்குச் சாதகமாயுள்ள அப்பியாசங்களைத் தெரிந்துகொள்ள முடியாமற் றடைசெய்தும் மற்ற தமிழ்ப்பாஷை முதலிய பாஷைகளில் வெளியாகும் சங்கதிகளைத் தெரிந்துகொள்ளாதபடி மற்ற பாஷைகளையும் அதன் அபிப்பிராயங்களையும் மிக இழிவான முறையாய்ச் சிறுமாணவர்களுக்கு எடுத்துச் சொல்லியும் எந்த வழியினும் பிராமணரல்லாதார் நல்லபயிற்சியும் ஆராய்ச்சியுமடைந்து முன்னேற வொட்டாமல் சிறுவயதிலேயிருந்து மூடமாய்த் தாங்கள் சொல்வதை எவ்விஷயத்திலும் கேட்டு நடந்துவரும்படிக்கும் (தொட்டில் பழக்கம் சுடுகாட்டு வரை) என்பதற்கிணங்க மாணுக்கர்கள் வயதான பிறகும் தங்களுக்கு இயற்கையிலேற்படும் வேறெந்தக் கொள்கையிலும் உறுதிப்பாடேற்படாமலும் நிலையில்லாமல் செய்துவிடுகிறார்கள்.

---

றும் அவர்கள் கொள்கை மேலென்றும் எழுதப்பட்டிருக்கிற பாரத ராமாயண முதலிய ஸ்மார்த்த மதத்தை யநுசரித்த கதைகளை யழுத்தமாய்ப் போதிக்கும் தன்மை X சில ஸ்கூல்களிலும் மற்றும் மாணவர்கள் சேரும் இடங்களிலும் பொதுச்செலவில் வாங்கப்படுகிற பத்திரிகைகளில் எந்த மாணுக்கன் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளாதபடி ஒரு வித நம்பிக்கை ஏற்படச்செய்யும் வாய்ப்பேச்சில் தடுத்துத் தங்கள் கொள்கையைப் புகட்டும் பத்திரிகைகளைச் சிலாகித்து வற்புறுத்தும் தன்மை (இக்கல்வி விஷயத்தில் தலைமைபெற்றவரும் சட்டசபை மெம்பர்களும் கவனித்து ஒருமதச் சார்பில்லாத நீதிநூல்களை வகுப்புப் பிள்ளைகளுக்குப் பாரபக்ஷமில்லாது உபயோகப்படுத்தும் ஏற்பாடும் சிறு வயதிலிருந்தே தத்தமக்குத்தானே எற்படும் கல்வி யுணர்ச்சியை யுண்டுபண்ணவும் முயற்சிப்பார்களாக, மற்றும் படிக்கிறவர்களையும் படித்து உத்தியோகத்

## 7. அரசியல் முறை.

மனத்தில் தோன்றும் ஒவ்வொரு விஷயங்களையும் ஆராய்ச்சி பண்ணி நிச்சயப்படுத்துகிற புத்திமான்கள் பலவிதமாய்நிமிஷத்திற்கு நிமிஷம் மனதில் உண்டாகும் நினைப்பில் நினைத்துவிட்டது பழையது நினைக்கப்படுவது புதியதாய்த் தம் முன் நடந்துவரும் மாறுதலின் இயற்கை யிருப்பிடத்தையே காலமென ஊகிப்பார்கள்:

மறுபடியும் யோசித்தால் நடந்துகொண்டே யிருக்கும் இயல்பை யுடைய உலகத்தை நடத்திக்கொண்டே வருவதற்குக் காலமென்பது ஓர் கருவியா யிருக்கவேண்டிய தவசியமெனத் தோன்றும். அக்கால மானது தன்னியற்கைக் குணத்தால் உலகத்தைப் புதிது புதிதாக மாற்றிக்கொண்டே வருகின்றன.

மனத்தினிடத்தே உள்ளூறி நடத்திக்கொண்டே வருவதால் மனதுடன் கூடிய ஜீவர்கள் (மனிதர்கள்) காலத்திற்குக் கட்டுப்பட்ட வர்களாயிருக்கிறார்கள்.

இவ்விதத்தால் காலம் ஒன்றிருக்க வேண்டுமென்று நிச்சயிக்கப் படும்பொழுது அவற்றால் நடக்கும் விஷயங்களை உலகிலுள்ளவர்கள் அக்காலம் தொடர்ச்சியாயும் ஒரே விதமாயும் நடந்துவந்து மற்றொரு விதமாக மாறுதலடையும்பொழுது அதைத்தெரிந்து பகுத்துப் பிரிவு செய்யப்பட்டதுதான் யுகங்கள்.

---

திற்குப் போகிறவர்களையும் யார் தடுக்கிறார்கள் என்றும் அதற்கு உதவி புரிய மாட்டோ மென்றும் சொல்லுகிற வார்த்தையானது நியாயமற்றதும் தன்னல மானதும் தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்கள் தம்மோடு சமமாக்க நினைக்கும் பெருந் தன்மையில்லாத அற்பக்குணமுமாகும். இக்குணத்தை வைத்துப் பெரும்பாலும் பிராமணக் கூட்டங்கள் உபதேசிக்கும் சகோதரத்துவம் முதலிய லோகோப காரப் பேச்சுகள் தங்கள் நன்மைக்காகப் பிறரை யேமாற்றும் கொள்கையே தவிர உண்மையாகத் தாழ்ந்தவர்களை யுயர்த்தும் பரோபகாரக் குணமல்லா ததை மெய்ப்பிக்கிறது.

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்கு றூஉம் வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் திங்கள் கறையிருளை நீக்கக்கருதாதுலகின் னிறையிருளை நீக்கு மேனின்று எனவும்.

விரிவாயிருக்கின்ற நாட்கணக்கு எண்ணிக்கையிற் காட்டுவது கஷ்டமென்று நிமிஷத்தை நாழிகையாக்கி நாழிகையை நாளாக்கி நாட்களை மாதமாக்கி மாதத்தை வருடமாக்கி வருடக்கணக்கில் யுக மாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் கணக்கிட்டு வரையறுக்கப் பட்டு அக்கணக்குப்படிக்கும் ஒவ்வொரு வாரத்திலும் தினங்கள் திரும்பிவந்து கொண்டிருப்பது போல யுகங்கள் திரும்பி வந்து கொண்டுமிருக்கின்றன.

அதை வைத்துப் பண்டைச் சரித்திரங்களை ஆராய்ந்தால் ஒரு காலத்தில் எண்ணிக்கை கடந்த பலஜீவராசிகள் நிறைந்த (மனிதர்கள்) உலகம் தனக்குத்தானே நியாயத்தை உணர்ந்துகொண்டு கிரமமாக எதெது எப்படி நடக்க வேண்டுமோ அப்படியே யொருவர் அபே க்ஷையன்னியில் இயற்கையில் நடந்து வந்தது. அதாவது முதலாவது யுகத்தின் ஆரம்பத்தில் ராஜாவென்ற ஒருவரால் ஜனங்களை ஆட்சி புரியாமல் நியாயவழியில் தன்படியே நடந்ததாகத் தெரிகிறது.

அப்பால் ஒரு நிலையில்லாத இயற்கைக் குணமான காலமாறு தலின் காரணமாய் முன்னிருந்தமை மாறி நியாயம் என்ற ஒழுங்கு ஒவ்வொரு ஜீவரிடத்திலும் மாறப் பெற்றமையால் அதைக் கிரமவழி யில் நடத்திவைப்பதற்கு ஜனங்களை அடக்கியாளும் உயர்ந்த வீரமும்

---

அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகலால் எனச்சொல்லும் மூதுரைக்கு விரோதமான செய்கையைக் காட்டு கிறது.

இவைகளை யெல்லாம் கடந்தால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியத் தைப் பார்த்துக்கொள்ளவேண்டியது தான். ஒருவர் மற்றொருவருக்கு எதற்காக உதவி புரியவேண்டுமென்ற முடிவைக்கொடுக்கும் அதுபற்றித்தான் பிராமண ரல்லாதா ரியக்கம் ஏற்பட்டுத் தங்கள் காரியத்தை கவனிக்க நேர்ந்தது இந்தப் பிராமண ரல்லாதா ரியக்கத்திலும் ஒன்று சேரவொட்டாதபடி தடுக்கப்பல முயற்சியும் செய்து வருகிறார்கள்.

சிலபிராமணர் பார்ப்பனரல்லாதார் கக்ஷியுடன் சேர்ந்துகொண்டு தம்மியற் கைக் குணமான நற்காரியக் கெடுதிக்குணத்தால் நல்லமரத்து நரையான்போல பகையாளி குடியை யுறவாடிக்கெடு என்ற பழமொழியை யனுசரித்த வேலையும் வெகுவாய் நடந்து கொண்டிருக்கின்றன.

தைரியமும் பெருங்குணமும் பாரபக்ஷமில்லாமலும் தன்னலமில்லாமலும் நடத்தும் ஒருவரை மக்களில் தலைமையென்னும் பெயர்பூண்ட ராஜா வென்னும் ஏற்பாடமைக்கப்பட்டது. அப்பொழுது குடிகளும் ராஜாங்கமும் ஒவ்வொரு விஷயங்களிலும் லாப நஷ்டத்தைக் கருதிக் குடிகளைக் கலந்து சட்டம் ஏற்படுத்திச் சட்டத்தை ராஜாவே அமுலுக்குக் கொண்டுவந்து நடபடிக்கை நடந்துவரும்.

அப்பால் வரவரக் காலபேதத்தால் நியாயம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாத மயக்கத்தால் தனக்குச் சகாயமாகக்குடிகளுக்கும் தமக்கும் பொதுவாக மந்திரியென்பவரொருவரை வைத்துக்கொண்டு ராஜ்யாதிகாரம் நடத்தி வரப்பட்டிருக்கிறது.

அந்த நிலையினின்றும் கொஞ்ச நாளான பிறகு ராஜாங்க ஆளுகை முறையில் முழுதும் தனக்கென்றில்லாமல் ஜனங்களுக்கேயுழைக்க வேண்டுமென்ற பரோபகாரம் என்னும் பெருங்குணம் மாறுதலடைந்து தங்கள் குடும்பம் என்றும் அதற்குச் சௌரியம் வேண்டுமென்ற முறையும் கொஞ்சம் வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு நன்மையும் செய்து ராஜ்யாதிகாரம் நடந்துவந்தது.

அப்போது ராஜப்பிரதிநிதியாயும் ஜனப்பிரதிநிதியாயுமுள்ளவர்கள் பொதுவாய் ராஜாவின் அபிப்பிராயத்தை யநுசரித்து ஜனங்களுக்கு நன்மையும் ராஜாங்கத்திற்கு சௌரியமும் செய்துகொண்டு வந்தார்கள்.

---

பிரிட்டிஷ் அரசாங்கம் கல்வி யபிவிருத்தியிற் றலையிட்டு ஆரம்பித்ததிலிருந்து கல்வி இலாகாத்தலைமையில் இருந்தவர்கள் ஆங்கிலத்தில் தம்மினத்தையே முன்னேற்றுவிக்கும் கொள்கையை அந்தரங்கத்தில் ஒவ்வொருவரும் வைத்துக்கொண்டு சிறுவகுப்பு உபாத்தியாயர்களிலிருந்து பிரின்ஸ்பாலும் அதற்கு மேலும் கல்வியிலாகாச் சம்பந்தப்பட்டிருக்கும் எந்தப்பார்ப்பனரும் எவ்விஷயத்திலும் தாங்கள் உயர்வென்னும் பழக்கத் தடிப்பில் ஒருவரை யொருவர் பின்பற்றி நடந்துவரும் ஜாதிக்கட்டுப் பாட்டை யநுசரித்து எவ்வளவு புத்திமானும் படிப்பாளியாயிருந்தாலும் படிப்பின் சர்டிபிகேட் மார்க்குக்குறைத்தல் உத்தியோகத்தில் ஜாதியபிமான முதலியவற்றைக் காட்டும் கொள்கைகளைக்கையாடி வருகிறார்கள்.

அப்பாற் சிலநூற்றுண்டுகள் கழிந்ததன் பிறகு சிற்றரசுகளாகத் தனித்தனி பிரிவு ஆளுகைக்கு வந்துவிட்ட காலத்திற்கு முன்னமே அதாவது கலியுகத்தின் ஆரம்பத்தின் கொஞ்சநாட்கழித்து காலத்தின் மாறுதலின் 'ஆதிக்கத்தால்' அரசாக்ஷியில் ஒருவருக் கொருவர் ஒத்துமையில்லாமையால் குடிகள் அரசாங்கத்தாரிடமிருந்து தாங்கள் கோறும் எந்த நன்மையும் அடைய முடியாமற் போய்விட்டது. ஏனென்றால் கபடமில்லாத களங்கமற்ற ஜனங்களாய் அப்போதிருந்த ஜன சௌரியமாயுள்ள எண்ணம் கடவுள் கிருபையால் ஒருவர் மனதிற்றோன்றும் பக்ஷத்தில் அந்த அபிப்பிராயம் எல்லா ஜனங்களிடத்தும் தானே தோன்றி நினைத்த காரியத்தை ராஜாங்கத்திற்கும் குடிகளுக்கும் இடஞ்சலில்லாமல் ஒருமைப்பாடாய் நல்லெண்ணத்துடன் சௌரியமாய் முடித்துக்கொண்டு இருபக்ஷத்திலும் விரோதமில்லாமல் சந்தோஷமாய் நடந்துகொண்டு வந்தகாலம் முற்றிலும் மாறிவிட்டது.

இப்பொழுதோ அரசாங்கத்தார் நல்லெண்ணத்துடன் சர்வஜனங்களுக்கும் அதாவது இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் சமமான சௌரியம். அடையும் விதமாயும் தங்களுக்குச் சௌர்யமாயும் இருக்கும் நன்மையான காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் வாயாடியும் சுயநலப்பிரியரும் பாபபுண்ணியத்திற்கும் தயை தாக்ஷண்யத்திற்கும் சட்டுப்படாத மனச்சாக்ஷி யிழந்த சில பிரமுகர்கள் அதற்குக் கெடுதி விளைத்து அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் மத்தியில் அபிப்பிராய பேதத்தை யுண்டுபண்ணிக்கொண்டு தாங்களும் தங்கள் வகுப்பும் சௌரியமாயிருக்க நினைக்கிறார்கள்.

அப்படி நினைப்பதில் இவ்விந்தியாவிற் பெருங்கூட்டமாய்க் கோடிக்கணக்காயிருக்கும் ஜனங்கள் அரசாங்கத்திலிருந்து பொது வாய்க் கூடுமானவரை பங்கு ஈவுப்படி யடையவேண்டிய நன்மையை

---

□ பழக்கப்படுத்தும் மாதிரியில் ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட் டிஸ்டிரிக்ட்போர்ட். சுகாதாரம் பஞ்சாயத்து முதலியவைகளில் குடிகளே நடத்தி வருவதன்மூலம் மினிஸ்டர் போஸ்டு வகுப்புவாரி உத்தியோகங்கள்.

÷ சிவில் முதலிய டிபார்ட்டுமெண்டுகளிலும் வகுப்புவாரி முதலிய பொது வாயடையும் நன்மையைக் கெடுக்கும் சூழ்ச்சி.

லக்ஷக்கணக்கான சொற்பபகுதியுள்ள சிற்சில சார்பாரால் மிகுந்த லாபமும் சௌர்யமும் அடையப்பட்டும் வருவதால் பெருத்த லக்ஷியம் கெட்டுவிடுகிறது.

△ தாங்களும் தங்களினத்தாரும் உயர்வான பதவியும் சம்பளமும் அடையும் நிமித்தம் ராஜாங்கத்தார் எதிர்பாராத பணவரவுகளையும் சௌரியத்தையும் குடிகளிடமிருந்து காண்பித்துக்கொடுத்து வருவதிலிருந்து ராஜாங்கத்தாரும் குடிகளுக்கு இடஞ்சலில்லாததாயிருக்குமென்று சில வரவுகளிற் பிரியப்பட நேர்ந்தது.

□ மத்தியில் உத்தியோகத்திலிருக்கும் ஆசாமிகள் நடுநிலைமையிலிருந்து தவறுதல் செய்துவிடுவதில் ராஜாங்கமும் குடிகளும் நகமும் தசையும் போலிருந்து லாப நஷ்டங்களில் ஒன்றுக ஈடுபடாதவர்களாய் பரஸ்பரம் ஒருவரையொருவர் நம்பமுடியாத நிலைமைக்குவந்த மேல் ராஜாங்கமும் குடிகளும் ஒருவருக்கொருவர் விபரீதமான எண்ணங்கள் நினைத்துச்சத்துரு பாவமாய்த் தடித்துப் போய்விட்டது.

ராஜாங்கத்தாரிடமிருந்து கொஞ்சங்கொஞ்சமாய் நாளடைவில் நன்மையடைந்துவரவேண்டிய லாபத்தில் எத்தனையோ சௌரியங்களையடைந்து காலக்கிரமத்தில் பொருப்பேற்றுவகித்துப் பிறருதவியன்னியில் தானே நடத்தப்பெறும் பக்குவத்தில் சுயராஜ்யம் தன்படியே கையில் இருக்கும்.

எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியடையாத ஆசையுடன்சேர்ந்த பொருமைக்குணமே இயற்கைக்குணமாயமைப்பெற்ற ஜனங்களின் நடத்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் எவ்விதத்திலும் கஷ்ட நஷ்டமடைவார்களே தவிர லாபமும் சௌரியமும் கிடைத்தலரிது (அதிக ஆசை அதிக நஷ்டம்) இதற்குச்சான்ருக ஆன்ழேர்கதை பலவுள்ளனவென்பதை அறிவாளிகள் தெரிந்திருப்பார்கள்.

ஒவ்வொருவரும் தத்தமக்கு ஐவேஜ்வந்தது தனக்குப் பிறரிடமிருந்து கிடைக்கும் எப்பொருளும் எப்படிக்கிடைத்ததென்பது தாம்

---

× உத்தியோகத்திலிருப்பவர்கள் தங்கள் ப்ரமோஷனையும் மற்ற லாபத்தையும் எதிர்பார்த்துச் செய்யுங்காரியம்

உ காங்கிரஸ் கக்ஷியின் அபிப்பிராயத்தை உள்ளே வைத்துக்கொண்டிருக்கும் சில நபர்களாலும் உண்டாகும் கிளர்ச்சிமுதலியன

முன்னிருந்த நிலைமை இடம் முதலியன மாறிவந்ததென்ற தன் சங்கதியில் வைத்துப்பாராமல் அசூயையால் மேல்நாட்டாரை மற்றொரு கடவுள் சிருஷ்டித்ததாய் நினைத்துத் தங்கடவுள் சிருஷ்டியினையில்லாத பேர்வழிகளான அயல் நாட்டாரென்றும் பூமி ஆகாசம் முதலிய இந்தியாவிலுள்ள எல்லாச் சொத்துக்களும் தங்கள் பிதுரார்ஜிதமான வீட்டுச்சொத்தென்றும் ஒருவாறு நினைத்தும் மற்றொரு விதத்தில் இந்தச்சொத்து அவர்களுக்கு மாத்திரம் எப்படிச் சொந்தமாகுமென்றும் இப்படிச் சமயம்போல் நினைத்துச்சொல்லியும் வீணானதும் இம் முயற்சியால் அடையமுடியாததுமான வீண்சங்கதிகளைப் பிறரிடம் சொல்லி ஆசையைப்புகட்டி ராஜாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் மத்தியில் மித்திரபேதத்தை யுண்டுபண்ணி உள்நாட்டில் தாங்கள் நன்மையடைந்து மற்றவர்களைக் கிளர்ச்சிக் காரர்களாக்கி விடுகிறார்கள்.

கவர்ன்மெண்ட் அரசாக்ஷியிற் கட்டுப்பட்ட மற்ற நாடுகளுக்குக் கொடுத்திருக்கும் அந்தஸ்து இந்தியாவிற்கும் கொடுக்கவேண்டுமென்றால் மற்ற நாடுகளிற் பெரும்பாலும் சுய நலமில்லாமலும் தெரியாத ஏழை ஜனங்களிடம் அநுதாபங் காட்டியும் ஒருவரை யொருவர் ஏமாற்றும் வஞ்சகக்குண மில்லாமலும் இயற்கையி லமையப் பெற்ற பெருங்குண முடையவர்களாய் ராஜீயகாரியத்தில் தலையிடுபவர்களாயிருக்கிறார்கள்.

இவ்விந்தியாவிலோ அடிவயிற்றி லொன்று நெஞ்சில் ஒன்று வாயிலொன்று நடபடிக்கையி லொன்றுமாக நடந்து கொண்டுவருகிற ஜனங்கள் முன்னணியில் நிற்கும்பொழுது அக்குணங்கள் இன்னதென்றே தெரியாமலும் மிகவும் ஜாதிக்கட்டிலும் மதக்கட்டிலும் அமிழ்த்தப் பட்டிருக்கும் இத்தேசத்து ஜனங்கள் எவ்விதத்தில் மற்றதேசம்போல நன்மையடைய முடியும்.

ஒவ்வொரு மனிதனும் எந்த விஷயத்தையும் தனக்கு இயற்கையாய் ஏற்படும் புத்தியில் ஆராய்ச்சிபண்ண முதலில் ஆரம்பிக்கும் பொழுதே பழைய வழக்கத்திற் கட்டுப்படச் செய்து சிறுவயதிலேயும் வயதானபின்னரும் ஜாதி மதமென்று வற்புறுத்தித் தடையையுண்டு பண்ணி யோக்யதையை வைத்தும் மனுஷ்யன் நடபடிக்கையைப் பொருத்தும் மனுஷனைத் தெரிந்து கொள்ளும் விலாசத்திற்காக வகுப்

பாய்ப்பிரித்துச் சொல்லப்படுகிற வேதம் என்னும் நூலில் எழுதப் பட்ட சங்கதியைப் "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மரு ளாறு மாணுக்கடை" என்ற முதுரைக்கிணங்கத்தன் சுயநலத்திற்கேது வாகப் பொருள்படும்படியுண்மை யறியாத பெருங்கூட்டமான ஜனங் களை யேமாற்றியும் கடவுள் மதம் ஜாதி யென்ற ஆத்மாநுபவ சாதனக் கொள்கையை வயிற்றுப் பிழைப்பும் சௌரியமும் கிடைக்கும்படியான உத்தியோகம் முதலியவற்றில் அகம்பாவமான மேம்பாடுகாட்டிக் கீழ் ஜாதி மேல்ஜாதி யென்பதை ஹேதுவாக வைத்துக்கொண்டிருக்கும் பழக்க வழக்கங்களைக்கொண்ட அறிவிலிகளின் கொள்கையை யொழி த்து ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கை யறிவிற்றோன்றும் குணங் களில் நல்லது கெட்டது தெரிந்து அவரவர்கள் பக்குவத்திற்குத்தக்க படி கல்விப்பயிற்சி முதிர்ந்து பிறர் சொல்லுவதில் இகத்திற்கும் பரத் திற்கும் தனக்கும் மற்றவருக்கும் பொருத்தமாயுள்ள சௌரியங்களைத் தானே தெரிந்து நடத்தவும் அல்லது நடத்துபவருடன் சேர்ந்து ஒரு மைப்பாடாயிருக்கவும் தனக்கும் பிறருக்கும் நன்மையில்லாதவைகளை பகுத்தறிந்து விலக்கி நடக்கக்கூடியதுமான ஜனங்கள் கூடுமானவரை பெருங்கூட்டமாய் (மெஜாரிட்டியாய்) ஏற்பட்டு ஒரே (ஏக) அபிப்பிரா யத்துடன் சர்வ ஜனங்களுக்கும் ராஜாங்கத்திற்கும் தகுதியாய் கூடு மானவரை எடுத்த காரியம் நடைபெறுவதாயும் இரண்டிற்கும் சமமான சௌரியமாயுமிருக்கும் காரியங்களையுத்தேசித்து முயற்சிக்கஆரம்பித்து அக்காரியம் முடிவுபெறும்வரை அதேவேலையாய்ச் சாந்தமுறையுடன் அமைதியாய் நடபடிக்கையிற் படிப்படியாய் நடத்தி முடித்துக் கொண்டும் அப்பால் மற்றொரு காரியத்தை மேற் சொன்னவிதமாய் எடுத்து முடித்தும் இவ்வித பிரயத்தனமாய் முயற்சிக்கும் எந்தகாரிய மும் முடித்துக்கொண்டு நன்மையை யடையவேண்டும். அம்முறை மிக நாட்களைக் கழித்துவிடுமென்று தோன்றினால் பிரதி நிதியாயுள்ள ஒவ் வொருவரும் ஒவ்வொரு காரியத்தை எடுத்து முயற்சித்து யெவ்விதத் திலும் மேற்சொன்ன பிரகாரம் முடித்துக்கொண்டு நன்மைசெய்விக்க வேண்டும்.

---

८ பஞ்சாயத்துக்கோர்ட் யூனியன்போர்டு இர்ரிகேஷன் முதலியவைக ளிலும் மற்றும் ஆங்கிலேய உத்தியோகஸ்தரிடமும், ஜாதி மதம் என்னும் குணத்தைக்காட்டி, தங்களை எவ்விதத்திலும் உயர்த்திக் கொள்ளல்

தன்னின மென்றும் பிறவினமென்றும் வெறுப்பில்லாமலும் சுய நன்மையை விலக்கியும் பரோபகாரமாய்ப் பெருந்தன்மையும் பொறுமையும் அடைந்து சத்துவகுணத்தின் அமைதியால் இத்தேகம் எடுத்ததின் பிரயோசனத்தை ஜனங்களுக்கு அநுகூலம் பண்ணும் வழியிலும் இத்தேகம் விட்டமேல் இப்படி யநுசரித்த சத்துவகுணப் பழக்கத்தால் சாந்தி (மோக்ஷம்) என்னும் நிலையையடையும் வழியிலுமாக நினைத்துப் பெரும்பான்மையான ஜனங்கள் அபிப்பிராயத்தை முன்னிட்டு ஜன அபிப்பிராயமே தங்களரசாக்ஷியாய்க் கொண்ட இந்த அரசாங்கத்தாரிடம் மேற் சொன்னவாறு ஒவ்வொன்று யடைவதைவிட்டு தலைவர்கள் எடுத்த விஷயம் நடவாமல் அதைப்பின்பற்றி நடப்பதாய் நடத்திவருபவர்களின் காரியம் கிளர்ச்சியாய் பெருங்கூட்டமாயிருக்கும் அறியாமையுள்ள ஜனங்களால் முற்றுப் பெறுமல் காரியக்கெடுதியும் அரசாங்கத்திற்கும் குடிகளுக்கும் சத்துரு பாவமாயுண்டாகும் எண்ணம் வலுப்பட்டும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணமில்லாமல் ஒத்துமைக் குறைவு ஏற்பட்டபிற்பாடு சட்டாயத்தில் ராஜாங்கத்தாரிடமிருந்து நன்மை பெறுவதற்கு எந்தச்சைன்யம் எந்தப்பணம் எந்த ஒத்துமை வலுவிருக்கிற தென்பதை யறிவாளிகளுணர்க.

அந்நிய நாட்டிற்குத் தெரிவித்துக் கிளர்ச்சியாற் பயமுறுத்தலாமென்பது அறிவின்மையும் ராஜத்துரோகமும் மிகக்காரியக் கெடுதியும் கலகங்களும் உண்டாக்கும்.

கிளர்ச்சியில் அதிக ஜனத்தொகையின் அபிப்பிராயம் தங்களிடமிருப்பதாய்க் காண்பித்துக் கொள்ளும் கிளர்ச்சிக்காரர்கள் மிகக் குறைந்த ஜனத்தொகையில் அதிகமாயிருப்பதாய்க் காண்பித்தாலும் மிகச்சொற்பமாகவுள்ள அக்கிளர்ச்சிக்காரர்களால் விரும்பும் அரசாங்க காரியம் அநுகூலமாய்விடில் படிப்பின்மையும் ஆராய்ச்சியின்மையும் தனக்கென லாபநஷ்டம் தெரிந்து கொள்ளாமையும் உணர்வின்மையுமான மிகப் பெருந்தொகுதியான ஜனங்களை இப்போதிருக்கும் நிலைமையைக் காட்டிலும் மிக்க குறைந்தபடிக்குத் தாழ்த்திவிடும்.

இந்தியாவிலிருக்கும் எல்லா ஜனங்களும் அரசாங்கத்தில் ஏற்படும் லாப நஷ்டங்களை ஈவுப்படி யடையவேண்டுமென்பது கடவுள் சம்மதமும் ராஜாங்கத்தின் அந்தரங்கமுமாகும்.

அரசாங்கத்தின் பொதுச் சொத்தான உத்தியோகம் முதலிய எல்லா நன்மையும் ஒரு குடும்பத்தில் தகப்பனுக்குரிய பிள்ளைகள் எப்படிச் சமபாகமாய்ப் பங்கிட்டுக்கொள்ள அருகர்களோ அதுபோல ஜனத்தொகை ஈவுப்படி இந்தியாவிலுள்ள யாவரும் அடையப் பாத்தியப்பட்டவர்கள்.

தகப்பனிடம் பாகம் கேட்கும் மேஜரான பிள்ளைகள் தனக்குக் கிடைக்கும் தன் பாகம் அடையலாமேதவிர தன் சகோதரர்கள் மைனர்களாயிருந்தாலும் அவர்கள் பாகத்தையும் அடைந்து அவர்கள் மேஜரானபிறகு கொடுத்துவிடுவதாய்ப் பூரா பாகச் சொத்தையும் கேட்டால் தகப்பன் கொடுக்க இசைவானா?

எல்லாப் பிள்ளைகளும் மேஜரானால் பூராச் சொத்தையும் தகப்பன் கொடுப்பதில் கொஞ்சமேனும் தடைசெய்ய முடியாது. கொடுக்க மறுத்தாலும் எல்லாப்பிள்ளைகளின் மனது ஒன்றுபட்ட ஒத்துமையால் தானே கைக்கு வந்துவிடும்.

அதுபோலக் குடிகள் கூடுமானவரை பக்குவ நிலையை யடைந்து பொதுச் சொத்தை எல்லா ஜனங்களும் ஈவுப்படி தாங்களே பகுந்து அநுபவிக்கவோ நியாயமாய் நடந்துகொள்ளவோ கபடமற்றதும் பாரபக்ஷமில்லாததுமான ஜன அபிப்பிராயம் ஏற்படும்போது எவ்வளவு கொடுமையான அரசாங்கமும் நியாயமானதும் ஹிதமாயுள்ளவைகளையும் செய்யத் துணியும் மனச் சாக்ஷியை மீற முடியாது.

சாதாரணமாய் எந்தக் கொடுமையான மனிதனும் பிறர் தன்னிடம் நடந்துகொள்ளும் நன்மையால் தன்னை யறியாமல் உதவி செய்யத் துணிந்துவிடுவானென்பதை ஆராய்ச்சியுள்ள ஒவ்வொருவரும் தெரிவார்கள்.

அரசாங்க காரியத்தில் இவ்விந்தியாவில் மேல்ஜாதி, கீழ்ஜாதியென்று மனித வர்க்கத்தை நினையாமல் பெருந்தன்மையுடன் இயற்கையாய் மனதில் வித்தியாசம் பாராட்டாமல் எல்லாம் சகோதரர்களாக நினைத்து ஒத்துமையாய் இந்தியாவின் எல்லாப் பொருப்பும் ஏற்றுக்கொள்ளும் சுயராஜ்யமடையவேண்டும் அல்லது பிரிந்து தனித்தனியாய் நாங்கள் வேறு அவர்கள் வேறு என்று கொஞ்சமேனும் கலப்

பில்லாமல் நிச்சயமாய்ப் பிளவுபட்டு வகுப்புவாரி யடைவதில் ஒத்து மைப்படுதல் என்ற இந்த இரண்டுமாதிரியுமில்லாமல் சமயம்போல் வாயாடிகளாற் குழப்பப்பட்டும் முன்னேறி நிற்பவர்கள் ஜனங்களின் பொதுப் பெயரை வைத்து எல்லா ஜனங்களுக்கும் தாங்களேயென்று இப்போதிருக்கிறபடி ஜன சமூகமிருந்தால் எந்தக்காலத்திலும் இவ் விந்தியா முன்னேற்ற மடைய முடியாது.

முற்காலத்தில் சமூக முன்னேற்றத்திற்கு அறிவாளிகளால் ஏற் பட்டிருந்த பல வழிகளில் ஒரு வழியான ஜாதி மதம் என்ற கொள்கை களும் தனித்தனி ஏற்பட்டு ஒவ்வொன்றும் தன் தன் கொள்கையே உயர்ந்ததென்று ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் உயர்வை யடை யப் பிரயத்தனப்பட்டதிலிருந்து ஒவ்வொன்றும் முன்னேற்றமடைந்து செழித்து நின்றது.

இப்பால் சில சமய வாதிகள் உள் நுழைந்து கலப்பாகக் குழப் பப் பட்டதால் ஒரு நிலைமையில்லாமல் எடுக்கும் காரியத்தை எவ்வித முயற்சி செய்து முடிவுபெறச் செய்யவேண்டுமென்று ஒரு வழியா யில்லாததால் எடுத்த எக்காரியமும் முடிவுபெறாமல் புத்தி கலங்கி ஆராய்ச்சியில் உணராமல் யார் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டு நடக்கிற நிலைமைக்கு வந்துவிட்டது.

ஆகையால் இந்தியாவின் பெரும் பாகத்தில் நிலைத்து நிற்கும் தற்கால நிலைமையை யோசித்தால் மதம் என்ற கொள்கைக் கட்டுப் பாட்டில் ஜாதி பிரிக்கப்பட்டு ஜாதிப் பிரிவுஎன்றதன்மூலம் ஒரு ஜாதி யார் மற்ற ஜாதிக்காரரிடமிருந்து வாங்குவது உரிமையாகவும், அப்படி வாங்குபவர்கள் வாங்கப்படும் பொருளையும் தன்னிடத்திலிருக்கும் மற்றெப்பொருளையும் தன்னினம் தவிர மற்றியாருக்கும் கொடுத்தல் தகாத பாபச் செய்கை யெனவும், தான் உயர்வென்றும் மற்றொரு ஜாதி யிடம் தாழ்ந்திருத்தல் பாபமெனவும், தன்னைப் பிறவினத்தார் உயர் வாகக் கொண்டாட வேண்டுமென்றும் யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒவ்வாததாயும், தன்னலமுள்ளதாயுமிருக்கும் இச் சௌரியங்கள் தங்க ளினத்திற்கே உரித்தானதென்று எழுதி வைத்துக்கொண்டிருக்கிற ஸ்மிருதி முதலிய பழைய காலத்துக் கதையை விடாமற் பிடிவாத மாய்ச் செலுத்திச் சௌரியமடைந்தும் பெருமிதமான நன்மையைக்

கொடுக்கும் எப்படிப்பட்ட மகத்தான கொள்கைகளும் காலமாறுதலிற் சொரூபங் குறைந்து வந்தாலும் தங்கள் பிடிவாதத்தின் சூழ்ச்சியாற் கட்டுப்பட்டு நடந்துவரும் அறியாமையுள்ள பெருங் கூட்டமான ஜனங் களை ஏமாற்றிவருகிற சுபாவமுடையவர்கள் முன்னணியில் நிற்கும் பொழுது ராஜாங்கத்தாரிடமிருந்து இந்தியாவின் பொதுப் பிரயோசன மாய் எந்தச் சௌரியங்கள் கிடைத்தாலும் உலக விடுதலையான ஆத்ம சாந்திக்கு, எழுதி வைத்த சாஸ்திரத்தையும் ஜாதிக் கட்டையும் உயர் வாய் நினைத்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் எவ்வித நன்மையும் அடைய முடியாது.

உதாரணமாக வகுப்புவாரி உத்தியோகமடைவதில் ஆரம்பத்தி லிருந்தே எவ்வளவு கெடுதி விளைக்கப்பட்டு அந்த சட்டம் ஏற்பட்ட படி நடைபெறாமல் தூங்கிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் பலித்த மட்டில் பார்க்கும் அபிப்பிராயத்துடனும் அழுத்தமான கவனத்திற்கு வரும் வரையிலும் அதைக் கெடுக்க எத்தனையோ உள்நாட்டுச் சூழ்ச்சி நடந்துகொண்டு வருகின்றன.

இந்த உத்தியோகப்பதவியில் இவ்வளவு சங்கடமும் சூழ்ச்சியும் உண்டுபண்ணினால் சுயராஜ்யத்தில் எத்தனை சங்கடங்கள் ஏற்படா தென்பதை அறிவாளிகள் நன்காலோசித்து அரசாங்கத்தாரால் கொடு க்கப்படும் நன்மைகளை ஜனத்தொகையின் வகுப்புவாரி ஈவுப்படியுடை யும் நன்முயற்சி யெடுத்துக்கொண்டு அப்பால் நாளடைவில் பெருங் கூட்டமான ஜனங்களின் அறியாமையைச் சமூகவகையிலும் அரசாங்க வகையிலும் திருத்தித் தெளிவுபடுத்தி மதக்கொள்கையும் ராஜாங்கக் கொள்கையும் கலப்பில்லாமல் அநுஷ்டிக்க நன்றாய்ப் பழகித்தெரிந்து கொண்டமேல் ராஜாங்கத்திற்குக் கொடுக்கும் அரசிறையைச் செலுத் தும் முறையுடன் இந்திய சுதந்தரமடைய விரும்புவது எவ்விதத்தி லும் நன்மையும் சிறப்பும் கொடுக்கக்கூடியதாகும்.

எத்தனை விதமான யாதாஸ்துகள் கிளம்பினாலும் படித்துப் பார்க்க நியாயமாகத் தோன்றுமே யொழிய அவ்யாதாஸ்தின்படி நடபடிக்கைக்கு வரும்பொழுது பெருங்கூட்டமான அறியாமையுள்ள ஜனங்கள் நன்மையடைய மாட்டார்கள் கொஞ்சமேனுங் கள்ளங்கபட மில்லாமல் ஜீவனோபாயத்தில் எல்லா ஜனங்களும் சமத்துவமாயிருக்க

வேண்டுமென்ற நோக்கம் அடிப்படையா யில்லாததால் சம நோக்கத்தை நிலை நிறுத்திக்கொண்டு மேற்காரியம் நடத்துவது தான் எவ்வழியினும் சிறந்ததாகும். கவர்ன்மெண்டாரிடமிருந்து சுயராஜ்யம் வாங்கிய மேல் எல்லாம் சமமாக்கிக் கொள்ளப்படாதாவென்றால் எல்லாவிஷயமும் எல்லா அதிகாரமும் எல்லாப்பொருளும் கவர்ன்மெண்டிலிருந்து நடைபெற்றுவரும் இப்பொழுதே பொதுப்பாத்தியமான சொத்தில் தாழ்ந்தவகுப்பாரென நினைக்கப்படுபவர்கள் பிரவேசித்தால் பெருங்கிளர்ச்சியும் கூச்சலும் கலகமும் ஏற்பட்டும் அதன் சமாதானத்தின் பொருட்டுப் பிரத்தியேகமாய் இடங்கள் காட்டி ஒதுக்கிவைப்பதற்குத் தகுந்த யுக்திகளும் நினைக்கும் ஜாதி மதங்கொண்ட குறுகிய நோக்கமுடையவர்கள் முன்னணியில் நிற்கும் பொழுது வயிற்றுப்பிழைப்பில் கஷ்டப்படும் பெருங்கூட்டமான ஏழைகளுக்கு சுயராஜ்யம் என்னும் ஏற்பாட்டில் என்ன சௌரியங் கிடைக்கும்.

அல்லாமலும் ஏழைகளும் தாழ்ந்த வகுப்பாரென நினைக்கப்படுபவர்களும் இப்போதிருக்கும் நிலைமையைக் காட்டிலும் கேவலமான மிருகம்போல் நடத்தப்பட்டும் பழைய மனு ஸ்மிருதியைப் புதுப்பித்து மற்ற வகுப்பிலுள்ள யாவரையும் அடிமைகளாக்கியும் விடுவார்கள்.

சுயராஜ்யம் கிடைத்த மேல் எல்லாம் சமமாக வாழலாமென்று உபதேசித்துப் பல அபிப்பிராயக் கலப்புடன் சந்தேகமாய் ஒத்துமையில்லாத பல கக்ஷிப்பிளவு ஏற்பட்டிருப்பதைக் காட்டிலும் இப்பொழுதே சமநோக்கத்தை யநுசரித்து ஒரே அபிப்பிராயப் பயிற்சி பண்ணி ஒரே நோக்கத்துடன் சுயராஜ்யமடையப் பெற்றமேல் ஒழுக்கம் யோக்யதைக்குத் தக்கவாறு ஜாதி பிரித்துவைத்து விடுவது நன்மையும் காரியசித்தியுமல்லவா.

மற்றும் இன்னொரு அபிப்பிராயம் கொண்டிருப்பாருமுளர் அதாவது பிராமணரென்னும் ஒரு வகுப்பார் சொற்ப ஜனத்தொகையுடன் கூடியவர்களாயிருப்பதால் அவர்களைப் பெரும்பகுதியுள்ள மற்றவர்கள் சமயம் போல் அடக்கிக்கொள்ளலாம் அவர்களை லக்ஷியம் பண்ணவும் வேண்டியதில்லை அவர்களுக்காகப் பெருங்காரியத்தைக்

கருதாமல் விடவேண்டியதுமில்லை ஆகையால் எவ்விதத்திலும் சுயராஜ்யம் கிடைக்கும் வழியிற் பிரயத்தனப்படுவதுதான் நிச்சயமான கொள்கையெனத் தீர்மானிக்கக்கூடும்.

ஆனல் யோசிக்குமிடத்து உதாரணமாக ஆயிரம் ஜனத்தொகையுள்ள ஒரு சாரார் ஒரே அபிப்பிராயத்துடன் கட்டுப்பாடாயிருந்து எடுக்கும் காரியம் முடிவையடையுமா பதினாயிரம் ஜனத்தொகையுள்ள பலசாரார் அபிப்பிராய பேதத்தில் அதாவது பலஅபிப்பிராயங் கொண்டவர்களாய்க் கட்டுப்பாடில்லாமல் அவர்களுள் இரண்டொரு புத்திசாலிகளால் எடுக்கும் காரியம் ஜனத்தொகையை வைத்து முடிவாகி நன்மையைக் கொடுக்குமா வென்பதை யறிவாளிகளுணர்க.

சுயராஜ்யம் கிடைக்க வேண்டுமென்று ஒருவர் சொல்ல அவ்விஷயத்தைப் பலர் பலவிதமாக நினைத்துக்கொண்டு அந்த நடபடிக்கையைப் பின்பற்றி நடக்கும் முயற்சியின் முடிவை ஆராய்ந்தால் இவ்விதக் கொள்கையைக் கொண்டுநிற்கிறது.

சுயராஜ்பம் என்னும் பதத்திற்குப் பொருள் சொந்த ஆளுகை எனப்படும் அம்மாதிரியாய்க் கருதப்படும் சுயராஜ்யம் என்பது மற்றொருவருடைய ஆளுகையிற் கட்டுப்படாமல் அதாவது அரசிறை அல்லது அதற்குப்பதிலாக எவ்வித சொற்ப பிரயோசனமாயினும் பிறருக்குக் கொடாமல் (ஏகபோகமாய்த் தன்னுடைய முழுஅநுபவமாய் ராஜ்யாதிகாரம் செலுத்தி யாண்டுவருவது (மற்ற சம அந்தஸ்துள்ள வல்லரசுகளுக்குச் சமமான பௌர்)

இந்த விதமான சுயராஜ்யம் இந்தியாவிற்குக் கிடைக்கவேண்டுமென்றால் இப்போது ஆட்சிபுரியும் ஐரோப்பிய அரசாங்கத்தார் மனப்பூர்வமாய் இந்தியா தங்களுக்கு வேண்டுவதில்லை யென்று இந்தியர்கள்வசம் விட்டுவிடவேண்டும் இல்லாவிடில் இந்திய ஜனங்கள் வலுமையுடன் சண்டை போட்டு அவர்களை ஜெயித்து ராஜ்யம் அடையவேண்டும்.

இவ்விதம் இவ்விந்தியாவை அடையப்படுவது சுயராஜ்யம். இப்படி யடையவேண்டிய முறையில்லாமல் கிளர்ச்சியினாலும் மற்றும் ஒத்துழையாமை முதலிய ஒன்றையொன்று ஒத்தில்லாமல் மாறுபாடாய் ஒன்றுக்கொன்று நேர்விரோதமான கொள்கைகளைப் பல

கக்ஷிப்பிரிவாக அநுஷ்டித்து அடையமுடியுமா.

இந்த நடபடிக்கையை யோசித்தால் சாதாரண மனித னொருவனிடம் அவன் சொந்தமல்லாத பிறர் பொருளே அவன் கைவசமிருப்பதை அப் பொருளுக்குடையவனே தெரிந்து அதையடைய விரும்பினுல் பொருள் வைத்திருப்பவன் மனமுவந்து தானே கொடுக்கக் கருதினல்லது அக்கிரமப் பிரவேசமோ மற்றெவ்வித நடபடிக்கையோ நடத்தப்பட்டு நபருக்குத் தகுந்தபடி வேலைசெய்து அடைய முடியுமே தவிர சாமான்யமாய் முடியாது. ஆனுல் கிளர்ச்சி நிமித்தம் அரசாங்கம் பலமில்லாமற் பயப்படுவதாய் மற்ற தேசத்தார்கள் நினைத்து விடுவார்களாகையால் அவ்விஷயத்தில் ஜாக்கிரதையாயிருந்துகொள்ள வேண்டியதுதான் என்ற எண்ணத்தால் இந்தியாவில் தங்களுக்குள்ள பூராப் பாத்தியதையும் விட்டுக் கொடுப்பார்களா? அல்லது இந்தியாவிலுள்ள ஒத்துமையில்லாப் பலஹீனத்தையும் குழப்பத்தையும் நினைத்து இதர ராஜாங்கம் தலையிட்டால் சண்டையில்லாமல் எந்தக் காரியமாயினும் முடியுமா! அப்படி யுத்தம் ஏற்பட்டுப் பிறருக்கு ஜெயம் ஏற்பட்டாலும் ஜெயித்தவர்களிடம் கீழ்ப்படிந்து நடக்கும் தரமுடையதுதானே இவ்விந்தியா! அப்படிக்காரியம் நடந்தமேல் மற்றெந்த அரசாங்கம் வந்தாலும் இந்தியர்களிடம் சுயராஜ்யமாய் எல்லாப் பொருப்பையும் பவுரையும் பரோபகாரமாய்க் கொடுத்துவிடுவதாய் அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம் இன்னதென்று யாராவது சொல்ல முடியுமா? அப்படி விடுபவரால் அடையலாமென யோசித்தல் கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து உருகிக் கண்ணில் விழுந்தமேல் கொக்கைப் பிடிக்க நினைப்பதையொக்கும்.

பேராசைப் பைத்தியம் பிடித்து ஆசை வெட்கமறியா தென்ற பழமொழிப்படிப் பல வி த மா ய் வெறும் மனோராஜ்யம் பண்ணி எடுத்த காரியம் முற்றுப் பெறுமல் திரும்பத் திரும்ப வீண் முயற்சி எடுத்துத் தாம் விரும்பும் காரிய மடையமுடியாமல் தாமும் தம் கொள்கையை யநுசரித்தவர்களும் கஷ்டமடைவதைக் காட்டிலும் மனப் போக்கின் பிடிவாதத்தைச் சற்று நிதானிக்கும் ஆராய்ச்சியால் விலக்கி அநுட்டானத்தில் கைவரக்கூடியவைகளைக் கூடுமானவரை ராஜாங்கத்திற்கும் குடிகளுக்கும் சௌரியமானவைகளாய் ராஜாங்கமும் குடி

களும் கலந்து பேசி முடித்துக்கொண்டு பரஸ்பர ஒத்துமையால் அதன்படி நடபடிக்கைக்குக் கொண்டுவந்த மேல் நாளடைவில் மற்றும் விரும்பப்படும் உயர்ந்த நிலைமையைப் படிப்படியாயடைவதுதான் நியாயமும் நடக்கக்கூடியதுமானவை யென்பதையுணர்க.

இவ்விந்தியாவில் மதம் ஜாதி யென்ற கட்டுப்பாடு காலத்தைப் பொருத்து நாட்பட்ட கணக்கிற் கொஞ்சம் தன்படியான இயற்கையில் நழுவினாலும் அதையலையவிடாமல் வெள்ளரிப் பழத்திற்குப் பூண்பிடிப்பதுபோல் பிரயோசன மடையமுடியாத மூடப்பழக்க வழக்கங்களை அடிப்படையா யுள்ளவர்களால் யோக்யதையைப் பொருத்து எப்படி எலெக்ஷனால் தலைமை யேற்படுத்த முடியும்.

நிற்க உலகில் முதிர்ந்து எதிரில் நிற்கும் சிற்சில அறிவாளிகளின் அபிப்பிராயத்தை வைத்துத் தான் ஏற்படுத்த முடியுமேதவிர எல்லா ஜனங்களும் தெரிந்து அபிப்பிராயம் கொடுத்து ஏற்படுத்தல் (சாத்தியமா) நடக்கும் காரியமாவென்றால் அப்புடி மேலே சொல்லும் சிற்சில அறிவாளிகளின் இயற்கைக் குணம் ஜாதி மதக்கட்டிற் கட்டுப்பட்டு அதை மீறி நிற்கும் விரிவான சமத்துவப் பேரறிவில்லாமையால் எப்படியும் மதம் ஜாதி யென்றதன்வழிதான் மனது எவ்வழியினும் பிரவர்த்திக்குமே தவிரப் பொது நோக்கேற்பட்டுக் கூடுமானவரை எல்லா ஜனங்களும் சமமான அந்தஸ்தாயும் சௌரியமாயு மிருக்கச் சகிப்பு (பொறுமை) ஏற்படாதெனத் தெரிந்து கொள்க.

இவ்வரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட மற்ற தேசங்களுக்கு இவ்வரசாங்கம் கொடுத்திருக்கும் நன்மைபோல இவ்விந்தியாவிற்கும் கொடுக்காமலிருப்பது நியாயமா வென்றால் மற்ற தேசங்கள் அதனதன் இயற்கை நிலைமைக்குத் தக்க பிரயத்தனப்பட்டுத் தானே யடைந்து அநுபவிக்கும் பவரிருந்தமையால் அரசாங்கம் விட்டுக் கொடுக்கநேர்ந்தது.

எனில் இவ்விந்தியாவும் அதேமாதிரி செய்து அடையலாமெனப் பின்பற்றல் கால தேச வர்த்தமானம் தெரியாத கொள்கையாகும். எப்படி யென்றால் மற்ற தேசத்து ஜனங்கள் பிறந்தது முதல் இறக்கும் பரியந்தம் ஜீவனத்திற்கும் கௌரவத்திற்கும் தகுந்தமுயற்சியிலே முழு அபிப்பிராயத்தைக் கொண்டும் மற்றொன்றில் செலுத்தும் வேறெவ் வித அபிப்பிராயமில்லாத இயற்கைக் குணத்தைக் கொண்டிருக்கிறார்

கள். மதம் ஜாதியென்ற பிரிவை முக்கியமாய்க்கொள்ளாமல் சிற்சில சமயங்களிற் பிற்பாகமாய்ச் சிற்சிலர்கள் அர்த்தமில்லாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய ஜனங்களோ பிறந்தது முதல் இறந்த பிறகும் ஜாதி மதம் என்ற கொள்கையை முக்கியமாய்ப் பிராணனுக்குச் சமமாய் விடாமற் பற்றிக்கொண்டு அவ்விஷயத்திலே ஈடுபடும் விலக்க முடியாத பழக்கத்தை இயற்கைக்குணமாய் வைத்து மற்ற ஜீவனோபாயத்தில் முக்கிய கவனிப்பும் அழுத்தமுமில்லாதவர்களாய் எது எப்படியிருந்தாலென்ன எந்த ராஜா பட்டத்திற்கு வந்தாலும் நமக்கென்ன ராவணனுண்டாலென்ன ராமனுண்டாலென்ன வென்ற அபிப்பிராயத்துடன் தன்னிலைமை எப்பொழுதும் ஒன்றுதானே யென்று நினைத்துக்கொண்டிருக்கும் லாப நஷ்டம் தெரியாத பெருங்கூட்டமான ஜனங்களாயிருக்கிறார்கள்.

மற்ற தேசத்தார்களோ ஜீவிப்பதின் நிமித்தம் பறவைக்கப்பல் முதலிய தொழில்களில் பிராணனைக் கொடுத்தாகிலும் சம்பாத்தியமும் அது விஷயமாக மென்மேலும் முயற்சியும் செய்து கொண்டே யிருப்பார்கள்.

இந்துக்களோ பிரத்தியக்ஷமில்லாததும் இந்தக்காரியம் செய்வதில் இந்த ஹேதுவால் இந்தமாதிரிப் பலன் கிடைக்குமென்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளாமல் பிரயோசனம் கிடைக்காத மூடப்பழக்க வழக்கங்களாலேற்படும் சோம்பேறிக் குணத்தில் ஏற்படும் மதப் பழக்க வழக்கங்களின் மூடநம்பிக்கையில் பிராணனைவிட்டு இயற்கையிலேற்படும் சுய வுணர்ச்சியையும் சோம்பேறி மதக்கட்டுப் பாட்டிற் பலி கொடுத்து பிறர்வயப்பட்டவர்களாய் அடிமைத்தனத்திற் காளாகிறார்கள்.

இதர தேசத்தார்களோ தங்களுக்கென ஏற்பட்டு நன்றாய்த் தெரிந்து அநுபவிக்கும் மனோவிஷயமான ஆத்துமதத்துவ ஆராய்ச்சியிற்றெரிந்து பழக மிக ஆத்திரத்துடன் புத்தியையுபயோகிக்கிறார்கள்.

இந்தியர்களோ முன்னிருந்த ஆத்ம அநுபவசாலிகள் தாங்கள் அநுபவித்த ஆத்மாநுபவத்தை எழுதிவைத்திருப்பதைப் பொறுமைக்குணத்துடன் படிப்பதே யநுபவமென இறுமாந்து நிற்கிறார்கள்.

மேற்சொன்ன ஹேதுக்களின்படி இதர தேசத்தார்கள் நினைத்த காரியத்தை முடிக்கும் மனம் போக்கும் ஸ்த்திரபுத்தியும் அதற்குத் தகுந்த ஒத்துமையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியர்களோ ஒரு குடும்பத்தில் 2, 3, மதங்களும் அபிப்பிராயமும் கொள்கைகளும் அநுபவிக்காததை யநுபவித்ததாய் நினைத்துக்கொண்டிருக்கும் அறியாமையும் சற்றேறக்குறைய ஆயிரம் ஜனங்கள் அபிப்பிராயங்கொண்டது ஒருகக்ஷியுமாக தனித்தனி பிரிவுகளாய் நின்றுகொண்டு ஒத்துமைகொண்டாடும் நிலைமையிலிருக்கிறார்கள்.

இவ்வாற்றால் இவ்விந்தியா மற்ற தேசம்போலத் தனக்கும் கொடுக்கவேண்டுமென்று பிறரையெதிர்பார்த்தல் இன்னும் இத்தேச குணத்தை யநுசரிப்பதுடன் தனக்கெனப் பவரேற்படுத்திக்கொண்டு கௌரவத்துடன் மற்ற நாடுகளைப்போல் நல்ல நிலைமையடையும் பழக்கத்தைத் தடுத்ததாகவுமிருக்கிறது. ஓர் அபிப்பிராயத்தில் சொற்ப ஜனத்தொகையுள்ள ஒருகூட்டம் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது அவரவர்கள் மனதிற்றோன்றிப்பேசும் அபிப்பிராயத்தை வைத்து இந்தியாபூராவும் தம்மைப்போலத்தானிருக்குமென்றுநினைத்தும் தம்முடைய மனதிற்குச்சரியாய்த் தோன்றுவனவெல்லாம் எல்லா இந்தியர்களுடைய அபிப்பிராயமே என நிச்சயப்படுத்துகிறபடி காரியம்நடைபெறுமா? காலச்சக்கரத்தில் கடவுளமைத்த ஜனநுபவம் கூட்டமான ஜனங்களிடை அவர்களறியாமலே மனத்தின்கட்டோன்றி நடைபெறும்.

காங்கிரஸை ஆரம்பித்து ஸ்தாபனம்பண்ணிய பெரியோர்களின் அபிப்பிராயம் இந்தியாவின் ஜனப்பிரதிநிதியாகக்கூடும் அதிக ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கௌரவமாக ராஜாங்கத்திற்குத் தெரிவித்து ராஜாங்கத்திற்கும் குடிகளுக்கும் இதமான சௌளரியத்தை யுண்டுபண்ணிக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது.

அவை இப்போதுநிற்கும் நிலைமையையோசித்தால் இந்தியாவிலுள்ள மத ஜன சமூகமான ஒவ்வொரு புராதனக்கொள்கைகளும் ஏற்படுத்தப்பட்ட வகைக்கில்லாமல் தந்திர மந்திர சூழ்ச்சியால் மாறுதலடைந்து வஞ்சக வாயாடிகள் வசமாய் அவர்கள் சௌளரியத்திற்குத் தக்கவாறு உபயோகப்பட்டுவருவதுபோல உண்மையாயேற்படுத்தப்பட்ட காங்கிரஸின்படி வேலைநடவாமல் மாறுதலாய் இந்திய ஜனப் பொதுநோக்க அபிப்பிராயம் என்றவாயிலாக விபரீதமான அபிப்

பிராயத்துடன் நடைபெறாத விஷயங்களைப் பின்பற்றிக் குடிகளுக்கும் ராஜாங்கத்திற்கும் உள்ளுக்குள் பகைமைபாராட்டும்படிக்கும்ராஜாங்கம் பயந்து குடிகளுக்கு நன்மையளிக்கப்படும் நன்மையைக்கையாடும்படி நேர்ந்தது. எவ்விஷயமாயிருந்தபோதிலும் அமைதிமுறையில் ராஜாங்கமும் குடிகளும் கலந்துபேசவேண்டிய நிலைமையுமில்லாமற் போய்விட்டது.

உலகமும், உலகிலிருக்கும் ஒவ்வொரு ஜீவனும் அந்த ஜீவர்களைப் பற்றிநிற்கும் கொள்கைகளும் நிலைமை மாறுவது இயற்கைதானே நிற்க,

இந்திய அரசாங்கத்திட்ட அமைப்பின் மாறுதல்விஷயம் பார்லிமெண்டிற்கேயுரியதாகையால் அவ்வழியில் அந்த மெம்பர்ஸ்தானம் வகிக்கும்முயற்சி யெடுத்துக்கொண்டு, அங்கு மனச்சாக்ஷியுள்ள மெம்பர்களை மெஜாரிட்டியாகச்செய்து நாளடைவில் இந்தியாவில் இப்போதிருக்கும் நிலைமையை மாற்றிக்கொண்டும் அதற்கப்பால் அந் நடபடிக்கையிலே படிப்படியாய் இந்தியா க்ஷேமமடையவேண்டுமே தவிர இம்மாதிரியாய் ஒத்துழையாமை, சட்டமறுப்பு முதலிய தந்த்ர வழியிற்பிரவேசித்தல் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கபடயுக்தித் திறமையிற் பெரிதுகாட்டிக்கொள்ளலாய் முடியும்.

சட்டம் ஏற்படும்இடத்தில் திருத்தல்முறையாகும். சட்டம் நடைபெறும்இடத்தில் முரணுதல் வீண் கஷ்டமும் முரட்டுத்தனமான (ஒழுக்கமும்) நடபடிக்கையுமாகும்.

சட்டம் ஏற்படும் இடத்தில் திருத்தல் மிகக்கஷ்டமாய்ச் சாத்தியப்படாததாய்த் தோன்றினும் அவ்வழியிற் காலத்தை யெதிர்பார்த்துச் சமயம்வாய்க்கும்பொழுது S. காலங்கருதியிருப்பர் கலங்காது "ஞாலங்கருதுபவர்" என்னும் ஆன்றோர் அபிப்பிராயத்தை யநுசரித்து அவ்விதமாயநுகூலமடைவதுதான் நிலைபெறுவதும் தடங்கலில்லாததும் முடிந்தவிவகாரமுமாகும்.

---

S இத்திருக்குறளுக்குப் பரிமேலழகருரை, என்னவெனில்: தப்பாது பூமியெல்லாம் கொள்ளக்கருதும் அரசர்தம், வலிமிகும் ஆயினும் அது கருதாது

R சட்டப்படி நடைபெற்றுவரும் சங்கதியில் தலையிட்டு அந்தச் சட்டமறுப்பின்மூலம் அநுகூலமடைய நினைப்பது ஒருவித முயற்சியா யிருப்பினும் "எய்தவனிருக்க அம்பைநோகும்" தன்மையையொக்கும்.

ஆகையால் ராஜிய விஷயத்தில் நன்றாய்ப்பழகித் தெரிந்த அறிஞர்கள்! மிக மகத்தானதாய் நினைக்கப்படும் அடையமுடியாத பெரிய காரியத்திற்றலையிட்டுப் பிரையோசனக்குறைவாய் வீண்சிரமப்படுவதைக்காட்டிலும் மிகச்சொற்பமான காரியமாய் முதலில் நினைக்கப்படும் விஷயத்தை யாரம்பித்து நாளடைவில் முடிவிற் பெரும்பயனைக்கொடுக்கு. முயற்சி சிறந்ததல்லவாவென்பதை ஞாபகமூட்டுகிறேன்.

---

## 9. இந்தியாவின் தற்காலதேவை.

(1) சமத்துவம் ○
(2) கட்டாயக்கல்வியும் கட்டாயத்தேகப்பயிற்சியும்
(3) தொழிலபிவிருத்தி.
(4) அந்நியதேசங்களுக்குத் தடையில்லாப் போக்குவரவு.
(5) பார்லிமெண்டில் இந்தியஜனப்பிரதிநிதிகள்.
(6) இந்தியாவின் பட்ஜட்டிற்கு இந்திய கமிட்டி.
(7) மேற்கண்ட விஷயங்களைக் கவனிக்கும் இந்திய பிரிட்டிஷ் [கமிட்டி

---

அதற்கேற்ற காலத்தையே கருதி அதுவரும் துணையும் பகைமேற்செல்லார்: என்பது பொருள், சென்றால் என்ன வென்று தர்க்கித்தால் ரகசியம் வெளியாகிப் பலக்குறைவும் எதிரிகளுக்கு அலக்ஷியமும் ஏற்படும்.

R ஆனல் இந்தியாவின் பெரும்பாகத்தில் படிப்பிற்சிறந்து விஷயம் தெரிந்து யுக்தியாற் பெரும் காரியத்தைச் சாதிக்கும் வல்லுநர்களிருந்தாலும் அவர்களபிப்பிராயம் தெரிந்து பூரணமனதுடன் அவர்கள் நடபடிக்கையைப் பின்பற்றி நடக்கும் ஜனத்தொகை மிகச் சொற்பமாயுள்ளன. அதுவுமல்லாமல், ஆறுநிறையவெள்ளம் வந்தாலும் நாய்க்கு நாக்கொள்ளும் தண்ணீர்தானே, யென்ற பழமொழியையநுசரித்த கீழ்ஜாதியினங்களும் ஒத்துமையிற்கட்டுப் படாது ஒதுங்கியிருக்கிறார்கள்.

○ இதற்கு முன்னமே இவைகளெல்லாம் கவனித்திருக்கிறதென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டாலும் பெயருக்கு எழுத்திலிருப்பது தவிர அவ் விஷயத்தை நடபடிக்கைக்கு கொண்டுவந்து கனம் தணிகாசலம்செட்டி

(1) சமத்துவம் ÷ மதசம்பந்தமாய்க் கல்விச்சாலை, கோவில், சத்திரம், நதி, குளம், கிணறு, பாதை முதலிய பொதுப்பிரயோஜனமான பொதுவிடங்களில் எல்லா மனிதர்களும் பயமில்லாமல்சமமான அநுபவத்திலிருப்பதற்கு விரோதமாய் அவ்விடங்களில் ஒருவரையொருவர் குரோதபுத்தியால் ஜாதிமதத்வேஷங்காட்டுதலில் 'பொதுவின்' இடஞ்சலும் B ஒழுக்க முன்னேற்றத்தடையும் மதவிரோதமும் 'ஜனங்களுக்குள்' அமெரிக்கைக்குறைவையும் உண்டுபண்ணுகிறது. ஒவ்வொருவரும் தம் ஜெபம் முதலிய ஒழுக்கத்தில் பிறர் இடஞ்சலைக் கருதினால் அவரவர்சொந்தஇடத்தில்வைத்துக்கொள்ளலாம். ஆகையால் பப்ளிக் இடங்களில் எல்லா ஜனங்களும் சமஉரிமைகொண்டாடுவதில் நிராக்ஷேபனையான சட்டம் ஏற்படுத்தல் மதசம்பந்தமாகாது. கடவுளைப் பற்றிய விவகாரந்தான் 'மதசம்பந்தம். பொதுவிடம் கடவுளுடையது. உத்தியோகத்தில் ஐரோப்பிய சிவிலியரென்றாவது இந்திய பாரம்பரையுயர்வுள்ளவரென்றாவது கருதாமல் யோக்கியதைக்குத்தக்க உத்தியோகத்தில் சம்பளமுதலியவற்றில் பாரபக்ஷமும் ஏற்றத்தாழ்ச்சியும் பாராட்டாமல் வகுப்புவாரி ஈவுப்படிகிரமமாய் நடக்கச்செய்தல்.

---

யாரவர்கள்; கனம். பனகால் அரசர் இவர்களைப்போல எடுத்தகாரியத்தை முற்றுப்பெறச்செய்து அநுஷ்டானத்தில் அநுபவிக்கப்படவில்லை. இவ்விஷயங்களில் பார்லிமெண்டில் மிகுந்த பிரயத்தனப்பட்டு ஒவ்வொன்றையும் சங்கடமில்லாமற் பெற்றுக்கொண்டு அநுபவத்திலடைந்தும் பாக்கிநிற்கும் காரியங்களையும் 'விடாமுயற்சியால் ஒவ்வொன்றாயநுபவத்திற்குக் கொண்டுவந்தும் அல்லது ஏககாலத்தில் ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு காரியத்திற் பிரயத்தனப்பட்டுக் காரியத்தை முடிவுபெறச்செய்தும் அநுபவித்தால் முடிவில் சுயராஜ்யம் தானே கிடைக்கும்.

B இந்துக்களில் பெரும்பாலும் தன்தன் ஜாதிக்கட்டுப் பாட்டின் வரம்பு மீறும் தன்னினங்களை ஜாதிக்குப்புறம்பாகத் தள்ளிவைத்து அப்பால் வரம்புப்படி நடந்து கொண்டால் சேர்த்துக்கொள்வது யாவருமறிந்த விஷயம். அதையநுசரித்து ஒழுக்கமில்லாததினால் விலக்கப்பட்டிருக்கும் நபர்கள் ஒழுக்கமாய் நடந்துகொண்டால் சேர்த்துக்கொள்ள வேண்டிய வழக்கத்தை யுறுதியாய் வைத்து நல்ல அபிமானத்துடன் நடத்திவந்தால் கீழானவர்களாய்க் கருதப்படும் இழிவான ஒழுக்கமுடையவர்களிருக்கமாட்டார்கள். நாளடைவில் இவ்

2. கட்டாயக்கல்வியும், தேகப்பயிற்சியும் மனிதனுக்குண்டாகும் உணர்ச்சியிற் பகுப்பும் நல்லது கெட்டது தெரிந்துநடக்கும் ஆராய்ச்சியும் திடபுத்தியும் கூச்சமில்லாமற் பேசுந்திறனும் கல்விக்கேயுளதாகையால் ஆகார விவகாரங்கள் மனதிலேற்பட்டுத் தடிப்பதற்கு முன் இளமையிற்கல் என்ற ஔவைப்பிராட்டியின் அபிப்பிராயப்படி ஏழுவயதுக்கு மேற்போகாத எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கும் ஜாதிமத வேற்றுமையில்லாமல் அம்மை குத்தல் முதலிய சுகாதார விதியைப்போல் கட்டாயத்தில் சட்டமாயுள்ள கல்வியும் அக்கல்வியானது தம்தம் பிறப்பின் பாஷையிலுள்ள நீதிநூல்களும்: பழைய கணித முறையுள்ள நூலும் விவசாயத்தையும், வியாபாரத்தையும், ஆரம்பமாய்த் தெரிவிக்கும் நூல்களுமாக ஆரம்பமுறையில் பாடங்களையுபயோகித்தும் நீதி ஒழுக்கங்களில் மனிதனுடைய யோக்கியதையைப் பாராமல் ஜாதியையும் மதத்தையும்பாராட்டி எழுதப்பட்டிருக்கும் இதிஹாச புராணங்களை முற்றிலும் விலக்கி ஆரம்பக்கல்வியை நடத்தியும், பத்துவயதுக்கு மேல் ராஜபாஷையான ஆங்கிலம் அம்முறையுடன் வேண்டியஅளவும் மற்றும் தம்தம் மதசம்பந்தமான கடவுள்; ஆத்மா முதலிய பரமார்த்திக உண்மையை விளக்கும் தம்தம் சொந்த

---

வளவு அதிகக்கூட்டமான ஒடுக்கப்பட்ட இனங்களும் கீழான ஜாதிகளும் இருக்காதென்றே நிச்சயிக்கலாம். ஆகையால் ஒழுக்கமில்லாதவர்களாய் நினைக்கப்படும் கீழ்ஜாதியார்கள் உயர்வடைந்து சமமடையவும் மதமானது மென்மேலும் விருத்தியாக வேண்டுமென்றும் அந்தரங்கத்தில் மனச்சாக்ஷிக்குப் பொருத்தமான பெருந்தன்மைக்குணத்தில் ஈடுபடும்தயையுள்ள இந்துமதஸ்தர்கள் இனம் விசாரிக்காமல் ஒழுக்கத்துடனும் நாகரீகத்துடனும் கொள்கைக்குத்தக்க அடையாளத்துடனும் இருப்பவர்களை யாதொரு தடங்கலன்றியில் கோவில் முதலிய பொதுவிடங்களில் விட்டுவிடும் வழக்கத்தை யேற்படுத்தவேண்டும். அதனால் மதவிரோதமில்லையென்பதற்கு ஆதாரமாக காசி முதலிய இரண்டொரு ஸ்தலங்களில் ஜாதிப் பாகுபாடில்லாமல் நடந்துவருவதைப் பிரத்தியக்ஷத்திற் பார்க்கலாம். இந்துமதத்தைத் தவிர மற்றமதங்கள் ஏற்கெனவே கொள்கை மதமென்பதையும் பாராட்டாது யாவராயினும் அபிமானிக்கிறவர்களைப் புறம்பாக்காமல் ஒப்புக்கொண்டு திருப்தியுடன் நடந்துவருவதை நாகூர் முதலிய மஹமதியஸ்தலங்களிலும் மற்றும் கிறிஸ்தவக் கோவில்களிலும் பார்க்கலாம்.

பாஷையின் ஆரம்பநூல்களும் இலக்கண இலக்கியங்களும் அயல்நாட்டிலும் இந்தியாவிலுமுள்ள கைத்தொழில் விவசாயம், வியாபாரம் வானசாஸ்திர முதலியவைகளைத் தெரிவிக்கும் நூல்களும் முக்கியமாய் இந்தியாவிலிருக்கும் பழைய முறைப்படியுள்ள உண்மையான வைத்தியநூல்களும் சில அயல் நாட்டு ஆப்ரேஷன் முறைநூலும் கட்டாயப்படிப்பாயமைத்துப் பிராமணரல்லாத மாணவர்களுக்குப் பெரும்பாலும் பிராமணரல்லாதாரும் ஏகதேசம் சமநோக்குள்ளவர்களும் ஜாதிப்பிணக்கில்லாத சொற்ப பிராமணரும்; உபாத்தியாயராக ஏற்படுத்தவும் வேண்டும்.

தேகப்பயிற்சியில் தேகதிடத்திற்கும் நோயணுகாதிருப்பதற்கும் முக்கியமாயுள்ளதும் சமயத்தில் தேகபாதுகாப்பு முதலியவற்றிற்கு உபயோகப்படுவதுமான கஜாம், குஸ்தி, கத்திவீச்சு, கம்பு வீச்சு, ராணுவமுறைப்பயிற்சி, டிரில் முதலிய தேகப்பயிற்சியை: மூங்கில்முதலிய மரங்களையும் சிறுகன்றில் எப்படி வேண்டுமானாலும் வளைத்து நினைக்கப்படும் விதமாய் அதையுருப்படியாக்குதல் போல் 5-வயதுக்கு மேற்பட்டுப் பழக்கினால் முதிர்வயது வரும்வரை எப்படி வேண்டுமானாலும் தேகத்தை வைத்துக்கொள்ளலாம் இவற்றில் மிகவும் மெலிந்து நோயுடனிருக்கும் சிறுவர் சிறுமிகளும் பெண்களில் பத்துவயதுக்கு மேற்பட்டுள்ள இஷ்டமில்லாத பெண்களையும் விலக்கியும் நடத்தலாம்.

(3) தொழிலபிவிருத்தி:— முக்கியமாய் மனிதர்களின் உணவிற்கும் சௌரியத்திற்கும் தொழில் அவசியமானதாகும். ஆகையால் மனிதர்கள்செய்யக்கூடிய எந்தத்தொழிலிலும் உண்டாகும்சாமான்கள் கிரயமானலொழிய அத்தொழிலபிவிருத்தியும் ஜீவனமும் நடவாது. இவ்விந்தியாவில் இதற்குமுன்னிருந்த தொழில்கள் மறைந்ததற்கும் தொழிலாளிகள் கஷ்டமடைவதற்கும் காரணம் தொழிலையாதரித்து நடத்துவதில் பண ஊக்கமின்மையும் ராஜாங்க ஆதரவின்மையும் △ கட்டுப்பாடில்லாததுமே. இது விஷயமாய் இதற்குமுன் பெயருக்கு மாத்திரம் தொழிலிலாக்காவென்று அமைந்திருப்பது தவிர பிரயோ

△ கட்டுப்பாடில்லாதது. இதரதேசத்து நாகரீகத்தில் மயங்கி ஆசைப்பட்டு முன்னிருந்த சிக்கன வாழ்க்கையைக் கைவிட்டமை அதாவது ஆடை:

ஜனப்படும்படியான எவ்வித முயற்சியும் தீவிரமாக எடுக்கப்படவில்லை. இப்போது அநுஷ்டானமாய் நடக்கவேண்டியதென்னவெனில் இந்திய நெசவுத்தொழிலாளிகளில் முக்கியமானவர்களைப் பொறுக்கியெடுத்து பலஅந்நியநாட்டிற்கு அனுப்பி அங்குள்ள நெசவுக்கு வேண்டிய யந்திரம் முதலிய சாமான்கள் தயாரிக்கவும் சாயம் முதலியன போடத் தெரிந்துகொள்ளவும், மற்றும் நூல் நெசவுதரி முதலியவைகளிற் சுருக்கவகையான புதிய நெசவுசாமக்கிரியைகளைத் தெரிந்துகொள்ளவும் மற்றும் ஜனங்களுக்கு வேண்டிய இரும்பு, மரம், முதலியவற்றில் எந்த சாமானையும் செய்யக்கூடிய எல்லாத்தொழிலையும் கூடுமானவரை தெரிந்துகொள்ளவும் வேண்டிய பணஉதவியும் அவ்வத்தொழிலில் விருப்பமுடையவர்களையும் உரியவர்களையும் தடங்கலில்லாமல் அனுப்பிக்கவேண்டிய டிபார்ட்மெண்டுகளும் இருக்கவேண்டும் அத்தொழில் பயில்வதற்கு ஜனசங்கைக்குத் தகுந்த தொழிற்சாலைகளுமிருக்க வேண்டும் அத்தொழிற்சாலைகளில் அத்தொழிலிற் பயிற்சிதேறி நன்கு மதிக்கப்பட்டு உயர்ந்த சர்டிபிகேட் பட்டம் பெற்றவர்களைப் பாடம் கற்பிக்கவும் இன்ஸ்பெக்ஷன் பண்ணவும் வைக்க வேண்டும்.

அப்படியுண்டாக்கப்படும் சாமான்கிரயம் தொழிலிலாக்கா தலைவரால் சாமான் கூலிமுதலியன கணக்கிடப்பட்டு ஒவ்வொரு சாமானிலும் கறாரானகிரயம் விதித்திருக்கவும் வேண்டும்.

விவசாயத்திலும் அப்படியே பல அந்நியதேசத்திற்குச் சென்றுவரக்கூடிய மெம்பர்களைத் தெரிந்தெடுத்து பணம் அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை உதவிசெய்து அனுப்பியும் நிலத்திற்குத் தகுந்த விதைகளையும் விவசாயக்கருவிகளும் உரங்களும் இப்போதிருக்கும் கடன் மூலமான பண உதவியும் இத்தொழிற் பயிற்சியடைவதற்கு ஜனசங்கைக்குத் தகுந்த அத்தொழிற்சாலைகளுமமைக்கப்பட்டு அவ்விஷயத்தில் உயர்தரப்பட்டம் பெற்றவர்களாற் கற்பிக்கப்படவும்

போக்குவரவு சாதனங்கள்; வெளிச்சம்; உணவுமற்றும் பலசாமான்களில் முன்னிருந்த வைதீக, லௌகீக, கட்டுப்பாடுகள்மாறி மிகவிரிவாய் இத்தேசத்தின் இயற்கைக்கு மாறுபட்டுப் புறம்பான நாகரீகஅநுபவத்திற்கு வேண்டியசாமான்களையும் சாமக்கிரியைகளையும், இச்சையால் விரும்புவதே

இன்ஸ்பெக்ஷன் செய்யவும் அத்தொழிலுக்குடையவர்களும் விருப்ப முடையவர்களும் அவ்விலாக்கா அதிகாரிகள் மூலம் தெரிந்து விவ சாயம் செய்வதையும் சட்டசம்மதமாகச்செய்து இதில் விளைவாகும் மகசூலில் தானியத்திற்கு மட்டும் நல்லது கெட்டதென இரண்டு பிரிவேற்படுத்தி ஒவ்வொன்றிற்கும் கரார் விலையை ஏற்படுத்தி கூட் டிக் குறைத்து விற்காமலிருக்கும் பொருட்டு வேண்டிய நிபந்தனைகள் ஏற்படுத்தியும் இவ்விஷயத்தில் முக்கியமான கவனம் செலுத்த அவ் விவசாயத்தொழிலிற்றேர்ச்சியடைந்து உயர்தாரப்பட்டம் பெற்றவர் களைத் தலைவராய் நியமித்தலும் வேண்டும்.

வியாபாரத்திலும் மேற்கண்ட சாமான்களைக்கொண்டு விலை செய் வதில் சாமான்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும உண்மையான கிரயத் தில் சாமானுக்குத தக்கவாறு ரூபாய் ஒன்றுக்கு இவ்வளவு லாபம் வைத்துக்கொடுத்தால் செலவு முதலியன நீங்க இவ்வளவு கிடைக் கும் என்ற கணககிட்டுக்கூடுமானவரை ஏற்றத்தாழ்ச்சியிலலாததும் ஜனங்களுக்குக் கஷ்டமிலலாததுமான லாபத்தைக் கணக்கிட்டு ஏற் படுத்தவும் அவற்றை இன்ஸ்பெக்ஷன் பண்ணவும் அதிகாரிகளை ஏற் பாடுசெய்தும் அவ்விஷயத்தில் நிபுணரான ஒருவரைத் தலைவராகவும் ஏற்படுத்தவும் வேண்டும்.

4. அந்நிய தேசங்களுக்குத் தடையில்லாப் போக்கு வரவு இவற்றால் புத்திவிரிவும் விஷய ஆராய்ச்சியும் தெளிவும் ஏற்படும். பலதேசத்தினர் நட்பால் தனித்தனிதேசமென்ற சொற்ப எண்ணம் நீங்கிப் பொது நோக்கம் ஜனங்களிடைபரவியும் மற்ற தேசங்கள் முன்னேற்றமடைந்திருக்கும் வழி இன்னதெனவும் அதற்குரிய கொள்கை யின்னதெனவும் தெரிந்து அதையநுசரித்தும் ராஜாங்க அமைப்பைத் தெரிந்துகொண்டு அதையநுசரித்தவோரணையிற் பிர யத்தனம் செய்து தன் லக்ஷியத்தை முடிக்கக்கூடியபுத்தித்தெளிவையும் அமெரிக்கையையும் உண்டாக்கும்.

5. பார்லிமெண்டில் இந்திய ஜனப்பிரதிநிதிகள்: குடிகளுக் கும் ராஜாங்கத்திற்கும் ஒத்த லாப நஷ்டங்களை மனப்பூர்வமாய் ஒருவரையொருவர் சௌரியப்படுத்திக்கொள்ளும்முறைக்கு அவசிய மானது. இல்லாவிடில் மனச்சாக்ஷி கடந்த பாரபக்ஷமான ஒரு

தலைப்பட்ட சங்கதிகளாகவே முடியும். அவற்றால் ஒரு கக்ஷிலாபமும் மற்றொரு கக்ஷி நஷ்டமுமடையவேண்டியதாய் ஏற்படும்.

உள்ளபடி மஹாஜன அபிப்பிராயத்தையும் நியாயத்தையும் ஒப்புக்கொள்ளாத அரசாங்கம் ஒன்றேனும் இல்லை. அப் பார்லிமெண்டின் அமைப்பிற்கு இந்திய ஜனப்பிரதிநிதிகளிருந்து காரியம் முடிந்து அநுஷ்டானத்திற்கு வரும் எந்த விஷயமும் இந்தியாவிலும் புற நாட்டிலும் தள்ளமுடியாது. ஆகையால் ராஜீய விஷயத்தில் தேர்ச்சி பெற்றவர்களும் சுயநலமில்லாதவர்களுமான இந்தியப் பிரதிநிதிகளைப்பார்லிமெண்டிற்குத் தெரிந்தெடுக்கவேண்டும். அதுவும் ஜனசங்கைக்குத் தக்கவாறு கூடுமானவரை வகுப்புவாரியை யநுசரித்துமே யிருக்கவேண்டும்.

6. இந்தியாவின் பட்ஜட்டிற்கு இந்திய கமிட்டி:— பணவரவு செலவு சம்பந்தத்தில் எவ்வளவு லோபமும் தரித்திரமுமாயிருந்தாலும் பணத்தின் வரவும் செலவும் உண்மையாய்த் தெரிந்துகொண்டால் யாதொரு விவகாரமும் ஏற்படாதென்பதுயாவருமறிந்த விஷயம். இருகக்ஷியிலும் மனமுரண்டு லோபம் தரித்திரமுதலிய குணங்கள் ஏற்பட்டால்தான் கக்ஷிவிரோதமும் கலக்கமும் ஏற்படும். ஒருவர் சொந்தமாய் நினைக்கக்கூடாத பொதுஜன சம்பந்தமான ஒவ்வொரு விஷயங்களிலும் ஜனத்தலைவர்களைக்கலந்து வரவு செலவு பண்ணுவது எல்லா இடங்களிலும் எல்லா விஷயங்களிலும் நடந்துவருகிறது. ஆகையால் யாதொரு சங்கடமும் முரண்பாடும் ஏற்படாதிருக்க நினைக்கும் நியாயமான வரவு செலவிற்கு இந்தியகமிட்டி அவசியம்.

7. மேற்கண்ட விஷயங்களைக் கவனிக்கும் பிரிட்டிஷ் இந்தியக் கமிட்டி:— முற்சொன்ன விஷயங்களை நடத்துச்செய்யவும் நடந்ததைக் கவனிக்கவும் மற்றும் சமயோஜிதமான நடபடிக்கைகளையுண்டுபண்ணிக் கொள்ளவும் முடிவில் பிரிட்டிஷாரிலும் இந்தியரிலும் பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

பேரறிவுடன் தன் காரியங்களையாவது பொதுக்காரியங்களையாவது சரியாய் நடத்திக்கொள்ளும் புத்திசாலிகள் தன்னுடன் ஒத்து உழைக்கும் சகாக்களையோ வேலைக்காரர்களையோ தன்னைப்போலப்

பயிற்சிசெய்து அபிப்பிராயத்தில் சமானமாக்கி அம்முறையில் சௌரியமும் லாபமுமடைவதுதான் கஷ்டமில்லாததும் பரஸ்பர திருப்தியான மனச்சமாதானத்துடன் நடக்கும் சந்தோஷ வாழ்க்கையுமாகும்.

அப்படியில்லாமல் வலுமையால் தன் சௌரியத்திற்காகப்பிறரைக் கீழ்ப்படுத்தியாளும் ஆட்சிமுறை ஆரம்பத்தில் சொற்பகாலம் சௌரியமாயிருந்தாலும் வரவரக்கஷ்டமும் நீடிக்காததுமாகும்.

ராஜீய விஷயத்தில் அதிகத் தேர்ச்சியுமநுபவமுமில்லாத அடியேன் சிற்றறிவிற்கெட்டினமட்டில் மாறுதலடையும் விஷயத்திற்றெரிவித்துள்ளவற்றில் சரியுள்ளதைச்சேர்த்தும் சரியில்லாததை விலக்கியும் அறிவாளிகள் காலத்திற்குத்தக்கவாறு கவர்ன்மெண்ட் (ராஜாங்கமும்) குடிகளும் கூடுமானவரை மனஸ்கரித்த லாப நஷ்டத்தில் ஒத்துமையுடன் நடந்துவரும்வழியிற் பிரயத்தனப்பட்டு நடந்துவருதல் நன்மையும் பெருமையும் உண்டாக்கும்.

---

## 10. கன்னிகா விவாக மறுப்பு.

இதற்குமுன் சொல்லப்பட்டிருக்கிறபடி கடவுள் சம்பந்தமாயும் சாஸ்திர சம்பந்தமாயும் அநுமானிக்கப்பட்டு உபயோகித்துவருகிற யுக்திப்பொறுத்தமற்றதும் அநுபவத்தையும் ஆராய்ச்சிபண்ணும் அறிவாளிகள் அபிப்பிராயத்தையும் விலகியிருக்கின்றதும் தன்னலமும் தற்பெருமையுமாக ஜாதிக்கட்டுப்பாட்டிற்கு அமைத்துக்கொண்டிருக்கிற ஸ்மார்த்தவைதீக அங்கங்களில் இக்கன்னிகாவிவாகமுமொன்று. இந்தக்கன்னிகவிவாஹம் ஆதியில் T. ருதுமதி,விவாகத்தையநுசரித்து வந்த பிராமணக்கொள்கையின் வழக்கத்திலிருந்து சொற்பகாலத்தின்

---

T வால்மீகி ராமாயணம் உத்தரகாண்டம் குசத்வஜர் என்றரிஷியின் புத்திரி வேதவதி. அவளுடைய கல்யாணப் பேச்சுக்குத் தக்கவயது வந்தபிறகு தேவர்கள் கந்தர்வர்கள் முதலிய யாவரும் அப்பெண்மணியைத் தங்களுக்கு மணம் செய்து கொடுக்கும்படி கேட்டார்கள். அந்தப் பெண்ணை மஹாவிஷ்ணுவிற்குப் பத்தினியாய்க் கொடுக்கவேண்டுமென்று கேட்டவர்களுக்கெல்லாம் கொடுக்காமலிருந்தார் அப்பால் ராவணன் விரும்பிய பொழுது அக்

சௌரியத்திற்காக மாற்றப்பட்டு அதிலிருந்து பழக்கத்துடன் நிலை த்துநின்றுவிட்டது.

இப்படிச் சமூக சீர்திருத்தங்கள் II சமயத்திற்கேற்றவாறு மாறிமாறி வந்திருக்கிறதென்றும் அவைகள் ஆத்மாநுஷ்டானங்களைக் கெடுக்கும் பாபமல்லவென்றும் பழைய இதிகாசங்களாலும் யுக்தியா லும் நிச்சயிக்கப்படுகிறது.

---

கினிப்பிரவேசம் பண்ணினுள். விஷ்ணுபுராணம் காதியின் புத்திரியான சத் தியவதியை ரீஷிகரிஷி மணந்துகொண்டிருக்கிறுர்.

மஹாபாரதம் ஆதிபர்வம் சுக்கிராச்சாரியின் பெண், தெய்வயானை, ருது வாய் நாளானபிறகே கல்யாணம். அதுவும் யயாதி மஹாராஜாவிற்கு. அக் கதையில் ருதுவாகி வீட்டிலிருந்தா ளென்பது தெரிவிக்கும்; வேதத்தில் விதிக்கப்பட்டதாய்ச் சொல்லுகிற பிர்மக்ஷத்திரிய வைசிய என்னும் மூன்று வருணத்தாராலும் செய்யப்படுகிற கர்மாக்களில் பிராமணன் செய்யப்படும் கர்மாவில்; மற்ற இரண்டு வருணத்தாரும் செய்யக்கூடாதென விலக்கப்பட்ட கர்மாக்கள் தவிர விவாகம் என்னும் கர்மா மூன்று வருணத்தாரும் ஒரே கொள் கையிற் செய்பவர்களாயிருக்கிறுர்கள். அவ்வழியில் சுயம்! வரம் முதலியவிவா கங்களும் மற்றும் அநேகவித விவாகங்களும் நடந்திருப்பதாய்ச் சொல்லும் சரித்திரங்களைப் பார்த்தால் ருதுவானபிறகே கல்யாண மென்பதைக்காட்டு கின்றன. தவிரவும், விவாகத்திலிருந்து மரண ஸமஸ்காரம் வரையில் செய்து வரவேண்டுமாய்க் குறிப்பிடும் கர்மாவில் சாந்திமுகூர்த்தம் என்னும் கர்மா குறிப்பிடாதது ருதுமதி விவாகத்தையே ருசுச்செய்கிறது.

11 சமூகத்திருத்தங்கள் சமயம் போல் மாறுவது வழக்கமென்பதும் அவற்ருல் மனதிற்கு அசுத்தம் ஏற்பட்டு பாபமாக ஏற்படாதென்பதும் பின் வரும் உத்தாலகர் சுவேத கேது என்ற ரிஷிகளின் சரித்திரத்தாற்றெரிகிறது அதாவது உத்தாலகரென், ஒரு மஹரிஷியிருந்தார் அவருக்குச் சுவேத கேது வென்ற குமாரரொருவருண்டு அந்தக்காலத்திலும் அதற்கு முந்திய காலங் களிலும் ஸ்திரீகள் அவர்களுடைய கணவர்கள் பந்துக்களுடைய சம்ரக்ஷணை யிலிருந்துகொண்டு வீட்டிற்குள்ளேயே யிருப்பது என்கிறவழக்கம்கிடையாது. அவர்கள் புணர்ச்சி விஷயங்களிற் கணவர்களிடத்துமட்டும் என்கிற வரம்பில் லாமல் இருந்தார்கள். ஆகிலும் அவர்கள் பாபிகளாக எண்ணப்படவில்லை. ஏனென்ருல் அது அக்காலத்திய தர்ம சம்மதமான வழக்கமாயிருந்தது. அக்கா லத்திய அநுஷ்டானமானது பக்ஷிகளும் மிருகங்களும் கொஞ்சமேனும் பொரு

கடவுளுடைய சிருஷ்டியிலமைத்த ஒவ்வொரு ஜீவனும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயும் உலகத்தைப் பலபலவிதமாய் அலங்கரித்துக்கொண்டு ஒன்றில் ஒன்று மயங்கியும் பேத புத்தியின் காரணத்தால் உலகம் விருத்தியடைவதில் ஒவ்வொரு ஜீவனும் மிக அபிமானத்துடனும் W உலகத்தை விருத்திபண்ணுவதே தன் உண்மையான வேலையும் கடமையும் என்று தனக்குத்தானே யேற்படும் இயற்கையென்னும் மாயை வசப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

---

மையில்லாமல் தங்கள் மனதிற்கியைந்தபடி புணர்ச்சி செய்யும் விதத்தையொத்திருந்தது. அந்த வழக்கமானது அதற்கு முந்தின அநுஷ்டானங்களையநுசரித்து வந்ததாயும் ரிஷிகளால் சரியென்று அங்கீகரிக்கப்பட்டதாயுமிருந்தது. அந்தவழக்கம் இப்பொழுதும் உத்தரகுரு ஜாதியாரிடத்திற் கௌரவமாகவே மதிக்கப்படுகிறது. அப்படியிருக்க ஒருநாள் சுவேத கேதுவினுடைய தகப்பனாரிருக்கையிலேயே ஒரு பிராமணர், சுவேத கேது ரிஷியினுடைய தாயாரைக் கையைப் பிடித்துக்கொண்டுபோவோம் வா. என்று கூப்பிட்டார் தன்தாயைக் கையைப்பிடித்து இழுத்து முரட்டுத்தனமா யழைத்துக்கொண்டு போவதைக்கண்ட சுவேது கேதுவானவர் மிகவும்கோபம் அடைந்தார். அப்பொழுது உத்தாலகர் தன் மகனைப்பார்த்து "ஓ! மகனே கோபங்கொள்ளாதே இது ஆதிகாலமுதல் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

நாளுவித ஜாதிகளிலுள்ள ஸ்திரீகளெல்லாரும் சுயேச்சையானவர்கள். இந்த விஷயத்தை மனிதர்கள் அவரவர்களுடைய ஜாதிகளுக்குள் பசுக்களைப்போல் நடந்து வருகிறார்கள் என்றார். ஆனபோதிலும், சுவேதகேது இவ்வழக்கத்தை யங்கீகரிக்காமல் கண்டித்து இப்பொழுது மனிதர்கள் ஸ்திரீகள் விஷயமாக நடந்து வருகிற வழக்கத்தை ஸ்தாபித்தார். அதாவது "ஒரு ஸ்திரீயானவள் தன் இஷ்டப்படி சஞ்சரிக்காமல் தன் ஜீவதிசை முழுவதும் தன் புருஷன் ஒருவனைச்சார்ந்து இருப்பது என்பதுதான். அந்தக்காலமுதல் இந்த வழக்கமானது மனுஷ ஜாதிகளுக்குள் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. இப்பிராகிருதவழக்கம் ஏற்பட்ட காலமுதல் பாரியை யானவள் ஒரே பத்தாவுக்கு உரியவளாயில்லாமல் வேறுவிதமாயிருந்தால் அது பாபகரமாகமதிக்கப்படுகிறது. இவ்வாறு சுவேதகேது ஏற்படுத்தின உத்தமமான விதியிலிருந்து எந்த ஸ்திரீவழுவுகிறாளோ அவள் சிசுஹத்தி செய்தபாபத்தையடைகிறாள். அதே பிரகாரம் உத்தமமான தன்ஸ்திரீயை அவமதித்து பரஸ்திரீயுடன்போகிக்கும் புருஷனும் பாபம் செய்தவனாகிறான்" என்று மகாபாரதம் ஆதிபருவத்தில் சொல்லுகிறது.

W- அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்ததெது. தன்னருள் வெளிக்குளே யகிலாண்டகோடி யெல்லாம்

M. இவ்வித காரணத்தால் உலகவிருத்திக்காக ஏற்படுத்தப் பட்ட ஆணும் பெண்ணும் கலந்ததினுலுண்டான சிற்றின்பக் குணங் கள் முழுவதும் உண்மையையடைவதனாலுண்டாகும் பேரின்பத்தைத் தடுப்பவைகள்.

B. யோசிக்குமிடத்து மனோலயமடைந்து ஆனந்தமான முடி வைப்பெறும் நிலைமைக்குச் சாதனமான வாயுவைக்கிரமவழியில் அடக் கவேண்டிய முறையிற் பழகவேண்டிய யோகம் செய்பவன் ஸ்த்திரீ சம்போகத்தில் ஏற்படும் அதிக வாயுச்சலனத்தால் எப்படி யோகம் செய்யமுடியுமென்பது அறிவாளர்களுணர்க.

---

தங்கும்படிக் கிச்சைவைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது--மனவாக்கினிற் றட்டாமனின்றதெது "என்ருர் தாயுமான சுவாமிகள்."

M. வேதத்தில் ஆஸ்ரமதர்மம் கூறுமிடத்தில் பிர்மசாரிக்கு கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லாமல் குருகுல வாசத்திலேயே மனதிருந்தால் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு ஞானியான பிராமணனிடத்தில் தானுள் ளவரையில் நயிட்டிக பிர்மச்சாரியாய் வசிக்கலாம். அவன் சாசுவதமான மோக்ஷத்தையடைகிருன் என்று சொல்கிறது,

B. சங்கர விஜயம் சிவகுருவைராகப் பிரசங்கம் அதாவது ஆசிரியர் இல்லறம்பூண விதித்தபொழுது சிவகுரு சொல்வதாவது "தேவரீர், கட்டளை யிட்டபடி நடந்துகொள்வதற்கு அடியேன் உரியவனுகவிருப்பினும் இல்லறத் தானுகி மாதரைப்புணர்வதனுல் எனக்குத்தோன்றும் சில ஐயங்களையும் எனது விருப்பவகையினையும் விண்ணப்பிக்கக் கட்டளையிட்டால் விண்ணப்பம் செய்கிறேனென்று அனுமதி பெற்றுக்கொண்டு சொல்கிருர்.

தேவரீர் இல்லறத்தானுகக் கட்டளையிட்டது உண்மையேயாயினும் இம்மை மறுமை இரண்டினையுந் தரும் தேவரீர் திருவடிப்பணிவிடை செய்து கொண்டு ஓதிய வேதத்தினை மறவாது சிந்தித்து ஜீவனுள்ளவரையில் நைட் டிகப் பிரமச்சரியனுய் இருத்தல் வேண்டுமென்பதே எனது விருப்பு. இதனை விடுத்து துன்பமற்ற பிரமச்சரியத்தினைத் துறந்து பெரும் பாவமாகிய இல் லொழுக்கம் தலைமேற்கொள்வது தொடக்குங்கால் சிலருக்கது சுகம்போற் ருேன்றினும் முடிவில் பெரும் பீழையாகவே முடிகின்றது. அன்றியும் பிரமச் சரியன் கிரகத்த நிலைக்கி வரவேண்டுமென்பதே நியமுமல்லவாம். விவேகியேல்

வேதத்திற் கர்மகாண்டத்தின் விதியாயும் மனத்தின் இயற்கைமுறைக்கு ஒரு போக்காகவும் கொஞ்சங்கொஞ்சமாய் மனத்தின் வாசனையையகற்றும் வழியில் படிப்படியாய் விலக்கவும் மனநிலைமைக்குத்தக்கவாறு வேலையைக்கொடுத்துத் தானே தெரிந்து இச்சையிலிருந்து விலகும் வழிக்காகவும் (C) விதிக்கப்பட்டது. அதாவது ஜீவன்களுக்கு இயற்கையில் ஏற்படும் தவறுதல்களைப்பார்த்துப் பூராவும் விலக்கப்பட்ட இனங்களாச் செய்துவிட்டால் மிகத்தடைபட்டு பயம் நிவர்த்தியாய் மேற்போக்கான ஆத்ம சாந்தியை யடையாமல் மலைத்து நின்றுவிடுமென்பதைத் தெரிந்த ஆத்ம அனுபவமுள்ள பெரியோர்களால் ஒவ்வொரு விஷயத்திற்கும் விதிவிலக்கு ஏற்படுத்தப்பட்டு அதனின்றும் படிப்படியாய் வழிகாட்டி உண்மையைத் தெரிந்து கொள்ள வைத்தபடிக்கிரமம், உண்மையாக ஸ்திரீகளுடன்போகித்து வாழும் வாழ்க்கையை மோக்ஷ சாம்பிராச்சியமாகச் சொல்லப்படவில்லை. அப்படிச் சொல்வது நியாயமாயும் உண்மையாயுமிருக்கும்

---

துறக்கினும் துறக்கலாம். அங்ஙனமுமன்றி மணம் புணர்ந்தால் உலகவாழ்க்கையிலீடுபடும்பொழுது இம்மையிலடையும் துன்பம் எல்லையிலது. அங்ஙனமிருக்க மறுமையிலாவது முடிவையடையலாமோ எனின்மாதர் புணர்ச்சியுள்ளவனுக்கு யோகமார்க்கம் கைகூடுவதல்ல. யோகசாதனமில்லாதவருக்கு ஞானசித்தியும் கடவுளருளும் எளிதில் பெறப்படுவனவல்லவாம் எனக்கூறியுள்ளார். முற்றும் நைட்டிக பிரமச்சரியத்திலிருந்தே முக்தியடைபவன் மேலானவனென ஆஸ்விரம விலக்கணத்தில் கூறியிருக்கிறது.

C கள்ளு மூனும் நீ விரும்பினல் மகங்கள் செய்காமத்தில் மனதானல் கொள்ளும் பெண்டொடு கலவி செய் எனிலவன் குறை எல்லாம் தொடான் அன்றே. தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்வதே கருத்தாகும் விள்ளுமவ்விதி யென்னெனில் பூருவநியமமாம் விதியன்றே என கைவல்லியம் எனும் நூலில் சந்தேகந் தெளிதற்படலத்தில் சொல்லியிருப்பது காண்க. காமயிச்சை யேற்பட்டால் மட்டும் கல்யாணம் பண்ணவேண்டுவதொழிந்து கருமகாண்டத்தில் சித்தசுத்திக்குச் செய்து தீரவேண்டிய மற்ற அவசியமான கருமாவைப்போலேற்பட்டதல்ல. எப்படிஎனில் பிரமச் சரியத்திலிருந்தே மோக்ஷமடையலாமெனச் சொல்லும் ஆஸ்ரம தர்மவிதியினுல்! மற்றும் மதுவிரைச்சிகள் உண்ணென்ற சுருதி பின் மணந்து பாரெனல் பாராய் மிதுன விச்சையும் புத்திரோர்ப்பத்தியால் விரும்பென்ற விதிபாராய் இதையும் விட்

பக்ஷத்தில் மண் பெண் பொன் என்ற மூன்றையும் அவசியமாயடைய வேண்டுமென்று வேதத்தில் சொல்லப்படவேண்டும். ஆகையால் ஆண் பெண் சேர்க்கையில்லாதது மிக்கதூய்மையும் பந்தமில்லாததும் ஆனந்தமாயுள்ள சாந்தியைக் கொடுக்கக்கூடியதுமான யோக ஞானங்களுக்கு அடிப்படையான உயர்ந்த அப்பியாசம்! மண் பெண் பொன் என்னும் மூவாசையொழித்தல். அம்மூவாசையிலும் மிகவும் தலைமைபெற்று விளங்குவதும் காமமே. இன்னும் ஆழ்ந்த கருத்துடன் யோசித்தால் உலகமென்னும் விரிந்த விருக்ஷத்திற்கு அடிப்படையான வேரென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம். மிகுந்த உன்னதபதவியான சாந்தியை அடைந்தவர்களையும் அதற்குத் தகுதியானவர்களையும் இக் காமம் தொலைத்திருக்கிறது. பலவாற்றானும் சொல்வதில் பயனென்ன? சாஸ்திரசம்பந்தமாய் இவ்விஷயம் அவசியம் வேண்டுவதுதானென்று அறிவாளிகள் மனச்சாட்சியுடன் ஒப்பமாட்டார்கள்.

ஆகையால், பொதுவாக விவாகமென்பது உலகவிருத்திக்கும் ஆண் பெண்கள் தங்கள் மனத்தினால் தன்னையறியாமல் ஓர்காலத்தில் ஏற்பட்டு அடையும் சிற்றின்பத்திற்காகவும் இருப்பது தவிர கல்யாணம் சாஸ்திரத்தில் சித்தசுத்திக்கு அவசியமென்று சொல்வது உண்மையைச் சொல்லும் சாஸதிரத்திற்கு விரோதமாகும். ஆனதுபற்றி சாஸ்திரத்தில் இதற்குக் கட்டாயப்பொருத்தமில்லை. மனிதன் விருப்பமுள்ளதையநுபவித்தலில் கொஞ்சம் நாகரீகத்தையநுசரித்து அநுபவிக்கும் மற்றவிஷயங்கள்போல கல்யாணமென்பதும் ஒருவகை நாகரீகம்.

தன் தன் கொள்கையைப் பெரிதாக ருஜுப்படுத்தும் மற்ற நூல்களைப்போல விவாகவிஷபத்தை சொல்லிக்கொண்டு வருகிற ஸ்மார்த்த சம்பந்தமான வேதத்தின் கர்மகாண்டத்திலும் தான் சொல்லும் விஷயத்தை கிரமமாய் சொல்லி முடிக்கவேண்டிய முறையில் சொல்லப்பட்டுவருகிறது. அவற்றுள் யுக்திக்குப் பொருந்தாததாயும் முன்பின் முறண்பட்டதாயும் மத்திய காலத்தில் (ப்ரக்ஷிப்தம்) சேர்க்

---

டொழியதி நைட்டிக வன்னிக்கி இகழ்ச்சியற்றதும் பாராய் அதை யறிந்து கர்மங்கள் ஆசைகளொழிந்து ஆனந்தமடைவாயே என கைவல்யம் சந்தேகந் தெளிதல் புடலத்தில் கூறுதல் தெரிக.

கப்பட்டதாயும் அனுமானமா யூகித்துக்கொள்ளப்படுவதுமான ரஜஸ்வலை என்றதையும் நினைத்து அதற்காக கன்னிகா விவாகமென்று சொல்வது சமயோஜிதமான சாஸ்திர பயமே தவிர இகபரத்திற்குக் கெடுதியாய் ருதுமதி விவாகம் பாபபுண்ணியத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. ஆண் பெண் சேர்க்கையில் இரு மனதும் ஒரு மனதாய்ப் பேதமென்றும் அபேதமென்றும் சொல்லொண்ணததாய்த் தன்னையறியாமல் தானே மனதினிடைத் தோன்றி யநுபவிக்கும் சிற்றின்பத்திற்கேதுவாகப் பிராரப்தத்தால் (முன் ஜன்ம வாசனையால்) ஒருவரையொருவர் தூண்டப்பெற்ற மனதுடையவர்களாய்த் தங்களுக்குள் தாங்களே தெரிந்து அடைவது இயற்கையும் சந்தோஷமுமாகும். அதை யநுசரித்தே பழைய இதிகாச புராணங்களிலும் பலவித விவாகங்களையும் சொல்லப்பட்டிருக்கிறது.

தானங் கொடுத்தலில் விசேஷ புண்ணியமென நினைத்துச் செய்யப்படும் அலங்கார கன்னிகாதானமெனச் சொல்லும் கன்னிகா விவாகத்திற்குத் தகுந்தபாத்திரமான ஒரு பிரமச்சாரியாவதுண்டா? காணமுடியுமா என்பதை நியாயத்தாலுணர்ந்து பாத்திரமறிந்து பிச்சையிடு என்ற மூதுரையை ஆராய்ந்து அநுசரித்துப் பலனைக் கொடுக்கும் காரியத்தை யறிவாளிகள் செய்யவேண்டுமல்லது பிடிவாதத்தாலும் கக்ஷிச்சார்பாலும் பிரயோஜனமற்ற காரியத்தைச் செய்தல் வீண் நஷ்ட்டமும் ஆபத்தும் சிறு வயதாய் ஒன்றுந்தெரியாத மைனர்களாயுள்ள ஆண் பெண்களுக்குத் தீமையையுண்டுபண்ணியதுமாகும்.

இந்து மதத்தில் முற்காலத்தில் (ஆரம்பத்தில்) சமூக மதசம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டிருந்த கொள்கைகள் மாறுதலடைந்து நடந்துவருதல்போல இந்தக்கன்னிகாவிவாகமும் ருதுமதி விவாகத்திலிருந்து F. ஒரு காலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் அச்சமயத்திற்காகத் தன்னலம்

---

F இந்தியாவில் மகமதிய அரசாங்க காலத்திலிருந்த் ஓர் மகமதிய அரசன் ருதுவாகிக் கல்யாணமில்லாதிருக்கும் பால்யப்பெண்களைப் போகத்தின் பொருட்டுப் பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டு போகும் பழக்கம் ஏற்பட்டபோது பாதுகாக்கக் கஷ்டமுண்டான நிமித்தம் தனித்தனி ஒவ்வொரு பெண்களையும் ஒவ்வொரு ஆடவரிடம் சிறுவயதிலேயே ஒப்பிவைக்கப்பட்டது அக்காலத்திலிருந்தே அவ்வழக்கம் தடித்து நின்றுவிட்டது அது விஷயமாய் வரம்பாய் நடந்துவருவதற்காக சாஸ்திரமும் எழுதிவைக்கப்பட்டது.

தன் பாதுகாப்பின்பொருட்டு சொற்ப ஜனத்தொகையுள்ள ஒரு வகுப்பாரால் சாஸ்திரத்தின் பெயரால் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து அப்பால் அதைத் திருத்திக்கொள்ளும் உயர்ந்த உணர்ச்சியுள்ளவர்களில்லாமையால் அதுவே நிலைத்துநின்றுவிட்டது. அதற்கடையாளமாக முற்காலத்திலும் இப்பொழுதும் ○. வேதவிதியையநுசரித்து நடந்துவரும் க்ஷத்திரிய வைசியரென்ற பிராமணரல்லாதாரிற் சிலர் சமயம்போல் அந்தக்கன்னிகா விவாக அநுஷ்டானத்தையும் ருதுமதி விவாக அநுஷ்ட்டானத்தையும் ஆகம அநுஷ்ட்டானமுடைய இந்துக்களிற் பெரும்பாலும் ருதுமதி விவாகமும் மிகச்சொற்பமாய்ச் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கன்னிகாவிவாகமும் தொன்றுதொட்டுநடத்திக் கொண்டு வருவதால் நிச்சயமாய்க் கன்னிகாவிவாகம்தான் சாஸ்திர சம்மதமெனச் சொல்ல முடியாத சாக்ஷியாகும்.

ஆகையால் உலகப்பொருத்தமானதும் அளவுகடந்த ஜனத்தொகையின் அநுஷ்ட்டானமும் அபிப்பிராயமும் இயற்கையில் அதிக மனப்பான்மையும் ருதுமதி விவாகத்திலேயமைக்கப்பெற்றிருக்கிறது. தெய்வ சம்மதமும் அதையொத்திருந்தபடி ராஜசம்மதமும் ஏற்பட்டதுவே முன்னம்ருதுமதி விவாகமுயுண்மையாயுள்ளதென்பதைப் புலப்படுத்துகிறது.

மேற்கண்ட காரணங்களால் பொருத்தமல்லாத கன்னிகா விவாகத்தை சிலாகித்தும் ருதுமதி விவாகத்தைத் தாழ்த்தியும் தடுப்பது பார்ப்பனரல்லாதார் கொள்கைபோலத் தங்கள் கொள்கை யில்லையென்பதில் உயர்வுகாட்டலும் சிறுவயதுள்ள பெண்களும் ஆண்களும் ஆரம்பத்திலிருந்தே தங்களுக்குக் கீழ்ப்படிந்துவர வேண்டுமென்ற

---

○ வேதத்தில் பிரம்க்ஷத்திரிய வைசிய என்பவர்களுக்கு எல்லா அநுஷ்டானங்களும் சமமாய் விதித்திருக்கின்றன. ஆனால் வேதம் பிறருக்குச் சொல்லி வைப்பதும்; யாகம் செய்துவைப்பதும் தானம் பிறருக்குக் கொடாமல் தானம் வாங்குதலுமாகச் சொல்லுகிற சிற்சில விதிகள் தவிர மற்றெல்லா அநுஷ்டானமும்; மந்திரங்களும் பிராமணனைப்போலவே க்ஷத்திரியவைசியர்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கிறது அவ்விதிகளில் கல்யாணமும் பிறவும் சம அநுஷ்டானங்களாம்.

தற்பெருண்மைவாய்ந்த தன்னலமும் ருதுவான பெண் இஷ்டம்போல் நடக்கத்தலைப்பட்டால் ஜாதிக்கட்டுப்பாடு கெட்டு கலப்பு விவாகமேற் பட்டுப் பிறர் தம்மை மதியாத கௌரவக்குறை வேற்படுமென்ற கொள்கையே.

ருதுமதி விவாகத்திலேற்படும் கெடுதியாய்ச் சொல்லப்படுகிற பிரத்தியக்ஷமான சங்கதியென்னவென்றால் ருதுவாயிருக்கும் பெண்ணிற்குக் கல்யாணம் நடக்க நாளானால் விபசாரம் நடந்துவிடுமென்பதொன்றைக் குறிப்பிடலாம். அவ்விபசாரமும் நூற்றுக்கு ஒன்றிரண்டுதான் அப்படியிருக்கும். அதுவும் பெற்றோர்களும் போசகர்களுமான உடையவர்களின் பாதுகாப்புக் குற்றத்தில் ஏற்படுமே தவிர மற்றில்லை. ஆனால் கன்னிகா விவாகத்தில் அவசரப்பட்டு நடத்தும் அவ்வளவு சிரமமும் மனக்கவலையுமில்லாமல் ருதுவான பிறகு மிக நாட்போக்காமலும் அவசரப்படாமலும் சௌரியமாயும் ஆண் பெண்ணிருவரும் தெரிந்து சந்தோஷமாய் நடக்கும் ருதுமதி விவாகத்தில் அந்த விபசாரமும் நடக்காது.

மற்றும் ருதுவானாலும் தோஷமில்லையென்ற எண்ணம் மனதிற் பட்டால் சஞ்சலமில்லாமல் ருதுவான ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளே கல்யாணம் நடத்தினால் இணக்கவயதிற்குப் பொருத்தமாய் நிற்கும். ருதுவான பெண்களிடத்தில் யோசிக்கப்படும் விபசாரமும் கன்னிகா விவாகம் நடந்த பெண்கள் ருதுவான பிறகு சாந்தி முகூர்த்தம் நடத்தத் தாமதித்தால் நிர்ப்பயமாய் விபசாரம் நடத்தத் துணியக்கூடாதா. ஆகையால் விபசாரமென்பது நல்லொழுக்கமில்லாத ஸ்திரீகளிடத்து நடைபெறுவதால் விபசாரத்தை வைத்துக் கன்னிகா விவாகமென்பது பொருத்தமாகாது. முன் ஜாக்கிரதையாய் நடக்கும் கன்னிகா விவாகத்தில் பெற்றோர்களுடைய கடமை மிகச் சொற்ப நாளிற் சிரமமில்லாமல் விலக்கப்பட்டுச் சீக்கிரம் புருஷன் வீட்டிற்கனுப்புவதையே யெதிர்பார்க்கும் சுய நன்மையையுடைய பெற்றோர்களைவிட்டுப் புருஷன் வீட்டிற்குப்போனவுடன் குடும்பக் காரியத்தில் ஈடுபட்டுப்பழகவும் சிறு வயதிற் பெறும் பலமில்லாததும் நோயினாற் கஷ்டப்படுவதுமான குழந்தைகளுடன் கவலையிற் கட்டுப் பட்டு எவ்வித சந்தோஷமும் உத்சாகமும் சௌரியமும் நல்ல படிப்

பும் நல்ல பயிற்சியும் தேகதிடமும் ஆத்ம லாபமுமடைய முடியாமற் கெட்டுப்போய் மிருகத்தைக்காட்டிலும் கேவலமான நிலையில் நடத்தப்படுகிறார்கள் அந்தோ! பரிதாபம் இன்னும் எத்தனையோ சங்கடங்களிருக்கின்றன. சிறு வயதிற் புருஷனை யிழந்து எத்தனையோ விவசாரமும் ஜீவனக்கஷ்டம் முதலிய பல துக்கத்திலாழ்கின்றார்கள். (விரிக்கிற் பெருகும்.)

ருதுமதி விவாகத்திலோ தேகதிடமும் பயிற்சிக்குத்தக்கவாறு உயர்வான கல்வியும் அதையநுசரித்துச் சிறுவயதிலிருந்தே நல்லொழுக்கமும் குடும்பத்தில் ஆணும் பெண்ணும், சிஷனும் குருவும், ராஜாவும் மந்திரியும், இரண்டற்ற சிநேகத்தன்மை வாய்ந்த நண்பர்களும் போல ஆயுஸ்பரியந்தம் நல்லபொழுதாய்த் திடகாத்திரமும் ரோகமில்லாததும் தங்களநுபவத்தையநுசரிக்கும் புத்திரப்பேறும் அடைவதில் உலக முன்னேற்றமும் பிரசாதகமுமான பலனையுமுண்டாக்கும். அதைக் கெடுத்துக் கன்னிகா விவாகத்தைச் செய்பத்துணிவது அறிவீனமும்சுயநன்மையும் விவரம் தெரியாத பெண் ஆண் குழந்தைகளைக் கஷ்டத்தில் விடும் முறையுமாகும்.

இவ்விஷபத்தில் ராஜாங்கம் தலையிடுவது அரசாங்கக் கடமையாகும். எப்படியெனில் கன்னிகைப்பெண் கல்யாணமான சொற்ப நாளில் புருஷனையிழந்தால் யாதொரு சந்ததியுமில்லாமல் விவசாரத்திற்றலைப்பட்டு அலங்கோலமடைகிறார்கள். ருதுமதிப் பெண்களோ மிகச் சொற்ப நாளாகிலும் புருஷனைச்சேர்ந்து அநுபவித்தும் சில சமயத்தில் குழந்தையும் பெற்றுவிடுகிறார்கள். இவ்விரண்டு விஷபத்திலும் கன்னிகா விவாகப்பெண்களிற் பெரும்பாலும் விபசாரத்தாலுண்டாகும் பல தீமைகளில் நடைபெறும் விஷயங்கள் மூலம் கோர்ட்டு நடபடிக்கையும் ஜன உற்பத்திக்குறைவும் கன்னிகைகள் ருதுமதியானபிறகு கல்யாணம் நடந்தால் ஜன உற்பத்தியுண்டாவதில் தங்களுக்குள்ள ஜனப்பெருக்கும் மற்றும் பலவித லாபமும் கிடைப்பதால் கன்னிகாவிவாகத்தடையில் ராஜாங்கத்தார் கவனிக்கத்தகுந்ததேயொழிய கடவுள் விஷயமான கட்டுப்பாட்டில் வற்புறுத்தித் தன் மதக்கொள்கையையநுசரிக்கச் செய்யும் மதக் கொள்கையிற்றலையிடும் காரியமல்ல.

பிராமணரல்லாதார்களிற் பெருந்தன்மைவாய்ந்த பெருங்கூட்டத்தார்கள் இவ்விஷயத்தில் பிராமணர்கள் இப்படியும் நினைப்பார்களாவென்றால் தங்களுடைய தற்காலத்திய சௌரியத்திற்காகவும் சொற்ப லாபத்திற்காகவும் எப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தையும் கெடுத்துவிடத்துணிவார்களென்பதை இதற்குமுன் எழுதியிருப்பவைகளில் சமுகம் மதம் ஜன ஆசாரம் என்றவைகளில் அவர்கள் நடந்துகொண்டிருக்கும் பழக்க வழக்கங்களே சாக்ஷியாயிருக்கின்றன. இதை வைத்தே சுவாமி விவேகானந்தர் P. அமெரிக்கா யாத்திரை காலத்தில் ஜப்பானிலிருந்து வரைந்த கடிதத்தில் தெளிவாய் விளக்கும் அவர் அபிப்பிராயமும் போதிய சான்றாகும். பொதுவாய் நல்ல படிப்பாளிகளும் உண்மையான ஆத்மார்த்தமாய்க் கடவுள் வழிபாடு வைத்துக்கொண்டிருப்பவர்களும் பாப புண்ணியத்தால் நரகம் சொர்க்கம் வீடு உண்டென்று பயந்து நடக்கிற மிகக்குறைந்த எண்ணிக்கையுடைய உண்மையான பிராமணரைத் தவிர மிக அதிகக்கூட்டமான பிராமண வர்க்கத்தினர்கள் தாங்கள் உயர்வு குறையாமலும் தங்களைப் பிறவகுப்பினர் பூஜிதையாக நடத்திவரவேண்டுமென்றும் தாங்கள் எப்படி நடந்துகொண்டாலும் இவ்வுலகத்தில் உத்தியோகத்திலிருக்கிற தங்களினத்தின் பெருங்கூட்டத்தாரும் விஷயந்தெரியாத பார்ப்பனரல்லாத உத்தியோகமில்லாதவர்களும் உத்தியோகமுள்ளவர்களும் தாங்கள் செய்யும் அக்கிரமத்தைக் காட்டிக்கொடுக்காமல் தழுவி வருவதுபோல இந்தத் தேகம் விட்ட மேலும் தங்கள் அக்கிரமத்திற்குச் சாஸ்திரத்திற் சொல்லுகிறபடி தண்டிப்பவர்கள் மனுஸ்மிருதி சொல்லுவதுபோல பிராமணர்களுக்குத் தண்டனை செய்யமாட்டார்கள் என்றும் சமயம் போல்த் தப்பித்துக்கொள்ளலாமென்ற தைரியத்தால் உலகத்தில் தமக்குப் பாபமேது புண்ணியமேது என்று தாம் நினைத்துக்கொண்டும் பாப புண்ணியமென்று நினைப்பவர்களுக்கு, அந்த விஷயத்தை அளுத்தமாய் எடுத்துச்சொல்லிப் பயமுறுத்தியதன் மூலம் சௌரியமும் பணச்சம்பாத்தியமுமான ஆஸ்திகத் தன்மையுமாயிருப்பதை வாசகர்களே தெரிந்துகொள்ளலாம்.

---

P ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் விரிவான திவ்ய சரித்திரம் 311 வது பக்கம் அமெரிக்கா யாத்திரை:— ஜப்பானிலிருந்து வரைந்த கடிதத்தின் சமாச்சாரம்:— யாத்திராநுபவத்தைக் குறிப்பிட்டு வரையுங்கால் குலகுருக்

பலவாற்ருல் சொல்வதிலும் அபிப்பிராயம் ஒன்றுதானே. இந்துக்களினமென்று சொல்லப்படுகிற தங்களினத்தைத் தீவிர மற்ற பெருங்கூட்டமான ஜனங்களும் இந்துக்கள் கொள்கையை அருவருக்கும் மற்றமதஸ்தர்களும் சேர்க்கை வசத்தால் தாங்கள் மதக்கொள்கையை மறந்து உலகத்திற் பொதுவான கடவுளாலே முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டது பிராமண ஜாதியாய்த்தானிருக்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டு பிராமண வீட்டின் ஆண் பெண் உரைக்குழந்தைகளையும் உயர்ந்த வார்த்தையால் அழைக்கப்பட்டும் உயர்த்தப்பட்டும் வருவதால் தங்கள் மனுஷ இயற்கையிற் செய்யப்படுகிற எந்தத் தப்பான கொள்கைகளையும் சிறப்பித்துக்காட்டிக்கொண்டு உயர்வையும் தன்னலத்தையும் உண்டுபண்ணிக்கொண்டு வருவதான கொள்கைகளில் இந்தக் கன்னிகா விவாகமுமொன்ருகும்.

ஆகையால் இதுவரை சொல்லிக்கொண்டுவந்த விவரப்படி சாஸ்திரசம்மதத்திலும் அநுப்வத்திலும் யுக்தியிலும் கன்னிகை விவாகம் தீமையைக் கொடுப்பதென்றும் எவ்வழியிலும் சிறந்ததாய் சாஸ்திரத்தை யநுசரித்ததாய்ச் சொல்லப்பட்டு நிச்சயிக்கப்படுகிற ருதுமதி விவாகமே சிறந்த நன்மையைக் கொடுப்பதெனச் சந்தேகமறத் தெரிந்து அந்த ருதுமதி விவாகத்தையே சிறப்பாய் நடத்தும் வழியில் அறிவாளிகள் முயற்சிப்பார்களாக.

---

---

கொடுமை இந்தியாவைப் படுகுழியிலமுக்தி விட்டதென்றும் மதத்தைப் பெருக்குவதாக மதம் பிடித்தலையும் சிலவேதிய குழாத்தினரின் தீமையும் ஜாதிக்கொடுமையும் ஜனசார அசம்பாவிதங்களுமே இந்தியாவின் துயர நிலைக்கு வேர்களாயினவென்றும் வரைந்திருந்தார். அக்கடிதத்திலே அவர் பிராமணத்துவத்தை இந்தியாவின் ஆஸ்தியென்றும் போற்றியிருந்தார் ஆனல் அவ்வேதியர்கள் வழிமாறி மதத்தின் பேரால் புரியும் கொடுங்கோன்மையே நாட்டின் பரிதாப நிலைக்கு அடிகோலியதென்று வற்புறுத்திப் பின்னும் இந்தியாவிலுள்ள இளைஞர்களில் தியாகபுத்தியுள்ள உறுதியும் அறிவும் வீரமுமுள்ள ஆயிரம் பேர்களாவது நாட்டையுயர்த்த முன்வர முடியுமா வென்று ஒரு வினவும் இட்டிருந்தார்.

## 11. விதவா விவாகம்.

முற்சொன்ன கன்னிகா விவாகத்திற்கு சொல்லப்பட்டிருக்கிறபடி கல்யாணமென்பது ஆண் பெண் சந்தோஷத்திற்கும் உலக விருத்திக்கும் என்ற நியாயத்தை யநுசரித்து நடந்து வருவதில் புருஷனிழந்த பெண்கள் தாங்கள் தங்கள் நாயகனிடம் மிகப் பிரியமாய் முதன் முதலில் இருவருக்கும் ஏற்பட்ட முழு அன்புடன் காதலிக்கப்பட்டு வேற்றுமையில்லாமலும் ரகசியமாயும் தனக்குத் தானே யநுபவிக்கும் காம இன்பம் எதேச்சையா யநுபவித்து வந்ததைப்பிரிவால் நினைந்து இனிமேலும் தன் நாயகனிடம் அநுபவிக்க முடியாததால் இதற்கு முன் நடந்துகொண்ட காமலீலைகளை யடிக்கடி நினைந்து பெருமூச்சுவிட்டு உயிர்க்குயிரான காதலனையிழந்து தன்னுயிர் தனித்திருக்கச் சகியாத கஷ்டத்துடன் உணவு சுருக்குதல் முதலியவிரதாதிகளால் தேகத்தைமெலியச்செய்தும் மனது ஒரேநோக்காய் மற்றொன்றிற்செல்லாமல் நாளடைவில் அவ்வருத்தம்கொஞ்சம்கொஞ்சமாய்த்தேய்ந்து அந்தவைராக்கியத்தில் கடவுளை வழிபடும் நற்செய்கையையுடைய உத்தமிகளிடத்தில் எந்தவிதமான சமுகச் சீர்திருத்தலும்அதைப்பற்றிய ஆராய்ச்சியும்கூடாவாம். முற்சொன்னபடி ஆத்துமதத்துவத்தையடைவதில் மக்களுக்குக் கல்யாணம் தடையென்றதை யநுசரித்து அவர்கள் கொண்ட கொள்கை நன்மைபயக்கும். அப்படியல்லாமல் அதையும் கட்டாயத்தில் திருத்தவேண்டுமென்றால் சன்மார்க்க விரோதிகளாய்த் தாங்களெடுத்த அக்காரியம் நிறைவேறாமற் கெட்டுவிடும். மற்றும் தம் தம் நிலைமைக்குத்தக்கபடி முடிவுபெறக் கூடிய காரியங்களில் ஆராய்ச்சி செய்து முயற்சித்து முடிக்கவேண்டியதை விட்டு நமக்கு எட்டாத விஷயமும் உண்மை நிச்சயத்திற் செல்லும் மார்க்கத்தைத் கொடுக்கக்கூடியவைகளுமாயிருக்கும் நற்சாதனங்களைக்கெடுக்கக்கூடிய எந்தசீர்திருத்தமும் செய்யமுயற்சித்தல் மிகையாம். நிற்க புருஷனை இழந்த ஸ்திரீகளிற் பெரும்பான்மையோர் காமத்தில்விருப்பமுடையவர்களாயிருந்தும் தங்கள் ஜாதி வழக்கத்திற் கட்டுப்பட்டுத் தன்விபசாரத்தைப் பிறர்தெரிந்தால்கட்டுப்பாடில்லாதவளென்று தன்னை யிழிவாகச் சொல்லிவிடுவார்களே யென்ற பயத்தை வைத்துக்கொண்டு உள்ளுக்குள் கஷ்டப்பட்டும் அடக்கமுடியாத

காமத்தினால் இஷ்டப்பட்ட நாயகனிடமோ கேவலமாய் நினைக்கப் படுகிறவனிடத்திலோ பிறர் தெரியாதவிதமாய்க் களவாக (திருட்டுத் தனமாய்) ச்சம்போகம்பண்ணிக் கர்ப்பம் தரித்தும் அவை தெரியாமற் செய்யும் முறையில் எத்தனையோ கொலை முதலிய கொடுமையான செய்கைகளும் பல கஷ்டங்களும் நேர்ந்து இகபர சாதகமிரண்டு மில்லாமல் வீணாகக் கெடுவதைக்காட்டிலும் கபடமில்லாமல் மறைவற் றதும் மனதொத்ததுமான நேர் வழியில் யாவரும் ஒரே அபிப்பிரா யத்துடன் ஆண்களைப்போலப் பெண்களுக்கும் உணவு முதலியவற்றில் சமமான அநுபவம் கடவுளாலாக்கப்பட்டமையை யுணர்ந்து இன்றி யமையாததும் சுலபத்தில் விலக்கமுடியாததுமான எல்லா ஜீவருசி களின் அநுபவத்தில் முக்கியமானதும் தள்ளமுடியாததுமான இக் காம அநுபவத்தில் புருஷனை இழந்து காயவிருப்பமுற்ற ஸ்திரிக ளிடத்தில் அநுதாபங்காட்டி கஷ்ட சுகம் எல்லா ஜீவர்களுக்கும் சமமானதென்று பாவிக்கும் தயையுள்ள பெருங்குணத்தினால் எல்லா ரும் இவ்விஷயத்தில் முயற்சித்துப் பெண்சாதி யிழந்த ஆண்பிள்ளைகள் இஷ்டப்பட்ட பெண்பிள்ளையைக் கல்யாணம் செய்துகொள்வதில் எவ்வித பந்தகமும் பயமும் லஜ்ஜையுமில்லாமல் நடந்துவரும் வழக் கம்போல் புருஷனை யிழந்த பெண்களும் ஒரு ஆண்பிள்ளையை யடைந்து நிர்ப்பயமாய்ச் சந்தோஷமநுபவிக்கச் செய்யும் பரம உப காரத்தையும் சம தர்மத்தையும் நிலைநாட்டும் மறுவிவாகம்(விதவா விவாகம்) நடக்கும் முயற்சி செய்வது எத்தனையோ கோடிக்கணக்கான ஸ்திரீகளுக்கு சந்தோஷத்தையும் விடுதலையையும் உண்டுபண்ணிய பெரும் புண்ணியமாகும்.

சித்தசுத்தியை யுண்டாக்காத கபடமான கட்டுப்பாடுள்ளகர்மாக் களெல்லாம் (அநுஷ்டானங்களெல்லாம்) உண்மைக்கு விரோதமான வைகள். அறிவாளிகள் புண்ணிற்குத்தகுந்த மருந்துவைப்பார்களே தவிர முரட்டுத்தன்மான மண் முதலியவைகளை யுபயோகப்படுத்த மாட்டார்கள்.

ஆகலின் இவ்விஷயத்தில் ஆராய்ச்சியால் தென்படுகிறதென்ன வெனில் நன்மைபோன்ற நடபடிக்கையை வெளிக்குக்காட்டி நடத் தையில் உண்மையைவிட்டு விலகும் மனச்சாக்ஷி யிழந்த கொள்கை

யுடன் சஞ்சரிப்பதைக் காட்டிலும் மனஸ்கரித்த (மனதொத்த) நடபடிக்கையில் வரம்பான கட்டுப்பாட்டுடன் நடந்துவருவது மேலான நன்மையும் மனத்தைப் படிப்படியாய் நேர்வழிப்படுத்தும் முறையுமாகும்.

ஆனால் இந்தப்பழக்கம் மேற்பட்டால் திருந்தும் மனதுடைய விதவைகளும் இவ்விஷயத்தில் தாராளமாய் நடக்கத் தலைப்படுவார்களே யெனில் இஷ்டமில்லாதவர்களைக் கட்டாயப்படுத்தாமையால் நல்ல நிலைமையையுடையவர்கள் முதலிற் சொல்லப்படுகிற பிரகாரம் அநுஷ்டிப்பார்களே தவிர இவ்வழியிற் பிரவேசிக்கமாட்டார்கள்.

இருந்த வழக்கம் அப்படியேயிருக்கட்டுமென்று நினைத்தல் ஆணுக்கொருவிதம் பெண்ணுக்கொருவிதமாய் நினைக்கப்படும் பாரபக்ஷமான அநீதியிற் கட்டுப்பட்டு பாபத்திற்காளாவதும் தவிர சமூகத்திருத்தலில முக்கியமானவற்றைக் கவனிக்காத சோம்பேறித்தனமும் தேசமுன்னேற்றத்தின் குறையுமாகும்.

## 12. தீண்டாமை.

தீண்டாமையென்பது ஆத்துமதத்துவ உணர்வின் அப்பியாசத்தின் சாதனங்களில் மனது சுத்தமாகப் பழகுவதற்கு ஒரு விதமான தூர்ச்சாவகாச நிவர்த்திக்கும் நல்லெ ழுக்கம ஆசாரம் தேகசுத்தம் உடைசுத்தம் முதலியன இல்லாததால் தீண்டாதாரென்று விலக்கப்பட்ட மனிதர்கள் பிறர் தவகளைபருவருக்கப்பட்ட நிமித்தம் ஆராய்ச்சியின்பேரில் தெரிந்து தாங்களும் ஒழுக்கம் ஆசாரம் தேகசுத்தம் முதலியன அடைவதில் விருப்பமுண்டாவதற்கும் அதன்மூலம் அவர்கள் ஆத்துமதத்துவத்தையடைவதற்காகவும் ஹேதுவாக இந்துக்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கையாகும்.

அதுவும் தீண்டாதார் என்று சொல்லப்படுகிறவர்களால் மனதால் நினைத்துச் செய்யப்பட்டு வருகிற புலால் உணவில் ஏற்படும் கொலையே O. அதற்கு முக்கிய காரணம். அப்பால் தேகசுத்தமின்மை உடைசுத்தமின்மையும் தீண்டாமைக்கு காரணமாகும்.

O. மற்றவர்களிற் பெரும்பாலார் ஒரு நிமித்தத்தை வைத்து மாமிசம் தின்னும் பொருட்டு ஜீவவதை செய்வதைப் பரிசுத்தமென்கிறார்கள்.

ஓர் சத்கர்மம் பூஜை ஆலயவழிபாடு முதலியவைகளைச் செய்யப் புகும்போது தன்னுடைய தேக பரிசுத்தமாய் அதாவது அதற்கு முன் மலஜலபாதை கழித்ததிலிருந்தும் பூரண சுத்தமின்மை அபான வாயுவியர்வை சம்பந்தத்தால் தேக நாத்தம் மனத்தினால் பலவாறு நினைக்கப்பட்டு வந்திருப்பதை B ஒரு சமயம் வைத்து மாற்றிக் கொள்வது இறந்த இடத்திலும் பிறந்த இடத்திலும் உண்டாகும் துர்நாற்றம் இவைகள் நிவர்த்திக்கும் தேகசௌக்கிய முதலியவற்றைக் குறித்தும் ஸ்நானம்பண்ணியவர்கள்: ஸ்நானம்பண்ணாமலிருக்கும் மேற்கண்ட சுத்தமில்லாதவர்களைத் தொட்டால் (பரிசத்தால்) அவர்களிடமிருக்கும் அசுத்தம் பரவுமென்பதும் ஸ்திரீகளிடம் மாதவிடாய் பிரஸவ முதலிய காலங்களில் தொடலாகாதென்றதும் அசுத்தத்தாலும் துர்வாசனையாலும் மேற்கண்டவைகள்போலத் தீண்டாமையென்று சொல்லத்தகுந்தவைகளாகும்.

இவைகளெல்லாம் மேற்சொன்ன சந்தர்ப்பங்களில் மட்டும் தேகசுத்தம் மனோசுத்தத்திற்காக ஏற்பட்டது தவிர சமமான சுத்த அசுத்த நிலைமையிலிருப்பவர்கள் தன்னிலைமையுடைய மனிதவர்க்கத்தில் ஒருவரை யொருவர் தொடுவதினால் மனிதன்தேகத்தில் வடுவாவது வேறெவ்விதமான மாறுதலாவது உண்டாகிக் கெடுதல் விளைவிப்பதில்லை. ஓர் தேகத்துடன் சமமான மற்றொரு தேகம் ஒன்றையொன்று இனந்தெரியாது (○பரிசித்ததினால்) தொடப்பட்டதினால் யாதொரு கெடுதலுமுண்டாகக் காரணமில்லாதிருக்கும் பொழுது உருவமில்லாததை மனதில் நினைத்துச் சிந்திக்கும்படியாயுள்ள நிலை

---

B உதயத்தில் ஸ்நானம்பண்ணியவுடன் தேகசௌக்கியமும் மனது பரிசுத்தமடைவதும் பிரத்தியக்ஷ அநுபவத்திலும் மற்றும் வயித்தியசாஸ்திரம் யோகசாஸ்திரம் முதலியவற்றிலுமுள்ளன. =ஸ்திரீசம்போகம், தொத்து வியாதியுள்ளவர்கள் முதலிய ஸ்பரிசத்தில் கெடுதியுண்டாகுமென்பது.

○ அயலூரில் உள்ள இனந்தெரியாத பார்ப்பனரும் சண்டாளரும் பிரயாணத்திலோ மற்றெவ்விதத்திலோ நெருங்கி ஒன்றோடொன்று உருசினாலும் ஜலபானத்தில் ஒன்றாயிருக்க நேர்ந்தாலும் அச்சம்பந்தத்தால் யாதொரு கெடுதியுமுண்டாகவில்லை.

மையையுடைய கடவுள் ஞாபகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோவில் முதலிய இடத்தில் எப்படித் தீண்டாமைக் கெடுதி யேற்படும். இப்படித்தீண்டாமை யென்று சொல்லிக்கொள்வது முற்சொன்ன பிரகாகாரம் ஒரு சாதனமாயும் ஒழுக்கமில்லாதவர்களைத் திருத்தும் கட்டுப்பாட்டிற்கும் அநுஷ்டிக்கப்பட்டுவந்தது. இப்பொழுது தன்னிடம் தீண்டாமைக்குரிய (நிலைமை) அடையாளங்களிருந்தாலும் பழைய பழக்கத்தின் பொறாமையால் குரூர புத்தியும் அகங்காரமுமாக ஏற்பட்டுவிட்டது. மேற்கண்ட தீண்டாமையென்ற அநுஷ்டானம் ஆத்மாநுபவ அப்பியாசத்திற்குக் கெடுதியையுண்டுபண்ணும் துர்ச்சாவகாச நீக்கத்திலும் சமதிருஷ்டி பழகவேண்டிய முறையில் பிறரைக் குரோதிக்காமல் தான் ஒதுங்கிக்கொண்டு போவது சிற்சில சமயத்தில் உபயோகப்பட்டுவந்தது. அதுவும் தப்பென்று 0 ஸ்மார்த்த மத அத்வைத குருவான ஆதிசங்கராச்சாரியரையும் கண்டித்துத் 11 திருத்தியவரையும் வாதத்தில் ஒப்புக்கொள்ளும்படி செய்தும் மற்றும் தீண்டாமை வைராக்கியத்தால் மோக்ஷம் கிடைப்பதாய் நினைத்திருந்த

---

0 ஸ்மார்த்தமதமென்பது ஸ்மிருதியையநுசரித்து நடத்தல் (11) ஒரு காலத்தில் ஆதிசங்கரர் காசிக்குப் போயிருந்தபொழுது கங்கைக்குச்சென்று ஸ்நானம்பண்ணிவிட்டு வீதிவழியாய் வந்துகொண்டிருக்கையில் ஈஸ்வரன் சங்கரருடைய மனோநிலையைச் சோதிக்கவெண்ணித் தீண்டாதாரென்று சொல்லப்படுகிற சண்டாளவடிவங்கொண்டு சங்கராசாரியர்முன்றோன்றி வரவும் அதுகண்டுபொறாத சங்கரர் போ போ வென்று உரத்த சப்தத்துடன் தூரவிலகச்சொல்லவும் சண்டாளவடிவம்கொண்ட கடவுள் யாரை எந்தஹேதுவால் எங்குபோகச்சொல்கின்றனை எதன்பொருட்டு நீ உண்மையான அத்துவிதக் கருத்தினை யுணர்ந்தவனேயாயின் இவ்வேற்றுமை மயக்கம் நின்னை விடாது நிற்குமோ ஞானியென்று சந்நியாச வேடம்புனைந்து பேதவாசனையையே விருத்திசெய்து உலகத்தினை வஞ்சித்தலாகாது என்றனர். அப்பொழுது மனீஷாபஞ்சகம் என்னும் நான்முகமாக தீண்டாமை யென்பது உண்மையிலில்லையென்பதை யெடுத்துச்சொல்லிப் பக்குவமுள்ள ஜீவனில் வித்தியாசம் பாராட்டுகிறவன் புத்தியில்லாதவனென்று சொல்லியும் அப்படி பக்குவமுள்ளவன் தனக்குக் குருவென்றும் நினைப்பதாய்ச் சொன்னவளவில் சுவாமி தரிசனம்கொடுத்தார் என்றும் சங்காவிஜயம் ஆறும் அத்தியாயத்திற் சொல்லுகிறது.

அறிவிலிகளுக்கு கடவுள் பிரத்தியக்ஷமாகாமலும் ஏற்பட்டு 11 இத்தீண்டாமையென்னும் கொடுமையைக்கைக்கொண்டதால் மிக மகத்தான காரியங்கள் அடையாமலும் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

உண்மையாய் ஆத்மசாந்தி அடையவேண்டுமென்ற விருப்பத்தோடு கூடிய பக்குவிகள் தாங்கள் சாந்த ஒழுக்கத்திற்கு விரோதமாய் மற்ற ஜீவன்களை வித்தியாசமாய் நினைத்துக் குரோத புத்தியால் தீண்டாமையென்பதைக் கனவிலும் கருதார்கள்.

உலகத்திலே நாட்டமுடைய அஞ்ஞானிகள் முற்சொன்ன யோக்கிதை தங்களிடமில்லாதிருந்தும் தங்களுடைய கௌரவத்திற்கும் உயர்விற்கும் சுய நலத்திற்கும் உபயோகப்படுத்தி வருவதற்கு இடங்கொடுத்துவருகிறவர்களாயுள்ள தீண்டாதார் என்று பிறரால் சொல்லப்படுகிறவர்கள் பழக்கத்தால் ஒப்புக்கொள்வதாலும் தீண்டாமைப் பேய்பற்றி நிற்கிறது.

---

அச்சங்கரர் யோக்கிதையில் எத்தனையோகோடியில் ஒருபங்குமில்லாத அசட்டு வைதீகத்தை வைத்துக்கொண்டு தன்னைப்போலவும் தனக்கு மேற்பட்டுமுள்ள யோக்கியதையுடையவராயிருந்தாலும் துவேஷபுத்தியால் தீண்டாமையென்பதைக் காரணமாய் வைத்துக்கொண்டு குரூரமாய் நடத்திவருவது தன்னுடைய அகம்பாவத்திலேற்படும் கௌரவத்தையும் தன்னலத்தையும் விருத்திசெய்துகொள்ளச் சமயம்போல் வைத்துக்கொண்டிருப்பது தவிர தீண்டாமை என்ற வார்த்தையே யுண்மையறிவாளிகளின் மனதைப் புண்படுத்தும்-

2. திருவாரூரில் சோமாசிமார நாயனாரென்பவரொருவரிருந்தார் அவர் தாம் ஒரு யாகத்தைச்செய்து அந்த யாகத்தில் சாக்ஷாத் சிவபெருமானே உமாதேவி சகிதராய் யாககுண்டத்தில் வந்து பிரத்தியக்ஷமாய்த் தன்னிடம் அவிர்ப்பாகம் வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்ற ஒரு எண்ணத்தை வைத்துக்கொண்டு அப்படி ஈசுரன் பிரசன்னமாவதற்கு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தயவிருந்தால் அது கைகூடுமென்று மேற்படி சுந்தரமூர்த்திசுவாமிகளின் தயவிற்குப் பாத்திரராய் நடந்துகொண்டதன்மேல் அச்சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்கித் திருவாரூர்த் தியாகேசர் அசரீரியாய்த் தான் எந்தரூபத்துடனாவது சோமாசிமாரநாயனாரிடம் அவிர்ப்பாகம் வாங்கிக்கொள்வதாய் பிறப்பித்த உத்தரவைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோமாசிநாயனாரிடம் சொல்ல யாவரும்

சடவுளால் எல்லா ஜீவர்களுக்கும் உபயோகப்படும்படியாயும் அவ்விஷயத்தில் எல்லாருக்கும் பாத்தியதையாயுமிருக்கிற பொதுப்பாதை, ஆற்றங்கரைத் தண்ணீர், குளத்துத் தண்ணீர், கோவில் முதலிய பொதுச் சொத்தில் தீண்டாதாரென்று சொல்லப் படுவோர் மற்ற ஜீவர்களைப்போலத் தங்களுக்கும் பாத்தியமென்று உறுதியாய் நின்று தங்களை வித்தியாசமாய் (நினைப்பதை) நினைப்பவர் களைக் கண்டித்துத் தான் இடங்கொடாமலும் வற்புறுத்திக்கிளம்பி னால் பலித்தமட்டும் பார்ப்போமென்ற அகங்காரப்பேய்வாயடங்கி நின்றுவிடும். இது விஷயமாய் விவகாரமேற்பட்டாலும் நியாயமான சட்டமும் உண்டாகிவிடும்.

இவ்விந்தியர்கள் கடவுள் சாஸ்திரம் மதம் என்று சொல்லப் படுகிற ஒவ்வொரு விஷயத்திலும் ஒன்றை வைத்து ஒன்றில் ஏமாற்ற மடைந்து இருப்பதுபோல ஒவ்வொரு சொற்ப சங்கதியிலும் மத சம்பந்தமாயும் கடவுள் பரமாயும் நரகம் சொர்க்கமென்ற வாயிலாகவும் சொன்னால் மிகப் பயத்துடன் எக்காரியமும் நற்காரியமென்று நினைத் துச் செய்து வருவார்களென்று மதச்சூழ்ச்சியிலேற்பட்டிருக்கிறவை களில் இத தீண்டாமையும் ஒன்று.

---

தெரிந்தவிஷயமாய் யாகம் ஆரம்பிக்கப்பட்டு அவிர்ப்பாகம் கொடுக்கும் தினத் தன்று சிவபெருமான் தீண்டாதஜாதியுருவெடுத்து வாலும் யாகக்கொட்டகை யில் தீண்டக்காரன் நுழைந்துவிட்டானென்ற சப்தத்துடன் பிராமணரெல்லா ரும் தடுக்கமுடியாத எண்ணமுடையவர்களாய்த் தாங்களே விலகியோட்டம் பிடித்தார்கள். கடவுளநுக்ரகமடையப் பக்குவமில்லாதவர்களுக்குத் தென்படா தவராய்க் கர்த்தாவான சோமாசி நாயனாரிடம் அவிர்ப்பாகம் வாங்கிக்கொண்டு போனதாய்த் திருவாரூர் புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

தேகசுத்தத்திற்காக ஸ்நானம் முதலியவைகள் செய்வதை மேலாகக் கொண்டு இருமாந்திருந்தவர்களை அக்காரணத்தால் தம்மை யவர்கள் பார்க்க மாட்டார்களென்றே தீண்டாதாரென்று நினைத்துக்கொள்ளும் வடிவுடன் புறப்பட்டுவந்ததில் தீண்டாமை விரதத்தாலும் அக்காரணம்கொண்ட பரி சுத்தமற்ற மனதாலும் தம்மைக் காணமுடியாதபடி செய்தமையே தீண்டாமை யின் தீமையைக் காட்டுகிறது. மனத்துக்கண்மாசிலனாதலனைத்தற னாகுலநீர பிற-என்றார் நாயனார். நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை என்றார் பட்டணத்தார்.

ஸ்நானம்பண்ணினவன் ஸ்நானம்பண்ணாதவனைத் தொட்டாலும் வியாதி யில்லாதவன் வியாதியுள்ளவர்களைத் தொட்டாலும் பிரசவ முதலிய அசுத்தசம்பந்தமுடையவர்களை அதில்லாதவர்கள் தொட்டாலும் இறந்த பிண அசுத்தத்திலும் அவை சம்பந்தப்பட்ட கெட்ட வாசனையுள்ள இடங்களிலும், ஸ்திரீகள் (X) தூரமான சமயங்களிலும் தீண்டலென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற கொள்கையில் மேற்சொன்னவையில்லாத சுத்தமானவர்களையும் சம நிலையுள்ளவர்களையும் தீண்டாதாரென்று வைத்துக்கொண்டிருப்பது தன் கௌரவம் ஜாதிக்கட்டுப்பாடு முதலிய தன்னலம் குறையுமென்று அகம்பாவத்துடன் நடத்தும் செய்கையென நிச்சயிக்கப்படுகிறது.

எதை முயற்சித்தால் பலன் கிடைக்குமோ அதைவிட்டு அதற்கு உபகரணங்களையே பல காரணங்களால் கையாளப்பட்டு வீண் முயற்சியாய் மனிதர்களில் ஒருவருக்கொருவர் ஒத்துமையில்லாத வேற்றுமையும் சிலருக்கு சுயநன்மை முதலியவற்றிற்கும் இடமாக்கப்பட்டது.

(உதாரணம்) சமையற் செய்து சாப்பிட்டுப் பசிதணிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற சாமக்கிரியைகளான தீ, விறகு, அரிசி, ஜலம் முதலியவற்றை வைத்துக்கொண்டு கிரமமாய்ச் சமைத்துச் சாப்பிடாமல் தீ யிருந்தால் போதுமென்பவனும் விறகு இல்லாமற் போனால் தீ யெரியாதென்று விறகுவைத்துக்கொள்பவனும் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜலம் இல்லாவிட்டால் முடியாதென்று ஜலம் வைத்துக்கொண்டிருப்பவனும், எப்படி அரிசி யில்லாமல் அன்னம் பக்குவம்பண்ணிச் சாப்பிடமுடியாதோ அதுபோல ஞானத்திற்கு அடுத்தபடியாயுள்ள சித்தசுத்தி யில்லாமல் மடியினாலாவது பஞ்சகச்

---

(X) ஸ்திரீகள் மாதவிடாயென்பது ஒரு காலத்தில் தெய்வேந்திரனுக்கேற்பட்ட பிர்மஹத்தி தோஷத்தில் பங்கு எடுத்துக்கொண்டதிலிருந்து அந்தக் கொலையின்பாவம் தீண்டாததாய் நினைக்கப்பட்டு அக்காலம்முதல் அதுவும் தீண்டாதென்ற லிஸ்ட்டில் சேர்க்கப்பட்டதாகையால் இத்தீண்டாமை சமயோசிதம்போல் ஏற்படுத்தப்பட்டதென விளங்குகிறது.

ஸ்திரீகள் மாதவிடாய் அதற்கு முன்னெப்படி நடத்திவரப்பட்டதென்று புலப்படவில்லை.

சத்தினுலாவது பிறரிடம் கொண்டிருக்கும் அசூயையினுல் ஏற்படும் குணத்தினுலாவது மனதில் விபரீதம் விளையுமே தவிர உண்மை கைகூடாது. மற்றவர்களைக்கேவலமாய் நினைப்பதில் மரியாதைக் குறைவும் ஏற்படும். குளிக்கப் போன இடத்திற் சேறு பூசியதற்கொக்கும். இப்போது அநுஷ்டானத்திலிருக்கும் தீண்டாமையினுல் கடவுள் பிரத்தியக்ஷமில்லாமலும் (11) கடவுளுக்கு மிக அதிருப்தியாயும் நடந்திருப்பதை சரித்திரங்களால் தெரிந்துகொள்க.

தயையைக்காட்டிலும் தீண்டாமையும் சேஷமும் சிறந்ததல்லவென்று முழு மனதுடன் சந்தேகமில்லாமல் சாஸ்திரத்தை எதிர் பாராமல் தயையென்பதை யநுபவத்திலெடுத்துக்காட்டி அதனுல் தனக்கு நேரும் அபவாதத்தையும் நினைக்காமல் நடந்த V. திருவிசநல்லூர் அய்யா சாஸ்திரிகள் சரித்திரமொன்றே தீண்டாமையினுல்

---

(11) பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனுர் புராணத்தில் சிவகோசரியார், திண்ணனுரென்ற இருவரிடத்திலும் தெரிந்துகொள்க.

திருவாரூரிலே *அறுபத்துமூவரிலொருவரான நமிநந்தியடிகளென்பவரொருவரிருந்தார் அவர் சுவாமி யுத்சவத்தின்கூடவே யிருந்து அஸ்தமித்த பிறகு தன் வீட்டிற்குவந்தவர் தான் செய்யவேண்டிய பூஜைமுதலிய நித்தியாநுஷ்டானங்களைச் செய்வதற்கு மனமில்லாதவராய்ச் சிவபெருமான் உத்சவத்தில் எல்லா ஜாதியாருடனும் சேர்ந்து தொட்டுச் சென்றதினுல் தீண்டல் என்னும் அசுத்தம் ஏற்பட்டதாய் நினைத்து ஸ்நானம்பண்ணித் தான் பூஜை முதலியன முடிக்கவேண்டுமென்று ஸ்நானத்திற்குத் தம் பத்தினியைத் தண்ணீர் கொண்டுவந்துவை யென்றுசொல்லிவிட்டுத் தாம் சற்று அயர்ந்தார். அப்பொழுது சொப்பனுவத்தையில் பரமேசுரன்றோன்றி நம் உத்ஸவத்திற்கு வந்திருந்த யாவரும் நம் கணங்களன்றோவென்று சொன்னவுடன் கடவுளுத்சவத்திற்கு வந்திருந்தவர்களைப் பேதமாக நினைத்தேனே யென்றும் தம் குற்றத்தை நினைத்து அப்படியே யெழுந்து ஸ்நானமில்லாமல் பூஜை முதலியகர்மாநுஷ்டானங்களை முடித்தார். பெரியபுராணம்:

v சோழநாட்டிலே திருவிசநல்லூர் என்னும் கிராமத்தில் அய்யா சாஸ்திரிகளென்ற ஒரு ஸ்மார்த்தவைதீகப் பிராமணரிருந்தார் அவர் உண்மையைத் தெரிந்தவரும் பிராமண வைதீககர்மத்தைக் கிரமப்படி வழுவாது நடத்துபவ

க்கடவுளநுக்கிரகமும் சித்தசுத்தியும் கிடைத்துவிடாதென்பதை விளக்கும்.

அன்பென்னும் பெருங்குணத்தைக் கைப்பற்றுவதில் தீண்டாமை சேஷ மென்னும் அற்ப குணத்தை விலக்கிய அய்யாசாஸ்திரிகள் ஈசுர கிருபைக்குத் தகுதியானமையுங்கண்டு ஆராய்ச்சிசெய்து தீண்டாமையினாலே தாங்கள் மனது பரிசுத்தமடைந்ததாக நினைத்துக் கொண்டிருக்கிற மனக்குரோதத்தால் பிற மனிதர்களைக் கண்டு மிக்க வித்தியாசமாய் நினைக்கும் வழக்கத்தை விலக்கி முதலிற் சொன்னபிரகாரம் தேகசுத்தத்திற்கு வேண்டிய சமயம் தனக்குள்ளே வைத்து அடக்கமாய் நடந்துகொண்டும் மனது பரிசுத்தமடைய வேண்டிய நிலைமையையடைதல் சிறந்தது.

இவ்விஷயத்தில் சில புத்திசாலிகளுடைய அபிப்பிராயம் ஒரு விதமாயிருக்கலாம் ÷ அதாவது தீண்டாமையில்லா வழக்கத்தால் எல்லாம் சமமாய்ப் பேதமற்று நாளடைவில் வித்தியாசமாறி அந்தப் பழக்கம் ஏற்பட்டுத் தடித்துச் சுத்தம் அசுத்தம் சேர்க்கை முதலியன இல்லாமல் நற்பயிற்சி கெட்டுவிடுமே யென நினைக்கலாம். அப்பயிற்

---

ரும் பண்டிதராயுமிருந்தார். அவர் ஒருநாள் தம்முடைய கிரஹத்தில் நடக்கும் சிரார்த்ததினத்தன்று விதிப்படி பிராமணரை வரித்து அவர்களுக்கு சாப்பாடு போடுவதற்கு வீட்டிற் சமையலாகிக்கொண்டிருக்கும்சமயத்தில் தான் ஸ்நானம் பண்ணும்பொருட்டுக் காவேரிநதிக்குச் சென்றார். அப்பொழுது காவேரிப்பக்கத்தில் மஹாதேவ என்ற சப்தம் தீனசுரத்துடன் தன்காதில்விழ, அப்பொழுது அவர் அவ்வோசை வழியாய்ச் சென்று ஆத்தங்கரை மணலில் ஒரு பறையன் கால்களில் குட்டை மாட்டப்பட்டு சுடுமணலில் உருண்டு தபித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். உடனே இரக்கங்கொண்டவராய் அவனைப்பார்த்து உன்னை இவ்வளவு கஷ்டப்படுத்தியதார் என்று கேட்டலும் இது எனக்குக் கிராமத்தண்டனை என்று சொன்னான், அவர் உன் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு என்னால் ஏதாயினும் உதவி வேண்டியிருக்குமாயின் அதை நான் செய்கிறேனென்று சொல்லலும். ஐயா என்னுடைய சிரமத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று தங்களுக்குத் தயவிருக்கும்பக்ஷத்தில் இப்பொழுது எனக்கு மிகவும் பசிக்கிரக்கமாயிருக்கிறது. ஆகாரம்கொடுத்தால் கொஞ்சம் தௌர்யம் உண்டாகுமென்று அவன் சொன்ன அளவில் சாஸ்திரிகள் தமது

சிக்காகக் குரோத பழக்கத்தை நிறுத்திப் பல சங்கடங்களும் சந்தேகங்களும் கடவுளருளுக்கு பாத்திரமில்லாமல் தயை யென்னும் குணங்கெட்டுப் போவதைக் காட்டிலும் தனக்குச் சமான மனதுடைய சேர்க்கையை ஆராய்ந்து ஒன்றாய்ப்பழகியும் வித்தியாசமான சேர்க்கையைத் தெரிந்து விலக்கியும் மூடப்பழக்கமில்லாத ஆராய்ச்சியின் அறிவுப்பயிற்சியில் நடந்துவந்தால் பக்குவமான ஜீவன்களிடமிருந்து உண்மை தெரிந்துகொள்ளவும் தான் மேலென்ற அகங்காரம் கெட்டுச் சமமென்றும் கீழென்றும் தன்னை நினைத்து ஜீவபோதம் குறைந்து உண்மையான (சிவபோதம்) பரபோதம் உண்டாகும்.

இத் தீண்டாமை யென்ற கொள்கைப்பிடிவாதத்தின் பலனே உண்மையையறிந்த ஞானிகளிடத்தும் பழக்கம்போல் உபயோகப் படுத்த நேருவதால் அகங்காரத்தால் அச்சேர்க்கை விலகி உண்மை கைகூடாமல் கீழ்ப்போக்கான நிலையையடைவார்கள்.

இவ்வாற்றால் உண்மையடைய விரும்புவோர் தங்களுடைய எந்த அநுஷ்டானங்களையும் தம்முள்ளே வைத்துக்கொண்டு த்வேஷம் முதலிய குணங்களிற் கட்டுப்படாமல் நடப்பார்கள்.

அஞ்ஞானிகளோ தங்கள் கௌரவத்தையும் சுய நன்மையையும் முன் பழக்கம் கெட்டுப்போகுமேயென்ற அற்ப எண்ணத்தையும் விடாமல் இத்தீண்டாமை யென்னும் கெட்ட குணத்திற் கட்டுப்பட்

---

வீட்டிற்குச் சென்று அங்கு பிராமணனுக்கிடுவதற்காகச் சமைக்கப்பட்டிருந்த சாதம் கறிமுதலியவைகளைத் தன் பெண்சாதியிடமிருந்து பாத்திரத்திலெடுத்துக்கொண்டுவந்து அத்தீண்டாதவனுடைய கட்டுகளை விலக்கிச் சாப்பாடு போடுவித்தார் அவன் சாப்பிட்டபிறகு அவரை வாழ்த்திச் சௌரியத்துடன் சென்றான். அப்பால் சாஸ்திரிகள் பாத்திரத்தைச் சுத்திபண்ணிக்கொண்டு தானும் ஸ்நானம்பண்ணி வீட்டிற்கு வந்தவுடன் சிரார்த்தத்திற்கு வரிக்கப்பட்ட பிராமணர் இந்தச்சமாச்சாரம் தெரிந்துகொண்டு சிரார்த்தம் கெட்டுப்போய் விட்டது புதிதாய்ப் புண்யாஹவாசன முதலிய செய்து சமைத்தாலும் சாப்பிடமாட்டோமென்ற பிடிவாதத் தன்மையுடன் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அப்பால் சாஸ்திரிகள் தாமே தர்ப்பை மூலமாய்ச் சிரார்த்த காரியத்தை நடத்தி திருப்தியடைந்தார். இந்த நடபடிக்கையைத் தங்கள் குரு

டுழல்வார்கள். அந்நடத்தை பிறருக்குத் துன்பம் உண்டாக்குவதால் மிகக்கண்டிக்கத்தக்க நடத்தையாகும். சமரசமான உயர்ந்த கொள்கையை நாம் பற்றுவதற்குப் பேதத்தை யுண்டுபண்ணும் தடையான தீண்டாமை யென்னும் அற்பமான கர்மாவை விட்டுவிட வேண்டிய தவசியமென்று ஆராய்ச்சியும் தெளிவும் நிச்சய புத்தியும் எவருக்கில்லையோ அவர்கள் இக்காலத்தில் மிகப் பதராய் பிறரால் இகழப்பட்டு விஷயம் ஏற்படுத்திய முறை தெரியாதவனாய் இழிவான நிலையையடைவான். அகத்தூய்மையில்லாத புறத்தூய்மையைக்காட்டிலும் புறத்தூய்மையில்லாத அகத்தூய்மை சிறந்தது.

---

வான சங்கராச்சாரியரிடம் சொல்லி இச்செய்கைக்குச் சாஸ்திரிகளை ஜாதியை விட்டு விலக்கிவிட வேண்டுமென்று சொன்னார்கள். ஆச்சாரியரும் அவரிடம் சமாசாரத்தைக் கேட்க சாஸ்திரிகளும் மனது பரிசுத்தமடைவதற்கும் தேகசௌரியத்திற்கும் தீண்டாமை யென்பது சமயோசிதமாய் வைத்துக் கொள்வதுதவிரக் கட்டாயம் இன்றியமையாததாய் நடக்கும் மற்ற கர்மாக்கள் போலல்லவென்பது கடவுள் சம்மதமெனப் பிரத்தியக்ஷமான நடபடிக்கையில் எடுத்துக்காட்டி அவர்கள் அஞ்ஞான நிவர்த்தியின் பொருட்டுக் கங்கையைத் தன் வீட்டில் வரவழைத்ததாய் நடந்த சரித்திரமிருக்கின்றன.

## 13. கல்யாணம்

ஆண் பெண்ணென்ற இருவகுப்பிலும் இயற்கையிலே ரத்த ஊற்றத்திற் கலந்து அறிவுமயக்கமாய் விகாரப்படும் இச்சையே காமமெனப்படும். அக்காமம் பழக்கத்தினாலும் சேர்க்கையநுபவத்தாலும் அதிகப்பட்டு விருத்தியாகிப் பிறருடைய தூண்டுதலும் உதவியுமில்லாமல் தானே அவ்வக்காலத்தில்வந்து தொடர்ச்சியாய் நிற்கும். அக்காமம் ஆத்மாநுபவ வளர்ச்சியிலீடுபட்டுத் தன் மனோவாசனை யொழிந்து O. ஜீவபோதமிழந்து சிவபோதமானவர்களிடத்தும், காமம் அநுபவிப்

---

O தன்னுயிர் தானறப்பெற்றானை ஏனைய—மன்னுயிரெல்லாந் தொழும் (குறள்)

தனையென்று மறந்திருப்பவருள் வடிவானது மேற்றட்டியெழுந்திருக்கு மின்பந்தன்மயமேயதுவாம் (என்றும்) அறிவவிழவின் பந்தாக்கும் வகையேதினாள் (என்றும்) நானேகருதின் வாராடார் சும்மாவிருந்தாற்—றானேவருவார் தன்மை யென்னே எனவும் தாயுமானவர் வாக்கு.

பதற்குத் தகுதியற்று அக்காமம் உற்பத்தியாகும் அவ்விரத்தமில்லாத் அவிஜன்மமாயுள்ள ஜீவன்களிடத்தும் தோன்றாமல் நிற்கும். ஆனால் பகுத்துணர்வின் பழக்கவசப்பட்ட மேற்சொன்ன ஞானிகளிடத்தும் ஒரோர்காலத்துப் பழைய வாசனையை வைத்துத்தோன்றுங்கால் அத் தோற்றமும் நல்லறிவு, மிகுதியுந் தலைப்படுவதால் மறைந்து □ ஞானநு பவவுணர்வேயாய்விடும். O நிலைபெற்றுக்காமப் பலனை யளிக்காது ஆகையால் மேற்சொன்ன ஞானிகளிடத்தும் ஒருவாறு விலகியிருப்பது தவிரக் காமம் என்ற குணம் ஆண் பெண் என்ற இருவகை யினத் திற்கும் சமமாகச் சிற்சில சமயங்களில் ஏறத்தாழ அமைக்கப்பட்டுத் தள்ளமுடியாததாயிருப்பதால் அக்காமகுணமானது ஆத்ம அநுபவ வுணர்ச்சிக்கு முற்றிலும் விரோதத்தையுண்டுபண்ணுவதாகும். அக் குணத்தை விலக்கும் முறையில் அக்காரியத்தைக் கையாடும்விதம் அறிவாளிகளால் மனதிஷ்டப்படிவிடாமல் ஒரு கணக்காய்க் கட்டுப் படுத்துகிறவகையில் செய்யக்கூடியவிதியாற் கல்யாணமென்று ஏற் படுத்தி மற்ற ஜந்துக்கள் போலிராமல் செய்யும் காரியத்தைக் கொஞ் சம் நாகரீகமாய் நடத்திவரப்படுகிறது. இந்தக்கல்யாணமும் ஒருவரை யொருவர் முன்னெருங்கிப் பழகியிராமலிருந்தாலும் மனமொத்து ஒன்றுபட்டு அநுபவிக்கும் காமவின்பத்தை அதாவது உண்மைவஸ்த்து வில்மனமற்ற சேர்க்கையில் உண்டாகும் பேரின்பத்தின் சாயையென்று சொல்லும் சிற்றின்பத்தையநுபவிக்க ஒருவரை யொருவர் விரும்பிய இச்சையைப் பூர்த்திபண்ணி வைப்பதற்கு வேண்டியவர்களாயுள்ளவர் ளால் அறிமுகம்செய்து + தொடர்ச்சியாயிருக்கும் நீண்ட வாழ்க் கையில் மனது வேறுபாடில்லாமல் இருவரும் ஒருவராய் ஒரு நல்ல கட்டுப்பாட்டின் வழி நடந்து வரம்பாக வருவதற்குமாக நாகரீக முறையிற் செய்துகொண்டுவரும் காரியமாயிருக்கிறது.

---

□ தானான தன்மயமேயல்லாலொன்றைத் தலையெடுக்கவொட்டாது, தலைப்பட்டாங்கே போனாலும் கர்ப்பூர தீபம்போலப் போயொழிப்பதல்லாது. என்றார் தாயுமானவர்.

O காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற்பற்றார். (கைவல்யம்)

+ கல்யாணமான தன் பின்னர் ஆணும் பெண்ணும் ஆயுஸ்பரியந்தம் ஒத்துமையாய் இல்லறத்தை நடத்துவதில் கபடமற்ற மனப்பான்மையும் பரி சுத்தமாய் ஒருவழிப்பட்ட மனதையும் அடையும் வழிக்காக ஏற்பட்டது. கூடிப் பிரியேல். நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு என்றார் மேலோர்

இக்கல்யாணத்தில் ஆண் பெண்ணென்ற இருவர்களும் காமவின்பத்தைக் கணக்காயநுபவித்தும் அத்துடன் உலகத்தின் உண்மையை நன்றாய்த் தெரிந்துகொண்டு மேற்போக்கான கடவுள் பக்தியும் ஆத்மாநுபவ உணர்ச்சியும் உண்டாகக்கூடிய நடபடிக்கையில் நடந்து காலங் கடத்தி வருவதற்கு இருவரும் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்கும்வகையில் சம்மதித்ததாய் யாவருக்கும் தெரியவேண்டியதாகவும் சிற்சில சமயத்தில் இருவருக்கும் மாறுதலேற்பட்டாலும் திருத்திக் கொள்வதற்கு அநுகூலமாயும் பந்துக்களும் உண்மையான சிநேகிதர்களுமிருந்து பின் வருமாறு கல்யாணம் நடத்திவருதல் ஒரு நல்ல முறையாகும் அதாவது:— நன்றாயலங்கரிக்கப்பட்ட வீட்டிலாவது கோவிலிலாவது சந்தோஷக் குணங்களை மனதிலுண்டாக்கும் இனிமையான வாத்தியமும் கல்யாணத்திற்கு வந்திருக்கும் யாவரும் அணிந்துகொள்ளும் சந்தனம் புஷ்பம் பன்னீர் வெற்றிலைபாக்கு முதலியவைகளை அணிந்து அநுபவிக்கும் வாசனைத்திரவியங்களின் நறுமணமும் பொருந்தத்தக்கதாய்க் கல்யாணத்திற்கு வந்திருக்கும் ஜனங்கள் இருப்பிடத்திற்கு வசதியாயுள்ள ஆசனங்களில் அமர்ந்தும் கல்யாண அலங்காரத்துடன் விளங்கும்மாப்பிள்ளை பெண்ணென்னும் இருவரையும் அலங்காரம் பண்ணிய இடத்தில் நல்ல ஆசனத்தில் வந்திருக்கும்படி செய்தும் மணமக்களின் தாயார் தகப்பனுர்களை அவரவர்கள் பக்கத்தில் நிற்கச்செய்தும் அக்கூட்டத்தில் வந்திருப்பவர்களிற் சபைக்கூச்சமில்லாதவர்களும் முன் கல்யாணங்களில் நடத்தி அநுபவப்பட்டவர்களில் ஒருவரை முன்னணியில் ஓராசனத்தமரும்படி செய்து அங்கு கூடியுள்ள ஜனங்களுக்கு மாப்பிள்ளை பெண்ணிருவரையும் நன்றாயினந் தெரிவிக்கக்கூடிய விதத்தில் ஊரின் பெயர் வம்மிசத்தின் பெயர்பாட்டன் தகப்பன் பெயர் மணமக்கள் பெயர்களை யாவரும் தெரிந்துகொள்ளும்படி சொல்லி மணமக்களிருவரும் நேரிலாவது அல்லது தன்தன் தகப்பன் சகோதரர் மூலமாவது தாங்கள் இல்வாழ்க்கையை நல்வழியில் நடத்திக்கொண்டு வருவதற்கு இருவரும் ஒருமைப்பட்ட மனமுடையவர்களாய் விரும்பி காதலித்திருக்கிற சங்கதியைத் தெரிவித்துக்கொண்டபிறகு மணமக்களால் தத்தமக்கு ஏற்பட்ட வழிபடு கடவுளை நினைத்து உருவமுகத்தாலோ அல்லது அருவமுகத்தாலோ துதித்து வணங்கியதன்பிறகு எவ்விதத்தி

லும் ஒருவருக்கொருவர் மாறுதலான அபிப்பிராயமில்லாதவர்களாய் ஒருவழிப்பட்ட மனதையுடையவர்களாய் இகவாழ்க்கையிலும் பரத்திற்கு வேண்டிய மனச்சாந்தத்திற்கு உபயோகப்பட்ட விஷயங்களிலும் ஒத்த அபிப்பிராயமும் நடையுமுடையவர்களாய்க் கூடிவாழ்வதாய்ப் பெரியவர்கள் முன்னிலையில் சொல்லிக்கொண்டு அதற்கு அடையாளமாய் மணமகனால் மணமகளுக்கு சந்தனம் குங்குமம் புஷ்பம் கொடுக்கப்பட்டு புருஷன் ஞாபக அடையாளத்திற்கு மணமகன் முழுப்பெயரையாவது அல்லது அடையாளப் பெயரையாவது வரைந்துள்ளதாயிருக்கும் திருமங்கிலியம்சேர்ந்த தங்க ஆபரணத்துடன் கூடிய சரட்டை மணமகள் கழுத்திலிட்டு மாலையிடவேண்டும்.

அதன் பின்னர் மணமகளால் மணமகனுக்கு சந்தனம் குங்குமம் புஷ்பம் முதலியனகொடுத்து கழுத்தில் மாலையிட்டு மணமகன் பெயரெழுதியுள்ள தங்கமோதிரத்தை மணமகன் வலக்கையில் சிறுவிரலுக்கடுத்த விரலிற்போடவேண்டும். இது முடிந்தபின்னர் இருவரும் கடவுளைக்குறித்து இனிமையான பாக்களைப் பாடித் துதித்து நின்று சபையருக்கு நமஸ்காரம்செய்யும்பொழுது சபையிலுள்ள யாவரும் சர்வ சக்திமானான கடவுள் அருளினால் இம்மணமக்கள் இருவரும் பல்லாண்டு பல்லாண்டாய் நல்வாழ்வு நடத்திக்கொண்டு இகபர சாதனங்களை அடையக்கடவதென ஆசீர்வசனம் சொல்லி புஷ்பங்களை இறைக்கவும்.

அப்பால் மணமக்களின் க்ஷேமத்தைக்கருதிச்சொல்லும் மங்கள கீதங்களைப் பாடிக்கொண்டும் மனது களிப்படையும் இனிய காதற் கீதங்களைப்பாடிக்கொண்டும் ஸ்திரீகள் ஆலாத்தி எடுக்கவும், இது முடிந்தவுடன் மணமக்கள் இருவரும் கைகளை கோர்த்துக்கொண்டு அறைக்குட்சென்று மணமக்களின் தாய் தந்தையர் கொடுக்கப்படுகிற பால், சீனி, பழங்கலந்த தித்திப்பான (பரமான்னத்தை) ஆகாரத்தை மணமக்கள் இருவரும் வாங்கி கலந்துகொண்டு பாத்திரத்திலாவது, இலையிலாவது மணமக்களால் மணமகனுக்குப் படைக்கப்பட்டும் மணமகனால் மணமகளுக்குக் கொடுக்கப்பட்டும் களிப்புடன் சாப்பிடவும்.

அதன் பின்னர் வாத்திய வொலியை நிறுத்தச்செய்து வந்தவர்கள் யாவருக்கும் சமமாய் சந்தனம் புஷ்பம், தாம்பூலம் முதலியன வழங்கியும்

சௌரியப்படின் சிற்றுண்டி அல்லது ஆகாரம் அளித்தலும்வேண்டும். பிறகு இரண்டு மூன்று தினங்கள்வரை தொடர்ச்சியாய்ச் சந்தோஷங் கொண்டாடப் பிரியப்படுவோர் பவனி முதலிய நகர்வலமும் ஜனங் களுக்கு இம்மைக்குவேண்டிய சமூகச்சமுதாயத்தையும் மறுமைக்கு வேண்டிய நல்லொழுக்க மன்ச்சாந்தியைப்பொருத்த சங்கதியையுந் தெரிவிக்கும் பெரியோர்களால் வசனரூபமாகப் பேசும்படிக்கும் செய்து கொள்ளலாம். பாட்டுக்கச்சேரி, நர்த்தனம் முதலிய வீண் டம்பமான செய்கைகளிலும், மற்றும் அனுவசியமான செய்கைகளிற் செலவிடும் செலவைச்சுருக்கியும் இந்நடபடிக்கையை அங்கு வந்திருக்கும் கூட்ட மான ஜனங்கள் நன்றாய்ப்பழகித் தெரிந்துகொள்ளும்படிக்கும் செய்ய வேண்டும்.

கல்யாண தினங்களாய்க்கொண்டாடும் தினங்களில் ஒரு நாளில் அலங்காரமும் சுத்தமுமான ஆடையாபரணங்களால் தம்பதிகளிருவ ரும் தம்மையலங்கரித்துக்கொண்டு □ மனக்களிப்பையுண்டாக்கும் சித்திரக்காதற்படங்களும், நல்ல காற்றும், சுடரொளிபோன்ற தீப வொளியும் பரவும்படியாயுள்ள சயன அறையிற் சென்று உற்சாக மன துடையவராய் அங்கு வைத்திருக்கும் நறுமணங்கமழும் புஷ்பம், சந்த னம், தாம்பூலம் மற்றும் வாசனைத் திரவியங்களை யெடுத்து ஒருவருக் கொருவர் சந்தோஷமாக ' அணிந்துகொண்டும்மதுரமிக்க இனிய வச னங்களைப் பேசிக்கொண்டும் வித்தியாசமில்லாததும் அளவுகடந் ததுமான காதலினால் மனமொருமித்து O மிருதுவான படுக்கையி லிருக்கவேண்டும்.

இவ்விதச்சேர்க்கையிலுற்பவிக்கும் குழந்தைகள் மிக்க அழகும் A திடசரீரமும் நல்ல அறிவும் கூடியதாயிருக்கும் அல்லாதவை குரூரத் தன்மையைக்காட்டும்.

---

□ ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. என்றார் ஔவைப்பிராட்டியார்.

A வியாசரின் தாயார் பரிமளகந்தி, சந்தனுமகாராஜாவை மணம்புரிந்து அவருக்குற்பவித்த குழந்தைகளான சித்திரசேனன் முதலாகச் சொல்லப்படும் இருவரும் இறந்தபின் நாயகனில்லாதிருந்த அம்பா, அம்பாலிகா என்னும்

நாளாக நாளாக இக்காமவிச்சையில் அதிக கவனம் செலுத்தாமல் நல்ல விஷயங்களை ஆராய்ச்சி செய்து ஒருவருக்கொருவர் உசாவித் தெரிந்து தெளிதல்வேண்டும்.

---

இரண்டு ஸ்திரீகளிடத்திலும் புத்திரோற்பத்திக்காக வியாசனைச் சேரும்படி பரிமளகந்தியால் சொல்லப்பட்டு அவ்விதம் நடந்தவியாசர் ஷை ஸ்திரீகளிடம் அடைந்தபொழுது முதலில் அனுபவிக்கப்பட்ட ஸ்திரீ, காமஇச்சைக்குத் தகுந்த அலங்காரமில்லாத அவ்வியாசரின் சேர்க்கையில் பிரியமில்லாதவளா யிருந்தும், மாமியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு சேர்ந்தாள். அச்சேர்க்கையில் இருகண்ணு மற்ற திருதராட்டிரன் பிறந்தான். இச்சமாச்சாரம் தெரிந்த பரிமளகந்தி, மற்றும் ராஜ்ஜியத்தை ஆளத்தகுதியுள்ள குழந்தையை யுண்டுபண்ண வேண்டுமென்ற கருத்துடன் மற்றொரு ஸ்திரீயுடன் சேரும்படிக்கும் வியாசனை அனுப்பினள். அவ்வுத்தா வுப்படி சென்றவியாசர் ஷை ஸ்திரீயையடைதலும் அவளும் இயற்கையில் தனக்கேற்படும் விருப்பத்துடன் அவருடன் ஒருமித்துச்சேர மனமில்லாத வளாய் மாமியின்சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சேர்ந்தாள். அங்கும் அவள் நடத்தையும், நினைப்பையும், அலங்காரத்தையும் ஒத்தபடி மிக வெண்மை நிறம் பொருந்திய பாண்டுபிறந்தான். இந்தச் சரித்திரமே ஸ்திரீபுருடசேர்க் கையில் அவ்வமையம் இருக்கும் தேகமனோநிலைமைக்குத் தக்கவாறு குழந்தை கள் என்பதை ருஜுப்படுத்துகின்றது.

---

## 14. சாக்காடு

ஒவ்வொரு ஜீவனும் தற்போதிருக்கிற தன்தேகம் வந்ததை ஆராய்ந்து நல்லது கெட்டது தெரிந்து நல்லதை விருத்திபண்ணி முடிவையடையவும், கெட்டதை நல்ல பழக்கத்தினால் முற்றிலும் விலக்கி நல்லதையனுஷ்டித்துக்கொண்டும் வருவதுதான் பெரியோர் கொள்கை. ஆராய்ச்சிபண்ணுமிடத்துப் பிறந்த மனிதன் இறப்பதென் பது நிச்சயம். இந்த அபிப்பிராயம் வெளித்தோற்றமாயுள்ள உடலைப் பொருத்தவரை சொல்லவேண்டியது.

ஒவ்வொரு மனிதனும் உடம்பைக்காட்டிலும், தான் வேறு, உடம்பு, தானல்லவென்று பொருள்படும்படியாய் என் உடம்பு, என் கால், என் கை, என்றும், இன்னும் ஆழ்ந்து யோசித்தால் இவற்

றுடன் சேர்ந்து அனுபவித்தலினல் தான்வேறு என்பதை மெய்ப்பிக்கிறவகையில் என் ஜீவன், என் பிராணன், என் மனது, என்ற இத்தகைய வார்த்தைகளினலேயே இவைகளெல்லாம் தானல்லவென்றும் உண்மையில்லாததும் அறிவில்லாததுமான, இச்சேர்க்கையால்கால தேசவர்த்தமானங்களில் கட்டுப்பட்டு உலகமாறுதலில் உழல்பவன்தான் அல்லவென்னும், பக்குவத்தால் தானே தோன்றும் உணர்ச்சியில் உண்மையைத்தெரிந்துகொண்டமேல் தன்னைத்தவிர வேறென்றும் தோன்றுத சுவானுபவமுள்ளவர்களாய்த் தங்கள் அந்தரங்க உண்மையான அபிப்பிராயமும், அதையொத்த அனுஷ்டானங்கொண்டவர்களாயுள்ளவர்கள் O மறுபடி உலகத்தை நினைத்து திரும்புவதில்லை. இப்படியில்லாமல் உடலும் மனமும் ஒன்றுபட்டு உடலுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தத்தினல் ஒன்றையொன்று விடாதுபற்றிக்கொண்டு உடலுக்கு வேண்டிய சௌகரியத்தை விரும்புவதினல் செய்யப்படுகிற மனோ வாசனையில் ஒன்றுபட்டு அதன்மூலம் தனக்கு விருப்பம் என்ற வாசனை தடித்து அனுபவிப்பதில் தானென்றும், உடலென்றும், வித்தியாசமில்லாமலும் கொஞ்சமேனும் பிரித்தறிய முடியாமையினலும் ஜீவனென்ற நிலைமையில் = உலகக் கட்டுப்பாட்டில் அகப்பட்டு இறந்தும் பிறந்தும் உழலும்படி நேருகின்றது.

நிலையாயும், விகாரமற்றதாயும், எல்லாஜீவர்களிடத்தும் ஒன்றாய் விளங்கிக்கொண்டிருக்கும் வஸ்து ஒன்றானலும் அதைப்பற்றி நின்ற மனோவாசனையின் தடிப்பு தனித்தனிப் பிரிவாக ஏற்பட்டும், உண்மை வஸ்துவின் ஆதாரமில்லாமல் இருக்கமுடியாததால் அதன் ஆதரவினின்றும் விவகரிக்கும் நிலைமைக்கு ஜீவாத்மாவென்று பெயரி

---

O சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தருநோய்—எனவும்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி. எனவும்

= அவாவென்ப வெல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா பிறப் பீனும்வித்து—என்றார் நாயனர்.

டப்பட்டது. அப்படிச் சொல்லும் ஜீவாத்மா தன்னுடைய V மனப் பழக்கத்தினுல் நினைத்தபடியெல்லாம் செய்துகொண்டு மேலுமேலும் தடித்து தான்என்னும் தன்மையில் ஓய்வில்லாமல் சுழன்றுகொண் டேயிருக்கின்றது. அப்படியிருந்தாலும் உண்மை வஸ்துவின் வலு வில்லாமல் தனித்து மனமாதியந்தக்கரணமுதலியன வேலைசெய்ய வியலாமையால் சிற்சில சமயங்களில் உண்மைதோன்றியும், சில சம யங்களில் மிகவும் மூடப்பெற்று அந்நிலையில் எல்லாமனதும் ஒன்று சேர்ந்து ஒன்றுக்கொன்று விவகரிப்பதால் உலகமுமாய் விளங்கும்.

அதுபற்றியே இவ்வுலகம் சில சமயங்களில் உண்மையாகவும், சிலசமயங்களிற் பொய்யாகவுமுள்ள நிலைமையாய் பொய்யும் மெய்யும் கலந்ததாய் விளங்குகிறது.

இத்தோற்றத்தினுல் ஆராய்ச்சியில்லாதவர்கள் கொண்டதே கொள்கை கண்டதே காட்சியெனப் பேசுவார்கள். உண்மைப்பொரு ளில்லாவிடில் பொய்நிலைத்து நிற்குமிடமில்லை. பொய்த்தோற்றம் தெரியப்படாவிடில உண்மையுள்ளதென ஆராய்ச்சிதோனுது. இப் படியும் ஒருசங்கதியிருக்கவேண்டுமா என சிலர் ஆச்சரியமும் கேலியு மாக நினைப்பார்கள். உலகம் உள்ள நிலைமை இப்படித்தான் இருக்கிற தென ஆராய்ச்சியில் தென்படுகிறது. இந்நிலைமையில் ஒவ்வொரு ஜீவ னும் தனித்தனி நான் என்னுடையது என்ற நிலைமையடைந்திருப் பதால் மனது சலனசக்தியும் அதன் சேர்க்கையில் கருவிகள் செய் யப்படும் கர்மமும் இவ்விரண்டுஞ் சேர்ந்து செய்யப்படும் தொழி லுக்கு (செய்கைக்கு) நனவு அல்லது ஜாக்கிரம் என்பர்.

தேகம் சற்றுஓய்ந்து அயர்ந்து மனதுமாத்திரம் வேலைசெய்து கொண்டிருக்கும் நிலைமைக்கு கனவு (சொப்பனம்) என்பர்.

மனத்தின் பழக்கமான வேலைபற்று ஓயும் தருணத்தில் தேகத் தையும் மனதையும் மறந்து ஓய்வெடுத்து (உண்மை வஸ்துவின் சாயை

---

V வாதனைப் பழக்கத்தினுல் மனம், அந்தமனத்தா
லோதவந்திடும் உரை உரைப்படி தொழிலுளதாம்
ஐய, வாதனைப்பழக்கமே மனம்சினைவது—என்ருர் தாயுமானவர்

யால்) △ சுகமடைவது (தூக்கம்) சுழுத்தியெனவும் நடந்து நாட்கணக்கைக் கழித்து எடுத்துள்ள தேகத்தின் காலமுடிவில் நெடுந்தூக்கமாய் இத்தேகத்தை விட்டு மற்றொன்றைப்பற்றும் வாசனையின் மூலையால் ஏதாயினும் ஒருகாரணத்தைமுன்னிட்டு தேகத்தைவிட்டு சாதாரணமாய் முற்சொன்னபடி தூக்கம் தெளிந்து பழையபடியும் முன்ஞாபகமான வாசனையுடன் ஆரம்பித்து உலககாரியங்களில் எப்படி பிரவேசிக்கப்படுகிறதோ அதேபோல இந்நெடுந்தூக்கமான T சாக்காட்டின்பேரில், விட்டதேகத்தில் திரும்பாமல் ஒவ்வொருஜீவனும் தன்தன் மனோநிலைக்குத்தக்கவாறு எதில் அதிகமாய் உறுதிப்பட்டு அழுத்தமாய் நிற்கிறதோ அந்தநிலைமையையுள்ள தேகத்தையடையத்தக்க உருவமாவதற்கு ஜீவன்கள் உட்கொண்டு ரத்தமாக மாறும் உணவுப்பொருளை யடைகிறான்.

எப்படி தேகத்தைமறந்து சொப்பனத்திற் சென்றமனமானது படுத்திருந்ததேகம் கீழேகிடக்க மறுபடியும் தான்பற்றியிருந்த அத்தேகத்தைச் சிருட்டித்துக்கொண்டு கனவெனும் நிலைமையில் எல்லாக் காரியமும் செய்யச்சக்தியுள்ளதாயிருக்கிறதோ அதேபோல காலவரையிற் கட்டுப்பட்டதேகம் விழுந்தவுடன் மற்றொருதேகத்தை நாடும் நோக்கத்துடன் பழக்கத்தைப்பொருத்து இருந்ததேகத்தை விட்டு விலகும் சமயத்தைச் சாக்காடு என்று சொல்லத்தகுந்ததாய் உலகோர் நினைக்கிறார்கள்.

---

△ ஈனந்தரு சுகவிடயந்திரி புடியிடாரமென மனமசையாமற்
சேனந்தனது குலாயந்தனில்விழு செயல்போல்நித்திரை செறிஜீவன்
தானந்தமில் பானுடனென்றுவன் ஒருதனையல்லது பிறநினையாமல்
ஆனந்தம்மய மாவன்சுகமிகும் அதுதானுபர்பிர் மானந்தம் (கைவல்யம்
சந்தேகம் தெளிதற்படலம்)

T உறங்குவதுபோலும் சாக்காடு—உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு—எனவும்
குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு-எனவும் கூறும் திருக்குறள்
வினைப்போகமே யொரு தேகங்கண்டாய்—வினைதானொழிந்தாற்
றினைப்போதளவும் நில்லாது கண்டாய்—என்றார் பட்டினத்தார்,

மிகமகத்தானதும் யாவராலும் செய்ய முடியாததுமான அரிய பெரிய காரியங்களைச் செய்துமுடித்தவர்களையும் ஏகாதிபத்தியமாய் உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாளும் சக்கரவர்த்திகளையும் அவர்கள் தேகம்விட்டவுடன் பிணமெனச்சொல்லி மேற்காரியங்கள் நடத்துவதுதவிர அவர்களுடம்புடன் சேர்ந்திருந்தபொழுது இட்டழைத்த நாமத்தை ஒருவரும் துணிந்து சொல்லிக் காரியம் நடைபெறுவதில்லை. (அதாவது பிணத்தைத்தூக்கு எடு என்று சொல்வார்களே தவிரத் தகப்பனாரைத்தூக்கு மஹாராஜாவைத் தூக்கு என்று சொல்ல மனச்சாக்ஷி கட்டுப்படாது.) அப்பிணம் நாறுமுன் எடுத்துச் செல்லும்பொழுது இந்துக்களில் பெரும்பாலும் ஆடம்பரமான வாத்தியமும் மற்ற அலங்காரமான பல்லக்கு முதலிய வாகனமுமாகவும் பிணத்திற்குமுன் வேடிக்கை விநோதங்களும் நடக்கவும் பிணத்திற்குப் பின் அலங்கோலமாய்த் தலையை விரித்துக்கொண்டு பெரிய சப்தத்துடன் அலறியழுதுகொண்டு வரவுமாகச் சுடுகாட்டிற்குக் கொண்டு போய்த் தகனம் செய்தாவது குழியில் போட்டாவது இரண்டிலொன்றுசெய்து ஸ்நானம் பண்ணி வீட்டிற்குத்திரும்பிவரும் வழக்கமாயிருக்கிறது.

இப்படிச்செய்யும் வாத்தியகோஷத்தினாலும் அலங்காரப் பல்லக்கினாலும் இறந்தவர்களுக்காவது இறந்தவர்களின் சொந்தக்காரருக்காவது ஏதாவது பிரயோஜன முண்டாமென்பதைப் புத்திசாலிகள் யோசித்துப்பார்க்கவேண்டும். இப்படிச் செய்யும் காரியம் உலகில் பார்ப்பவர்கள் திருப்திக்கு டம்பமாக உபயோகப்படுவது தவிர மற்றப்படி இறந்தவர்களுக்காவது அவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது எவ்வித பிரயோஜனமும் நன்மையுமில்லையென்பது ஆராய்ச்சியிற் புலப்படும்.

விவேகிகள் சமய சந்தர்ப்பத்திற்குத் தகுந்த ஒழுங்கானதும் பொருந்தக்கூடியதுமான நடபடிக்கைகள் செய்வார்கள். விவேகமற்றவர்களோ தான்செய்யும் காரியம் இதற்காகச்செய்யப்படுகிறது இக்காரியத்தால் இந்தப்பலன் கிடைக்குமென்று தெரிந்துகொள்ளாமலே பிரயோஜனமற்ற காரியத்தைச் செய்துவரவர முன்னேற்றமடையாமல் பின்னடைந்து காலப்போக்கில் முன்னடைந்து வருபவர்களால் எள

னம் செய்யப்பட்டுக் கேலிக்கிடமாய் அவமதிப்பிற்குள்ளாகிக் கீழான நிலைமையை யடைகிறார்கள். நிற்க தேகத்தைவிட்ட ஜீவன் சாந்த மடையவேண்டுமென்ற அபிமானமிருந்தால் இறந்த சமயத்தில் பிணத்தை, இறந்தவர்களின் வார்சுகளால் ஜல முதலியவற்றைக் கொண்டு நன்றாய்ச் சுத்தம் செய்து அசுத்த வாசனை போவதற்கு வாசனைச் சாமான்கள் போடுவித்து புது வஸ்திரத்தைக்கட்டி எடுத்துச் செல்வதற்குத் தகுதியானதும் அலங்காரமில்லாததுமான ஆசந்திகட்டி அதில் வைத்துமூடி எவ்வித வாத்தியகோஷமும் ஆடம்பரமுமில்லாமல் எடுத்துச்செல்லவும். இறந்த ஜீவன் தேகத்தைவிட்டவுடனே சாந்தியும் நல்லகதியும் அடையும்பொருட்டு அங்குகூடியுள்ளவர்களும் வார்சுகளும் சர்வ சக்திமானான கடவுளைநோக்கி மிகவும் தீனமாகவும், பணிவாகவும், உருக்கமாகவுமுள்ளதாயும் தன் மதத்திற்குரித்தான பாசுரங்களைப் பாடிக்கொண்டு மத்தியில் மத்தியில் ஓ, சர்வவல்லமையுள்ள கடவுளே, இறந்த இச்சீவன் அலைந்து கஷ்டப்பட்டு வருந்தாமல் இத்தேகவாசனையை விட்டு சாந்தியாயிருக்கும்படி யநுக்ரகம் பண்ணவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டும் எடுத்துக்கொண்டு போகும்போது எவ்வித வாத்தியமும் ஆடம்பரமுமில்லாமல் சோகத்திற்கட்டுப்பட்ட அறிவாளிகள் எப்படி மௌனமாயும் அமைதியாயும் சப்தமில்லாமலு மிருப்பார்களோ அந்நிலையில் சுடுகாட்டுவரைக்கும் செல்லும் வழிகளிடையும் முற்சொன்னபடி தீனசுரத்தோடு கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே செல்லவேண்டும். சுடுகாட்டிற் சென்றவுடன் முற்சொன்னபடியே ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு தீயிலிடுவதோ அல்லது குழியில் புதைப்பதோ இரண்டிலொன்று செய்யலாம். ஆனால் தேகத்திற்கும் மனதிற்கும் உள்ள பிடிப்பை முன்னமே உயிருடனிருக்கும்போதே உண்மையறிவினால் விலக்கப்பட்டவர்களுக்கும் முதிர்ந்த யோகாப்பியாசிகளுக்கும் சமாதியென்று சொல்லும் நிலையில் குழியில் வைக்கலாமென்பது சாஸ்திர சம்மதமும் யுக்திப்பொருத்தமுமாகும். மற்றப்படி தேகத்துடன் சேர்ந்து பற்றுதலாயுள்ள ஜீவன் இந்தத் தேகத்தைவிட்டாலும் தேகவாசனை விடாமலும் மற்றொன்றிற் பிரவேசிக்கத் தடையாயுமிருக்கும் விட்டதேகத்தை உருப்படியில்லாமற் (பொசுக்கி) சுட்டுவிட்டால் இவ்வாசனையைவிட்டு மற்றொன்றில் செல்ல வழிபார்க்கும் என்பது யுக்

திப்பொருத்தமும் சாஸ்திர சம்மதமுமாகும். அப்பால் மனத்திலேற் பட்டிருக்கும் துக்கம் தானே விலகக்கூடிய நாளான சற்றேறக்குறைய 10 தினங்களுக்குமேல் 15 தினங்களுக்குள் ஓர் நாளில் இறந்தவர்க ளுக்குவேண்டியவர்களும் வார்சுகளும் சிநேகிதர்களும் கூடி ஆத்தங் கரையிலாவது ஆத்தங்கரையைஅடுத்த பொதுவிடத்திலாவது இருக் கும் தோப்பிலாவது ஸ்நானம்பண்ணி யாவரும் கூடியிருந்து தலைமை வாயுள்ள ஒருவரால் இறந்தவருடைய ஜீவியச்சரித்திரங்களைச் சொல்லி யும் மனுஷ இயற்கையில் தெரிந்தும் தெரியாமலும் ஏற்பட்டிருக்கும் குற்றங்களை மன்னித்துக் கூடுமானவரை நல்ல நிலைமையடையும்படி செய்யவேணடுமென்று சர்வ சக்திமானுன் கடவுளுடைய கிருபைக் குணத்தையும் வல்லமையையும் தெரிவிக்கக் கூடிய பாசுரங்களால் பிரார்த்தித்து மறுபடியும் ஸ்நானம் செய்து வீடு வந்து வந்தவர்களுக் கும் ஏழைகளுக்கும் நல்ல சாப்பாடுபோட்டுத் திருப்திபண்ணவேண் டும். சமையல் விஷயத்தில் வீட்டைச் சுத்தம்பண்ணவேண்டிய விதத் தில் சுண்ணுப்படித்தல் மெழுகல் முதலியவற்றால் சுத்தம்செய்து கொள்ளவும். ஆனல் இறந்த ஜீவர்கள் விஷயத்தில் மற்றும் ஆராய்ச்சி பண்ணினல் ஒவ்வொரு ஜீவனும் தம்மனத்தால் நினைத்துச் செய்யப் படுகிற பதிந்த செய்கைக்குத்தக்கவாறுதாமே நல்லதையும் கெட்ட தையும் அடைவார்கள் என ஆன்றோர்கருத்துக்களும் உள்ளன. ○

ஆயினும் நெடுநாளாய் ஒன்றையொன்று அபிமானித்துக்கூடி வாழ்ந்துகொண்டிருந்த நெருக்கமான சாகவாசப்பழக்கத்தை விட்டுப்

---

வாத்தியம் முதலியன செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம் பட்ட ணத்தார் சொல்லும் "கொட்டி முழக்கி யழுவார்" என்ற பாட்டிலிருப்பதாய் நினைப்பார்கள் அது தவறு. அவர் இப்போது நடந்துகொண்டுவருகிற கொள் கையை அற்பமாக இழித்து கொட்டி முழக்கி ஆடம்பரம் செய்வார்களெனத் தெரிவித்திருக்கிறார்.

○ அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மி யிரு
கைத்தல மேல்வைத்து அழுமைந்தருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே
என்றார் பட்டினத்தார்,

பிரிந்தமையால் உண்டாகும் சலனதுக்கம் தீரும்பொருட்டும் இறந்த வர்களுடைய அபிமானத்தின் பொருட்டும் செய்வதான இக்காரியம் முடிவில் சர்வசக்திமானுன கடவுளிடத்து. ஒப்புவிக்கவேண்டும் செய் கையாயிருக்கிறது. சர்வசக்திமானென்பது எல்லாம் செய்யவல்லவ ராகையால் வேண்டுவார் வேண்டியதீவார் என்னும் நியாயத்தில் ஜீவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி எடுத்திருந்த தேகமிழந்த ஜீவர் கள் நல்லநிலைமையையடையச்செய்வாரென்பது நிச்சயம்.

---

## 15. கடவுள் வழிபாடு.

எண்ணிக்கையில் அதிகப்பட்ட ஜனங்களின் அபிப்பிராயமும் முதிர்ந்த அறிவாளிகளின் அபிப்பிராயமும் உண்மையை உள்ளபடி யுணரும் அதாவது:— யாக்கைநிலையாமை செல்வம் நிலையாமை, என்னும் உண்மையறிவு தோன்றியவர்களிடத்துண்டாகும் அபிப் பிராயமும், கடவுள் இல்லையென்று மனச்சாட்சியை மீறியோ அல்லது தெரியாமலோ உள்ளவர்களிடத்தும் தம்கொள்கை மறந்த சமயத்தில் தானே உண்டாகும் அபிப்பிராயத்திலும் கடவுள் உண்டென தீர்மா னிக்கப்படுகிறது.

எந்தஜீவனும் தான்நினைத்தபடி நடத்திக்கொள்ளவும் தான் என்ற நிலைமையைத் தன்னுடைய சொந்தமாய்ப் பாராட்டமுடியாமல் ஒன்றை நினைத்து அதைமறந்து மற்ருென்றில் பற்றலும் தான் நினைத்து முடிக்கவேண்டு மென்றகாரியத்தை முடிவுபெறச் செய்வ தில் சிலமுடிவையடைந்தும், சிலமுடிவையடையாமலும் நடந்து வரு வதிலிருந்தும் P ஒவ்வொரு ஜீவனும் தேகம்எடுத்ததுமுதல் நாளடை வில் ஏறியும் இறங்கியும் மாறுதலடைந்துவரும் நிலைமையிலும் ஜீவர்களைத்தவிர அவர்களால் பற்றிநிற்கும் உலககாரியங்களும் ஒவ்

---

P ஒன்றைநினைக்கின் அதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன்வந்துநிற்பினும் நிற்கும்
எனையாளுமீசன்செயல். (என்ருர் ஔவையார்)

வொருகாலங்களிலும் புதிது புதிதாக மாற்றமடைந்துகொண்டு வருவதாலும் உலகத்தில் பகல் இரவென்பது தவாமல் கணக்காய் நடந்துவரும் ஓர் ஒழுங்கான வரிசைக்கிரமமும், அதன்மேலும் பருவகாலங்களாய் வேனில்காலமென்றும் அக்காலம் நீடித்திருந்தால் ஜீவராசிகளின் சௌரியம் குறையுமென்றும் அதன்சாந்தியின் பொருட்டு உடனே குளிர்ச்சியைக்கொடுத்தால் கெடுதிநேருமென்ற தன்மையால் காற்றும், அக்காற்றின் உலர்ச்சியையும், வேனிலின் கடூரத்தையும் சுகப்படுத்தும்பொருட்டு மழையும், மழைக்குளிர்ச்சியை நிவர்த்திக்க உடனே அதிக உஷ்ணம் ஆரம்பித்தால் கெடுதியேற்படுமென்று குளிர்சம்பந்தப்பட்ட உஷ்ணமான பனிக்காலத்தையும், அதன் நிவர்த்தியின்பொருட்டு வேனிற்காலமும், ஆக இப்படியே வரிசைக்கிரமமான பருவகாலங்களினால் ஜீவராசிகளின் தேகசௌக்கியத்தையும், அவ்வப்பருவகாலங்களில் உண்டாக்கப்படும் உணவுப் பொருள்களால் ஜீவராசிகளின் தேகவளர்ச்சி முதலிய சௌகரியத்திற்கும் வரிசைக்கிரமமான பருவகாலங்களையும் ஏற்படுத்தப்பட்டு அவ்வரிசையாய் நடந்துவரும் ஒழுங்கும் அப்பால் நானாவித உருவங்களின் அமைப்பும் உண்மையின்சத்து ஒன்றாயிருந்தாலும் பல ஜீவன்களாக அமைத்து தனித்தனி பலவகைப்பட்ட மாறுதல்களும் இன்னும் எத்தனையோ விதமாய்ப் பார்க்கப்பார்க்க ஆச்சரியப்படும்படியானவிமரிசையாயும், மனது எவ்வளவுதூரம் எட்டி வியாபிக்கப்படுகிறதோ அதுவரையிலும் காணப்படுகிற ஒவ்வொரு ஜீவனும் அவ்வவற்றிற்குத் தகுந்தபடி ஏதேனும் ஒரு கட்டுப்பாட்டுடன் தொகுதி தொகுதியாய் அபிப்பிராயமொத்தும் ஒன்றி லொன்று பேதமேற்பட்டால் ஒருகாரணத்தை வைத்து அமைப்பின் வரிசையான ஓர் ஒழுங்கில் திருந்தியும் நடந்துவருவதை ஆராய்ந்து யோசித்தால் ஒருவித ஒழுங்கான நடபடிக்கையில் இவ்விதமான ஒரு கொள்கையாய் நடத்தப்படுவதற்கு ஒருவர் இருக்கவேண்டுமென்பதே தீர்மானத்திற்கு வரும். (ஒருவரென்பது தேவர் மனிதர் முதலாகச் சொல்லக்கூடிய உருவத்தை வைத்துச் சொன்னதல்ல)

இவையெல்லாம் கடந்து இயற்கையால் உலகம் நடந்து வருகிறதென்று சொல்வாருமுளர். ஆனால் இயற்கையென்னும்

பதத்திற்கு சுபாவம் எனப்படும். சுபாவம் என்னும் குணப் பெயர் அது உடையவனை வருவிக்கின்றது. அப்படிப் பார்க்குமிடத்து சக்தி, சக்தியுடையவனென்றும் சக்தி, சக்தனில்லாமல் விளங்காதென்றும், சக்தன் சக்தியில்லாவிட்டால் காரியமாய் பிரத்தியக்ஷமாய்ப் பொருள்படாவிடினும் சக்தன் நிலையுள்ளவனும், கெடுதல், மாறுதல் முதலிய குணமில்லாதவனும், சக்தி, சக்தன் ஆதாரவில்லாமல் தானே இயங்கமுடியாதிருப்பதால் அப்படிப்பார்த் தாலும் சக்தனை ஒன்று என்று சொல்லப்படுகிற உண்மைவஸ்து இருக்கவேண்டியதெனத் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாற்றால் இயற்கை என்னும் குணத்திற்கு ஆக்குணத்திற்கு உடையவன் கடவுளாகக் கருதப்படும். அக்கடவுளென்ற நிலைமை ஒவ்வொருவரும் தம்தம் கல்வி அறிவு ஒழுக்கங்களின் சார்புக்குத் தக்கவாறு இருப்பதாய் நிச்சயப்படுகிறார்கள். கடவுளும் மனிதனும் சில சங்கதியிலும் செய்கையிலும் ஒன்றாய்க்கருதப்படினும் மனிதன் பல திறப்பட்டவனாய் தனக்கு நேரும் காரியம் இன்னதென்று தெரிந்து சுயேச்சையாய் நடத்திக் கொள்வதற்கு இயையாத மனமறதியுடையவனாய்ப் புதிதாய் ஒரு காரியம் செய்யத்தோன்றினாலும் அப்படித் தோன்றும் ஆரம்பகாலத்தில் நினைத்த அக்காரியம் இப்படி முடியச் செய்யலாமென்று நினைத்தபடி நடவாமல்செய்கை மறந்தோ, முயற்சிக் குறைவோ, மற்றெவ்விதமோ தனக்குத்தெரியாது எடுத்த காரியம் முடிப்பதில் முடியும் முடியாதென்று தெரியாத மூடப்பட்ட மயக்கமுடையவனாய், எடுத்த காரியம் முடியாவிட்டால் மறுபடியும் அதில் பிரவேசித்தல், அப்படிப் பிரவேசித்தும் சிலமுடிந்தும் முடியாமலும் பலவுள.

இப்படி மயக்கங்களிலும், தெரியாத்தன்மையிலும் கட்டுப் படாது நிச்சயமாய் இன்னகாரியத்தை இவ்விதத்தில் முடிக்கலாமென்ற அனுபவசாலிகளாயுள்ளவர்களையும் கடவுள் சமானமென்று சொல்லலாமோவெனில், அவ்வனுபவசாலிகளுக்கும், சில காரியங்களில் மன மயக்கமும் தங்களுக்கு நேரும் நன்மையும் கெடுதலும் தெரியாதிருக்கின்றமையால் இவையெல்லாம் கடந்த சர்வசக்திமானென்பவர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பது யுக்தியாற் புலப்படும்.

தவிரவும், மனிதனுடைய நிலைமைக்குத்தக்க சகவாசமும், நடத்தையும், கொள்கையும், அவனுக்கு உண்மையாயும், பிடித்தமாயும் காட்டுவதொழிந்து தத்தமக்கு மேற்போக்கான நிலைமையனுபவமும் பக்குவமும் அஃதில்லாதவர்களிடத்துத் தோன்றுது. சிறுவயதாயிருந்த காலத்து நடத்திவந்த விளையாட்டும் காரியமும் அப்போது சரியான வையாயும் அப்பாற் படிப்பின்காலத்திற் செய்துவந்த காரியங்களும் செய்கையும் அப்போது சரியானவையென்றும் அந் நிலைமைக்கு மேற்பட்டு குடும்பக் காரியத்தின் ஆரம்பத்தில் தான் செய்துவந்த காரியம் சரியானவையென்றும் செய்துவந்த இச்செய்கைகள்யாவும் இவைகளையெல்லாம் கடந்து வயதாகி குடும்பத்திற் பழகினவர்களுக்கு இச்செய்கையில் பிடித்தமின்மையும் அற்பமும் கேலித்தன்மையுமாய் எப்படிக்கருதப்பட்டும் அப்போதுள்ள தன் செய்கைசரியாயும் தோன்றி அவைகடந்து நின்றவர்களால் சொற்பமாகக் கருதப்படுமென்பதறியாமல் தன்தன் நிலைமையிற் செய்யும்செய்கைகளை சரியானவையென்று நடத்தப்பட்டு வருகின்றன. இப்படித் தெரியப்படுகிறஎல்லாவற்றிற்கும் உயர்ந்த நிலைமையாய்எல்லாம் வல்லதாய்ச், சந்தேகமற சங்கற்பித்த பிரகாரம் எல்லாக்காரியங்களும் நடந்துவரச் செய்வதாய், எல்லா ஜீவன்களையும் ஏவப்பட்டு பிரகிருதி யென்னும் இயற்கைச் சக்தியால் உலகம் ஒன்றுக்கொன்று தன்னது தன்னது தன்னதென அபிமானித்து நடந்து வருவதாய்ச் செய்யும் காரண கர்த்தா ஒருவர் உண்டெனவும் தெரியக்கிடக்கின்றன.

ஓர்பொருளையோ, உருவையோ, வீடுமுதலிய கட்டிடத்தையோ உண்டுபண்ணியவன் எதிரில் இல்லாவிட்டாலும், உண்டுபண்ணியவன் ஒருவன் இருத்தல் வேண்டுமெனத் தானேதோன்றுதலானும், இவ்விமரிசையான உலகத்தை உண்டுபண்ணியவர் ஒருவர் இருக்கவேண்டுமெனத்தோன்றும் நிச்சயமான யூகபுத்திகொண்டு அவ்வல்லமைக்கு தக்கவாறு, உலகத்தோரால் கடவுளெனப்பேர் வைத்துக்கொள்ளப் பட்டது. எம்மதத்தினரும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய

நிலைமையுள்ளதும் விவகார மற்றதும், நித்தியமாயுள்ளதும், நிர்க்குண மாயும், எப்பொருளிலும் எப்பொழுதும் எங்கும் நீக்கமற்று இன்றி யமையாததாய் அவையில்லாமல் ஒன்றுமில்லாத தன்மையுள்ளதாய் வியாபித்திருக்கும் தன்மையுள்ளதான பொருள் ஒன்றே. அப் பொருளை அத்தன்மையாய்ப் பார்த்து அடைந்து பிரிதொன்றில்லா மல் ஜீவபோதங் கெட்டுத் தான் இல்லை □ அஃதுள்ளது என்று அனுபவிக்கும் உணர்வே பிறப்பின்மையாய்விடும்.

அந்நிலைமையடைவதற்கு அதைப்பற்றித் தான் என்பதற நிற்கும் (நிர்மலாந்தக் கரணமும்) பரிசுத்தமான அந்தக்கரணமும், அதில் இடைவிடாப் பழக்கமும் உள்ளபக்குவிகள் அதற்குத்தகுந்தவர்கள். இந்நிலை அவ்வஸ்துவை யடைவதின் அடுத்தபடி (இவைஞானம் எனப்படும்) இந்தப்படியை யடைவதற்குத் தகுந்த சாதனமான (சித்தசுத்தி) தெளிவான சித்தத்தை அடைவதற்கும் ஒரு சாதனம் வேண்டும். இந்த சித்தசுத்தி யென்பது எல்லாஜீவர்களும் ஒரேவித மாயடையும் அப்பியாசம். இதை அடைவதற்கு ஏற்பட்ட சாதனங்கள் தான் பலவகைப்பட்ட சித்தங்களாயுள்ள ஜீவன்களுக்குத் தக்கவாறு

---

□ தன்னுள்விகற் பித்தெழுந்த விகற்பம் போகில்
தவிர்ந்திடும் மாயையில் பயனேர் சற்றுமில்லை
இன்னவகைத் தோருண்மை யியம்பவேண்டும்
யாவர் மயக்கமு மாற்று மிறைவவென்ன
மன்னனதற் குரைசெய்வான் முனிவ நீயே
மதித்துணர்ந்தும் பிதாவுரைக்க மறுத்துங்கேட்டாய்
அந்நிலையே நிச்சயமிங் ககண்ட ஞான
ஆகாய புருடனுள னயலொன்றில்லை—என்னும்

ஞானவாசிட்டம் சுகர்கதை செய்யுள் 17

கைத்தலம் விளங்குமொரு நெல்லியங்கனியெனக்
கண்டவே தாகமத்தின்
காட்சி புருஷார்த்தமதின் மாட்சிபெறு முத்தியது
கருதினனு மானமாதி
யுத்திபலவாகிருவி கற்பமேலில்லையா
லொன்றூே டிரண்டென்னவோ

பலவிதமாய் ஏற்படுகிறது. இந்தச்சாதனங்கள், அதாவது மனம் நிர்மலம் அடைவதற்கு வெவ்வேறு அனுஷ்டானங்களும் மதக்கொள்கைகளுமாகத் தத்தமக்குத் தோன்றியவாறு எவ்விதத்தில் மனது நிர்மலம் அடைவதற்கு சாத்திய மானவைகளோ அவ்விதத்தில் மேற்சொன்ன உண்மையையடைந்த பெரியோர்களால் சமஸ்கிருதபாஷையில் வேதமென்றும், ஆகமமென்றும் தமிழ்ப்பாஷையில் முன்னிருந்து இறந்தவைபோக எஞ்சி நின்ற தேவாரம், திருவாய்மொழி, திருவாசகம், புத்தநூல்கள், முதலியவைகளும் உருதுபாஷையில் குர்ஆன் என்னும் வேதமும், இங்கிலீஷ் பாஷையில் பைபிள் என்றவேதமும் இன்னும் பலபல தேசங்களிலுள்ள பாஷைகளிலும் அவ்வப்பாஷைகளுக்குரிய பெரியோர்களால் மேற்சொன்ன உண்மையடையும் சித்தசுத்தியடைவதற்குத் தகுந்தசாதனங்களே எழுதப்பட்டிருக்கின்றன. அச்சாதனங்களில் பெரும்பாலும் மனமடங்கி மயக்க நிலைமைகெட்டு தெளிவை
S யடைவதற்காக மனத்தின் வெளிப்போக்கைத் தடுப்பதற்கு செய்யப்படுவனவாகிய கிரிகைகளும், வாயுவையடக்கும் யோகமும்,

---

உரையுமில்லை நீயுமில்லை நானுமில்லை யென்பது
முபாய நீயுண்டு நானுஞ்
சித்தமுள நானில்லை யெனும் வசன நீயறிவை
தெரியார்க டெரிய வசமோ
செப்புகே வலநீதி யொப்புவமை யல்லவே
சின்முத்திராங்க மரபிற்
சத்தமற வெனையாண்ட குரு மௌனிகை யினற்
றமியனேற் குதவு பொருளே
சர்வபரி பூரண வகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே.
(என்றார் தாயுமான சுவாமிகள்.)

S சித்தந்தெளிந்து சிவமானாரெல்லார்க்கும்
கொத்தடிமையான குடிநான்பராபரமே—எனவும்
சிற்றரும்பன சிற்றறிவாளனே தெளிந்தால்
மற்றரும்பென மலரெனப்பேரறிவாகிக்
கற்றரும்பிய கேள்வியால் மதித்திடக்கதிச்சீர்
முற்றரும்பிய மௌனியாய்ப் பரத்திடைமுளைப்பான்
எனவும் தாயுமானவர் வாக்கு.

சிறந்தசாதனங்களாய் எம்மதத்திலும் எக்கொள்கையிலும் ஒப்புக் கொண்டு சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனால் கிரியை என்று சொல்லப்படுவது தேகமும், மனதும் ஒன்றுபட்டு மனது போனபோக்கில் இழுத்துச் செல்லாமல் தான் என்னும் உணர்ச்சி யேற்பட்டு மனதும் தேகமும் வசப்படுவதற்கு முதலில் வெளித்தோற்றமான கிரியையிற் பயின்று வெளிவிஷயங்களை விலக்குவதும், காமக்குரோதம், லோபம், பேதம், மோகம் முதலிய குணங்களைத் தடுப்பதின் பழக்கத்தினால் ஏற்படும் நற்செய்கையையும் சிற்சில சமயங்களில் கிரியையாக ஒருவாறு நினைக்கத்தகுந்ததாகும்.

இக்கிரியைகளும் உண்மைவஸ்துவை உள்ளபடியுணரா விட்டாலும் மேற்சொன்ன உண்மையைத் தன்னிலைமைக்குத் தக்கவாறு கடவுளைனத்தியானித்து மன ஒருமைப்பாடாகப் பழகுவது. மனதை மாத்திரம் தனிப்படுத்தி அதன் சொரூபமான வெளிப்போக்கைத் தடுத்துக் குறைத்து கடவுள் வழிபாட்டில் செலுத்தி பழக்கி மனதின் சொரூபத்தைக் குறைத்து நிர்மலமாக்குவது கொஞ்சம் உயர்ந்தபடி யாய்ச் சொன்னாலும் அந்தப்படியில் ஆரம்பகாலத்தில் நிற்பது மிக சிரமமாகவும் பெரும்பாலாரான ஜீவர்கள் அப்பியாசிக்கமுடியாததுமாகும். என்பதை வைத்துகடவுளின் ஞாபகத்தின் வெளித்தோற்றமாயுள்ள கிரியையும் அக்கிரியையோடொத்த மனதும் சேர்ந்து வேலை செய்தால் ஒன்று நில்லாவழி யொன்றை நிறுத்தி தொடர்ச்சியான ஞாபகப்பழக்கத்தால் மனத்தடையை யனுஷ்டித்துவர சாதகமாயிருக்கும் என்று வெளிக்கிரியையும் சில மதஸ்தர்களால் செய்து வரப்படுகிறது. எப்படி சிரமப்பட்டாயினும் அந்தப்பழக்கத்தை விடாது கொண்டுவந்தால் மேற்சொன்ன மனதை மாத்திரம் பழக்குந் தன்மை சில சமயத்தில் விசேடித்ததாகும்.

இவ்விதத்தால் உண்மையையடைந்து உலகில் பிறவாத்தன்மையை யடைவதற்கு சிறந்த சாதனங்கள் கடவுள் வழிபாடெனத் தீர்மானிக்கற்பாலது

அக்கடவுள் வழிபாடு தானேசெய்து தன் மனத்தைத் திருத்துவதொழிந்து தன்பசிதணியப் பிறரைச் சாப்பிடச் சொல்வது எவ்வ

ளவு பேதமையும் பசிதணியாத அனுகூலமின்மையும் ஆகுமோ அது போல, பிறரைக்கொண்டு கடவுள் விஷயமான எந்தக்காரியமும் செய்தல் அனுகூலமின்மையும் கடவுளை அலட்சியம் செய்ததுமாகும்.

## 16. பாஷை

கடவுள் இயற்கையில் சிருட்டிக்கப்பட்டிருக்கிற பலபல தேசங்களும் அதிலுள்ள ஜீவர்களும் ஒவ்வொன்றும் அதனதன் இருப்பிடத்திற்கும், உணவிற்கும், வசிப்பிற்கும், விருத்திக்கும் தக்கபடியாயிருக்கிறது. அப்படியுள்ள இயற்கையமைப்பில் அதனதன் அமைப்பிற்குத் தக்கபடியிராமல் எந்தக்காரணம் கொண்டாவது நாளடைவில் மாறுதலடைந்தால் உண்மையியற்கை கெட்டு செயற்கைக்கு வந்துவிடுகிறது. மனிதச்செயற்கைக்குக் கட்டுப்படாத இயற்கை வஸ்துக்களை அதனதன் சொரூபத்தில் அவ்வவற்றில் ஏற்படும் விருப்பப்படி அனுபவித்தால் இயற்கை ருசியும் அனுபவத்தால் ஏற்படும் இன்பமும் தானே கிடைக்கும். அப்படியில்லாவிடில் கன்னிகையநுபவ உணர்வேயாம்.

ஒவ்வொரு தேசத்திலும் உண்டாகின்ற விளைபொருள்களால் உணவும், அவ்வுணவால் . புத்தியும், புத்தியால் அறிவும், அறிவிற்குத் தக்கவாறு முடிவையும் அடையும். பலவித சிருட்டியென்ற இயற்கை முறையில் ஒன்றை மற்றொன்று இச்சித்துத் திருப்தியடைய ஏற்பட்டிருக்கும் இயற்கை வசத்தால் உணவு முதலியனபோலப்பாஷைகளும் பலபடித்தாயுள்ளன. பாஷைகள் பலவிதமாயிருந்தபோதிலும் ஒழுக்கத்திற்குத்தக்கபடி அபிப்பிராயம் ஒன்றாயுள்ளன. எங்கெந்த இடங்களில் எது இயற்கையாய் எளிதாய் அடையப்படுமோ அதை ஒவ்வொரு தேசத்திலும் தேசத்திற்குத்தகுந்தவாறு பாஷைகளும் கொள்கைகளும் ஏற்பட்டு அனுபவித்து இயற்கையின்பத்தால் திருப்தியடையப்பட்டுவந்தன. (வருகின்றன)

முற்காலத்தில் திருவேங்கடம் (திருப்பதி) வடக்காய் அதற்கு நேர்பாகமாய்த் தெற்கே கடலும், மேற்கே கடலும், கிழக்கே கொழும்பு, யாழ்ப்பாண முதலிய தேசங்கள் வரம்பாக சேர சோழ பாண்டிய அரசாங்கத்திற்குட்பட்ட தேசங்கள் தமிழில் ஆதிக்

கம் பெற்று தமிழுக்கிருப்பிடமாய்ச் சொல்லப்படுவதுபோல திருப்பதிக்கு வடபாகங்களில் தெலுங்குதேசமாகவும் அப்பால் கன்னடம், ஹிந்தி, மாராடா, உருடுமுதலிய பாஷைகள் வழங்கக்கூடியவைகளாய் ஒவ்வொரு பாஷைகளுக்கு எல்லை குறிக்கப்பட்டதேசங்களாய் ஹிந்து சமண, இஸ்லாம், கிருஸ்து முதலியபல் கொள்கைகளிருந்தாலும், அவ்வப்பாஷைகள் விளங்கும் தேசங்களில் அவ்வப்பாஷையே அதன தன் இயற்கைச் சொரூபப்படி கலப்பென்னும் நோயில்லாதனவாய்த் தன்னிச்சைப்படி விருத்தியாய்ச் செழித்தோங்கி நின்றன.

இக்காலத்தில் பலபாஷைப்படிப்பால் ஒருபாஷையையாவது நன்ருய்க் ○ கசடறத் தெரிந்து முடிவையடைய முடியாமலும் அவ்வப் பாஷை விருத்தியாவதற்குத்தகுந்த முதிர்ந்த படிப்பாளிகளுமில்லாமலேற்பட்டு விட்டது. ஆனல் சமஸ்கிருத பாஷைமட்டும் ஒரு தேசத்தின் சொந்தபாஷையில்லாததால் யாரும் குழந்தைப்பருவத்திலிருந்தே சாதாரணமாய்ப் பேசிப்பழகும் வழக்கமில்லாது படித்துத் தெரிந்துகொள்ளக்கூடியதாய் உபயோகப்பட்டு வருகிறது. உற்று யோசிக்குமிடத்து அச்சமஸ்கிருதபாஷை இவ்விந்தியாவில் முற்காலத்திலிருந்த அறிவாளிகளால் எல்லாமதக் கொள்கைகளும் முடிவில் ஒன்றென்று விளக்கியும், ஒரே உண்மையான பொருள் பலதிறப்பட்டு நிற்கும் வித்தை எடுத்துக்காட்டியும் மதத்திற்கு அதீதமாய் விளங்கும் குணாகிதமான வஸ்துவை மாத்திரம் சொல்லாமல் சொல்லிக் காட்டும் தாத்ததாயும், ஆரம்ப அப்பியாசத்திற்கு உபயோகப்படாததாயும், எல்லாபாஷைகளுக்கும் பொது அபிப்பிராயம் உள்ளதாய்ப் படிப்பளவில் உபயோகப்படும் பாஷையாய் ஏற்படுத்தப்பட்டதென நிச்சயிக்கப்படுகிறது. ஒவ்வொரு மதமும் தனக்கு ஏற்பட்ட பாஷையிலுள்ள நூல்களை ஆதாரமாய் வைத்துக்கொண்டு தன்தன் கொள்கைப்படி ஏற்பட்டுள்ள நேரான ஒரேவழியிற் சென்று முடிவைக் காட்டியிருக்கின்றன. அம்மதத்தை யநுட்டிக்கிறவர்களும், அதன் வழிதவராமல் மற்றெந்தக் கொள்கையும் கவனியாமல் தம்மதத்திற்குச் சாதனங்களைக் காட்டும் தம் சொந்தபாஷைநூலிற் சொல்லுகிறபடி தவருமல் நடந்து இயற்கையுண்மையை யடைந்து வந்தார்கள்.

---

○ கற்கக் கசடறக்கற்பவை-கற்றபின்-நிற்க அதற்குத்தக.
என்பது திருக்குறள்

இப்பால் காலமாறுதலின் காரணத்தால் மதத்தின் உண்மையைக் காட்டும் ஒவ்வொரு பாஷை நூல்களும் ஆதரிப்பாரற்ற நிலைமையில் நாளடைவில் அந்தந்த பாஷையின் சொந்த அமைப்பில் உண்டாக்கப்பட்டிருந்த சமயநூல்களும் பொதுநூல்களும் இருந்த இடம் தெரியாமல் மறையவும், பொதுவான சமஸ்கிருத பாஷையில் ஏற்பட்டு ஒருவழித்தாய் ஒரே நோக்காய்க்கொண்டு முடிவைக்காட்டும் கடவுட்டலைமை குறிப்பிடாத மதக்கொள்கையில்லாததான அத்வைத முடிவிற்குத் தகுந்ததாயும், நாளடைவில் சில சுயநலத்தாரால் சில நிமித்தம்பற்றிச் சேர்க்கப்பட்டுள்ள விஷயங்களடங்கியதுமான சமஸ்கிருத இராமாயணபாரதம் முதலிய சரித்திரங்களைத் தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பரவச்செய்ததால் சொற்பமாயிருந்த சொந்த பாஷையின் நூல்களும் அந்தநூலை அநுசரித்து அவ்வழி நடந்து நின்ற மதக்கொள்கைகளும் இழந்து, நான் அதுவாய் இருக்கிறேன், என்ற அநுபவ உணர்வைக்காட்டும் அத்வைதத்தையும் ஆண்டான் அடிமைத்திறத்தால் கடவுளை வழிப்பட்டு அவனுடைய அநுக்ரஹத்தால் உண்மையுணர்வை யடையும் த்வைத விசிஷ்டாத்வைதத்தையும் ஒன்ருய்க் குழப்பி நினைப்பளவிலும் பேச்சளவிலும் வைத்துக்கொண்டு ஒருநிலைப்பட்ட கொள்கையில்லாதவர்களாய் மயங்கி இதுவோ அதுவோ இதுவும் அதுவும் சேர்ந்ததுதானே வென்று திகைத்துக்கொண்டு பகுத்தறியும் ஞானமில்லாமல் வெளித்தோற்றத்தின் நடபடிக்கையாய் மேற்சொன்ன அத்வைதத்வைதமான இரண்டும் கலந்ததான கர்மானுஷ்டானங்கள்தான் (மோக்ஷம்) முடிவான உண்மையென்று இப்பந்தியாய் இரண்டிலும் சேராததாய் நிற்க ஏற்பட்டது.

ஆனால் பழையதை முன்னிருந்த மாதிரியில் அநுஷ்ட்டிக்க நினைத்தல் முடியாமற்போனாலும் முன்னிருந்தவையால் ஏற்பட்டிருக்கும் பிரயோசனத்தை நினைத்து அப்பிரயோசனமடையுமுகத்தால் கூடுமானவரை காலத்திற்குத்தகுந்த முறையில் 'ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதவசியமாகையால் புதியமுறையில் ஒவ்வொருவரும் தன் தன் தாய்ப்பாஷையை விருத்திபண்ணிக்கொண்டு அப்பாஷையிற் சொல்லப்படுகிற அநுஷ்ட்டானத்தைக்கொண்டு உண்மையடைவது

தான் மிகச்சிறந்ததும் சந்தேகமற்ற அநுபவமுடையதுமாகும் T அஃ தில்லாமல் தனக்கென ரத்தத்திலூறப்பட்டு அவ்வுணர்ச்சியிலேற்படும் தெளிவாயும், லகுவாயும்வரும் தன் தாய்ப்பாஷையும் மற்றபாஷையும் ஒன்றெனநினைத்துச் சிறுவயதிலிருந்தே பலபாஷைப் பயிற்சியில் நின்றால் ஒன்றிலும் முதிர்ந்தபடிப்பில்லாமல் குழப்பப்பட்ட சித்தத்துடன் நிச்சயபுத்தியில்லாமல் வாணாள் செல்கின்றன.

ஒருவழிப்பட்ட மனதையடையும் உணர்ச்சிக்கு ஒரே பாஷைப் படிப்பின் முதிர்ச்சியான அப்பாஷையின்கொள்கை முடிவையடையும் பக்குவத்தில் உண்மை ஞானமுண்டாகிறது.

உண்மை ஞானமுண்டானதின் பிறகுளல்லாம் ஒன்றாய் விளங்கும் நிச்சயம் திடப்படும் பொருட்டு உண்மையநுபவம் எல்லா பாஷையினும் இருப்பதைத்தெரிந்து கொள்ளும் கலங்காத பேரறிவினால் பலபாஷைகளையும் படித்தல் விசேஷமாகும் “நூல்பலகல்” என ஔவையார் வாக்கியம் ஒரே பாஷையிலுள்ள பலநூல்களைப்படியென்ற அபிப்பிராயமாயினும் மேற்சொன்ன உண்மையறிவாளிகள் நிச்சயத்தின் பொருட்டுப்பலபாஷைநூல்கள் படிக்கவேண்டுமென்பது சந்தர்ப்பத்திற் கேற்றபடி ஒருவாறு பொருந்தும்.

ஆகையால் சிறு வயதில் தன் தாய்ப்பாஷை நூல்களை நன்றாய்ப் படித்துப் புத்தி நிச்சயமேற்பட்டபிறகு வேண்டுமானால் மற்ற பாஷைகளில் அவசியமாயுள்ளவைகளைத் தெரிந்து மற்ற சாதனங்களுக்கு உபயோகப்படுத்தவேண்டுவதொழிந்து ஆரம்பத்திலிருந்தே பல பல பாஷையைப்படிக்கச் செய்துவருதல் படிப்பினலடையும் பிரயோசனக் குறைவென்பதைத் தெரிந்து தற்காலத்திய கல்வி இலாகா இவ்விஷயத்தில் கவனம் செலுத்தினல் கல்வியிற்சிறந்த பலனைக்கொடுக்கும்

இயற்கையில் அந்தந்த பாஷையில் எழுதப்பட்டிருக்கும் நூல்களை அந்தந்தப்பாஷைப்பாடமாகவும் இதர பாஷையிலிருந்து மொழி

---

T கற்றதனாலாய பயனென் கொல்-வாலறிவ
னற்றாடொழா ரெனின் என்பது திருக்குறள்
கற்றுமென்பயன் கற்றிடு நான்முறை
சொற்றசொற்கள் சுகாரம்பமோ-நெறி
நிற்றல்வேண்டும் என்றார் தாயுமானவர்.

பெயர்க்கப்பட்ட நூல்களைப் பாடம்வைப்பதை விலக்கியும் நடத்திவருவதை திட்டமான சட்டமாய் ஏற்படுத்தி அப்படி நடந்துவருவதையும் கவனித்து வருதல் நன்மை.

---

## 17. எல்லாமதமும் ஒன்றே.

உலகிலுள்ள மதமென்பன வெல்லாம் பெரும்பாலும் கடவுளையே தலைமையாகக்கொண்டு நிற்கின்றன.

கடவுள் நிலைமையை எல்லாமதத்தினரும் ஒன்ருக நிச்சயிக்கிருர்கள்

ஒவ்வொருமதத்திற் சொல்லப்படும் கடவுட்டன்மையில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் ஒழுங்கு முறை ஒன்றுக்கொன்று சொற்பவித்தியாசமாய்த் தென்படினும் அருட்செய்கைகளெல்லாம் ஒன்ருயிருக்கின்றன.

படைப்பில் முதலாகச் சொல்லப்படும் ஜீவர்களான மனிதர்கள் முதலியவர்களுக்கு ஒரே அந்தக்காணம். (அதாவது மனது, புத்தி, சித்தம், அகங்காரம்) அவற்ருல் செய்யப்படும் வேலைகள் நடந்து அநுபவிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் உள்ளும் புறமுமுள்ள யாவும் சேர்ந்த மெய், வாய், கண், மூக்கு, செவியென்று சொல்லப்படும் ஞானேந்திரியமும் கைகால், முதலாகச் சொல்லப்படும் கர்மேந்திரியமும் எல்லாருக்கும் ஒன்றே.

ஜீவர்களின் மனதாலும் இந்திரியங்களாலும் அநுபவிக்கிற அநுபவமென்பதும் ஒன்றே.

மனதும் இந்திரியமும் சேர்ந்து தொழிற்படும்போதுள்ள (ஜாக்கிரம்) நனவு என்பதும் ஓய்ந்து தூங்க ஆரம்பித்துத் தூங்கும் முதல் தூக்கத்தில் ஏற்படும்மனதின் வேலையான சொப்பனம் என்பதும் அப்பால் நன்ருய்த்தூங்கும் மெய்மறந்த தூக்கம் சுழுத்தியென்பதும் எல்லாருக்கும் ஒன்றே பலபலவிதமான நடபடிக்கைகளும் அநுபவச்செய்கைகளும் தனித்தனி யென்று பேதப் படக்கருதினும் இந்திரிய அநுபவவுணர்ச்சியில் பேதமில்லாமல் ஒன்ருகவேயிருக்கின்றன.

இப்படிநன்ருய் ஆராய்ந்துபார்க்குமளவில் இவ்வுலகமெல்லாம் ஒரே வஸ்துவின் தன்மையில் விளங்குவதெனச்சந்தேகமறநிச்சயிக்கலாம். இந்த நிச்சயம் சொற்ப தெளிவுள்ளவர்களிடத்தும் சிற்சில சமயம் தோன்றி மறையும்.

இவ்விதத்தில் சந்தேகமற எல்லா ஜீவர்களும் ஒன்ருயிருந்தாலும் ஒரே அபிப்பிராயமும் ஒரே அநுபவமும் ஒரேவிதமான மற்ற அநுஷ்டானங்களும் உடையனவாய் ஒரே உருவத்துடன் கூடியுள்ள சமத்துவமான மற்ருெரு ஜீவனும் உளதாவெனப் பார்ப்பதரிதாயிருக்கிறது.

ஆனுல் உலக நடைபெறும் விஷயத்தின் இயற்கை வசமாய் ஒத்துமைப்பட்ட கக்ஷியும் பிளவுபட்ட கக்ஷியுமாய்த் தன்னையறியாமலுண்டாகும்பொது நோக்கம் தனித்த ஜீவத்தன்மையில் சமமான அபிப்பிராயமெனக் கருதல் கூடாது.

நம்மால் பார்க்கப்படுவதும் கேள்விப்படுவதுமான எண்ணிக்கையளவுகடந்த எல்லா ஜீவராசிகளும் சமத்துவம் பொருந்தியதான சிருஷ்டியாயிருப்பின் உலக இயக்கமில்லாமற் போய்விடுமென்றும் சமத்துவமில்லாமல் ஒன்றுக்கொன்று மாறுதலாய் முரண்பட்ட சிருஷ்ட்டியாயிருந்தால் தனித்தனி தொழிலையும் தொழிற்றலைவர்கள் பலரென்னும் கொள்கையும் அவற்றிற்கு மேலும் உயர்வு கற்பித்துக்கொண்டு மேலும் மேலும் முடிவில்லாததாய் ஒரு நிலையில்லாமல் குழப்பத்தில் நின்ருல் உண்மைச்சொரூபம் அடைவது கஷ்ட்டமென்றும் வஸ்துவின் மகிமையால் (திருவருளால்) உண்மை கெடாமலும், இயற்கையிலேற்பட்ட மயக்கத்தால் வெவ்வேறு பேதத்தோற்றமான உலகமாயும் விளங்குகின்றன.

நிற்க, சாந்தியென்ருே, முத்தியென்னும் முடிவென்ருே, பரிபூரணமென்ருே, சொல்லப்படும் ஒவ்வொரு மதங்களின் முடிவையடைவதற்கு பரிசுத்தமனதென்ற சித்தசுத்திதான் முடிவாயுள்ள சிறந்த சாதனம். அந்த சித்தசுத்தி யடைவதற்குப் பல சாதனங்களிருந்தா

னும்○ 1 பொய்; 2 கொலை; 3 களவு; 4 கள்; 5 காமம்; என்னும் பஞ்சமா பாதகங்களினின்றும் விலகி நிற்றல் சிறந்த சாதனமென எவ்விதத்தை வைத்தாகிலும் எந்த மதமும் ஒரே அபிப்பிராயத்துடன் ஒப்புக்கொள்ளும். எவ்வாறெனில்:—

1. பொய் சொல்ல நினைத்தால் நடந்த சங்கதி தெரிந்ததாய்த் தடுத்துக்கொண்டிருக்கும் மனச்சாட்சியை உதறித் தள்ளியும் கள்ளத்தனமாகக் கெடுதியைப் பிறருக்கு விளைவிக்கக்கூடிய தாயுமுள்ள பல மறைவுடன் கூடியவனுயிருக்கிறன். பொய் சொல்லக்கூடாதென நினைக்கிறவனே மனச்சாட்சி யென்ற தன் உண்மை நிலையில் ஒரே நோக்காய்க் கள்ளங்கபடில்லாமல் தனக்கு ஏற்பட்டிருக்கும் சலனமில்லாத சந்தோஷமுடையவனுயிருக்கிறன்.

ஆனல் சிற்சில சமயத்தில் அசந்தர்ப்பமாய் ஆபத்தான இடங்களில் நன்மைமையைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் மட்டும் ஒருவாறு உபயோகப்படுத்தலாம் என்று ஒவ்வொரு நல்லவிஷயங்களின் கட்டுப்பாட்டைப் படிப்படியாய்க் கொண்டுவரும் பயிற்சியில் நல்ல பழக்கத்தை அப்பியாசித்து உறுதிபண்ணிக்கொள்ளும் முறையில் பெரியோர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் கடினமாய்ப் பிடிவாதமில்லாமலும் பகுப்புள்ள அறிவுகொண்டு தெரிந்து நடந்துவருவதற்குமே ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக:— ஒரு மனிதன் நிற்குமிடத்திற்குச் சமீப வீட்டில் மற்றொரு மனிதன் ஓட்டமாய் ஓடிவந்து நுழைந்துகொள்ளுகிறன். அவனைப் பின்பற்றி அவனைத் தெரியாத தூரத்திலிருந்து அவன் வந்த திசையை நோக்கி மற்றுமொருவன் கொலைசெய்யும் நோக்கமாய அதற்குத் தகுந்த ஆயுதத்துடன் வந்து எதிரில் நிற்கும் மனிதனை ஓடிவந்தவன் எங்கு சென்றனென்று கேட்டால் அச்சமயத்தில் சங்கதியை மறைத்து எங்கு சென்றனேவென்று சொல்வது பொய்யாகாது. அக்கருத்தைவைத்

---

○ சேய்மையண்மையில்தனக்குறு துணை யெனச்சிறந்த
வாய்மையாலகம்தூய்மையாம்மற்றிலைபுறத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற்சொல்லின்வேறுளதோ
நோய்மை செய்யினும்-வாய்மையே நோன்பெமக்கறிதி

என அரிச்சந்திரபுராணம்

தே "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த--நன்மை பயக்கு மெனின்" என்றார் நாயனார். அக்கருத்துப்பற்றியே நல்ல அநுஷ்ட்டானங்கள் எல்லாவற்றிற்கும் விதிவிலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்பதை அறிவாளிகள் யாவருமுணர்வார்கள். அக்கருத்தை வைத்துச் சமயம்போல் பொய் சொல்லச்சொல்லியிருப்பதாய் நினைத்துக்கொண்டு எல்லாச் சமயங்களிலும் பொய் சொல்லத்துணிவது நற்கொள்கையை மீறியதும் சுயநன்மையின் விருப்பமும் அறிவின்மையும் நல்லது கெட்டதெனத் தெரியாத முரட்டுத்தனமுமாகும்.

2. கொல்லாமை என்று சொல்லப்படுவதும் முற்பிரிவிற் சொன்னபடி தயவென்னும் குணத்தால் கடினத்துவம் நீங்கிய இரக்கத்தின் மூலம் மனது பரிசுத்தமடையச் செய்கிறது. ஒரு பிராணியின் தேகத்தில் ஏற்பட்ட தேககஷ்ட்டத்தினாலாவது மனத்தின் கஷ்ட்டத்தின் மூலமாவது வெளியில் அவஸ்தைப்படுவதைப் பார்த்தால் மனச்சாக்ஷியுள்ள யாவரும் உருகுவார்கள். (அதாவது அக்கஷ்டத்தைப் பார்த்துத் தாங்களும் கஷ்டமடைவார்கள்) நாடகமாக நடத்தப்படும் அரிச்சந்திர நாடகம் மயானகாண்டத்தில் நடிக்கும் சந்திரமதி வேஷக்காரன் இன்னாரென்று உருப்படிதெரிந்தும் கஷ்ட்டப்படுவதாய்க் காட்டும் நிலைமையில் அங்குகூடியுள்ள ஜனங்கள் தங்களையறியாமேல உருகிப்பரிதாபங் காட்டுவார்கள்.

தவிர, எப்பிராணிக்காயினும் ஆபத்து நேரும் சமயத்தில் எதிரில் பார்த்துக்கொண்டிருக்கிற எந்தமனிதனுக்கும் அவ்வாபத்தினின்றும் விலக்கிவிடும் (தயை) இரக்கம் என்னும் குணம் தன்னையறியாமலே ஏற்படுகின்றன. ஆனால் தானென்ற குணத்தால் சத்துருவென்ற தன்மையிலோ தின்னவேண்டுமென்ற உணவுப்பிரியத்தாலோ மனச்சாக்ஷியிலேற்படும் இரக்கம் என்ற குணத்தை நிராகரித்துத் தள்ளுகிறான்.

தன்னைக் கொல்ல நினைக்கும் சத்துருவைக் கொல்வது மனித சுபாவத்திற்கேற்ற பொதுக்கொள்கையில் கொலை யெனக்கருதக் கூடாததாயிருக்கிறது.

தனக்கு இடஞ்சல்செய்து இம்சிக்கும் பிராணிகளைக் கொல்லாமல் அப்புறப்படுத்துவது மனிதனுக்கு உயர்வான பொறுமை, அன்பென்னும் பெருங்குணங்களாகும். அப்படி அன்பென்னும் பெருங்குணம் ஏற்படாததால் அதைக் கொன்று அப்புறப்படுத்த நினைப்பது மனிதனின் கடுமைக் குணமாதலால் அச்செய்கையும் கொலையேயாம்.

தனக்கு யாதொரு கெடுதியும் இடைஞ்சலும் செய்யாத ஆடு முதலிய ஜீவன்களைத்தன்னுடைய சொற்ப ஆகாரத்தினிமித்தம் வேண்டுமென்று அறுத்தோ அடித்தோ தின்னநினைப்பதுதான் கொலையென்று சொல்வதற்குத் தகுந்த நேரானசெய்கையாகும்.

மற்றும் மனிதனைக்கொல்வது மட்டும் கொலையென்றும் மற்ற ஜீவப்பிராணிகளைக் கொல்வது கொலையால் ஏற்படும் பாபத்தைக் கொடுக்காதென்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அவ்விஷயத்தை மதக்கோட்பாடென்றுவது தின்னும் விருப்பத்திற் கென்றுவது ஒருவிதக்கட்டுப்பாட்டை நினைக்காமல் மனச்சாக்ஷியுடன் யோசித்தால் எவ்விதத்திலும் கொலையென்பது எப்பிராணிகளிடத்தும் ஒன்றென்றுதான் நிச்சயிக்கத்தோன்றும்.

கொல்லப்படும் பிராணிகளுக்குத் தன்னைக் கொல்வது தெரியாதென்ற நியாயத்தாலோ, மனிதனைப்போல உணர்வில்லை யென்ற நியாயத்தாலோ, மதக்கொள்கை யென்ற நியாயத்தாலோ ஒருபிராணியைக் கொன்று தின்ன நினைப்பது மேற்சொன்ன நியாயங்களுக்கு முற்றிலும் விரோதமாகிறது.

எவ்வாறெனில் தன்னைக்கொல்லப்படுவதைத் தெரியாமலிருக்கிற குழந்தை முதலிய மனிதவர்க்கங்களையும் நல்ல உணர்ச்சியில்லாத மிருகத்தைப் போன்ற மனிதவர்க்கத்திற் சேர்க்கை பெறுததன்மையுள்ளவர்களையும் கொன்று தின்பதில்லை. மதக்கொள்கையில் ஆடு முதலிய பிராணிகளை மனிதன் ஆளும் சக்தியுடையவனுகச் சொல்லி

ஒப்புவித்திருப்பதால்லாமல் தன்னிடம்ஒப்புவித்திருக்கும் அவற்றைத் தானேயடித்து (அறுத்து) த்தின்னவாவது பிறருல்கொலை செய்யப் பட்டதாய் நினைத்துக் கொண்டு, பிறர் கொண்டுவரும் ஊனைத்தினன் வாவது சொல்லவில்லை. ○

சில மதங்களை அம்மதத் தலைவர்கள் பரவச் செய்யும் காரண மாகப் பலபல தேசங்களிற் சென்று பிரசாரஞ் செய்யுங்காலத்தில் அவ்வத் தேசத்திற்குத் தகுந்ததாய் இன்றியமையாத உணவான மாமிசம் சாராயம் முதலியவற்றை விலக்கி யநுஷ்டிக்கச் சொன்னல் அவர்கள் தம் மதத்தில் சேர விரும்பார்களென்றும் படிப்படியாய்த் திருத்திவிடலாமென்றும் மதத்தை விருத்திபண்ணும் காரியத்தில் மதத்தின் உண்மைக் கொள்கையைச் சமயம்போல் உபயோகப்படுத்த லாமென்னும் கடவுளாணையை வைத்துத் தேசத்திற்குத் தக்கவாறும் சில மதப்பத்தர்களின் பக்தியை வெளிக்காட்டுவதற்காகவும் ஒருவாறு சொல்லப்பட்டிருப்பதைப் பெரும்பாலும் அத்தேசத்திலிருந்துவந்த வர்களின் சேர்க்கையாலும் இத்தேசத்து ஜனங்களின் ஊன் தின்னும் இயற்கை விருப்பத்தாலும் ஊன் தின்னலாமென்பதைச் சாஸ்திரத்

---

○ கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் என்றூர் நாயனர்.
கொல்லாமல் கொன்றதைத் தின்னமற் குத்திரம் கோள்களவு
கல்லாமல் கைதவரோடிணங்காமற் கனவிலும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே
என்றூர் பட்டணத்தார்

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்குணமொன்று மொன்றி லேன்பாற்—கோரமெத்தனை பக்ஷபாதமெத்தனை—வன்குணங்களெத்தனை
என்றூர் தாயுமானவர்

கிறிஸ்துமத சத்திய வேதமென்னும் பைபிளில் மோசே எழுதின முதலாம் ஆகமமாகிய ஆதியாகமம் 1-ம்அதிகாரம் 27-வது பிரிவு. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷடித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். 28 பின்பு தேவன் அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப்பறவைகளையும், பூமி

தின்பேரால் வைக்கப்பட்டிருக்கிறது தவிர உண்மையான மதவேதங்கள் ஒரு பிராணியைக் கொன்று மனிதன் ஜீவிக்கவேண்டியதென நிராக்ஷேபணையாய்ச் சொல்லவில்லை.

X மனுஷன் தன்னுடைய இச்சையின் பொருட்டு ஊன் தின்பதற்காகக் கடவுளுக்குத் திருப்திபண்ணுவதாய்ப்பலிமுதலியனசெய்யப்படுவதும் கொலையே. மற்றும் கடவுளுக்குப்ரீதியான நாட்கள் தவிர மற்ற நாட்களில் கூடாதென மத நூல்கள் சொல்லுவது மனிதன் தன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொள்ளுவதற்காகத் தன்னிஷ்டம் போல் ஊன் தின்னக்கூடாதென நிச்சயமாய்த் தெரிவித்ததாகிறது. யோசிக்குமிடத்து மனிதனுடைய ஜீவன் போனபிணம் சுடுகாடு (மரூதி கல்லறை) யென்னுமிடத்தில் புதைகுழியிலோ தீயிலோ போடப்பட்டு நாசமாக்கப் படுகிறது. ஆடு முதலிய பிராணிகளின் பிணம் அவற்றையடித்துத் தின்பவர்களின் வயிற்றையே சுடுகாடு

---

யின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜெந்துகளையும் ஆண்டுகொள்ளுங்களென்று சொல்லித்தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் 29 பின்னும் தேவன் இதோ பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப்பூண்டுகளையும் விதைதரும்கனி மரங்களாகிய சகலவித விருக்ஷங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது என்று சொன்னதாகச் சொல்லுகிறது.

இஸ்லாமான் சத்தியவேதமான குர்ஆன் பல இடங்களில் தயை யென்னும் குணத்தைச் சிலாகித்தும் ஊன் தின்னும் இச்சை யேற்பட்டால் மந்திரம் சொல்லியறுத்துத் தின்னச்சொல்லி யிருப்பது அநுஷ்டானமாயிருக்கிறது அதை யோசித்தால் தீராத பக்ஷமாயும் ஆரம்பநிலையுள்ளவர்களுக்குச் சொல்லி வரவர நாளடைவில் அதை முற்றும் விலக்கும் கொள்கையான கொலைமறுத்தலை ஸ்தாபிக்கிறது. இந்த அபிப்பிராயத்திற்குப் பொருந்தியதாக இந்துமதத்தில் கள்ளுமூனுநீ விரும்பினல் மகங்கள் செய்யென்றும் அப்பால் மதுவிறைச்சிகளுண்ணென்ற சுருதி பின் மணந்துபாரெனல் பாராய் என்றும்

கைவல்யத்திற் சொல்லப்படுகிறது.

X அவிசொரிந்தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று. என்றார் நாயனர்

(மசூதி, கல்லறை) என்பனவாய்க் கொண்டிருக்கின்றதால் ஊன் தின்பவர்களின் உணவான இறைச்சி ரத்தம் முதலியவைகளின் வாசனையாலும் உள்ளே சென்று ஜீரணிக்கும் சங்கதியாலும் ஊன் தின்பவர்களையும் சுடுகாடு முதலியனபோல் அசுத்தமாய்க் கருதப்படுவது நியாயமானவையேயாம்.

இந்த நியாயம்பற்றியே இந்துக்கள் ஊன்தின்னும் அசுத்தத்தால் தொடக்கூடாதென்று தீண்டாதாரென ஒருவகுப்பைக் கீழ்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு குழந்தையை அக்குழந்தையின் தாயார் மாமிசம் தின்னச் சொன்னபொழுது அக்குழந்தையானது இறந்துபோன என் அக்காளுடைய தசையா அல்லது அண்ணனுடைய கையில் புண்ணிருந்த பாகத்தில் எடுத்ததசையாவென்று கேட்டது. தாயார் பதில் சொல்லுவதில் வெட்கப்பட்டாள்.

ஆடு முதலிய பிராணிகளை ஊன்தின்னும் அற்பவிருப்பத்தில் அறுக்கும் பொழுதாவது வேறெவ்விதத்திலாவது அதன் உயிரைப் போக்குவதற்குப் பிரயத்தனப்படும்போது கதரவும், கால் முதலிய அவயவங்களையுதரவுமாக மனுஷவதைபில் ஏற்படக்கூடிய சகலகஷ்டங்களையும் பார்த்துச் சகித்துக் கொஞ்சமேனும் இரங்காதவன்னெஞ்சம் உடையவர்கள் தயை, அன்பு, இரக்கம், முதலியனவான பரிசுத்தகுணத்துடன் கடவுளுக்குப் பிரியமான அன்பு நிலையை எப்பொழுது எவ்விதத்திலடைவார்களென அறிவாளிகள் யோசித்துணர்க. ''என்பிலதனை வெயிற்போலக்காயுமே-யன்பிலதனையறம்'' என்றார் நாயனார். அதாவது எலும்பில்லாத சொற்பதசையுடன் கூடிய புழு முதலிய பிராணிகள் வெய்யிலிலகப்பட்டால் என்னபாடுபடுமோ அதுபோலஅன்பில்லாமல் எவ்வளவு தர்மமும் நல்லகொள்கையுமிருந்தாலும் அவ்வன்பின்மையே நல்லனவற்றைக் கெடுதியாக்கிவிடும் என்பது கருத்து.

பிறரால் கொல்லப்பட்டுக் கொண்டுவரும் ஊன்தின்பதில் நேரிற் காணப்படும் பரிதாப சங்கதிகள் தென்படாதிருப்பதால் கொன்றவன் எல்லாப்பாபத்திற்காளாகவும் அவனிடம் பணம்கொடுத்து வாங்கிச் சாப்பிடுவதில் ஊன் தின்பவனுக்கு யாதொரு பாபச்செய்கையும் ஏற்படாதென்று பலர் நினைக்கிறார்கள். அது நியாய வழியிற் கொள்ளும் அபிப்பிராயமன்று.

விலக்காவது வேறெவ்வித தாக்ஷண்ய மூலமாவது செலவாக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் தனக்கென இல்லாமல் பிறருக்கென நினைத்தே பிறர் ஏவலின் பொருட்டுக் கொலைசெய்து வேறொருவனால் கொண்டு வரப்படுகிறது. ஆகையால் "தினற்பொருட்டுக் கொள்ளாதுலகெனின் யாரும்-விலைப்பொருட்டாலூன்றருவாரில்" என்றூர் நாயனர் ஊன்வாங்கித் தின்பவர்களில்லை யானல் ஊன்விற்பவனிருக்கமாட்டானென்ற நியாயம்பற்றி அவ்வபிப்பிராயம் தவறாகும்.

அறிஞர்கள்; தம்தம்கடவுள் பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் உண்மையாய்த் தம்மால் இயன்றவரை படிப்படியாய் நடந்துபரிசுத்தமான மனதை யடைந்து உண்மையிலீடுபட்டு மோக்ஷமென்னும் சாந்தநிலையடைய வேண்டுமென்ற அவாவுடையவர்கள் இவ்விஷயத்தில் கொண்டிருக்கும் பிடிவாதத்தையும் லகுவில் (எளிதாய்)த்தம்மால் விடக்கூடியதும் அற்ப ஆகாரமுமான மாமிச உணவையும் விட்டு "நோன்பெனப்படுவது கொன்று தின்னுமை" யென்னும் விரதத்தை யநுஷ்டித்தும் எப்பிராணிகளிடத்தும் பகுப்புடன் கூடிய (தயை) அன்பென்னுங் குணங்கொண்டு துவேஷகுணங்களை விலக்கி நடந்து கொள்வதும் ஒவ்வொருமதத்தின் தலைமையான கொள்கையாகும்

தன்னிச்சைக்காக ஊன் தின்பவர்கள் அதினின்றும் விலகுவதற்கு முடியாமைக்கு வருந்துவது நல்லொழுக்கத்தின் அறிகுறியாகும். அதில்லாமல் அற்ப உணவு நிமித்தம் தான் கொண்டகொள்கையை உறுதிப்படுத்த நினைப்பது அறிவின்மையும் கடவுளுக்கு ... மான கெட்ட அபிப்பிராயமுமாகும்.

3. <u>களவெனப்படுவது</u> பிறருக்குச்சொந்தமாய் அவர்கள்கைவசமாய் அவர்கள்இஷ்டம்போல் அநுபவித்தற்குரியதாய் உபயோகப்படுத்துவதற்காக வைத்திருக்கும்பொருளை அவர்களுக்குத்தெரியாமல் திருடிக்கொண்டுபோவது களவென்றுசொல்லத்தகுந்தது.

அப்படிக்களவு செய்வதற்குப் பிரயத்தனப்பட்டால் அச்செய்கை செய்ய நினைப்பது முதல் பிறர் பொருளையபகரித்து அதையுபயோகிக்கவும் அநுபவிக்கமாயுள்ள திருட்டுச்சாமானில் ஏற்படும்பிரயோஜனம் முடியும்வரை பயத்துடனும் வஞ்சகத்துடனும் பிறருக்குத்தெரியாத விதமாய் அநுபவிப்பதாயிருக்கிறது.

சிலமனிதர்கள் களவு தன்னுடையகுலத்தொழிலென்றும் தன்னுடைய தொழிலில் தான்ஜீவிக்கவேண்டியது தன்கடமையென்றும் சொல்வதுண்டு.

அப்படிச் சொல்பவன் தன்னுடைய சாமானை மற்றொருவன் திருடினால் சும்மாயிராமல் அவனையிகழ்ந்து கேவலப்படுத்தி சரீரத்திலும் நன்றாயடிக்கிறான்.

அப்பொழுது திருட்டிற்குத் தகுந்தவாறு தன்னினமென்றாவது தன்னைச் சேர்ந்தவனென்றாவது நினைத்துக் குலத்தொழிலைப்பாராட்டாமல் தன்பொருளைப்பறிகொடுக்க நேர்ந்த தன்மையாலும் "ஆ" கெட்டகாரியமான களவுசெய்து விட்டானே யென்று தன்னையறியாமலேற்படும் தன்மனச்சாக்ஷியின் உண்மையாலும் மிக ஆத்திரத்துடன் களவு செய்தவனை உபத்திரவம் செய்கிறான். ஆகையால் களவு என்ற தீய விஷயத்தைக் குலத்தொழில் என்று சொல்லிக் கொள்வது குறவன் மலம் (பீ) வாருவது தன்தொழிலெனச் சொல்லிக் கொண்டு ஜீவிப்பதைக்காட்டிலும் இழிவான ஜீவனமாகும்.

பொய் சொல்பவர்கள் (சொன்னவர்கள்) பிறருக்குப் பயந்தாவது மனக்கிலேசப்பட்டாவது தன்னை மறைத்துக் கொள்ள முயலுவதில்லை களவு செய்பவன் எப்பொழுதும் மறைக்க வேண்டிய செய்கையில் இயற்கையான மனத்தைச் செலுத்துபவனாய்த்தன் செய்கையைக் கண்டவர்களுக்குத் தென்படாதபடி தப்பித்துக்கொள்ள ஓட்டம் எடுக்கும். [illegible]ணமுள்ளவனாய் மிகக் கேவலமான நிலையில் "களவாடும்" [illegible]யக்குச் சமானமாய்ச் சஞ்சரிக்கிறான்.

பிறர் சொத்தை ஏராளமாய்த் திருடிவந்த எவனாவது அச்சொத்துடன் வாழ்கின்றானென்று சொல்வதற்கில்லை.

களவு செய்கிறவனுடைய மனது ஒரு காலத்தும் தெளிவாய்க் களங்கமற்று இருக்கமுடியாததால் எப்பொழுதாவது அவன் மனது பரிசுத்தமாகி நற்செய்கையுடையவனாய்க் கடவுளருளுக்கு உரிமையில்லாதவனாகிறான். இக்கருத்தேபற்றி எம்மதமும் களவு என்னும் குணத்தைத் தீயகுணமாக விலக்கியிருப்பது காண்க. இவ்விஷயத்தில் யாவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்களென்பது நிச்சயம்.

4. <u>கள்குடி</u> யென்பது அது குடித்தவர்களை ஆயுள்பரியந்தம் விடாதுபற்றி நிற்கும் குணமுடையது. ஆனால் மனிதனுக்குள்ள மற்ற ஆகாரமும் அப்படித்தானே யெனில் அது பொருந்தாது.

மனிதனுக்குரித்தாய் இயற்கையிற் பழக்கப்பட்ட உணவு இரண்டு மூன்று தினங்களில்லாமற் சஞ்சரிக்கலாம். அவற்றால் சொற்ப சிரம மேற்பட்டாலும் தேகத்திற்கோ, மனதிற்கோ, மாறுதலைக் கொடுக்காது.

மற்றும் பானவஸ்துவாயுபயோகிக்கும் பாலும் அப்படியே. ஆகையால் இவ்வுணவால் நன்மையே தவிர உபயோகிக்காவிட்டால் துஷ்ட சாகவாசம்போல் தீமை பயக்காது.

கள்குடியோ ஊன் தின்பதை இன்றியமையாததாய்க் கொண்டும் இடைவிடாப் பழக்கத்தின் பிடிவாதத் தன்மையால் நாளடைவில் அளவு மிகுதிப்படவும் அளவு மிகுதியால் குடிப்பவன் தான் இருக்கும் நிலையை மறந்தும் அவற்றால் ஆஸ்த்தியையும் பிராணனையும் சீக்கிரத்தில் அபகரிக்கக்கூடியதாயும் மற்றும் பிறர் ஏளனம் பண்ணும் முறையில் அலங்கோலப்படவும் ஏற்படுவதால் கட்குடி மிகவும் தீய பழக்கமென நிச்சயிக்கப்படுகிறது.

ஆனால் சில தேசத்தில் அத்தேசத்திற்குத் தக்கவாறு பெரும்பாலும் மாமிச ஆகாரமாயிருப்பதால் அதை ஜீரணிக்கவும் தேக வசதிக்கும் இன்றியமையாததாய் ஏற்பட்டிருக்கிறது.

ஆயினும் அவ்வுணவிற்கு தக்கவாறுள்ள புத்தித் தெளிவால் தத்தமக்குவேண்டிய தேகபோக சௌரியங்களை யுண்டுபண்ணிக்கொண்டு தமோ குணவசப்பட்டவர்களாய் உணவு முதலிய தேகபோகங்களில் அதிக ஆவலுடன் கூடிய விருப்பமும் அதைத் தயாரிப்பதில் சமயம் போல் நடந்துகொள்ளும் சுபாவத்தால் ஒருவழிப்பட்ட மனதில்லாதவர்களாய் ஆத்துமதத்துவ உணர்ச்சியை இலகுவில் அடையமுடியாமல் அவ்விஷயத்தில் போலி அபிப்பிராயமான நிலையாய் நிற்க ஏற்பட்டது.

இவ்விந்தியாவிலும் மற்றும் சில இடங்களிலும் அப்படியில்லாமல் அன்னம் முதலிய மிருதுவான ஆகாரத்தையுட்கொண்டு அவ்வுணவிற்குத் தகுந்த சத்துவகுண வசப்பட்டவர்களாய்க் களங்கமற்ற சுத்த மனதுடன் உணவு முதலிய தேக போகங்களில் அதிக விருப்

யில்லாதவர்களாய் ஒருவழிப்பட்ட மனதை யடைந்து இந்திரியங்களைத் தடுத்து நடத்துபவர்களாய்த் தவம், விரதம், முதலியவற்றில் இலகுவாய் அறிவையுபயோகிக்கும் சுபாவமுடையவர்களாய்க் கடவுளென்ற தன்மையிலும் ஆத்தும தத்துவ உணர்ச்சியிலும் உள்ள உண்மை நிலையையடைந்தார்கள். அடைவதில் விருப்பமுடையவர்களாயுமிருக்கிறார்கள்.

காலமாறுதலின் காரணத்தால் மாறுபாடடைந்து வரும். இப்போதுள்ள இந்திய நிலைமை அயல்தேசத்து ஜனங்களின் கூட்டுறவின் சேர்க்கைப் பழக்கத்தில் ஒருவரை யொருவர் விரும்பி யபிமானிக்கும் தன்மையை யுத்தேசித்தும் அயல் தேசத்து நாகரீகத்தில் இயற்கையிலேற்படும் விருப்பத்தைவைத்தும் உணவு, தேக, அநுபவம் முதலியன கலந்து மிகுதிப்பட்டமையால் மற்ற தேசங்களைப்போலஇந்தியர்களில் தற்காலத்திய ஜனங்களிற் பெரும்பாலார் கடவுள் என்ற விஷயத்திலும் ஆத்துமதத்துவ உணர்ச்சியிலும் போலி அபிப்பிராயம் ஏற்பட்டு அவ்விஷயத்தில் அசிரத்தையாய் நடந்துவரும் நிலையிலிருக்கிறார்கள். மற்ற சில தேசங்களில் மாமிசம் பிராந்தி, கள், முதலியன இன்றியமையாத ஆகாரமா யிருப்பதனால் ஆத்துமதத்துவ உணர்ச்சியையும் கடவுள் பக்தியையும் அடைய வேண்டுமென்ற உண்மை யபிப்பிராயமுள்ளவர்களுக்குரித்தான களங்கமற்றதும் நிர்மலமாய் ஒருவழிப்பட்டதுமான மனோ நிலையில்லாமல் கடவுள் உண்மையென்ற விஷயத்தில் போலியாயிருக்கிறார்கள்.

இவ்விந்தியாதேசத்து இயற்கையுணவிற்கு விரோதமாயும் குணத்தைமாறுபடச்செய்வதாலும் மற்றும் தயைமுதலிய குணங்கள் ஏற்படுவதற்கு விரோதமாயுமிருப்பதால் எல்லா ஜனங்களும் ஊன் தின்பதையும் கள்குடியையும் விலக்கி நிற்பது கடவுளாணையாகும். விலக்காதவர்கள் கடவுளாணையை மீறியவர்களாவார்கள்.

5. காமம் என்பது இச்சை (ஆசை, விருப்பம்) என்பதேயாம். அவ்விச்சை யியற்கையா யேற்பட்டிருப்பதில் எம்மட்டும் தேவையோ அத்துடனில்லாமல் அளவுமீறிப் பிரவேசித்தல் கூடாதென்றும் அப்படிப் பிரவேசித்தால் பல கெடுதிகள் நேர்ந்து உண்மை நிலையைக் கெடுத்துவிடுமென்னும் அபிப்பிராயத்தால் காமமும் பஞ்சபாதகத்தில் சேர்க்கப்பட்டன.

மனுஷ இயற்கையில் பொருள் என்ற ஐஸ்வரிய அநுபவத்தி லும் ஸ்த்திரீயினிடத்துண்டாகும் சேர்க்கை யின்பத்திலும் முடிவை யடையாத விருப்பமுண்டாகிறது.

ஆசையென்பது மாயையின் பிரதிநிதியெனத் தகுந்தது. உலக ஆர்ப்பாட்டத்திற்கும் (டம்பத்திற்கும்)உலகத்தின் விரைவான சுற்றிற் கும்ஆசையே கருவியாயிருக்கின்றன

ஒன்றிலும் ஆசையில்லாத ஒரு பிராணி தான் இருந்த இடத்தை விட்டுச் சலியாத சித்தத்துடனிருக்கலாம். ஆசையின் முடிவையடை ந்து பூர்த்தியாயிருக்கலாமென்று நினைத்த ஒருவன் உலகமெல்லாந் தன்னதாக்கியும் உலகிலுள்ள யாவரும் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தன்மையுடன் வெளியிற் பார்ப்பவர்கள் யாதொரு கவலையுமில்லாதவ னெனச் சொல்லும் எல்லாம் பொருந்தியவனுயிருந்தாலும் மனச்சஞ் சலமில்லாதவனுய் இனிமேலொன்றும் தேவையில்லை என்று திருப்தி யடைந்து சுகமாயிருப்பானு? இருக்கமுடியுமா? வென்பதையும் ஒரு மனிதன் தன் சரீர திடமிருக்கும் நாட்களில் ஸ்திரீயினிடத் துண்டாகும் இச்சையை ஒருமுடிவுகாண்பதாயுள்ள தன்மையில்போது மென்று பூர்த்திபண்ணிக்கொண்டு அவற்றல்ஏற்படும் இச்சையின் முடி வையடைந்து விலக்கிவிடுவானு வென்பதையும் அறிவாளிக ளுணர்க.

இவ்விரண்டு சக்தியிலும் ஆராய்ச்சிபண்ணி அவைகளில் ஏற்ப டும் ஆசைப்போக்கில் கட்டுப்படாமல்அளவுடன் நிற்பவர்கள் அறிவா ளர்களே. அப்படி யில்லாதவர்கள் ஐஸ்வரிய ஆசையிலும்ஸ்திரீகளிடத் துண்டாகும் ஆசையிலும் பூர்த்திபண்ணிக் கொள்ள முடியாத ஸ்வாதீனமில்லாதவர்களாய் அவ்வாசையின் வசப்பட்டு அவற்றில் ஏற்படும் பேராசை நிமித்தம் கொலை முதலிய தீய செய்கைக்கு ஆளாகிறுர்கள்.

ஐஸ்வரிய இச்சையும் ஸ்திரீ சேர்க்கையும் அளவு மீறினுல் முற்றுப்பெற்று முடிவை யடையாதென்ற கருத்தை வைத்தும் அளவு கடந்தால் மிகத் தீமையை விளைத்து மனதில் எவ்வித கட்டுப்பாடுமில்

லாமல் கடவுளை வழிபடவும் ஆத்ம உண்மையை யடையவேண்டியதின் முயற்சியில் பழகவேண்டிய நேரமும் பரிசுத்த மனதும் நிச்சிந்தையும் ஏற்படாதென "தம்மின் மெலியாரை நோக்கித்—தமதுடைமை— அம்மா பெரிதென்றகமகிழ்க வென்றும் ஒரு ஸ்திரீயைத் தவிர மற்றொரு ஸ்திரீயை விரும்பினால் சீல்லையில்லாததாய் முடியும் என்றதை வைத்து "விபசாரம் செய்யாதே என்றும்" பிறர் பொருளாசையற்றவன் றனதுபெண்டிரையன்றி மற்றோரை முறையுடன் தமக்கை தங்கையரெனவும் மொழிந்திடும் நன்னடையுடையோன் என்றும் ஆன்றோர் வாக்குள்ளன.

இவற்றால் எம்மதமும் ஒரேயபிப்பிராயத்தால் காமம் முதலிய மேற்சொன்ன பஞ்சமா பாதகங்களை தீமையென்றே விலக்க நிச்சயப்படுத்துகின்றன.

ஆகையால் இதுகாறும் சொல்லிவந்த பிரகாரம் கடவுளருளை யடைவதற்கும் தன் ஆத்ம உண்மையைத் தெரிந்துகொள்வதற்கும் மிகுந்த இடையூறாயிருக்கின்ற மேற்சொன்ன பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் பஞ்சபாதகங்களையும் பகுத்தறிவால் விலக்குபவர்கள் எங்கும் எப்பொருளினும் தானாய் விளங்கும் ஒப்பற்ற பரம் பொருளின் இன்ப நிலையை யடைவார்கள்.

சுபமஸ்த்து.

மங்களமாகுக.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 1 | அதுபற்றியேதான் | அதுபற்றியே, தான், மேலென்பது |
| 13 | 3 | ஜீவபேதம் | ஜீவபோதம் |
| 24 | 4 | கொள்கை மாறுதலின்கேடு | 4. கொள்கை மாறுதலின் கேடு. |
| 31 | 28 | குழந்தையாயிருந்த | குழந்தையிருந்த |
| 32 | 1 | முற்றுமல் | முறணுமல் |
| 32 | 1 | செறியாறும் | செறியாலும் |
| 35 | 5 | 4. காங்கிரஸ் | 5. காங்கிரஸ் |
| 36 | 2 | குறையுமென்றும் | குறையுமென்று |
| 36 | 6 | 7-வது | 8-வது |
| 36 | 8 | 5. கோவிலும் சத்திரமும் | 6. கோவிலும் சத்திரமும் |
| 36 | 11 | ஆள்மாணமோ | ஆள்மானமோ |
| 39 | 19 | 6. கல்வி | 7. கல்வி |
| 41 | 1 | 7. அரசியல் முறை | 8. அரசியல் முறை |
| 59 | 5 | அறிஞர்கள் | அறிஞர்காள் |
| 70 | 7 | இனங்களாச் செய்து | இனங்களாகச் செய்து |
| 70 | 11 | அதனின்றும் | அதினின்றும் |
| 78 | 3 | புரு | 0 0 0 |
| 81 | 9 | பரிசத்தால் | பரிசித்தால் |

Vivekananda Press, Madura.